வெளியீடு: 18-7-2008 Issued: 18-7-2008

LSS1
25-3-09

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 2, 2008—தொகுதி 44—எண் 2

Wednesday the 2nd April, 2008 —Volume 44—No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

...tive Assembly Secretariat, Chennai - 600 009

D
Y2ll,31'P08.
P08.44.2
228402.

[Price Rs. 3.00

**2–4–2008**

**உள்ளடக்கம்**


*பக்கங்கள்*

1. **வினாக்கள்–விடைகள்—**

   உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல் 3) — 135-202

2. **வரவு–செலவுத் திட்டம், 2008–2009, பொது விவாதமும் பதிலுரையும்**

   திரு. ஜி.கே. மணி — 203-220, 224-227

   *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் — 227-258

   திரு. ஓ. பன்னீர்செல்வம் — 221-223 240,259-306

   *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 215,217,239, 259,260, 279-282, 302-338

3. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 339

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2039, பங்குனி 20,

## 2008 ஏப்ரல் 2, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

*"நிறையுடைமை நீங்காமை வேண்டின் பொறையுடைமை*
*போற்றி யொழுகப் படும்"*

பொறுமையின் உறைவிடமாக இருப்பவரைத்தான் நிறைவான மனிதர் என்று உலகம் புகழும்.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிடாத வினாக்கள்

### (பட்டியல் 3)@

1—

### பறிமுதல்

**வினா எண் 15009—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* போதைப் பொருள்களையும் போதை மாத்திரைகளையும் விற்பவர்களின் சொத்துகளைப் பறிமுதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

---

@ இப்பட்டியலில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தவனவாகும்.

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போதைப் பொருள் மற்றும் போதை மாத்திரைகள் விற்பவர்களைக் கைது செய்து அவர்கள் பயன்படுத்தும் மோட்டார் வாகனங்கள் உடனடியாக பறிமுதல் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்படுவதுடன் சொத்துகளைக் கைப்பற்றுவதற்கு அவர்களின் தண்டனைக் காலத்தைப்பொறுத்து நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுகிறது.

**2—**

## போதைப் பொருள் விற்பனை

**வினா எண் 15015—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் அபினி என்ற போதைப் பொருள் விற்கப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் அபினி என்ற போதைப் பொருள் (மூலப் பொருளான கஞ்சாவிலிருந்து எடுக்கப்படும் பிசின் போன்ற பொருள்) விற்பதாகத் தகவல் ஏதும் இல்லை. இருப்பினும் இதுபோன்ற போதைப் பொருட்கள் விற்கப்படுகின்றனவா என்று தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது.

**3—**

## போதைப் பொருட்கள் கடத்தல்

**வினா எண் 15022—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கேரள மாநிலத்தில் இருந்து சாலைக்குடி வழியாக வால்பாறைக்கு போதைப் [illegible] வதைத் தடுக்க அரசின் நடவடிக்கை [illegible]

228402 சென்னை-600 008



**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கேரள மாநிலத்திலிருந்து சாலைக்குடி வழியாக வால்பாறைக்கு போதைப் பொருட்கள் கடத்தப்படுவதாகத் தகவல் ஏதும் இல்லை. இருப்பினும், இது குறித்து தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**4—**

## கஞ்சா செடிகளை அழித்தல்

**வினா எண் 15025—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கஞ்சா செடிகள் சமூக விரோதிகளால் வளர்க்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் போதைப் பொருள் நுண்ணறிவுப் பிரிவு காவல் துறையினரால் 2006-2007 ஆம் ஆண்டில் மொத்தம் ரூ.21,16,25,000 மதிப்புள்ள 84,650 கிலோ சாகுபடி செய்யப்பட்ட கஞ்சா செடிகள் அழிக்கப்பட்டுள்ளன. மேலும், கஞ்சா செடிகள் பயிரிடப்பட்டுள்ளனவா எனத் தொடர்ந்து தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**5—**

## கஞ்சா செடிகள் வளர்ப்பதைத் தடுத்தல்

**வினா எண் 15029—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதிகளில் கஞ்சா செடிகள் வளர்க்கப்படுவதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதிகளில் கஞ்சா செடிகள் வளர்க்கப்படுவதாகத் தகவல் ஏதும் இல்லை. தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது.

**6—**

## சிறப்புப் பயிற்சி நிலையம்

**வினா எண் 39549—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்ட நாடகக் கலைஞர்களின் வளர்ச்சிக்கு சிறப்புப் பயிற்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்ட நாடகக் கலைஞர்களின் வளர்ச்சிக்கு சிறப்புப் பயிற்சி நிலையம் அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**7—**

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 5680—திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியில் மக்கள் பயன்பெறும் வகையில் கிராமம் மற்றும் நகரங்களுக்கு தெரு விளக்கு அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்து கிராமம் மற்றும் குக்கிராமங்களுக்கும் தெரு விளக்கு வசதி செய்யப்பட்டுள்ளது.

**8—**

## குடிநீர் வசதி

**வினா எண் 5727—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், இருங்கூர், தட்டச்சேரி, சிவபுரம் ஆகிய கிராமங்களுக்கு செய்யாறு ஆற்றிலிருந்து குடிநீர் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திமிரி ஊராட்சி ஒன்றியம், இருங்கூர் ஊராட்சியில், இருங்கூர் கிராமத்தில் 6 கைப் பம்புகள், விசைப் பம்பு ஒன்று, சிறு மின்விசைப் பம்பு 2 ஆகியவை நல்ல முறையில் இயங்குகின்றன. போதுமான குடிநீர் வசதி உள்ளது. தட்டச்சேரி குக்கிராமத்தில் கைப் பம்புகள் மூன்றும், சிறு மின்விசைப் பம்பு ஒன்றும் நல்ல முறையில் உள்ளன. சிவபுரம் குக்கிராமத்தில் கைப் பம்புகள் இரண்டும், சிறு மின்விசைப் பம்பு ஒன்றும் நல்ல முறையில் இயங்குகின்றன. குடிநீர்ப் பிரச்சினை ஏதும் இல்லை. மேற்படி மூன்று கிராமங்களிலும் போதுமான குடிநீர் தற்போது கிடைக்கிறது. எனவே, செய்யாறு ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரும் திட்டத்திற்கு தற்போது அவசியமில்லை.

9—

## விடுகளைச் செப்பனிடுதல்

**வினா எண் 6109—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, குறிஞ்சி நகரில் சிமென்ட் கூரையால் கட்டப்பட்ட வீடுகளைச் செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, தொட்டப்பநாயக்கனூர் ஊராட்சி, குறிஞ்சி நகரில் சிமென்ட் கூரையால் கட்டப்பட்ட வீடுகளைத் தற்பொழுது World Vision எனும் அரசுசாரா தொண்டு நிறுவனம்மூலம் மொத்தமுள்ள 39 வீடுகளில் 22 வீடுகள் தலா ரூ.40,000 மதிப்பீட்டில் அரசுசாரா தொண்டு நிறுவன நிதியிலிருந்து மராமத்துப் பணி பார்க்கப்பட்டு, பணி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 17 வீடுகளை மராமத்து செய்ய உசிலம்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர், நிதி ஒதுக்கீடு செய்ய பரிந்துரை செய்யும்பட்சத்தில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

10—

## தெரு விளக்கு வசதி

**வினா எண் 10405—திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, சந்தாபுரம் ஊராட்சி, சாலிக்கொட்டாய் கிராமம், நீலக்கானூர் வீரமலை ஊராட்சி, போயர் நகர் கிராமம், பையூர் ஊராட்சி, ஜோனார்கொட்டாய் செல்லும் பாதை, கரடிஅள்ளி ஊராட்சி, ஆதி திராவிடர் கிராமம் ஆகிய இடங்களில் தெரு விளக்கு வசதி செய்துதர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?





**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, சந்தாபுரம் ஊராட்சி, சாலிக்கொட்டாய் கிராமம், நீலக்கானூர் வீரமலை ஊராட்சி, போயர் நகர் கிராமம், பையூர் ஊராட்சி, ஜோனார்கொட்டாய் செல்லும் பாதை, கரடிஅள்ளி ஊராட்சி, ஆதி திராவிடர் கிராமம் ஆகிய இடங்களில் கீழே குறிப்பிட்டுள்ளவாறு தெரு விளக்கு வசதி செய்துதரப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| (1) சந்தாபுரம் ஊராட்சி - சாலிக்கொட்டாய் கிராமம் | .. 22 |
| நீலக்கானூர் | .. 18 |
| (2) வீரமலை ஊராட்சி - போயர் நகர் கிராமம் | .. 12 |
| (3) பையூர் ஊராட்சி - ஜோனார்கொட்டாய் செல்லும் பாதை | .. 08 |
| (4) கரடிஅள்ளி ஊராட்சி - ஆதி திராவிடர் கிராமம் | .. 12 |

11—

## நீர்த்தேக்கத் தொட்டி

**வினா எண் 10662—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கோத்தகிரி பகுதி ஜக்கனாரை கிராமத்திற்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைத்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கோத்தகிரி பகுதி, ஜக்கனாரை கிராமத்திற்கு ஏற்கெனவே மூன்று கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. ஜக்கனாரை கிராமம் தொரைகேரி, மேல்கேரி மற்றும் கீழ்கேரி ஆகிய பகுதிகளில் உள்ள சுமார் 160 வீடுகளுக்கு மூன்று கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், தொட்டசோலை நீர்த்தேக்கத்தின் மூலமாகவும் தேவையான அளவிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றது. தேவையான அளவிற்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதால் தற்போதைக்கு நீர்த்தேக்கத் தொட்டி அமைப்பது அவசியமில்லை.

**12—**

### பாலம்

**வினா எண் 11214—திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பாம்பாற்றின் குறுக்கே மோட்டுக்கொள்ளி பகுதியில் பாலம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, பாம்பாற்றின் குறுக்கே மேட்டுக்கொள்ளி பகுதியில் பாலம் கட்டித்தரக் கோரும் சாலை, ஊராட்சி சாலையாகும். இச்சாலையில் ஏரிக்கரை சுமார் 150 மீட்டர் தூரம் உள்ளது. இந்தப் பகுதி மிகவும் குறுகிய பகுதியாக உள்ளது. இச்சாலையில் போக்குவரத்து அதிகம் இல்லை. இச்சாலையில் கால்வாயின் குறுக்கே பாலம் கட்ட ரூ. 5.00 இலட்சம் தேவைப்படும். இச்சாலையைப் பழுது பார்க்க வேண்டியுள்ளது. ஏரிப் பகுதியை அகலப்படுத்தியும் தார்ச் சாலை மற்றும் பால வேலைப் பணியை முடிக்கவும் ரூ. 20 இலட்சம் தேவைப்படும். இப்பணியை மேற்கொள்ள தற்போது ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதியில்லை.



**13—**

### இணைப்புச் சாலை

**வினா எண் 12147—திருமதி இளமதி சுப்பிரமணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், அனியமங்கலத்திலிருந்து கருப்பூர் வரை இணைப்புச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், ரெகுநாதபுரம் ஊராட்சி, அனியமங்கலம் கிராமத்திலிருந்து கருப்பூர் வரை செல்லும் பாதை தற்சமயம் ஓரடுக்கு கருங்கல் ஜல்லிச் சாலையாக உள்ளது. சாலையின் நீளம் 1,500 மீ. ஆகும். இணைப்புச் சாலையிலுள்ள பொய்கை ஆற்றின் குறுக்கே பாலம் சேதமடைந்துள்ளதால் புதிய பாலம் கட்டுவதற்கு நெடுஞ்சாலைத் துறை (ஊரகச் சாலைகள்) மூலமாக முன்னுரிமை—I திட்டத்தின்கீழ் ரூ. 77.55 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் மற்றும் இணைப்புச் சாலை நல்லம்பூர் வரை 0/0-1/0 கி.மீ. அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஆக்கப் பணிகள் நடைபெற்று வருகின்றன. மேற்படி பாலம் அமைத்த பின்னர் மீதமுள்ள இணைப்புச் சாலையை ஓரடுக்கு கருங்கல் ஜல்லிச் சாலையாக மாற்றி தார்த் தடமாக மாற்ற ரூ. 3.50 இலட்சம் செலவாகும். ஒன்றியப் பொது நிதியில் தற்போது போதிய நிதி வசதியில்லையாதலால் இப்பணியைச் செய்ய இயலாது.

**14—**

### தார்ச் சாலை

**வினா எண் 13703—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 2

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, குப்பம்—கிருவாநத்தம் வரை, சதுப்பேரி—அனந்தபுரம் வரை, வயலூர் ஊராட்சி—முளப்பட்டு செல்லும் சாலை, பூங்குளம் ஊராட்சி—முளப்பட்டு சாலை தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, குப்பம்—கிளுவாநத்தம் ஜல்லிச் சாலை 0/0-2/0, சதுப்பேரி-அனந்தபுரம் ஜல்லி சாலை 0/0-1/0 அமைக்க 2007-2008 ஆம் ஆண்டு ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் சேர்த்து தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**15—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 13708—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, வேலூர்-போளூர் சாலையிலிருந்து எட்டிவாடி கிராமத்திற்குச் செல்லும் தார்ச் சாலையை செப்பனிட்டுத்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய எல்லைக்கு உட்பட்ட போளூர் சாலையிலிருந்து எட்டிவாடி கிராமத்திற்குச் செல்லும் தார்ச் சாலையைச் செப்பனிடும் பணியை 2006-2007 ஆம் ஆண்டு 12-வது நிதிக் குழு மானியத்தில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



2008 ஏப்ரல் 2]

**16—**

**தார்ச் சாலை**

**வினா எண் 13709—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, புது அப்பேடு கிராமத்திற்கு தார்ச் சாலை அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, புது அப்பேடு கிராமத்திற்கு தார்ச் சாலை அமைப்பதற்கு 2005-2006 ஆம் ஆண்டிற்கான 'நபார்டு' திட்டத்தில் பணி எடுக்கப்பட்டுள்ளது.

**17—**

**மயானப் பாதை**

**வினா எண் 13716—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, ஊத்தூர் மற்றும் இராயங்குப்பம் ஆகிய கிராமங்களில் மயானப் பாதை அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, ஊத்தூர் மற்றும் இராயங்குப்பம் ஆகிய கிராமங்களில் மயானப் பாதை வசதி செய்வதற்கு 2006-2007 ஆம் ஆண்டு அடிப்படை வசதித் திட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு வேலை நடைபெற்றுக் கொண்டுவருகிறது.

[2008 ஏப்ரல் 2

18—

## சிமெண்ட் சாலை

**வினா எண் 13718—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, திருமலை கிராமத்திலுள்ள புதுக் காலனிக்கு சிமெண்ட் சாலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, திருமலை கிராமத்தில் சிமெண்ட் சாலை ஊராட்சி நிதியில் அமைப்பதற்கு 2006-2007 ஆம் ஆண்டுத் திட்டத்தில் பணி செயலாக்கத்திற்கு எடுக்கப்பட்டுள்ளது.

19—

## கான்கிரீட் தளம்

**வினா எண் 19173—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, கவுண்டம்பாளையம், கல்லாங்காட்டுப்புதூர், அலப்பிச்சாகவுண்டன்புதூர் ஆகிய ஊர்களிலுள்ள ஆதி திராவிடர் காலனி வீதிகளுக்கு கான்கிரீட் தளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

காங்கேயம் தொகுதி, கவுண்டம்பாளையம், கல்லாங்காட்டுப்புதூர், அலப்பிச்சாகவுண்டன்புதூர் ஆகிய ஊர்களிலுள்ள ஆதி திராவிடர் காலனி வீதிகளுக்கு கான்கிரீட் தளம் அமைக்கும் பணியை



2008 ஏப்ரல் 2]

2007-2008 ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செய்து கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

20—

## சாலை வசதி

**வினா எண் 21286—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், முகவூர் ஆதி திராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, நரிக்குடி ஒன்றியம், முகவூர் ஆதி திராவிடர் காலனிக்கு சாலை வசதி செய்ய 2007-2008 ஆம் ஆண்டு சட்டமன்றத் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் மானாமதுரை தொகுதி சட்டமன்ற உறுப்பினர், பரிந்துரை செய்யும்பட்சத்தில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

21—

## ஊராட்சியைப் பிரித்தல்

**வினா எண் 23216—திரு. வை. காவேரி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கச்சுப்பள்ளி ஊராட்சியை இரண்டு வருவாய் கிராமங்களாகப் பிரித்துச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2008 ஏப்ரல் 2

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், கச்சுப்பள்ளி ஊராட்சியை இரண்டு வருவாய்க் கிராமங்களாகப் பிரித்துச் செயல்படுத்துவது குறித்து 9-10-2007 அன்று சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நடத்தப்பட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகளின் கருத்து அறிந்திடல் கூட்டத்தில் கச்சுப்பள்ளி ஊராட்சியை இரண்டு வருவாய்க் கிராமங்களாகப் பிரித்துச் செயல்படுத்த இயலாது என சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத்தின் சார்பாக, ஊராட்சித் தலைவர் அவர்களால் பதில் அளிக்கப்பட்டது. மேலும் கச்சுப்பள்ளி ஊராட்சியை இரண்டு வருவாய்க் கிராமங்களாகப் பிரிக்கக் கூடாது என கச்சுப்பள்ளி ஊராட்சி மன்றம் ஏகமனதாக தீர்மானித்துள்ளதால், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட கச்சுப்பள்ளி ஊராட்சியை இரண்டு வருவாய் கிராமங்களாகப் பிரிக்க செயற்குறிப்பேதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**22—**

**சமுதாயக் கூடம்**

**வினா எண் 24606—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டை ஒன்றியம், முடிவனூத்து ஊராட்சி, செந்தாபட்டியில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிராமப்புறங்களில் சமுதாயக் கூடம் கட்டுவதற்குத் தனியாக நிதி ஒதுக்கீடு ஏதும் செய்யப்படவில்லை. சமுதாயக் கூடம் கட்டுவதற்கு தற்போது உள்ள விலை விகிதத்தின்படி மதிப்பீடு 6,00,000 ஆகும். சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ஆகியவற்றின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டால் இப்பணி மேற்கொள்ளப்படும்.



2008 ஏப்ரல் 2]

**23—**

**கட்டடத்தைச் செப்பனிடுதல்**

**வினா எண் 26060—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராதாபுரம் தொகுதி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியின் பழுதடைந்த கட்டடத்தினைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக் கட்டடம் பழமையான ஓட்டுக் கூரையுடன் சிதிலமடைந்து செப்பனிட இயலாத நிலையில் உள்ளது. எனவே, இதனை அகற்றிவிட்டு தரை தளத்திலிருந்து புதிதாகக் கட்டடம் கட்டவேண்டும். இதற்கு சுமார் ரூ. 10.00 இலட்சம் செலவாகும். வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கு ஏற்ப மேற்படி பணியை மேற்கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

**24—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 26091—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சிதம்பரபுரம் ஊராட்சி, வையகவுண்டன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர், வகுப்பறை கட்ட அரசு ஆவன செய்யுமா?

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், சிதம்பரபுரம் ஊராட்சி, வையகவுண்டன்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டவேண்டிய நீளம் சுமார் 200 மீட்டர்கள் ஆகும். இதற்கு உத்தேசச் செலவு ரூ. 3.00 இலட்சம் ஆகும். புதியதாக வகுப்பறை கட்ட சுமார் ரூ. 4.00 இலட்சம் ஆகும். ஆக மொத்தம் ரூ. 7.00 இலட்சம் செலவாகும். வரும் நிதியாண்டில் நிதி ஒதுக்கீட்டிற்கேற்ப மேற்படி பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**25—**

## ஊராட்சியுடன் சேர்த்தல்

**வினா எண் 26361—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் தொகுதி, எருமப்பட்டி ஒன்றியம், சிலநாயக்கன்பட்டி ஊராட்சி, கரட்டுபுதூர் என்கிற கரியபெருமாள்புதூர் கிராமத்தைப் போடிநாயக்கன்பட்டி ஊராட்சியில் சேர்க்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உள்ளாட்சி அமைப்புகளின் நிலை உயர்த்துதல், அவ்வமைப்புகளைப் பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பான வேண்டுகோள் அரசால் பரிசீலிக்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொது குறை கேட்கும் நாளில் கருத்துகள் கேட்டு கோரிக்கைகளைப் பரிசீலித்து அரசுக்கு அனுப்பவேண்டும் எனத் தெரிவித்து இதற்காகப் பின்பற்றப்படவேண்டிய ஆய்வு நடைமுறைகள் அரசு ஆணை (நிலை) எண் 131, ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை, நாள் 16-3-2007-ல் வெளியிடப்பட்டன. மாவட்ட ஆட்சித்



2008 ஏப்ரல் 2]

தலைவர்கள் பொதுமக்களிடம் கருத்துகளைக் கேட்கும் பணிகளைத் தொடங்கி, வரைவுப் பரிந்துரைகளைத் தயார் செய்து, அரசுக்கு அனுப்பி வைக்கலாம் எனவும், ஆனால் மத்திய அரசின் தொகுதி சீரமைப்புக் குழு (Delimitation Commission) தன் இறுதி அறிவிக்கை வெளியிட்ட பின்னர்தான் தமிழக அரசு மாவட்ட ஆட்சித் தலைவர்களின் பரிந்துரைகளின்மீது இறுதி ஆணை வெளியிடும் எனவும் ஆணையிடப்பட்டுள்ளது. தொகுதி சீரமைப்புக் குழுவின் பரிந்துரைகள்மீது மத்திய அரசால் இறுதி அறிவிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசு அறிவிக்கை வெளியிட்ட பின்னரே உள்ளாட்சி அமைப்புகளை நிலை உயர்த்துதல், அவ்வமைப்புகளைப் பிரித்தல் மற்றும் சேர்த்தல் தொடர்பாக தமிழக அரசு உரிய முடிவெடுக்கும்.

**26—**

## வகுப்பறை கட்டட வசதி

**வினா எண் 29624—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஒன்றியம், கோலியாக்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்கு வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், கோலியாக்குளம் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள் கட்ட சுமார் ரூ. 1.75 இலட்சம் செலவாகும். வரும் நிதியாண்டில் நிதி நிலைமைக்கேற்ப மேற்படி பணிகளை எடுத்துச் செய்ய வள்ளியூர் வட்டார வளர்ச்சி அலுவலர்மூலம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

27—

## பயணியர் நிழற்குடை

**வினா எண் 29791—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெற்கு சந்தனூர் விலக்கு சாலையில் பயணியர் நிழற்குடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2006-07 ஆம் நிதியாண்டில் ஒன்றியப் பொது நிதியில் ரூ.37,000/- மதிப்பீட்டில் பயணியர் நிழற்குடை கட்டப்பட்டுள்ளது.

28—

## கழிவுநீர்க் கால்வாய் வசதி

**வினா எண் 31270—திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், முள்ளம்பட்டி ஊராட்சி, ஆண்டிக்காடு ஆதி திராவிடர் காலனியில் கழிவுநீர்க் கால்வாய் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பெருந்துறை தொகுதி, பெருந்துறை ஊராட்சி ஒன்றியம், முள்ளம்பட்டி ஊராட்சி, ஆண்டிக்காடு ஆதி திராவிடர் காலனியில் 2006-07 ஆம் ஆண்டு சம்பூர்ண கிராம வேலைவாய்ப்புத்





திட்டத்தின்கீழ் ரூ.0.80 இலட்சம் மதிப்பீட்டில் 80 மீ. தூரம் கழிவுநீர்க் கால்வாய் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

29—

## சுற்றுச் சுவர்

**வினா எண் 35464—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், எல்லப்பாளையம் ஊராட்சி நடுநிலைப் பள்ளிக்கு சுற்றுச் சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஊராட்சி ஒன்றியம், எல்லப்பாளையம் புதூர் நடுநிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் ரூ.1.00 இலட்சம் மதிப்பீட்டில், 2007-08 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின்கீழ் அமைத்துத் தரப்பட்டுள்ளது.

30—

## நாடக மேடைக் கட்டடம்

**வினா எண் 37849—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம் பதினெட்டாம்கோட்டையில் நாடக மேடைக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வரும் நிதியாண்டில் (2008-2009) நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரால் இவ்வேலை பரிந்துரை செய்யப்படும்பட்சத்தில் பதினெட்டாம்கோட்டையில் நாடக மேடை கட்டித் தரப்படும்.

**31—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 38530—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், பெரும்பச்சேரியில் திருமண மண்டபம், சுள்ளங்குடியில் சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், பெரும்பச்சேரி கிராமத்தில் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO) மூலம் சமுதாயக் கூடம் கட்டப்பட்டுள்ளது. சுள்ளங்குடியில் வரும் நிதியாண்டில் நாடாளுமன்ற /சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் சமுதாயக் கூடம் கட்ட பரிந்துரை செய்யப்படும்பட்சத்தில் இவ்வேலை எடுத்துச் செய்யப்படும்.



2008 ஏப்ரல் 2]

**32—**

## கலையரங்கம்

**வினா எண் 39088—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் ஒன்றியம், சொட்டதட்டியில் கலையரங்கம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம், சொட்டதட்டியில் 2007-08 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தில் ரூ.2,00,000/- மதிப்பீட்டில் நாடக மேடை அமைக்க பரிந்துரை செய்யப்பட்டு, நிருவாக அனுமதி மாவட்ட ஆட்சியரால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது வேலை நடைபெற்று வருகிறது.

**33—**

## சமத்துவபுர விடுகளைச் சீரமைத்தல்

**வினா எண் 39582—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையிலுள்ள சமத்துவபுர வீடுகளைச் சீரமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை, செய்களத்தூர் ஊராட்சியிலுள்ள சமத்துவபுர வீடுகளில் சென்ற ஆண்டு பயனாளிகளே மராமத்துப் பணிகளைச் செய்துகொண்டனர். இதற்காகப் பயனாளிகளுக்கு அரசு மூலம் தலா ரூ. 3,950/- வீதம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது சமத்துவபுர வீடுகள் நல்ல நிலையில் உள்ளன.

**34—**

## கட்டட வசதி

**வினா எண் 6093—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், ஏலவார்பட்டி பஞ்சாயத்து, தெப்பத்துப்பட்டி, கோவிலாங்குளம் பஞ்சாயத்து, பாடிசன்புதூர், வாலாந்தூர் பஞ்சாயத்து, சங்கிலியாங்குளம் கிராமம் ஆகிய பகுதிகளுக்கு பகுதிநேர நியாயவிலைக் கடைக் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஒன்றியம், ஏலவார்பட்டி பஞ்சாயத்து, தெப்பத்துப்பட்டி கிராமத்தில் தெப்பத்துப்பட்டி நியாயவிலைக் கடை 177 குடும்ப அட்டைகளுடன் பகுதிநேரக் கடையாக மேல்பெருமாள்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் அவ்வூர்ப் பொதுமக்களால் ஊர்ப் பொது இடத்தில் நியாயவிலைக் கடைக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

கோவிலாங்குளம் பஞ்சாயத்து, பாடிசன்புதூரில் பகுதிநேரக் கடை 278 குடும்ப அட்டைகளுடன் அவ்வூர்த் தனி நபர் வீட்டில் வாடகையின்றி நடத்தப்பட்டு வருகிறது.





வாலாந்தூர் பஞ்சாயத்து, சங்கிலியாங்குளம் கிராமம், சங்கிலியாங்குளம் நியாயவிலைக் கடை 340 குடும்ப அட்டைகளுடன் வாலாந்தூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாட்டில் அவ்வூர்ப் பொதுமக்களால் பொதுவிலுள்ள நாடக மேடையின் ஒருபுறத்தில் நடத்தப்பட்டு வருகிறது.

எனவே, தற்போது நடைமுறையிலுள்ள அரசாணையின்படி, பகுதிநேர அங்காடி அமைப்பதற்கு வாடகை இல்லாமல் இலவசமாக கட்டட வசதி அவ்வூர்ப் பொதுமக்களால் செய்து தரப்பட்டுள்ளதால், மேற்குறிப்பிட்ட மூன்று பகுதிநேரக் கடைகளுக்கும் அரசால் சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய அவசியம் எழவில்லை.

**35—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 10652—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், திருமல் ஊராட்சி, திருமலில் நியாயவிலைக் கடை கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஒன்றியம், திருமல் ஊராட்சி, திருமல் நியாயவிலைக் கடை 443 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக திருமல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில், வங்கியின் அலுவலகக் (சொந்த) கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. எனவே, திருமல் நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கான நிலை எழவில்லை.

[2008 ஏப்ரல் 2

**36—**

## அரிசி கடத்தல்

**வினா எண் 10716—திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டத்தில் நியாயவிலைக் கடையில் அரிசி கடத்தப்படுவதைத் தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிட்டங்கிகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கான அத்தியாவசியப் பொருட்கள், வழங்கல் ஆணையின்படி சம்பந்தப்பட்ட நியாயவிலைக் கடைகளுக்கு மட்டுமே அங்கீகரிக்கப்பட்ட வழித்தடம் மாதாந்திர நகர்வு திட்டத்தின்படி கொண்டுசெல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் எவ்வித மாறுதல்களும் ஏற்படாமலிருக்க தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவரின் ஆணைப்படி மாவட்ட வழங்கல் அலுவலர்மூலம் தற்காலிக சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு வருவாய்த் துறை அலுவலர்களால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

90%-க்கும் மேற்பட்டு அரிசி விற்பனை செய்துள்ள நியாயவிலைக் கடைகளில் பிரதி மாதம் 5 கடைகளைத் தெரிவு செய்து, அக்கடைகளில் தீவிர ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரிசி கடத்தப்படுவது சோதனையின்போது கண்டறியப்பட்டால் சம்பந்தப்பட்ட பணியாளர்களின்பேரில் கடுமையான துறை நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அத்தியாவசியப் பொருட்கள் சட்டத்தின்கீழும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், அரிசி கடத்தப்படுவதை முன்னரே கண்டறிந்து தடுக்கும் பொருட்டு, அரிசிக் கடத்தல் குறித்து தெரிவிப்பவருக்கு சன்மானம் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளில், அடிக்கடி துறை அலுவலர்கள் தீவிர ஆய்வு மேற்கொண்டு வருவதால் அரிசி கடத்தப்படுவது கட்டுப்படுத்தப்பட்டு வருகிறது.



2008 ஏப்ரல் 2]

**37—**

## புதிய கட்டடம்

**வினா எண் 12814—திரு. கே.வி. ராமநாதன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சி, நத்தமேட்டிலுள்ள நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பூனாச்சி ஊராட்சியில், பூனாச்சி நியாயவிலைக் கடை 1,200 குடும்ப அட்டைகளுடன் முழுநேரக் கடையாக குறிச்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. பூனாச்சி நியாயவிலைக் கடையிலிருந்து 479 குடும்ப அட்டைகளைப் பிரித்து 3 கி.மீட்டர் தூரத்திலுள்ள நத்தமேடு என்ற இடத்தில் அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழுவினால் நியாயவிலைக் கடை 8-11-2002 முதல் நடத்தப்பட்டு வருகிறது. இக்கடை வாடகைக் கட்டடத்தில் செயல்படுகிறது.

2. அன்னை தெரசா மகளிர் சுய உதவிக் குழுவினரால் நடத்தப்படும் இந்நியாயவிலைக் கடைக்கு புதிய கட்டடம் கட்டித்தர அரசுத் திட்டத்தில் வழிவகை இல்லை.

**38—**

## புதிய கட்டடம்

**வினா எண் 13420—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேப்பிலைமுத்தம்பட்டி ஊராட்சி, முத்தம்பட்டியில் இயங்கிவரும் நியாயவிலைக் கடைக்குப் புதிய கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 2

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், தருமபுரி ஊராட்சிக்குட்பட்ட வேப்பிலை முத்தம்பட்டி ஊராட்சியில் முழுநேரக் கடை 697 குடும்ப அட்டைகளுடன் சிக்கம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில், வங்கியின் சொந்தக் கட்டடத்தில் செயல்படுகிறது. வேப்பிலை முத்தம்பட்டி நியாயவிலைக் கடையின் முதல் பகுதிநேர நியாயவிலைக் கடை 408 குடும்ப அட்டைகளுடனும், இரண்டாவது பகுதிநேரக் கடை 518 குடும்ப அட்டைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி இரண்டு பகுதிநேர நியாயவிலைக் கடைகளும் தருமபுரி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 1998 மற்றும் 2000 ஆம் ஆண்டுகளில் கட்டப்பட்ட கட்டடங்களில் செயல்பட்டு வருகின்றன.

மேலும், தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியம், ஏலகிரி ஊராட்சியில் உள்ள முத்தம்பட்டி என்ற கிராமத்திலுள்ள பகுதிநேர நியாயவிலைக் கடை 297 குடும்ப அட்டைகளுடன் சாமிசெட்டிப்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இந்நியாயவிலைக் கடை தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறைமூலம் எஸ்.ஜி.ஆர்.ஒய். அரசுத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது.

மேற்கண்ட இரு ஊராட்சிகளிலும் செயல்பட்டுவரும் முத்தம்பட்டி கிராமங்களில் உள்ள நியாயவிலைக் கடைகள் சொந்தக் கட்டடங்களில் செயல்பட்டு வருவதால் புதிய கட்டடம் கட்டவேண்டிய அவசியம் எழவில்லை.

**39—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 13447—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, காட்டுசித்தாமூர் கிராமத்திற்கு நியாயவிலைக் கடை அமைத்துத் தர அரசு முன்வருமா?



2008 ஏப்ரல் 2]

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, காட்டு சித்தாமூர் கிராமத்தில் 706 குடும்ப அட்டைகளுடன் முழுநேர நியாயவிலைக் கடை தனியார் வாடகைக் கட்டடத்தில் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. இச்சூழ்நிலையில் மேற்படி பகுதியில் புதியதாக நியாயவிலைக் கடை அமைப்பது குறித்த வினா எழவில்லை.

**40—**

## நியாயவிலைக் கடை

**வினா எண் 18276—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, சித்தேரி, தாயனூர், கீழ்செல்லாம்பாடி, அந்தியந்தல் ஆகிய கிராமங்களுக்கு நியாயவிலைக் கடை கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, சித்தேரி, தாயனூர், கீழ்செல்லாம்பாடி, ஆகிய கிராமங்களில் முழுநேர நியாயவிலைக் கடைகள் முறையே ரூபாய் 100 மற்றும் ரூபாய் 125 என்ற வாடகையில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டு வருகின்றன. அந்தியந்தல் கிராமத்திற்கென தனியாக நியாயவிலைக் கடை ஏதும் இல்லாததால் சொந்தக் கட்டடம் கட்டவேண்டிய நிலை எழவில்லை. தற்போது சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கான கட்டடங்கள் கட்டும் பணியினைச் சிறப்பினமாக எடுத்துச்செய்ய அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனடிப்படையில் சித்தேரி, தாயனூர் மற்றும் கீழ்செல்லாம்பாடி ஆகிய நியாயவிலைக் கடைகளுக்கு புதிய கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**41—**

## வாழைப் பயிர் ஆராய்ச்சி மையம்

**வினா எண் 12014—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 2

பத்மநாபபுரம் தொகுதி, கோழிப்போர்விளை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வாழைப் பயிர் ஆராய்ச்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைந்துள்ள பேச்சிப்பாறை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் இப்பகுதிக்குத் தேவையான வாழை சம்பந்தமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ள அனைத்து வசதிகளும் உள்ளன. புதிதாக ஓர் ஆராய்ச்சி நிலையம் துவங்க சுமார் ரூ. 3 கோடி முதல் ரூ. 5 கோடி வரை நிதி தேவைப்படுகிறது. எனவே, பத்மநாபபுரம் தொகுதி, கோழிப்போர்விளை ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் வாழைப் பயிர் ஆராய்ச்சி மையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**42—**

## மேற்கூரை அமைத்தல்

**வினா எண் 24175—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு மேற்கூரை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் இரட்டை ஏலக் கொட்டகை, ஊரகக் கிட்டங்கி, விவசாயிகள் தங்கும் விடுதி ஆகியவற்றுக்குத் தளம் போடப்பட்டுள்ளது. மேலும், ஏலக் கொட்டகை 1, 2, 3 பணப்



2008 ஏப்ரல் 2]

பட்டுவாடா அறை, விவசாயிகள் தங்கும் அறை ஆகியவற்றுக்கு சிமெண்ட் ஓடு போடப்பட்டுள்ளது.

(ஆ) கேள்வி எழவில்லை.

**43—**

## சாலை வசதி

**வினா எண் 26297—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டம், தெற்கு கண்ணாடிப்புதூர் மேல்புறமுள்ள சாலையிலிருந்து கரும்பு அதிகமாக சாகுபடி செய்யும் பகுதிக்குச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தெற்கு கண்ணாடிப்புதூர் மேற்புறமுள்ள சாலை என்பது உடுமலைப்பேட்டை நெடுஞ்சாலை உட்கோட்டத்தில் பராமரிக்கப்படும் சாலையில் காரத்தொழுவு குமரலிங்கம் சாலை கி.மீ. 10/2-லிருந்து கண்ணாடிப்புதூர் வரை செல்லும் சாலையில் கி.மீ. 1/6-ல் மடத்துக்குளம் ஊராட்சி நடுநிலை பள்ளியின் அருகில் ஆரம்பமாகிறது. அங்கிருந்து சுமார் 2. கி.மீ. வரை சென்று கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்ட உட்கோட்டத்தால் பராமரிக்கப்படும் சர்க்கார் கண்ணாடிப்புதூரிலிருந்து நீலாம்பூர் மற்றும் ரெட்டிப்பாளையம் வழியாக அமராவதி சர்க்கரை ஆலை சாலைக்குச் செல்லும் சாலையில் கி.மீ. 2/8-ல் வந்து முடிகிறது.

இச்சாலையில் இருபுறங்களிலும் குடியிருப்புகள் மற்றும் கரும்பு, தென்னை மரங்கள் விவசாயப் பயிர்கள் ஆகியன பயிரிடப்பட்டுள்ளன. இச்சாலையின் மூன்று இடங்களில் ஒரு வழிக் குழாய்ப் பாலம் தேவையுள்ளது. சாலையின் தொடக்கம் சுமார் 200 மீட்டர் நீளத்திற்கு பட்டா பூமியில் அமைந்துள்ளது. சாலையின் அகலம் உத்தேசமாக

[2008 ஏப்ரல் 2

8 மீட்டர் முதல் 10 மீட்டர் வரை உள்ளது. இச்சாலை அமைக்க ரூ. 60.00 இலட்சம் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் புது பிரேரணையில் இச்சாலையைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

**கரும்புச் சாலைத் திட்டம்**

**வினா எண் 26299—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* உடுமலைப்பேட்டை வட்டம், தளி-வாளவாடி சாலையில் பிரிந்து பூதளம் வரை செல்லும் சாலையை கரும்புச் சாலைகள் திட்டத்தின்மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த உடுமலைப்பேட்டை சின்னார் சாலை கி.மீ. 4/4-ல் இருந்து பெரிய வாளவாடி செல்லும் சர்க்கரை ஆலை சாலை கி.மீ. 2/6-லிருந்து வடபூதளம் செல்லும் கி.மீ. 0/0-1/0 சாலையாகும். இச்சாலை மண் சாலையாக உள்ளது. சாலையின் இருபுறமும் கரும்பு வயல்கள் மட்டுமே நிறைந்துள்ளது. இச்சாலையை மேம்பாடு செய்ய ரூ. 30.00 இலட்சம் ஆகும்.

எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் புது பிரேரணையில் இச்சாலையைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**45—**

**கரும்புச் சாலைத் திட்டம்**

**வினா எண் 26301—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 2]

*(அ)* மைலாடி முதல் சின்னப்புதூர்—பெங்களூர் வரையுள்ள சாலையை கரும்புச் சாலைத் திட்டத்தின்மூலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மேற்குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குட்பட்ட மைலாடி-சித்தக்குட்டை சாலை கி.மீ. 1/6-ல் பிரிந்து பெங்களூர் செல்லும் கி.மீ. 0/0-2/4 சாலையாகும். இச்சாலை மண் சாலையாக உள்ளது. இச்சாலையின் இருபுறமும் கரும்பு விவசாய பூமி நிறைந்துள்ளது. இச்சாலையை மேம்பாடு செய்தால் விவசாயிகளுக்குப் பயன்படுவதோடு உடுமலை, தாராபுரம் மாநிலச் சாலையுடன் இணைக்கும் இணைப்புச் சாலையாகப் பயன்படும். இச்சாலையை மேம்பாடு செய்ய ரூ. 80.00 இலட்சம் ஆகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் தயாரிக்கப்படும் புது பிரேரணையில் இச்சாலையைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**46—**

**நெற்களம்**

**வினா எண் 34061—திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* போளூர் தொகுதி, களம்பூர் பேரூராட்சியில் நெற்களம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 2008-2009 ஆம் நிதியாண்டில் உலர்களம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**47—**

## கிடங்கு கட்டட வசதி

**வினா எண் 43887—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் வேளாண்மை இடுபொருள் வைப்பதற்கான கூடுதல் கிடங்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் வட்டத்தில் தற்சமயம் திருக்கழுக்குன்றத்தில் பிரதான வேளாண்மை விரிவாக்க மையமும், நெரும்பூரில் துணை வேளாண்மை மையமும், விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்பட்டு வருகின்றன. எனவே, அதே வட்டத்தில் மேலும் ஒரு கூடுதல் கிடங்கு கட்ட அவசியம் எழாது.

**48—**

## காலாவதியான மருந்து

**வினா எண் 44155—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உரம் மற்றும் பூச்சி மருந்துக் கடைகளில் காலாவதியான மருந்துகள் விற்பனையைக் கண்டறிந்து தடுக்க அரசு முன்வருமா?





**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

தரமற்ற பூச்சி மருந்துகளை விற்பனை செய்வதைத் தடுப்பதற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் அலுவலர் அமர்த்தப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. வேளாண்மைத் துணை இயக்குநர், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக் கட்டுப்பாடு), வட்டார வேளாண்மை வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் மத்திய அரசின் திருச்சி மத்திய ஒருங்கிணைந்த பூச்சி/நோய் மேலாண்மை மையத்தின் பிரதிநிதி ஆகியோர் அடங்கிய குழு மாவட்டங்களில் உள்ள பூச்சி மருந்து உற்பத்தி நிலையங்கள், விநியோக நிலையங்கள் மற்றும் விற்பனை நிலையங்களை திடீராய்வு செய்து பூச்சி மருந்து சட்டம், 1968 மற்றும் பூச்சி மருந்து விதி 1971-ன்கீழ் நடவடிக்கை எடுக்கிறது. இம்முறை தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

**49—**

## ஏரி அமைத்தல்

**வினா எண் 12430—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, கோடுஹள்ளி ஊராட்சி, பொன்காடு என்னுமிடத்தில் ஏரி அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, கோடுஹள்ளி ஊராட்சி, பொன்காடு என்னுமிடத்தில் ஊரக வளர்ச்சித் துறையினால் நீர்ப்பிரி முகடு மேலாண்மையால் (Watershed Management) ஒரு குட்டை அமைக்கப்பட்டுள்ளதாலும், ஏரி அமைக்கக் கோரும் தளம் பெரும்பகுதி பாதுகாக்கப்பட்ட வன நிலமாக உள்ளதாலும், பொன்காடு என்னுமிடத்தில், புதிய ஏரி அமைக்க சாத்தியமில்லை.

[2008 ஏப்ரல் 2

**50—**

**ஏரி அமைத்தல்**

**வினா எண் 14636—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதி, கூசுவாடி கிராமம், காட்டாற்றின் குறுக்கே ஏரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் :**

தளி தொகுதி, தேன்கனிக்கோட்டை வட்டம், கூசுவாடி அருகே காட்டாற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்கும் திட்டத்திற்கு, வன நிலம் தவிர்த்து, மாற்றுத் திட்டத் தளம் ஆய்வு செய்ததில், தொழில்நுட்ப ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சிக்கனமற்றதாக உள்ளதால் இத்திட்டம் சாத்தியமானதில்லை.

**51—**

**குடும்ப நீதிமன்றம்**

**வினா எண் 17098—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, கோட்டூரில் குடும்ப நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை, கோட்டூரில் குடும்ப நீதிமன்றம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.



2008 ஏப்ரல் 2]

**52—**

**புதிய கால்வாய்**

**வினா எண் 17215—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தொப்பையாறு முதல் குண்டுக்கல் ஏரி வரை நான்கு வழிப்பாதை ஓரமாக புதிய கால்வாய் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

தொப்பையாறு முதல் குண்டக்கல் ஏரி வரை நான்கு வழிப்பாதை ஓரமாக புதிய கால்வாய் அமைக்கும் திட்டம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. இத்திட்டம் புவியியல் ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் சாத்தியமற்றதாக உள்ளது.

**53—**

**கால்வாய் அமைத்தல்**

**வினா எண் 18756—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, வெள்ளோலை ஊராட்சி, வெள்ளோலை ஏரி முதல் கெங்கான்கொட்டாய் வழியாக பெரியகுரும்பட்டி ஏரி வரை கால்வாய் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வெள்ளோலை ஏரி முதல் கெங்கான்கொட்டாய் வழியாக பெரியகுரும்பட்டி ஏரி வரை கால்வாய் வெட்ட தேவைப்படும்

நிலப்பரப்பு அனுமதிக்கப்பட்ட அளவைவிடக் கூடுதலாக உள்ளதாலும், பயன்—செலவு விகிதம் குறைவாக உள்ளதாலும், பொருளாதார ரீதியில் இலாபகரமற்ற திட்டமென்பதாலும், இத்திட்டத்தினைச் செயல்படுத்துவது சாத்தியமில்லை.

**54—**

## அணையைத் தூர் வாருதல்

**வினா எண் 25029—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வெள்ளோடு நீர்த்தேக்க சிறு அணையைத் தூர்வார அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வெள்ளோடு நீர்த்தேக்க சிறு அணை நீர்த்தேக்கும் அளவில் ஆகஸ்டு 2007-ல் முழுமையாகக் கட்டி முடிக்கப்பட்டது. இந்நீர்த்தேக்கத்தில் பயன்பெறும் பாசனப் பரப்பிற்குத் தேவையான தண்ணீரினைத் தேக்கிவைக்கும் அளவிற்கு நீர்த்தேக்கத்தின் கொள்ளளவு உள்ளதால், தூர் வார வேண்டிய அவசியம் இல்லை.

**55—**

## கண்மாயைத் தூர் வாருதல்

**வினா எண் 26704—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெற்குசந்தனூர் கண்மாயைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம் தெற்குசந்தனூர் கண்மாய் கோட்டக் கரையாறு வடிநிலப் பகுதியில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் தொகுப்பு எண் 9-ல் சேர்க்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்பட்டு தற்போது ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் வழங்கும் குழுவிற்கு (TAC) அனுப்பப்பட்டு அதன் ஆய்வில் உள்ளது. ஒப்பந்தம் முடிவு செய்தவுடன் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**56—**

## கண்மாய் மராமத்து

**வினா எண் 26748—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெற்குசந்தனூர், மருதங்கநல்லூர், எஸ். கரிசல்குளம், தாமரைக்குடி, வடக்குசந்தனூர், முல்லைக்குளம் ஆகிய கண்மாய் மடைகளைப் புதிதாகக் கட்டவும், மராமத்து செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், தெற்குசந்தனூர் கண்மாய் தொகுப்பு எண் 9-லும், மருதங்கநல்லூர் மற்றும் வடக்குசந்தனூர் கண்மாய்கள் தொகுப்பு 5-லும் கோட்டக் கரையாறு வடிநிலப் பகுதியில் நீர்வள, நிலவளத் திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளியும் பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி ஒப்புதல் வழங்கும் குழுவிற்கு (TAC) அனுப்பப்பட்டு அதன் ஆய்வில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டு ஒப்பந்தக்காரர் நியமனம் செய்யப்பட்டவுடன் மேற்கண்ட பணிகள் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். மீதமுள்ள எஸ். கரிசல்குளம், தாமரைக்குடி மற்றும்

[2008 ஏப்ரல் 2

முல்லைக் குளம் கண்மாய் மடைகளைப் புதிதாகக் கட்டவும், மராமத்து செய்யவும், பராமரிப்பு நிதியிலிருந்து பெறப்படும் நிதிநிலைக்கேற்ப படிப்படியாக முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

**57—**

## கருவேல மரங்கள் அகற்றுதல்

**வினா எண் 33091—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியம், இடும்பன்குளம், இருட்டணைபுதூர், இருட்டணை கிராமக் குளத்தில் உள்ள கருவேல மரங்களை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், கபிலர்மலை தொகுதி, பரமத்தி ஒன்றியத்தில் உள்ள மேற்கண்ட குளங்கள் பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ளன. இக்குளங்களில் வனத் துறையினர் கருவேல மரங்களை வளர்த்து வருகின்றனர். மரங்கள் முதிர்வு அடைந்த பின்னர் பொதுப் பணித் துறையின் அனுமதி பெற்று, வனத் துறையினரால் பொது ஏலம் விடப்பட்டு, பின் வெட்டி அகற்றப்படும்.

**58—**

## குளத்தை ஆழப்படுத்துதல்

**வினா எண் 38501—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2008 ஏப்ரல் 2]

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சௌந்திரபாண்டியபுரம் ஊராட்சி, பகுதி சர்வே எண் 26, 3.45 ஏக்கர் பரப்பளவு உள்ள குளத்தை ஆழப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், சௌந்திரபாண்டியபுரம் ஊராட்சி பகுதி சர்வே எண் 26-ல், 3.45 ஏக்கர் பரப்பளவுள்ள நெடுங்குளம் அமைந்துள்ளது. இதன் பாசனப் பரப்பு 34.27 ஹெக்டேர் ஆகும். இக்குளத்தில் ஒரு மதகும், ஒரு மறுகாலும் அமைந்துள்ளது. குளத்தின் கரை தாழ்ந்தும் அலை கற்கள் சேதமடைந்தும் உள்ளன. இக்குளத்தின் புனரமைப்புப் பணிகளுக்குத் தோராயமாக ரூ. 10.00 இலட்சம் தேவைப்படும். எதிர்வரும் ஆண்டுகளில் குளங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்புத் தலைப்பில் நிதி ஒதுக்கீடு பெற்று, முன்னுரிமை அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

**59—**

## சொகுசுப் பேருந்து

**வினா எண் 10616—திரு. வை. காவேரி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடியிலிருந்து சென்னைக்கு, சேலம் வழியாக சொகுசுப் பேருந்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் மூலமாக எடப்பாடியிலிருந்து சென்னைக்கு, சேலம் வழியாக தினசரி ஒரு பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும், எடப்பாடி பயணிகள் அங்கிருந்து இயக்கப்படும் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம் (சேலம்) லிமிடெட் பேருந்து வசதியைப் பயன்படுத்தி சேலம்

வந்து அங்கிருந்து அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் (தநா.) லிமிடெட் மூலம் தடம் எண் 422 மூலம் சேலத்திலிருந்து சென்னைக்கு தினசரி 19 பேருந்துகள் 36 நடைகள் வீதம் இயக்கப்பட்டு வரும் பேருந்து வசதிகளைப் பயன்படுத்திக்கொள்ள ஏதுவாக உள்ளது.

**60—**

## பேருந்து வசதி

**வினா எண் 29647—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு விரைவுப் பேருந்துகள் இரவு நேரங்களில் செங்கல்பட்டு பேருந்து நிலையத்திற்கு வராமல், புறவழிச் சாலையின் வழியாகச் செல்வதைத் தடுத்து செங்கல்பட்டு நகருக்குள் வந்து செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் தமிழ்நாடு லிமிடெட் மூலமாக இயக்கப்படும் அரசு விரைவுப் பேருந்துகள் இரவு நேரங்களில் செங்கல்பட்டு நகருக்குள் வந்து செல்லுமாறு இயக்க சாத்தியமில்லை. மேலும் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தை பொறுத்தமட்டில், நீண்டதூரப் பயணிகளின் வசதியை முன்னிட்டு, முன்பதிவு செய்து பெரும்பாலான இருக்கைகள் பூர்த்தியடைந்த நிலையில், தடத்தில் இயக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறு இயக்கப்படும் பேருந்துகள் செங்கல்பட்டு உள்ளிட்ட பேருந்து நிலையம் சென்று வரும்படி இயக்கினால், பயண தூரம் மற்றும் பயண நேரம் கூடுதலாகும். இதனை நேரடிப் பயணிகள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள். ஆகவே, அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இரவு நேரங்களில் செங்கல்பட்டு நகருக்குள் வந்து செல்லுமாறு இயக்க இயலாது.

**61—**

## நகரப் பேருந்து வசதி

**வினா எண் 33872—திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கரூரிலிருந்து புலியூர், வீரராக்கியம், சின்னமநாய்க்கன்பட்டி நத்தமேடு, மேலகட்டளை, மலையப்பபுரம், கட்டளை, ரெங்கநாதபுரம் வழியாக மேலமாயனூர் வரை புதிய நகரப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கரூர்-மேலமாயனூர் (வழி) புலியூர், வீரராக்கியம், சின்னமநாய்க்கன்பட்டி, நத்தமேடு, மேலகட்டளை, மலையப்பபுரம், கட்டளை, ரெங்கநாதபுரம் வழித்தடத்தின் மொத்த நீளம் 18.9 கி.மீ. ஆகும். இவ்வழித்தடத்தில், வீரராக்கியம்-ரெங்கநாதபுரம் வரை உள்ள 5.7 கி.மீ. தவிர மற்ற வழித்தடம் முழுவதும் பகுதி, பகுதியாக நகர மற்றும் புறநகர் பேருந்துகள்மூலம் நன்கு பேருந்து வசதி பெற்றுள்ளது. மேற்படி பேருந்து வசதி பெறாத 5.7 கி.மீ.-ல் நத்தமேடு-மலையப்பபுரம் இடையே 0.8 கி.மீ. பகுதி மண்சாலையாக உள்ளதால், இவ்வழித்தடத்தில் பேருந்து இயக்க இயலாத நிலை உள்ளது.

**62—**

## பேருந்து வசதி

**வினா எண் 35489—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம்-மருதுறை-காளிவனசு பேருந்து தடம் எண் 16 மற்றும் K1 குறுக்கன்பாளையம்புதூர் வழியாக இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம்-மருதுறை-காளிவனசு பேருந்து தடம் எண் 16 மற்றும் K1 பேருந்துகள் குறுகிய கால இடைவெளியில் பலமுறை வழித் தடங்களில் இயங்குவதை குறுக்கன்பாளையம்புதூர்

சென்று வரும் வகையில் இயக்க இயலாத நிலை உள்ளது. மேற்படி இரு பேருந்துகள்மூலம் 6 தனி நடைகள் குறுக்கன்பாளையம் சென்று வர வேண்டியவை தவறாது இயக்கப்பட்டு வருகின்றன.

**63—**

## ஆரம்ப சுகாதார நிலையங்கள்

**வினா எண் 10934—திரு. மு. அப்பாவு :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடற்கரை மீனவ கிராமங்களான கூட்டப்புளி, இழந்தகரை, கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, கூடுதாழை ஆகிய கிராமங்களுக்கு அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், கடற்கரை மீனவ கிராமங்களான கூட்டப்புளி, இழந்தகரை, கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, கூடுதாழை ஆகிய கிராமங்களின் மக்கள்தொகை பின்வருமாறு:—

| கிராமத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|
| கூட்டப்புளி | 3,362 |
| இழந்தகரை | 6,006 |
| கூத்தன்குழி | 1,708 |
| உவரி | 7,443 |
| கூட்டப்பனை | 1,148 |
| கூடுதாழை | 930 |

மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. மேலும், இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். மேற்கண்ட நிபந்தனைகளின் அடிப்படையில் திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம்,





கடற்கரை மீனவ கிராமங்களான கூட்டப்புளி, இழந்தகரை, கூத்தன்குழி, உவரி, கூட்டப்பனை, கூடுதாழை ஆகிய கிராமங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**64—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 18722—திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவில்பட்டி தொகுதி, திருவேங்கடம் சிறப்பு ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், குருவிகுளம் ஊராட்சி ஒன்றியம், திருவேங்கடம் கிராமத்தில் ஒரு துணை சுகாதார நிலையம் உள்ளது. இக்கிராமத்திலிருந்து 6 கிலோ மீட்டர் தொலைவில் கலிங்கப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு இடையே குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால் திருவேங்கடம் கிராமத்திற்கும், கலிங்கப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 6 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளது. மேலும், திருவேங்கடம் ஊராட்சி அமைந்துள்ள குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகை 1,12,000 (2001 கணக்கெடுப்பு) ஆகும். இந்த ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளன. மைய அரசின் வழிகாட்டுதலின்படி, 30,000 மக்கள்தொகைக்கு ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. இதன்படி, குருவிகுளம் ஊராட்சி ஒன்றியத்தின் மக்கள்தொகைக்கு ஏற்ப போதுமான ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளதால், திருவேங்கடம் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[2008 ஏப்ரல் 2

**65—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 25124—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை தொகுதி, பெத்தநாயக்கனூர் ஊராட்சி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 9 ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே ஆழியாறு நகர், ஆனைமலை, பெத்தநாய்க்கனூர், பெரியபோது, சேத்துமடை, டாப்ஸ்லிப், முடிஸ்நகர், சோலையாறு நகர், வால்பாறை ஆகியன செயல்படுகின்றன. இதில் பெரியபோது, வால்பாறை ஆகியன முதன்மை ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும் மற்றவை கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையங்களாகவும் செயல்படுகின்றன. ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையம் எதுவும் செயல்படவில்லை. அரசின் கொள்கைப்படி, ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு ஒரு தகுதிவாய்ந்த ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இனி வருங்காலங்களில் ஆனைமலை ஊராட்சி ஒன்றியத்தில் தகுதிவாய்ந்த ஓர் ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**66—**

## துணை சுகாதார மையம்

**வினா எண் 30381—திரு. எஸ்.ஆர். இராஜா:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, கவுல் பஜார், நன்மங்கலம் ஊராட்சிகளில் துணை சுகாதார மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தாம்பரம் தொகுதி சார்ந்த 1,700 மக்கள்தொகை கொண்ட கவுல் பஜார் கிராமம், பொழிச்சலூர் துணை சுகாதார நிலையக் கட்டுப்பாட்டில் உள்ளது. இக்கிராமத்திலிருந்து 2 கி.மீ. தொலைவில் பொழிச்சலூர் துணை சுகாதார நிலையமும், 3 கி.மீ. தொலைவில் பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 8 கி.மீ. தொலைவில் தாம்பரம் அரசு மருத்துவமனையும் உள்ளன. இக்கிராமத்திற்கு மிக அருகில் பொழிச்சலூர் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை சுகாதார நிலையம் இயங்கி வருவதால், கவுல் பஜாரில் துணை சுகாதார நிலையம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் தற்போது இல்லை.

தாம்பரம் தொகுதி சார்ந்த 7,480 மக்கள்தொகை கொண்ட நன்மங்கலம் கிராமம், கோவிலம்பாக்கம் துணை சுகாதார நிலையக் கட்டுப்பாட்டில் உள்ளது. நன்மங்கலம் கிராமத்திலிருந்து 2 கி.மீ. தூரத்தில் கோவிலம்பாக்கம் துணை சுகாதார நிலையம் உள்ளது. எனினும், மக்கள்தொகையின் அடிப்படையில் நன்மங்கலத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்கலாம். புதிய துணை சுகாதார நிலையங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு மத்திய அரசிடமிருந்து கிடைக்கப் பெற்றவுடன், தாம்பரம் தொகுதி சார்ந்த நன்மங்கலம் கிராமத்தில் துணை சுகாதார நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**67—**

## விரிவுபடுத்துதல்

**வினா எண் 36246—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஜல்லிப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தை விரிவுபடுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை தொகுதி, உடுமலைப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், ஜல்லிப்பட்டி கிராமத்தில் 14 படுக்கைகள் கொண்ட அரசு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. இக்கிராமத்தின் மக்கள்தொகை 4,461 ஆகும். இக்கிராமத்தில் துணை சுகாதார நிலையம் ஒன்று செயல்பட்டு வருகிறது. இவ்வூராட்சி ஒன்றியத்தில் எரிசம்பட்டி, அமராவதி நகர், செல்லப்பம்பாளையம் மற்றும் பெரியவாளவாடி ஆகிய 4 ஆரம்ப சுகாதார நிலையங்கள் செயல்படுகின்றன. மேலும், ஜல்லிப்பட்டி கிராமத்தில் அரசு மருத்துவமனை செயல்பட்டு வருவதாலும், 8 கி.மீ. தொலைவில் பெரியவாளவாடி ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருவதாலும் ஜல்லிப்பட்டி கிராமத்தில் உள்ள துணை சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**68—**

## தென்னை மரம் சார்ந்த தொழில்கள்

**வினா எண் 20972—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை மரம் சார்ந்த தொழில்களைத் தொடங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பகுதியில் தென்னை மரம் சார்ந்த தொழில்களைத் தொடங்க திட்டம் ஏதும் அரசின் செயற்குறிப்பில் இல்லை. கூட்டுறவு முறையிலோ அல்லது



2008 ஏப்ரல் 2]

தனியார் அமைப்பிலோ தென்னை சார்ந்த தொழில் தொடங்க விரும்புவோர் கயிறு வகைத் தொழில்களுக்கு வழங்கப்படும் நிதி உதவிகளைப் பெறுவதற்கான ஆலோசனைகளை பொது மேலாளர், மாவட்டத் தொழில் மையம், சிவகங்கை அவர்களை அணுகி தொழில் தொடங்க விவரங்கள் பெறலாம்.

**69—**

## ஆக்கிரமிப்புகள் அகற்றுதல்

**வினா எண் 10223—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஆப்பக்கூடல் சிற்றூராட்சி, ஆ.புதுப்பாளையம் மயானத்தில் ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பவானி தொகுதி, ஆப்பக்கூடல் கிராமம், மஜரா ஆ.புதுப்பாளையம் கிராமப் பொது மக்கள் ரீ.ச. எண் 82 சாலையில் மயானம் அமைத்துப் பயன்படுத்தி வருகின்றனர். ரீ.ச.எண் 82 சாலையானது, கிராமக் கணக்குகளின்படி, வண்டிப்பாதை என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு பகுதியை பொதுமக்கள் மயானமாகப் பயன்படுத்தி வருகின்றனர். மேற்படி வண்டிப்பாதை புறம்போக்கில் 25 சென்ட் புலப்பகுதி செடிகளாலும், ஆறு, தென்னை மரங்களாலும் சூழப்பட்டிருந்தது. இத்தென்னை மரங்கள் நீங்கலாக இதரச் செடிகளை அப்புறப்படுத்தி மயானம் பயன்பாட்டிற்காக வழி செய்ய ஆப்பக்கூடல் பேரூராட்சி நிர்வாகத்தினர் மேற்படி ரீச. எண் 82 சாலையானது அளந்து அத்து காண்பிக்கப்பட்டது. எனவே, மேற்படி மயானப் பகுதியில் ஆக்கிரமிப்புகள் ஏதுமில்லை.

[2008 ஏப்ரல் 2

**70—**

## அரசு நிலம் மீட்பு

**வினா எண் 11779—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*பத்மநாபபுரம் தொகுதி, குமாரகோவிலில் என்.ஐ. தனியார் பொறியியல் கல்லூரி கையகப்படுத்திய அரசு நிலத்தை மீட்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

*கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், கல்குளம் கிராமம், புல எண் 848/1-ல் 84.39.0 ஹெக்டேர் தீர்வை ஏற்பட்ட தரிசு நிலத்தில் 46.78.5 ஹெக்டேர் பரப்பு நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், புல எண் 848/44 என தல உட்பிரிவு செய்யப்பட்டு, என்.ஐ. பொறியியல் கல்லூரி நிறுவனத்தின் தற்போதைய தலைவர் திரு. அலிகான் முகம்மது, மகன் திரு. ஏ.பி. மஜித்கான் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பொறியியல் கல்லூரிக்குப் புறம்போக்கு நிலம் எதுவும் ஒப்படை செய்யவில்லை.*

**71—**

## வீட்டு வசதி

**வினா எண் 33859—திரு. எம். பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*சீர்காழி தொகுதி, பழையாறு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு விடுபட்ட மீனவக் குடும்பங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?*



2008 ஏப்ரல் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்:**

*நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டம், பழையாறு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட 783 மீனவக் குடும்பங்களுக்கு கேர் இந்தியா தொண்டு நிறுவனம் மூலம் 725 வீடுகளும், அந்த நிறுவனத்தால் கட்ட இயலாமல் கைவிடப்பட்ட 58 வீடுகள் தமிழக அரசின் உள்ளாட்சித் துறை சுனாமி மாவட்ட செயலாக்கத் திட்ட அலகுமூலமும் கட்டப்பட்டு வருகின்றன. கட்டுமானப் பணி முடிக்கப்பட்ட 555 வீடுகள் பயனாளிகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தவிர, சுனாமியால் பாதிப்படையாத இதர பிரிவினைச் சேர்ந்த 222 குடும்பங்களுக்கு, லுத்தரன் வேர்ல்டு சர்வீஸ் தொண்டு நிறுவனம் மூலம் 152 வீடுகளும் CWBC தொண்டு நிறுவனம் மூலம் 70 வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. இவற்றில் CWBC தொண்டு நிறுவனம் கட்டிய 70 வீடுகளும் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டு குடியிருந்து வருகின்றனர். எனவே, பழையாறு கிராமத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்டு வீடுகளை இழந்த அனைவருக்கும் சுனாமி நிரந்தர வீடுகள் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.*

**72—**

## நெல் உலர்த்தும் இயந்திரம்

**வினா எண் 24571—திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மழைக்காலங்களில் விவசாயிகளுக்கு உதவ கொள்முதல் நிலையங்களில் நெல் உலர்த்தும் இயந்திரம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவுத் துறை அமைச்சர்:**

*கொள்முதல் நிலையங்களில், நெல் உலர்த்தும் இயந்திரம் அமைப்பது தொடர்பாக, திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.*

[2008 ஏப்ரல் 2

73—

## தொழிற்பயிற்சி மையம்

**வினா எண் 39337—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, நரிக்குடியில் தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை தொகுதி, நரிக்குடியில் அமைந்துள்ளவை இரண்டு அரசினர் தொழிற் பயிற்சி நிலையங்கள் ஒன்று காரைக்குடியில் 6 தொழிற்பிரிவுகளுடன் 240 இருக்கைகள் கொண்டும், 2007-2008 ஆம் ஆண்டில் புதிதாக சிவகங்கையில் துவங்கப்பட்டுள்ள மற்றொரு அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் 6 தொழிற்பிரிவுகளுடன், 224 இருக்கைகளுடனும் செயல்பட்டு வருகின்றன. மேலும், நரிக்குடியில் தமிழ்நாடு கோ-ஆப்பரேடிவ் சொஸைட்டிமூலம் ஒரு தொழிற்பயிற்சி நிலையமும் மற்றும் இம்மாவட்டத்தில் 1,541 இருக்கைகளுடன் 13 தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் செயல்பட்டு வருகின்றன.

சிவகங்கை மாவட்டத்தில் 2,005 இருக்கைகளுடன் இரண்டு அரசினர் தொழிற்பயிற்சி நிலையங்களும் மற்றும் 13 தனியார் தொழிற்பயிற்சி மையங்களும் இயங்கி வருவதால் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை தொகுதி, நரிக்குடியில் அரசினர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.

74—

## நல வாரியம்

**வினா எண் 42868—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் முடிதிருத்தும் தொழிலாளருக்கு நல வாரியம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?



2008 ஏப்ரல் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 73, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 1-9-2006-ல் தமிழ்நாடு முடி திருத்துவோர் நல வாரியம் உட்பட 9 (ஒன்பது) நலவாரியங்களை ஏற்படுத்தி அரசால் ஆணையிடப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

75—

## இடைநிலை ஆசிரியர்கள் பணி நியமனம்

**வினா எண் 15865—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு 2 இடைநிலை ஆசிரியர்களை பணி நியமனம் செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட 8 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். தற்போது இடைநிலை ஆசிரியர் காலிப் பணியிடம் ஏற்படுகையில் அப்பணியிடம் பட்டதாரி ஆசிரியர் நிலையிலேயே பூர்த்தி செய்யப்பட்டு வருகிறது. அதன்படி, 01-08-2007 நிலவரப்படி அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் 6 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆசிரியர்கள் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

76—

## கூடுதல் ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 23873—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பார்த்திபனூர் அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக ஆசிரியர்களை நியமனம் செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) 6 ஆம் வகுப்பில் 119 மாணவர்கள்
7 ஆம் வகுப்பில் 143 மாணவர்கள் } 394
8 ஆம் வகுப்பில் 132 மாணவர்கள்

9 ஆம் வகுப்பில் 215 மாணவர்கள் } 403
10 ஆம் வகுப்பில் 188 மாணவர்கள்

11 ஆம் வகுப்பில் 136 மாணவர்கள் } 273
12 ஆம் வகுப்பில் 137 மாணவர்கள்

(ஆ) 6 முதல் 8 ஆம் வகுப்பு முடிய 14 ஆசிரியர்களும், 9 மற்றும் 10 ஆம் வகுப்புகளுக்கு 13 ஆசிரியர்களும், 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கு 12 ஆசிரியர்களும், பணிபுரிந்து வருகிறார்கள்.

எனவே, பார்த்திபனூர், அரசு மேல்நிலைப் பள்ளிக்கு மாணவர்களின் விகிதாச்சாரத்திற்கு ஏற்ப ஆசிரியர் பணியிடங்கள் வழங்கப்பட்டுள்ளதால் கூடுதல் ஆசிரியர் பணியிடம் தேவையில்லை.

**77—**

## தேர்வு மையம்

**வினா எண் 32307—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் நேஷனல் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தேர்வு மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஓமலூர் தொகுதி, ஓமலூர் நேஷனல் மெட்டிரிக் மேல்நிலைப் பள்ளியிலிருந்து மார்ச் 2007 மேல்நிலைத் தேர்விற்கு 7 மாணவர்கள் மட்டுமே ஓமலூரில் அமைந்துள்ள வெள்ளச்சாமி செட்டியார் மேல்நிலைப் பள்ளி தேர்வு மையத்தில் தேர்வெழுதியுள்ளனர். தேர்வெழுதும் மாணவர் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால் இப்பள்ளியினைத் தேர்வு மையமாக அமைக்க வாய்ப்பில்லை.



2008 ஏப்ரல் 2]

**78—**

## கூடுதல் புத்தகங்கள்

**வினா எண் 35650—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் நூலகத்திற்குக் கூடுதலாகப் புத்தகங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பண்ருட்டி தொகுதி, காடாம்புலியூர் நூலகத்திற்குக் கூடுதலாக சமீபத்தில் 15-5-2007 அன்று 416 நூல்களும், 14-9-2007-ல் 600 நூல்களும் மற்றும் நவம்பர் 2007-ல் 600 நூல்களும் ஆக மொத்தம் 1616 நூல்கள் இந்த ஆண்டில் வழங்கப்பட்டுள்ளன.

**79—**

## தமிழ் ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 40458—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, ரொட்டிக்கடை உயர்நிலைப் பள்ளிக்கு தலைமையாசிரியர், இடைநிலை ஆசிரியர், தமிழ் ஆசிரியர் நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 2

விடை—

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை மற்றும் ரொட்டிக்கடை அரசு உயர்நிலைப் பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் பணியிடங்களில் தலைமையாசிரியர்கள் பணிபுரிவதால் தற்போது மேற்படி பள்ளிகளில் தலைமையாசிரியர் பணியிடங்கள் காலியில்லை. தமிழாசிரியர்களைப் பொறுத்தமட்டில் ரொட்டிக்கடை அரசு உயர்நிலைப் பள்ளியில் ஒரு தமிழாசிரியர் பணியிடம் மட்டுமே காலியாக உள்ளது. இப்பணியிடமானது எதிர்வரும் ஆசிரியர்கள் நியமனம் மற்றும் மாறுதல் கலந்தாய்வின்போது நிரப்பப்படும். இடைநிலை ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் வால்பாறை அரசு உயர்நிலைப் பள்ளியில் (மகளிர்) இரண்டு மலையாள இடைநிலை ஆசிரியர் பணியிடங்கள் காலியாக உள்ளன. இப்பணியிடங்கள் பட்டதாரி ஆசிரியர் நிலைக்கு உயர்த்தப்படும். ஆசிரியர் தேர்வு வாரியத்திடமிருந்து பட்டியல் கோரப்பட்டு பட்டியல் பெறப்பட்டவுடன் இப்பணியிடங்கள் நிரப்பப்படும்.*

**80—**

## ஆசிரியர்கள் நியமனம்

**வினா எண் 40467—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) வால்பாறை தொகுதி சோலையாறு அணை மேல்நிலைப் பள்ளிக்கு பட்டதாரி ஆசிரியர்கள், விளையாட்டு ஆசிரியர் நியமிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

விடை—

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி சோலையாறு அணை மேல்நிலைப் பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட 7 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களில் 5 பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்டு ஆசிரியர்கள் பணிபுரிந்து*



2008 ஏப்ரல் 2]

*வருகின்றனர். மீதமுள்ள இரண்டு காலிப் பணியிடங்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்திலிருந்து பட்டியல் பெறப்பட்டவுடன் பூர்த்தி செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

*மேலும், இப்பள்ளிக்கு அனுமதிக்கப்பட்ட ஓர் உடற்கல்வி ஆசிரியர் பணியிடம் காலியாக இருப்பதால், அப்பணியிடத்தை நிரப்ப வேலை வாய்ப்பகத்திலிருந்து தேவைப் பட்டியல் பெற்று நியமிக்க முதன்மைக் கல்வி அலுவலருக்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.*

**81—**

## விவசாய விளைபொருட்கள்

**வினா எண் 11601—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தளி தொகுதி, பெட்டமுகிலாளம் வனத் துறை சோதனைச் சாவடியில் விவசாய விளைபொருட்களை ஏற்றிவரும் வண்டிகளுக்குக் கட்டணம் வசூலிப்பதை இரத்து செய்ய அரசு ஆவன செய்யுமா?*

விடை—

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

*வனச் சாலைகளைப் பயன்படுத்த வாகன உரிமையாளர்களிடமிருந்து உரிமக் கட்டணம் வசூலிப்பதை இரத்து செய்து அரசாணை (நிலை) எண் 11, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை, நாள் 18-2-2008-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.*

**82—**

## சாலை புதுப்பித்தல்

**வினா எண் 2776—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*செங்கல்பட்டு—பொன்விளைந்தகளத்தூர்—வள்ளிபுரம் வரை மிகவும் பழுதடைந்துள்ள சாலையைப் புதுப்பித்துத்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

சட்டமன்ற வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையானது கீழ்க்கண்ட இரு சாலைகளை உள்ளடக்கியதாகும்:—

***ஜி.எஸ்.டி. சாலையிலிருந்து திருக்கழுக்குன்றம் (வழி) பி.வி. களத்தூர் சாலை கி.மீ.0/0 முதல் 13/6 வரை***

இச்சாலையில் கி.மீ. 0/0-4/5 வரை இடைவழித் தடமாக அகலப்படுத்துதல் பணி முன்னேற்றத்தில் உள்ளது. கி.மீ. 4/5- 6/0 வரை இடைவழித் தடமாக அகலப்படுத்தும் பணி முடிவடைந்துள்ளது.

கி.மீ. 6/0-9/4 வரை தனிச்சீர் செய்தல் பணி நடைபெற்று வருகிறது. இதைத்தவிர மீதமுள்ள சாலைப் பகுதி கி.மீ. 9/4-13/6 வரை (4.20 கி.மீ) தார் நொடிகள் சீர்பார்த்து போக்குவரத்துக்கு உகந்த வகையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

***(2) பி.வி. களத்தூர்—வள்ளிபுரம் சாலை (கி.மீ. 0/0 முதல் 9/2 வரை)***

இச்சாலை ஒரு மாவட்ட இதரச் சாலையாகும். இதில் கி.மீ. 0/0-6/2 வரையுள்ள சாலைப் பகுதியை 2007-2008 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 55.00 இலட்சம் செலவில் உறுதி செய்ய தேர்வு செய்யப்பட்டு விரைவில் பணிகள் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதைத்தவிர, மீதமுள்ள சாலைப் பகுதியான கி.மீ. 6/2-9/2 (3.00 கி.மீ) வரையுள்ள சாலைப் பகுதியை பாரத் நிர்மான் திட்டத்தின்கீழ் ரூ. 63.00 இலட்சம் செலவில் மேம்பாடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**83—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 11119—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதியம்பட்டி முதல் பொரசல்பட்டி வரை உள்ள சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?



2008 ஏப்ரல் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலையானது, நாமக்கல் நெடுஞ்சாலை கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதரச் சாலையான மதியம்பட்டி பொரசல்பட்டி சாலை கி.மீ. 0/0-2/920 ஆகும். சாலைகளை அகலப்படுத்துவதற்கு இந்திய சாலைக் கூட்டமைப்பு (IRC) வறையரைப்படி வாகன ஊர்தி அலகு (PCU) 2,400 இருக்க வேண்டும். ஆனால், இச்சாலையில் வாகன ஊர்தி அலகு (PCU) 925 மட்டுமே உள்ளதால் இச்சாலையினை அகலப்படுத்தும் தகுதி பெறவில்லை. எனவே, அகலப்படுத்த இயலாது.

**84—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 11120—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அத்தனூர் சாலை 0/0-2/0 பகுதியை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அத்தனூர் சாலை கி.மீ. 0/0-2/0 வரை அகலப்படுத்தி மேம்பாடு செய்யக் கோரும் பகுதியானது நாமக்கல் நெடுஞ்சாலைக் கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையில், கி.மீ. 0/0-2/0 வரை 2006-07 ஆம் ஆண்டு காலமுறை புதுப்பிக்கும் தலைப்பின்கீழ் தார் தளம் சீரமைக்கும் பணி முடிவடைந்துள்ளது. பொதுவாக, சாலையை அகலப்படுத்தவேண்டுமானால் இந்திய சாலை காங்கிரஸ் தரத்தின்படி வாகனச் செறிவு 2,400 (PCU) இருக்க வேண்டும். தற்போது, இச்சாலையில் வாகனச் செறிவு (PCU) 1,900 மட்டுமே உள்ளதால் இச்சாலையை அகலப்படுத்த இயலாத நிலை உள்ளது.

**85—**

## சிறு பாலம் கட்டுதல்

**வினா எண் 11121—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2008 ஏப்ரல் 2

மல்லியக்கரை-இராசிபுரம்-திருச்செங்கோடு-ஈரோடு கி.மீ. 29/8 (தண்ணீர்ப் பந்தல் காடு வினாயக சேகோ பேக்டரி) அருகில் சிறு பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப் பகுதி நாமக்கல் (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாநில நெடுஞ்சாலையான மல்லிக்கரை-இராசிபுரம்—திருச்செங்கோடு—ஈரோடு சாலை நீளம் கி.மீ. 4/800-94/660 ஆகும். இச்சாலையில் ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் (சி.ஆர்.ஐ.டி.பி.) கீழ் சாலையை மேம்படுத்த ரூ. 2.71 கோடியில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு, கி.மீ. 11/2-13/6, 15/0-18/6, 19/6, 20/100-20/600, 21/0-22/6, 24/0-24/6, 25/0-26/100, 26/6-27/2, 27/8-29/0, 29/4-30/0 சாலை மற்றும் பள்ளத்தை மேம்பாடு செய்யும் பணிகள் அனைத்தும் முடிக்கப்பட்டு தற்போது சாலை நல்ல நிலையில் உள்ளதால், இச்சாலையில் சிறு பாலம் கட்டவேண்டிய அவசியம் இல்லை.

**86—**

## தேசிய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம்

**வினா எண் 14577—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையிலுள்ள கிண்டி தேசிய நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையம் பாதுகாக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 247, நெடுஞ்சாலைத் துறை, நாள் 28-11-2006-ல் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான கிண்டியிலுள்ள 38.27 ஏக்கர் இடத்தை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு வழங்கவும், அதற்கு ஈடாக அண்ணா பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான தரமணியில் உள்ள இடத்தை நெடுஞ்சாலைத் துறைக்கு வழங்கி பரிவர்த்தனை செய்து கொள்ளவும் அரசு ஆணையிட்டுள்ளது.



2008 ஏப்ரல் 2]

2. மேலும், கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தையொட்டியுள்ள, காலி நிலத்தினை அண்ணா பல்கலைக்கழகத்திற்கு மாற்றவும், நெடுஞ்சாலை ஆராய்ச்சி நிலையத்தின் பரிசோதனைக் கூடங்கள் மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் பிற அலுவலகங்களுக்கு மாற்று இட வசதி ஏற்படுத்தப்படும் வரையில் தற்போதுள்ள வளாகத்தில் செயல்படவும் அரசு ஆணையிட்டுள்ளது.

**87—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 25977—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் கட்டிக்குளம் சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, முத்தனேந்தல் கட்டிக்குளம் சாலையை மேம்படுத்தக் கோரும் சாலையின் சரியான பெயர் முத்தனேந்தல்-மிளகனூர் சாலை கி.மீ. 0/0-10/3 ஆகும். இச்சாலை சிவகங்கை (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 4/2-5/0 வரை காலமுறை புதுப்பித்தல் திட்டத்தில் 2007-2008-ல் சேர்க்கப்பட்டு தற்போது பணிகள் ரூ. 7.80 இலட்சம் செலவில் முடிக்கப்பட்டுள்ளன. இச்சாலையில் கி.மீ. 7/4-10/3-ல் பராமரிப்புப் பணி நபார்டு மற்றும் கிராமச் சாலை அலகின் மூலம் செயல்படுத்த ஒப்பந்தம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள 6.60 கி.மீ. நீள சாலைகளில் தார் நொடிகள் போட்டு சீர் செய்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

[2008 ஏப்ரல் 2

**88—**

**சாலையைச் செப்பனிடுதல்**

**வினா எண் 33090—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமத்தி-வேலூர்-மோகனூர் சாலையில் பாலம்பட்டி-தீர்த்தம்பாளையம் நெடுஞ்சாலையைச் செப்பனிட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பாலப்பட்டி-தீர்த்தம்பாளையம் சாலையானது வேலூர்-மோகனூர் சாலையில் 8/0-10/0 கி.மீ.-ல் அமைந்துள்ள நாமக்கல் (நெடுஞ்சாலை) கோட்டப் பராமரிப்பிலுள்ள மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலையினைச் சீரமைக்க சிறப்பு பழுது பார்த்தல் திட்டத்தின்கீழ் ரூ. 50.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்த பின்பு சாலைப் பணி மேற்கொள்ளப்பட்டு விரைவில் முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**89—**

**தடுப்புச் சுவர்களைச் சீரமைத்தல்**

**வினா எண் 38265—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை-மதுரை மேம்பாலத்தின் தடுப்புச் சுவர்களைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2008 ஏப்ரல் 2]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சட்டமன்றப் பேரவை வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள மேம்பாலம் நெடுஞ்சாலைத் துறையின் பராமரிப்பில் உள்ள மதுரை-தூத்துக்குடி சாலை எனும் மாநில நெடுஞ்சாலையில் கி.மீ. 46/550-47/200-ல் உள்ள இரயில்வே மேம்பாலமாகும். இப்பாலத்தின் இருபுறமும் உள்ள அணுகு சாலையின் தடுப்புச் சுவர்கள் சேதமடைந்துள்ளன. அதனால் அணுகு சாலையின் அகலமும் குறைந்துள்ளது. மேற்படி அணுகு சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய 2007-2008 ஆண்டிற்கான ஒருங்கிணைந்த சாலை உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 150.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தம் கோரப்பட்டு பணிகளை விரைவில் தொடங்க தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**90—**

**சத்துணவுக் கூடத்தைப் பழுதுபார்த்தல்**

**வினா எண் 38478—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், அச்சம்பாடு ஊராட்சி, புதுக்குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவுக் கூடத்தினை பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியம், அச்சம்பாடு ஊராட்சியில் உள்ள புதுக்குடியிருப்பு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு புதிய சமையல் அறை மற்றும் உணவுப் பொருள் வைப்பறையை ஊராட்சி ஒன்றியப் பொது நிதியில் இருந்து ரூ. 1.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்களால் உத்தரவிடப்பட்டுள்ளது.

[2008 ஏப்ரல் 2

91—

## சிறுவர்கள் இல்லம்

**வினா எண் 39616—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டத்தில் சிறுவர்கள் இல்லம் துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டத்தில் ஒ. சிறுவயல், காரைக்குடி-623 208 என்ற முகவரியில் சிறுவர்களுக்கான அரசினர் குழந்தைகள் இல்லம் ஒன்று தற்போது இயங்கி வருகிறது.

(ஆ) கேள்வி எழ வாய்ப்பில்லை.

92—

## கால்நடை மருந்தகம்

**வினா எண் 20593—திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூர் தொகுதி, ஊத்தங்கரை வட்டம், புதூர் புங்கனை, வீரணகுப்பம், பாவக்கல் ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி கோட்டம், ஊத்தங்கரை ஊராட்சி ஒன்றியத்தின் ஆளுகைக்குட்பட்ட புதூர் புங்கனை



கிராமத்திலிருந்து 10 கி.மீ. தூரத்தில் ஊத்தங்கரை கால்நடை மருந்தகமும், 8 கி.மீ. தூரத்தில் காட்டேரி மற்றும் மருப்பட்டி கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 4,890 ஆகும்.

2. வீரணகுப்பம் கிராமத்திலிருந்து 10 கி.மீ. தொலைவில் திருவணம்பட்டி கால்நடை மருந்தகமும், 8 கி.மீ. தொலைவில் கல்லாவி கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன மேற்படி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 2,417 ஆகும்.

3. பாவக்கல் கிராமத்திலிருந்து 8 கி.மீ. தொலைவில் காட்டேரி கால்நடை கிளை நிலையமும், 9 கி.மீ. தொலைவில் சிங்காரப் பேட்டை கால்நடை கிளை நிலையமும் செயல்பட்டு வருகின்றன. மேற்படி கிராமத்தில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 6,225 ஆகும்.

4. புதூர் புங்கனை மற்றும் வீரணகுப்பம் ஆகிய கிராமங்களுக்கு இணைப்புத் தம்பதியினர்மூலம் கோழிக்கழிச்சல் தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன மற்றும் பாவக்கல் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே, மேற்படி கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு சம்பந்தப்பட்ட கால்நடை நிலையங்களின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானதாக கருதப்படுகின்றது.

93—

## கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

**வினா எண் 34545—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்பாச்சேத்தி கால்நடை மருத்துவமனையைத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2008 ஏப்ரல் 2

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருப்பாச்சேத்தியில் கால்நடை மருந்தகம்தான் செயல்படுகிறது. திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், ஐந்து கால்நடை கிளை நிலையங்களும் செயல்பட்டு வருகின்றன. திருப்பாச்சேத்தி கால்நடை மருந்தகத்திற்கு கால்நடைகளின் தினசரி சராசரி வருகை 40-க்குக் குறைவாக உள்ளதால் மேற்படி கால்நடை மருந்தகத்தை கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது வாய்ப்பில்லை.

**94—**

### கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்துதல்

**வினா எண் 34564—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருந்துவமனையை விரிவுபடுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த திருப்புவனத்தில் கால்நடை மருந்தகம்தான் செயல்படுகிறது. கால்நடை மருத்துவமனை துவக்கப்பட வேண்டுமானால் அங்கு தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 40-க்கும் கூடுதலாக இருக்க வேண்டும். ஆனால், திருப்புவனம் கால்நடை மருந்தகத்திற்கு கால்நடைகளின் தினசரி சராசரி வருகை குறைவாக உள்ளதால் மேற்படி கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த தற்போது வாய்ப்பில்லை. எனவே, மானாமதுரை தொகுதி, திருப்புவனம் கால்நடை மருத்துவமனையை விரிவுபடுத்துவது குறித்த கேள்வி எழாது.



2008 ஏப்ரல் 2]

**95—**

### கோழிப் பண்ணைகள்

**வினா எண் 34568—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரையில் கோழிப் பண்ணைகள் அமைக்க மானியத்துடன் கடன் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில் கோழிப் பண்ணைகள் அமைக்க அரசு மானியத்துடன் கடன் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

சிவகங்கை மாவட்டத்தில் தற்போது செட்டிநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் கோழிப் பண்ணைப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பிரிவில் சுமார் 595 கோழிகள் பராமரிக்கப்பட்டு, இது ஒரு மாதிரிப் பண்ணையாக செயல்பட்டு வருகிறது. இங்கிருந்து விவசாயிகளுக்கு கோழிகள் மற்றும் முட்டைகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. எனவே, மானாமதுரையில் புதியதாக கோழிப் பண்ணை அமைக்க தற்போது அரசிடம் திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**96—**

### கூடுதல் மருந்துகள்

**வினா எண் 38779—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பாரமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை அரசு கால்நடை மருந்தகத்திற்குக் கூடுதலாக மருந்துகள், தளவாடச் சாமான்கள் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு தேவைப்படும் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் விவரம் ஒவ்வோர் ஆண்டும் சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து தேவைப் பட்டியல் பெற்று அந்நிலையங்களுக்கான ஆண்டு உச்ச வரம்பான ரூ. 50,000-க்கு தேவைப் பட்டியல் தயாரித்து, சென்னை தமிழ்நாடு மருத்துவப் பணிக் கழகத்திற்கு அனுப்பப்படுகிறது. அதன்படி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் போதுமான அளவிற்கு பெற்று வழங்கப்பட்டு வருகின்றன.

**97—**

## கூடுதல் மருந்துகள்

**வினா எண் 38786—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, மானாமதுரை ஒன்றியம், முத்தனேந்தல் அரசு கால்நடை மருத்துவமனைக்குக் கூடுதலாக மருந்துகளும், தளவாடச் சாமான்களும் வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கால்நடை மருத்துவ நிலையங்களுக்கு தேவைப்படும் மருந்துகள் மற்றும் உபகரணங்கள் விவரம் ஒவ்வொரு ஆண்டும் சம்பந்தப்பட்ட அலுவலரிடமிருந்து தேவைப் பட்டியல் பெற்று, அந்நிலையங்களுக்கான ஆண்டு உச்ச வரம்பான ரூ.50,000/-க்கு தேவைப் பட்டியல் தயாரித்து, சென்னை தமிழ்நாடு



மருத்துவப் பணிக் கழகத்திற்கு அனுப்பப்படுகிறது. அதன்படி மருந்துகள் மற்றும் உபகரணங்கள் போதுமான அளவிற்கு பெற்று வழங்கப்பட்டு வருகின்றன.

**98—**

## ஈமு கோழி வளர்ப்பு

**வினா எண் 41132—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில் ஆஸ்திரேலிய 'ஈமு' கோழிகள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) சிவகங்கை மாவட்டம், மானாமதுரை பகுதியில் ஆஸ்திரேலிய 'ஈமு' கோழிகள் வளர்க்கும் திட்டம் அரசிடம் தற்போது ஏதும் இல்லை.

(ஆ) எழாது.

**99—**

## பள்ளிக் கட்டடச் சீரமைப்பு

**வினா எண் 11714—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி, கரிக்கையூர் கிராம பழங்குடியினர் நலப் பள்ளிக் கட்டடம் சீரமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி வட்டம், கரிக்கையூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட நடுநிலைப் பள்ளியின் கட்டடம் நல்ல நிலையில் உள்ளது.*

**100—**

**சுற்றுச் சுவர்**

**வினா எண் 12937—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி நகர் பழங்குடியினர் பள்ளியில் சுற்றுச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

*(அ) மற்றும் (ஆ) உடுமலைப்பேட்டை வட்டம், திருமூர்த்தி நகர், பழங்குடியினர் உண்டு உறைவிடப் பள்ளியின் மேற்கு மற்றும் தெற்குப் பகுதியில் சுற்றுச் சுவர் ஏற்கெனவே உள்ளது. வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் சுற்றுச் சுவர் கட்ட ரூபாய் 50,000 செலவு ஆகும். இந்தப் பணி, 2007-2008 ஆம் ஆண்டின் திட்ட ஒதுக்கீட்டில் மேற்கொள்ளப்படும்.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]





## 2. வரவு-செலவுத் திட்டம், 2008—2009, பொது விவாதமும் பதிலுரையும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைமீது பொது விவாதமும் பதிலுரையும். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.*

**திரு. ஜி.கே. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைச் சொல்லி, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஒரு சில கருத்துகளைக் கூற விழைகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே,*

*"மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்*
*காடும் உடைய தரண்"*

*என்று வள்ளுவர் மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். மணிபோல் தெளிந்த நீரையுடைய அகழியும், வெளி நிலமும், மலையும், அழகிய நிழல்தரும் காவற்காடும் உடையதே கோட்டை என்று ஒரு நாட்டின் கோட்டையைப்பற்றி மிக அழகாகச் சொல்லியிருக்கிறார். அந்த அடிப்படையிலேதான், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நேரடிப் பார்வையிலே, குறிப்பாக, அமைச்சர்களையெல்லாம் கலந்து பேசுவதற்காக, அமைச்சரவைக் கூட்டத்தைக் கூட்டி, துறையினுடைய செயலாளர்கள் உட்பட அனைத்துத் துறைகளின் அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, தன்னுடைய நேரடி மேற்பார்வையில் இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரித்து அளித்திருக்கிறார்கள் என்பதை நான் முதலில் பெருமைபடச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதைக்கூட சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்கிற வேளையில், முதலமைச்சர் அவர்கள் எப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டார்கள் என்பதை நேரிலே பார்த்தவன், கேட்டு அறிந்தவன் என்ற முறையிலேதான் இதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.*

*இந்த நிதிநிலை அறிக்கையைப்பற்றிச் சொல்கிற வேளையில்,*

*"அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்*
*திறனறிந்தான் தேர்ச்சித் துணை"*

*என்கிறார் வள்ளுவர். அறங்களை அறிந்து, அறிவு நிறைந்த சொல் உடையவனாய், எப்பொழுதும் செயல்களைச் செய்யும் வழிகளை*

அறிந்தவன், ஆலோசனைகளைக் கூறுவதற்கு உரிய துணையாவான் என்று வள்ளுவர் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான், ஒரு முதலமைச்சர் அவர்களாலே, அனுபவம் மிக்க, ஆற்றல் நிறைந்த ஒரு மூத்த தலைவரின் நேரடிப் பார்வையில் தயாரிக்கப்பட்ட இந்த நிதிநிலை அறிக்கையில் மக்களுக்குத் தேவையானவற்றைச் சொல்லியிருப்பதையும் சுட்டிக்காட்டி, அதே நேரத்தில் இன்னும் நிறைவேற்றவேண்டியதையும் சுட்டிக்காட்டுவதற்கு ஒரு பொறுப்புள்ள அரசியல் கட்சி என்ற அடிப்படையிலே சிலவற்றை இங்கே நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு நாங்கள்கூட ஆண்டுதோறும் ஒரு வரைவு நிதிநிலை அறிக்கையை மக்கள் மன்றத்திற்கு வைத்திருக்கிறோம். இப்போது ஆறாவது அறிக்கையைக் கொடுத்திருக்கிறோம். ஆண்டுதோறும் வரக்கூடிய வரைவு நிதிநிலை அறிக்கையைப்போல, இந்த ஆண்டும் பா.ம.க. சார்பிலே தயாரிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையில் இருந்த பல்வேறு அம்சங்களை தமிழக அரசின் நிதிநிலை அறிக்கையிலே இடம்பெறச் செய்த முதலமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எங்களின் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கு முன்பு, தமிழகத்தினுடைய பொருளாதார நிலை எந்த அளவில் இருக்கிறது; ஏதாவது வெள்ளச் சேதமா; வறட்சி சேதமா; மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறதா, இன்றைய சூழ்நிலையில் தமிழக மக்களின் பொருளாதார நிலை என்ன என்பதை அரசும் மக்களும் அறிந்துகொள்வதற்காக, ஒரு பொருளாதார ஆய்வறிக்கை-Economic Survey என்று சொல்கிறார்களே, அந்த ஆய்வறிக்கையை வழங்கியிருக்கவேண்டும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக்கொண்டிருக்கிறோம். அதைப்போல, கடந்த ஆண்டு, ஆளுநர் உரையில் நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டவை எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றனவா, எந்த அளவில் அவை நிறைவேறியிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டும் வகையிலே ஒரு செயல் அறிக்கை, Action Taken Report என்று சொல்கிறார்களே A.T.R., அதையும் வழங்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம்.

அதைப்போல, கடந்த ஆண்டு அறிவித்த அறிவிப்புகள் எந்த அளவில் மக்கள் மத்தியில் சென்றடைந்திருக்கின்றன, அவற்றினுடைய விளைவு என்ன, தாக்கம் என்ன என்பதையெல்லாம் எடுத்துச் சொல்லக்கூடிய வகையிலே, அந்த விளைவு தாக்க அறிக்கை,



Outcome Budget என்று சொல்கிறார்களே, அதையும் அளிக்க வேண்டுமென்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். ஆகவே, இவ்வளவு நல்ல நிதிநிலை அறிக்கையைக் கொடுத்த நம்முடைய அரசு இந்த மூன்று அறிக்கைகளையும் கொடுத்தால் அது இன்னும் பெருமைக்குரியதாகும்.

*முற்பகல் 9-35*

அது நாட்டு மக்களுக்கு எல்லா வகையிலும் சென்றடையும் என்பதை இங்கே நான் முதலில் சுட்டிக்காட்டுகிறேன். நம்முடைய நாடாளுமன்றத்தில்கூட ஆண்டுதோறும் அதைச் சமர்ப்பிக்கிறார்கள். எல்லா வகையிலும் முதல் மாநிலமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிற தமிழக அரசு, இனி வருங்காலங்களிலாவது அதைச் செய்யவேண்டுமென்று நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, எங்களுடைய நிறுவனத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள், நிதிநிலை அறிக்கையை அளிப்பதற்கு முன்பு, முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து சிலவற்றைக் குறிப்பிட்டு, இவற்றையெல்லாம் நீங்கள் சேர்க்க வேண்டுமென்று சொன்னார்கள். அதிலும் குறிப்பாக, இந்த நாட்டினுடைய பெரும்பான்மை மக்களாக இருக்கிற வேளாண் பெருமக்களுடைய வாழ்க்கை நலிந்துகொண்டிருக்கிறது, உழவர் பெருமக்களின் வாழ்க்கையிலே ஒளியேற்றுவதற்காக ஒரு தனி நிதிநிலை அறிக்கையை வேளாண்மைக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அப்போது முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள்; இருக்கிற நிலைமையை எல்லாம் மனதிலே உணர்ந்து, நீங்கள் சொல்வதைத் தனியாக வெளியிடவில்லையென்று சொன்னாலும், இதே நிதிநிலை அறிக்கையில், தனியே ஒரு பக்கம் சேர்த்து கூடுதலாக நிதி ஒதுக்குவதாகவும் உறுதியளித்தார்கள். அந்த அடிப்படையில் இதுவரையில் இல்லாத அளவிற்கு வேளாண்மைத் துறைக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு, அரசுக்கு, நான் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படிப் பல்வேறு அம்சங்கள் இடம்பெற்றிருக்கின்றன. உதாரணத்திற்கு, தைத் திங்கள் முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டு என்ற முடிவு; உழவர்கள் தயாரிக்கும் வெல்லம், ரொட்டி போன்ற

பல பொருட்களுக்கு வரி விலக்கு; பல பொருட்களுக்கு வரிக் குறைப்பு; பயிர்க் காப்பீட்டுத் திட்டம்—25 இலட்சம் உழவர்களுக்கு 50 விழுக்காட்டுத் தொகை அரசே வழங்கும் என்ற நிலை; பயிர்க் கடனுக்கு வழங்கக்கூடிய வட்டி 4 விழுக்காடாகக் குறைப்பு; சிவகங்கை, அரியலூர் மாவட்டங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகள்; திருப்பூர் மாவட்டம் உதயம்; திண்டிவனம், விழுப்புரம், பண்ருட்டி, நாகப்பட்டினம், இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் புதிய அரசு பொறியியல் கல்லூரிகள்; வேலூர் புதிய மாநகராட்சி உதயம்; அருந்ததியர் இட ஒதுக்கீடு; உழவர்களுக்கான சுய உதவிக் குழுக்கள்; 90 துணை மின் நிலையங்கள் என்று நாட்டு மக்கள் நலன் கருதி அறிவிக்கப்பட்ட நிறைய அறிவிப்புகள், மகிழ்ச்சியளிக்கின்றன எனப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நான் மனதார வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இட ஒதுக்கீட்டினுடைய பிறப்பிடமாக இருப்பது நம்முடைய தமிழகம். நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பயிற்சிபெற்ற பாசறையாக இருக்கிற தந்தை பெரியார் சொன்னது முழு இட ஒதுக்கீடு வேண்டும் என்பதுதான். அவர் வலியுறுத்தியவாறு அது ஒரு மனிதனுடைய பிறப்புரிமையாகும் என்று நாம் கருதிச் செயலாற்றிக் கொண்டிருக்கிறோம். ஆனால், இந்த இட ஒதுக்கீட்டிலே தமிழகம் முன்னணியிலே இருந்தாலும்கூட, முழுமையான இட ஒதுக்கீடு பெறவில்லை என்ற வருத்தத்தை இங்கே நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். இன்னும் குறிப்பாக, எல்லோருக்கும் சமூக நீதி முழுமையாகச் சென்றடையவேண்டும் என்று சொன்னால், மக்கள்தொகை அடிப்படையிலே இட ஒதுக்கீடு வேண்டும். மக்கள்தொகை அடிப்படையிலே இட ஒதுக்கீடு இல்லாத காரணத்தினாலே—இங்கே, உதாரணத்திற்கு பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இப்போது 30 விழுக்காடிலிருந்து 23 ஆகக் குறைந்திருந்தாலும்கூட, அதிலே இருக்கிற 30 விழுக்காடு இருந்த நேரத்திலேயும் சரி—குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய 92 சமுதாய மக்களுக்கு, மக்கள்தொகை அடிப்படையிலே முழுமையாகச் சென்றடைவதில்லை. அது ஒரு மிகப் பெரிய குறையாக இருந்துகொண்டிருக்கிறது.

பிற்படுத்தப்பட்டவர்களைப் போலவே மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இருக்கிற இட ஒதுக்கீடு. 107 ஜாதிகள் இருந்து, பிறகு ஒன்று சேர்க்கப்பட்டு 108 ஜாதிகள் உள்ளன. இந்த 108 ஜாதிகளுக்கு இருக்கிற 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில்,



முழுமையாக அவரவர்களுக்குச் சென்றடைவதில்லை. சில நேரங்களிலே ஒருவருக்குக் கூடுதலாகக் கிடைக்கும், மற்றவர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். அந்த வகையிலே, இந்த ஆண்டிலேகூட நியமனத்திலே, அரசுப் பணி நியமனத்திலே ஒரு குறை ஏற்பட்டிருக்கிறது. குறை என்றுகூடச் சொல்லவில்லை. ஏற்பட்ட பாதிப்பு என்று நான் இங்கே சொல்ல விரும்புகிறேன். மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கான 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டில் பெரும்பான்மை சமுதாயமாக இருக்கிற வன்னியர்களுக்கு வெறும் 9 விழுக்காடு மட்டுமே கிடைத்திருக்கிறது. எந்தத் துறையிலே, எங்கே என்பதை நான் இங்கே நேரடியாக, வெளிப்படையாகச் சொல்ல விரும்பவில்லை. தேவையானால் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பெரும்பான்மை மக்களாக இருக்கிறவர்களுக்குப் பாதிப்பு உள்ளது; இது சில நேரங்களிலே, சில நிகழ்வுகளிலே. அதைப்போல, எண்ணிக்கை குறைவாக இருப்பவர்களுக்கு சில நேரங்களிலே சில நிகழ்வுகளிலே, முழுமையாக ஒதுக்கீடு இல்லாமல் போவதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, அந்த அடிப்படையிலேதான் இங்கே தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிற அந்த தொகுப்பு இட ஒதுக்கீட்டு முறை—Compartmental Reservation என்று சொல்கிறார்களே—அதை நடைமுறைப்படுத்த வேண்டும். அது உங்கள் காலத்திலே இல்லையென்று சொன்னால், தமிழ்நாட்டில் எக்காலத்திலும் வராது என்பதுதான் எங்களுடைய நிலை. ஆகவே, அதற்கு நீங்கள் வழிவகை செய்யவேண்டும் என்று நான் இங்கே வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*முற்பகல் 9-40*

உதாரணத்திற்கு, இப்போது அடித்தட்டிலே இருக்கிற ஆதி திராவிட மக்கள் மிகவும் பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களை கை தூக்கி மேலே விடவேண்டும் என்று சொன்னால், இப்போது கல்வியிலே, வேலைவாய்ப்பிலே இட ஒதுக்கீடு இருக்கிறது; படிக்காதவர்கள், படித்துவிட்டு வேலைக்குச் செல்லாதவர்கள் பொருளாதாரத்தில் முன்னேறவேண்டும். பெரும்பான்மை மக்களாக இருக்கின்ற ஆதி திராவிட மக்கள், பழங்குடியின மக்கள், மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள் முன்னேறாமல் இந்த மாநிலம் முன்னேற முடியாது; முன்னேறியதாகக் கருதவும் முடியாது. ஆகவே, இவர்கள் பொருளாதார ரீதியாக முன்னேற வேண்டுமென்று சொன்னால், நாட்டினுடைய ஒட்டுமொத்த

உற்பத்தியில், பொருளாதாரத்தில் அவர்கள் பங்கேற்கவேண்டும். அதைத்தான் மலேசிய நாட்டில்கூடச் சொல்கிறார்கள். பங்கேற்பில் முன்னுரிமை—Preferential participation என்று சொல்கிறார்கள்.

இங்கேகூட நம்முடைய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அடிக்கடி சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆயிரக்கணக்கான பேருந்துகளை வாங்குகிறோம் என்று சொன்னார்கள். கடந்த முறை பேருந்துகளை வாடகைக்கு எடுத்துக் கொள்கிறோம் என்றுகூட அறிவித்தார்கள். இப்போது உங்களைக் கேட்கிறேன், ஆதி திராவிட மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியவர்கள், மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் வங்கியிலே கடன் பெற்றோ அல்லது வேறு வழியிலோ பேருந்துகளை வாங்கினால், அந்தப் பேருந்துகளை நீங்கள் வாடகைக்கு அமர்த்திக்கொள்ளலாம். அது ஆதி திராவிட மக்களுக்கும், மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கு வாய்ப்பாக அமையும். அதேபோல தொழில் உரிமங்கள்—licence வழங்குகிறீர்கள். இப்படி எல்லா நிலைகளிலும் ஒட்டுமொத்த நாட்டின் உற்பத்தியில் பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட, பழங்குடியின மக்கள் முன்னேறாமல் மாநிலம் முன்னேறியதாகக் கருதமுடியாது. ஆகவே, அந்த நிலையையும் நீங்கள் உருவாக்க வேண்டுமென்று இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நடுவண் அரசு இப்போது அன்னை சோனியா காந்தி அவர்களின் வழிகாட்டுதலின்பேரில் சமூக நீதிக்கு வழிவகுக்கிற ஓர் அரசாக இருந்துகொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அரசும், மாநில அரசும் சமூக நீதிக்கு முக்கியத்துவம் கொடுக்கிற அரசாங்கங்களாக இருக்கிற காரணத்தினால்தான், நடுவண் அரசினுடைய குறைந்தபட்ச செயல் திட்டத்தில் தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு, சிறுபான்மையினருக்கு இட ஒதுக்கீடு என்றெல்லாம் நடுவண் அரசு அறிவித்திருக்கிறது. இந்தக் காலகட்டத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மத்திய அரசுக்கு, நடுவண் அரசுக்கு வேண்டுகோள் வைத்து முழு ஒதுக்கீடு பெறுவதற்கு—உதாரணத்திற்கு 69 விழுக்காடு என்ற நிலை இல்லாமல், 100 விழுக்காடு இட ஒதுக்கீடு, தனியார் நிறுவனங்களில் இட ஒதுக்கீடு, Creamy layer ஒழிக்கப்படுதல், உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபதிகள் பதவிகளில் இட ஒதுக்கீட்டில் நியமனம், பணி உயர்வில் (promotion) இட ஒதுக்கீடு என்று இப்படிப் பல்வேறு நிலைகளில் இட



ஒதுக்கீட்டுக்கு நீங்கள் வழிவகை காணவேண்டும். இட ஒதுக்கீட்டுக்கு வழிவகை கண்டாலும்கூட, நீதிமன்றங்கள் முட்டுக்கட்டையாக இருக்கின்றன. ஆகவே, இந்த மாமன்றத்தின்வாயிலாக நீதிமன்றங்களுக்கு வேண்டுகோள் வைப்பதோடு, நீதிமன்றங்களிலே இருப்பவர்களுக்கு இந்த சமூக மக்கள் முன்னேறவேண்டும் என்ற சமூகப் பார்வை வந்தாகவேண்டும் என்பதையும் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த முறை முதலமைச்சராக இருந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல அறிவிப்பைச் செய்தீர்கள். மிகப் பிற்படுத்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட பழங்குடியின மக்களுக்கு பின்னடைவு காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான வெள்ளை அறிக்கையை வெளியிட்டு அதை நீங்கள் நடைமுறைப்படுத்த முயற்சித்தீர்கள். ஆட்சி மாற்றத்தால் இடையிலே அது நின்றுபோய்விட்டது. மீண்டும் அந்தப் பின்னடைவுக் காலிப் பணியிடங்களை நிரப்பவேண்டும். அப்படி நிரப்புவதற்கு இதுவரையில் இருக்கிற மொத்தப் பணியிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இருக்கிறதா என்று அளவிடுவதை அறிந்துகொள்ள ஒரு வெள்ளை அறிக்கையை மீண்டும் நீங்கள் வழங்கவேண்டும்; இதை முழுமையாக நிறைவேற்றவேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

இஸ்லாமியர்கள், கிறித்தவர்களுக்கான சிறுபான்மையினர் இட ஒதுக்கீடு குறித்த வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. உங்கள் காலத்தில் நிறைவேறக்கூடிய வகையில் அதை நீங்கள் விரைவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அருந்ததியர்க்கு தனி ஒதுக்கீடு, உள் ஒதுக்கீடு என்பது உங்கள் காலத்தில் எடுத்த மிகப் பெரிய முயற்சி. நான் அதைப் பாராட்டுகிறேன், நன்றி சொல்லவும் கடமைப்பட்டிருக்கிறேன். அதை நிறைவேற்றுகின்ற அதேநேரத்தில் இந்த நாட்டினுடைய தென் மாவட்டங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற தேவேந்திரகுல வேளாளப் பெருமக்கள் தங்களுக்கும் தனி இட ஒதுக்கீடு வேண்டுமென்று கோரிக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதையும் நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இப்போது நம்முடைய வேளாண் துறைக்கு கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள், வரவேற்கின்றோம். பொருளாதார வளர்ச்சியைப்

பார்க்கிறோம்; தொழில் வளர்ச்சியைப் பார்க்கிறோம்; தொழில் துறை வளர்ச்சியிலே 8 விழுக்காடு, 9 விழுக்காடு என்று சொல்லிக்கொண்டிருக்கிறோம். ஆனால், வேளாண் துறையினுடைய வளர்ச்சி என்ன? இன்னும் 3 விழுக்காட்டை எட்டவில்லை. நாட்டினுடைய பெரும்பான்மை மக்களாக இருக்கின்ற வேளாண் பெருமக்கள் பயன்பெறும் வகையில், இந்த நாட்டுக்கு உணவளிக்கிற வேளாண் தொழில் வளரவில்லை என்று சொன்னால், நம்முடைய மாநிலத்தை எப்படி முன்னேறியதாகக் கருதமுடியும்? எனவே, வேளாண் வளர்ச்சிக்குக் கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கிற நீங்கள், வேளாண் வளர்ச்சி எந்தெந்த வகையிலே உழவர்களைச் சென்றடைகிறது, அது ஒட்டுமொத்த வளர்ச்சி பெறுகிறதா என்பதையும் கண்காணித்து அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-45*

உதாரணத்திற்குச் சென்னையைச் சுற்றிலும் பல்வேறு தொழிற்சாலைகள் வந்திருக்கின்றன. இங்கே Ford மகிழுந்து தொழிற்சாலை; அதைப்போல Hyundai மகிழுந்து தொழிற்சாலை; இதுபோன்ற தொழிற்சாலைகள் எல்லாம் வந்திருக்கின்றன. நிறைய உற்பத்தி, ஏற்றுமதி என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். இதனாலே தமிழ்நாட்டு மக்களில் எத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது, தமிழ்நாட்டினுடைய பொருளாதாரம் எந்த அளவிற்கு உயர்ந்திருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்க்கவேண்டும். ஆகவே அந்த வகையிலே, இப்படித் தொழில் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கிற அதேவேளையில், வேளாண் வளர்ச்சிக்கு முக்கியத்துவம் இல்லை என்று சொன்னால், நாட்டில் எதிர்காலத்தில் உணவுத் திண்டாட்டம் ஏற்படும். இங்கே உழவர் பெருமக்கள் எல்லாம் உழவுத் தொழிலைவிட்டு ஓடிக் கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வேளாண்மைக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். அந்த அடிப்படையிலேதான், வேளாண் துறைக்குத் தொழில் துறை அந்தஸ்து வழங்கவேண்டும். அது இல்லாத வரையிலே, வேளாண் பெருமக்கள் வாழ்க்கையிலே உயரமுடியாது; வேளாண் தொழிலும் வளராது என்பதை நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் தொழிலை ஒரு தொழில் துறையாக ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகக் கோரிக்கை இருந்தது. இப்போது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் வேளாண்மைத் தொழிலையும் ஒரு தொழிலாக ஏற்று, தொழில் கொள்கையையே அறிவித்திருக்கின்றார்கள். தொழில் தொடங்கக்கூடியவர்களுக்கு என்னென்ன சலுகைகள் எல்லாம் வழங்கப்படுகின்றனவோ, அத்தனைச் சலுகைகளும் வேளாண்மைத் தொழிலைச் செய்யக்கூடியவர்களுக்கும் கிடைக்கின்ற வாய்ப்பு இந்த ஆட்சியிலே ஏற்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் தொழிலுக்குத் தொழில் துறை அந்தஸ்து வழங்கினால் வரவேற்கிறோம்; நாங்கள் பாராட்டுகிறோம். அதைப்போல, வேளாண் பெருமக்கள் உற்பத்திச் செய்யக்கூடிய விளைபொருட்களுக்குக் கட்டுப்படியாகும் விலை கிடைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று நான் இந்த நேரத்திலே வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, ஒரு இலட்சம் உழவர்களைக் கொண்டு 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் உருவாக்கப்படும் என்று அறிவித்து அதற்கு 10 கோடி ரூபாய் சுழல் நிதி என்றும் அறிவித்திருக்கிறீர்கள். இதை வரவேற்கிற அதேவேளையில், 10 ஆயிரம் சுய உதவிக் குழுக்கள் என்று இல்லாமல், 1 இலட்சம் உழவர்கள் என்று இல்லாமல், யாரெல்லாம் சுய உதவிக் குழுக்களில் சேர முன்வருகிறார்களோ, குழு அமைப்பதற்கு முன்வருகிறார்களோ, அவர்களுக்கு வாய்ப்பினை வழங்கவேண்டுமென்றும், அனைவருக்கும் சுழல் நிதி வழங்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். இதிலே முன்வருகிற அனைவருக்கும் பாகுபாடு இல்லாத நிலையையும் உருவாக்க வேண்டுமென்று நான் இங்கே வேண்டிவிரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். அதேவேளையில், இந்த உழவர்களின் குடும்பப் பொருளாதாரம் உயருவதற்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 10 ஆயிரம் குழுக்கள் என்பது சரி. ஆனால், நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது, 25 இலட்சம் உறுப்பினர்களை, 10 ஆயிரம் குழுக்களில் சேர்க்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** வேளாண் பெருமக்களுடைய குடும்பப் பொருளாதாரம் உயருவதற்கு கறவை மாடுகள், ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு, இவற்றையெல்லாம் இன்னும் ஊக்குவித்தால், அது மக்களுக்குப் பயனுடையதாக இருக்கும் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த நாட்டில் வேளாண்மைக்கு அடுத்த பெரிய தொழிலாக இருப்பது சில்லறை வணிகமும், நெசவும். இந்தச் சில்லறை வணிகத்தை பெருமைக்குரிய நாடார் சமுதாய மக்களும், பல்வேறு சமுதாய மக்களும் காலங்காலமாகச் செய்து வருகிறார்கள்; அரசு அவர்களுக்கு உதவி செய்வதில்லை. ஆனால், அந்தச் சில்லறை வணிகத்தில் இப்போது Reliance, அமெரிக்காவில் இருக்கிற Wal-Mart, Aditya Birla Group போன்ற பல்வேறு நிறுவனங்கள் உள்ளே வந்து கொண்டிருக்கின்றன. இதைத் தடுப்பதற்கான நடவடிக்கை இந்த நிதிநிலை அறிக்கையிலே அறிவிப்பாக வரும் என்று எதிர்பார்த்தோம்; வரவில்லை. அது வருத்தம் அளிக்கிறது. இருந்தாலும்கூட, ஒட்டுமொத்தமாக இந்தச் சில்லறை வணிகத்தைத் தடை செய்யாவிட்டால், எதிர்காலத்திலே அது மிகப் பெரிய பாதிப்பை உண்டாக்கும்; வேலை இழப்பு ஏற்படும் என்பதைக் கருத்திலேகொண்டு, அதற்குத் தடை விதிக்க வேண்டுமென்பதையும் இங்கே நான் வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போல, நீங்கள் பாசனத்திற்குப் பல்வேறு தடுப்பணைகள் கட்டுவது, வாய்க்கால்களை நீட்டிப்பது, அதற்குண்டான நல்ல திட்டங்களையெல்லாம் அறிவித்துக் கூடுதலாக நிதி ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், சேலம் மாவட்டத்து மக்கள்—அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூட பதிலளித்தார்கள்—மனமிருந்தால் மார்க்கம் உண்டு. சேலம் மாவட்டத்திலே இருக்கிற அந்த மேட்டூர் அணை நீரை, சேலம், நாமக்கல் மாவட்டத்தைச் சார்ந்த மக்கள் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் சொல்லுகின்ற அந்தக் கோரிக்கை நிறைவேற்றவே முடியாத ஒரு கோரிக்கையாகும். ஏனென்றால், மேட்டூரிலே வருகின்ற தண்ணீர் வீணாவதாகவும், அதைச் சேலத்திற்குப் பயன்படுத்த வேண்டுமென்றும் சொல்கிறார்.

கேட்பதற்கு இனிப்பாக இருக்கின்ற ஒரு கருத்து. ஆனால், அதை ஆய்வு செய்தவர்கள், எல்லா வகையிலும் நிபுணர்களாக இருந்தவர்கள் ஆய்வு செய்து, அவ்வளவு உயரத்திற்கு அந்தத் தண்ணீரை ஏற்ற முடியாது; ஆகவே, அது சாத்தியம் அல்ல என்று ஓர் அறிக்கை கொடுத்திருக்கின்றார்கள். அதையும் கவனத்திலே வைத்துக்கொண்டு இந்தக் கருத்தை ஆராயவேண்டும்.

முற்பகல் 9-50

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், நன்றி. ஆனால், அணையினுடைய நீர் மட்டம் குறைவாக இருக்கிற நேரத்தில் எடுத்துச்செல்ல முடியாது. அதை ஏற்றுக்கொள்கிறோம். அணை நிரம்புகிற நேரத்தில் எடுத்துச்செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. ஓய்வு பெற்ற முன்னாள் பொதுப் பணித் துறை அதிகாரிகள் எல்லாம்கூட. . .

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அணையினுடைய உச்ச மட்டம் 120 அடி. ஆனால், தண்ணீர் எடுத்துக்கொண்டு போகிற இடம் 360 அடி உயரம். ஆக, 120 அடியிலிருந்து தண்ணீரை 360 அடி உயரத்திற்குக் கொண்டு போவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்று, இதில் வல்லுநர்களையெல்லாம் ஒரு குழு போட்டு ஆராய்ந்த பிறகு, அவர்கள் அறிக்கை அளித்திருக்கிறார்கள். ஆகையினாலே, நிரம்பியிருக்கிறபொழுதே எடுக்க முடியாத நேரத்தில், குறைந்திருக்கிறபொழுது எடுக்க முடியாது; நிறைந்திருக்கிறபொழுதும் எடுக்க முடியாது. வேறு ஏதாவது வழி இருக்கிறதா என்று பார்ப்போம்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, பொறியாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது அணையையொட்டி அல்ல. மேலே நீர்த்தேக்கப் பகுதியிலே மேச்சேரி ஒன்றியப் பகுதியிலே அங்கிருந்து எடுத்துச் செல்லலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். நீங்கள்

அதை ஆய்வு செய்யுங்கள். எடுத்த எடுப்பிலேயே விட்டுவிடாமல் ஆய்வு செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், இங்கே வறண்ட மாவட்டம் உள்ளது. பாலாறு இப்போது கேள்விக்குறியாக இருக்கிறது. இங்கே மேட்டூர் அணை நீரைப் பாலாற்றுக்குத் திருப்பி விடுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. வழியோர, வாய்க்கால் செல்லக்கூடிய மாவட்டங்கள், பாலாற்றினுடைய கரையிலே இருக்கிற மாவட்டங்களெல்லாம் பயன்பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தினாலே பாலாற்றோடும் இணைக்கிற முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

எங்கள் மேட்டூர் தொகுதியிலேகூட தோணிமடுவுத் திட்டம் என்பது நீண்ட நாள் திட்டம்; ஒரு ஒன்றியம் முழுவதும் பாசனம் பெறக்கூடிய ஒரு திட்டம். அமைச்சர் அவர்களிடத்திலே நானும் வற்புறுத்திக்கொண்டு இருக்கிறேன். இந்த ஆண்டாவது நிறைவேற்ற மனது வைக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, கோவை மாவட்டத்திலே இருக்கிற 40 ஆண்டுகள் எதிர்பார்ப்புத் திட்டம், அவினாசி-அத்திக்கடவு திட்டம். அந்தப் பகுதியிலே இருக்கிற காரமடை, அண்ணூர், அவினாசி, நம்பியூர், குன்னத்தூர், கோபியினுடைய ஒரு பகுதி, திருப்பூர் வடக்குப் பகுதி, பெருந்துறை, காங்கேயம், சென்னிமலை பகுதிகளெல்லாம் பாசனம் பெறுவதற்காக சுமார் 85 ஏரிகள், 220 குட்டைகள் எல்லாம் பயன்படக்கூடிய வகையிலே இருக்கக்கூடிய அந்த அவினாசி-அத்திக்கடவு திட்டத்தை நடப்பாண்டிலே நிறைவேற்ற வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களிலே வெள்ளச் சேதம் ஏற்பட்டது. இன்று காலையிலேகூட தொலைபேசியிலே சொன்னார்கள். வெள்ளச் சேதத்திற்கான நிவாரணம் இன்னும் வந்தடையவில்லை. இப்பொழுதுகூட நடுவண் அரசின் ஆய்வுக் குழு வருவதாகச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அதை விரைவுபடுத்தவேண்டும். மக்கள், பாதிப்பிற்கான நிவாரணம் வரவில்லையே, வரவில்லையே என்று ஏக்கத்தோடு பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். நெல், வாழை, மிளகாய், வேர்க்கடலை, உளுந்து, பயறு வகைகள், முந்திரி, தர்ப்பூசணி, திராட்சை, முருங்கை, மா என்று எல்லாப் பயிர்களுக்கும் வழங்க வேண்டும்.



அதைப்போல உப்பளங்களில்தான் மிகப் பெரிய பாதிப்பு. பல இலட்சம் ரூபாய் ஒவ்வொருவரும் இழந்திருக்கிறார்கள். வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது. தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டப் பகுதிகளிலும், மரக்காணம் பகுதியிலும் அந்த உப்பளங்களுக்கும் நீங்கள் நிவாரணம் வழங்கவேண்டும்.

அதைப்போல, கன்னியாகுமரி மாவட்டத்திலே இரப்பர் தோட்டமும் பாதிக்கப்பட்டது. அவர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று நான்கூட ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கிறேன். இதற்கெல்லாம் காரணம் நம்முடைய நிதிப் பற்றாக்குறை. இந்த நிதிப் பற்றாக்குறையைச் சீர் செய்வதற்குத்தான் பா.ம.க. சார்பிலே வரைவு நிதிநிலை அறிக்கையில் சொல்வதோடு மட்டுமல்லாமல், நாங்கள் இங்கும் சொல்லிக்கொண்டிருக்கிறோம். 'இயற்கைப் பேரிடர் நிவாரண நிதியம்' என்ற ஒரு நிதியத்தை உருவாக்கி ஆண்டுதோறும் நிதி ஒதுக்கி வைத்தால் அது சேமிப்பாக இருக்கும். வெள்ளச் சேதம் என்றாலும், வறட்சி பாதிப்பு என்று சொன்னாலும் அந்தக் காலங்களிலே பயன்படுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறிப்பிடுவதைப்போல, இடர் தீர்ப்பு, இடர் களைதல் நிதி என்பது ஏற்கெனவே மத்திய அரசினுடைய ஆலோசனையின்படி நடைமுறையிலே உருவாக்கப்பட்டு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அதன் அடிப்படையிலே, ஓராண்டுக்கு ஏறத்தாழ தமிழ்நாட்டுக்கு 250 கோடி ரூபாய் அளவுக்கு அந்த நிதி அமைக்கப்படுகிறது. அதில் 75 விழுக்காடு மத்திய அரசு நிதி. 25 விழுக்காடு மாநில அரசினுடைய நிதி. அந்த அளவோடுகூடிய, ரூ.250 கோடி ரூபாய், 225 கோடி ரூபாய் அளவுக்கு அந்த நிதி இருந்தாலும்கூட சில நேரங்களிலே இடர்ப்பாடுகளுக்கான செலவு அதைவிட மிகுதியாக ஆகிறபோது, மத்திய அரசினுடைய உதவியையும் பெறும் முறையில் மாநில அரசு பொறுப்பேற்று அந்த இடர்ப்பாடுகளைக் களைகிறது.

முற்பகல் 9-55

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சமச்சீர் கல்வியைக் கொண்டுவருவதாக அறிவித்திருக்கிறீர்கள், வரவேற்கிறோம். இது காலத்தினுடைய கட்டாயம். இன்றைய கல்வி முறையில் ஏழைக்கு ஒரு மாதிரியான கல்வி, நடுத்தர வர்க்கத்திற்கு ஒரு மாதிரியான கல்வி, பணக்காரர்களுக்கு ஒரு மாதிரியான கல்வி என்ற நிலையெல்லாம் இருக்கிறது. இதை மாற்றுவதற்கு சமச்சீர் கல்வி ஒன்றுதான் தீர்வு. ஆகவே, அறிவித்ததை நாங்கள் வரவேற்கிறோம். சமீபத்திலேகூட, ஒரு சில நாட்களுக்கு முன்பு, தொலைக்காட்சியிலே ஒரு செய்தி. சிலி நாட்டிலே இருக்கிற மாணவர்கள் எல்லாம் சமச்சீர் கல்வி வேண்டுமென்று சொல்லி, மிகப் பெரிய புரட்சியிலே ஈடுபட்டதாகச் செய்தி வந்திருக்கிறது. ஆகவே, அது நாடெங்கும், உலகெங்கும் பரவிக்கொண்டிருக்கிற இந்த வேளையில் நம்முடைய தமிழகம் அதை முன்மாதிரியாக நடைமுறைப்படுத்த வேண்டுமென்று நான் இங்கே வற்புறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே 1956-லே ஆட்சி மொழிச் சட்டம் வந்தது. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மிகவும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைக்கூட நான் குற்றச்சாட்டுக்காகச் சொல்லவில்லை. நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருப்பதாக, அதிகாரிகள் எல்லாம் கூடிப் பேசியிருப்பதாகக்கூட செய்தித்தாள்களிலே செய்தி வந்திருக்கிறது. இங்கே, எல்லாம் தமிழிலே இருக்க வேண்டுமென்று சொல்லியுள்ளார்கள். சில இனங்களுக்கு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டு அவற்றிற்கு மட்டுமே ஆங்கிலத்தைப் பயன்படுத்தலாம். அந்தவகையில் உயர் நீதிமன்றம், அயல்நாட்டுத் தூதரகங்கள், மத்திய அரசு, பிற மாநிலங்களுடனான கடிதப் போக்குவரத்துகள் மட்டும் ஆங்கிலத்திலே இருக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 20-1-1978 முதல் தமிழில் மட்டுமே கையெழுத்திட வேண்டுமென்று ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது என்பது ஒரு மிகப் பெரிய செய்தியாக வந்திருக்கிறது, முதலமைச்சருடைய ஆணையும் இருக்கிறது. ஆனால், இந்த ஆணை வந்த அடுத்த நாளே, ஆங்கிலத்தில் அரசாணை வெளிவருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபோன்ற ஒரு குறைபாட்டை நம்முடைய வேல்முருகன் அவர்களும் கடந்த வாரம் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். ஆங்கிலத்தில் G.O.-ஆணை, வரக்கூடாது என்று எந்த விதியும் இல்லை. தமிழில் வராமல் ஆங்கிலத்தில் மட்டும் வரக்கூடாது. தமிழிலும் வந்து ஆங்கிலத்திலும் வந்திருக்கிறது. சில அதிகாரிகளுக்குத் தெளிவாகப் புரிவதற்கு ஆங்கிலமும் தேவைப்படுகிறது. ஆனால், தமிழில் வராமல் ஆங்கிலத்தில் மட்டும் ஆணை பிறப்பிப்பது தவறு என்று முதலமைச்சர் தெரிவித்து, தலைமைச் செயலாளர் தெரிவித்து, இப்போது பின்பற்றுகிறார்கள். யாரேனும் ஒருவர் கோப்பினை, ஆங்கிலத்திலே அனுப்பவேண்டிய கட்டாயமான நிலைமை இருக்குமானால் அந்தக் கட்டாயமான நிலைமை இருக்கிறபோது, அதற்கு அந்தத் துறை அமைச்சரிடத்திலே அனுமதி பெற்றுத்தான் ஆங்கிலத்திலே மட்டும் கோப்பு அனுப்ப வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல செய்தித்தாள்களிலே விளம்பரங்கள், கீழ்மட்டத்திலிருந்து ஜாதிச் சான்றுகள் வழங்குதல், அதைப்போல இருப்பிடச் சான்றுகள் வழங்குதல், எல்லா நிலைகளிலும் முழுமையாகத் தமிழிலே வரவேண்டுமென்ற வேண்டுகோளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து இந்த விலைவாசி உயர்வு. விலைவாசி உயர்வைத் தடுப்பதற்கு நடுவண் அரசு மிகப் பெரிய நடவடிக்கை எடுத்திருக்கிறது. இன்றைய செய்தித்தாள்களிலேகூட இங்கே இறக்குமதி வரியைக் குறைத்து, அதை நடுவண் அரசு ஏற்றுக்கொள்வதாகக்கூட முயற்சி எடுத்து சில பொருள்களுக்கு விலை குறைப்பதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள். நாங்கள் வரவேற்கிறோம். ஆனாலும்கூட, அந்தச் செய்தியிலே அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, எல்லா வகையான பருப்பு, எண்ணெய் வகைகளின் விலையெல்லாம் குறையவில்லை என்ற செய்தியும் வந்திருக்கிறது. இதற்கெல்லாம் காரணம், இப்படி நடுவண் அரசும், மாநில அரசும் முயற்சி எடுத்துக்கொண்டாலும்கூட, இந்த 'ஊக பேர வணிகம்' என்று சொல்லுகிறார்களே-Online trading இதைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையென்றால் நடக்காது. இப்போது ஒரு செய்தியைச் சொல்லுகிறார்கள். அடுத்து வரக்கூடிய 20, 25 ஆண்டுகளுக்கான எண்ணெய்யை ஒட்டுமொத்தமாக வாங்கி—எரி எண்ணெய், டீசல்,

பெட்ரோல் இவற்றையெல்லாம் வாங்கிப் பதுக்கிக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்; அதற்கு முன்பணமும் கட்டிவிட்டார்கள் என்ற செய்தி எல்லாம் வந்து கொண்டிருக்கிறது. இதுவரையிலே இந்தியர்கள் அந்த வணிகத்திலே ஈடுபட்டிருந்தார்கள். இப்பொழுது வெளிநாட்டவர்கள் எல்லாம் இங்கே வந்து ஈடுபட்ட காரணத்தினாலே, இது எதிர்காலத்தில் மிகப் பெரிய கேள்விக்குறியாக அமைந்துவிடும். அதைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் நான் இங்கே வேண்டுகோள் வைக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுமானப் பொருள்களின் விலை மிகவும் ஏறிவிட்டது. சிமிட்டி விலை ஏறிவிட்டது, கம்பி விலை, செங்கல், ஜல்லி விலை, மணல் விலையும் மிகவும் அதிகமாகப் போய்விட்டது, *2007* ஆம் ஆண்டு டிசம்பரிலே வெளி மார்கெட்டில் கம்பி விலை ஒரு டன் *37,000* ரூபாய். ஆனால், இப்போது *54,000* ரூபாய்; *37,000* ரூபாய்க்கும் *54,000* ரூபாய்க்கும் வித்தியாசம் பார்க்கவேண்டும். அதிலே ஒரு எட்டரை கோடி ரூபாய்க்கு ஒருவர் தேசிய நெடுஞ்சாலைத் துறையில் ஓர் ஒப்பந்தம் எடுத்திருக்கிறார். அந்த நெடுஞ்சாலைத் துறையிலே எட்டரை கோடி ரூபாய்க்கு எடுத்து, அவருடைய வேலை முடிக்கப்பட்ட பிறகு 10 விழுக்காடு 85 இலட்சம் ரூபாய் நட்டம் என்று சொல்லுகிறார்கள். இப்படி எல்லா நிலைகளிலும் இருக்கிறது. இதை நிவர்த்திக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-00*

நடுவண் அரசுக்கு ஆறாவது ஊதியக் குழு பரிந்துரை செய்திருக்கிறது. தமிழ்நாட்டிலேயிருக்கிற எல்லோரும், அரசு ஊழியர்கள், அலுவலர்களெல்லாம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே, அரசு அலுவலர்கள், பணியாளர்கள் எதிர்பார்க்கிற வகையிலே, இந்த ஊதியக் குழுவின் ஊதிய உயர்வை, எதிர்பார்க்கிற அளவுக்கு நீங்கள் வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை நான் முன்வைக்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன், முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திலே ஒரு முக்கியமான பிரச்சினை. இந்த வீட்டு வசதி வாரியத்திலே—நான் சொல்வது குற்றச்சாட்டிற்காக அல்ல—இந்த நாடு முழுவதும் பார்த்தால், இலட்சக்கணக்கானவர்கள் வீட்டு வசதி



வாரியத்தின்மூலமாக வீடுகளைப் பெற்று, அதற்கான தொகையைக் கட்டி, வட்டியையும் கட்டி, ஏறக்குறைய ஒரு இலட்சத்து *30* ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களுக்கு இன்னும் பத்திரம் வராத நிலை. *10* வருடங்கள், *20* வருடங்களுக்கு முன்பு, வீட்டு வசதி வாரியம் நிலத்தைக் கையகப்படுத்தியது. ஆனால், இன்னும் வீடுகளைக் கட்டமுடியவில்லை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் வீடுகளைக் கட்டமுடியவில்லை. நிலத்தை விடமாட்டேன் என்கிறார்கள்; பிரச்சினை உள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினாலே, இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்வதற்கு ஒரு புதிய வழிகாட்டி நெறிமுறைகளை உருவாக்க வேண்டும். நிலத்தை எடுக்கவேண்டுமென்று நினைத்து, எடுத்துவிடுகிறார்கள். அந்த உழவர் பெருமக்களை அழைத்துப் பேசி, உரிய ஈட்டுத்தொகை வழங்கவேண்டும். நிறைய இடங்களில் வீடுகளைக் கட்டியிருக்கிறார்கள், ஆனால், பல வருடங்களாக வீடுகள் விற்பனை ஆகவில்லை. *5* வருடங்கள், *10* வருடங்கள் ஆகிவிட்டன. இவையெல்லாம் களையப்படவேண்டும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள், ஏற்கெனவே வீடுகள் கட்டப்பட்டு விற்காமல் இருப்பதாக இங்கே தெரிவித்தார்கள். கடந்த *1991-1996* ஆண்டுகளிலே, ஏறத்தாழ ஆயிரம் கோடி ரூபாய், உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று, ஊருக்கு அருகில் இல்லாத இடங்களிலே, குளங்களில் மற்றும் தூரத்தில் வீடுகளைக் கட்டிய காரணத்தால்தான், அவை விற்கப்படாமல் இருந்தன. ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், நம்முடைய வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளாக எடுத்த நடவடிக்கையின் காரணமாக, ஏறத்தாழ *40* ஆயிரம் வீட்டுப் பத்திரங்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன.

குறிப்பாக, இங்கே நில எடுப்பு சம்பந்தமாகத் தெரிவித்தார்கள். விவசாய நிலங்கள் எங்கேயும் ஆர்ஜிதம் செய்யப்படவில்லை.

விவசாயம் இல்லாத நிலங்கள்தான் ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கின்றன. ஆர்ஜிதம் செய்யப்பட்ட காலகட்டத்திலே, நிலத்தினுடைய விலை என்பது வேறு. இன்றைக்கு நிலத்தினுடைய விலை ஆயிரம் மடங்கு உயர்ந்திருக்கிறது. ஆகவே, நிலம் எடுக்கப்பட்டு, அவர்களுக்கு வழங்கவேண்டிய அத்தனைப் பணமும் தரப்பட்டு, அரசு கையகப்படுத்திய நிலங்களைத் திருப்பிக் கொடுப்பது என்பது, நிச்சயமாக இயலாத ஒன்று என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, நீங்கள் பேசுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்துவிட்டது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே விளக்கம் அளித்தார்கள். விளைநிலங்கள் எடுக்கப்படுவதில்லை என்று சொன்னார்கள். விளைநிலங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன, முழுக்க முழுக்கப் படங்கள்கூட எடுத்து வந்திருக்கிறேன். கரும்பு, வாழை, நெல் என்று எல்லாம் நல்ல விளைச்சல் நிலங்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்திற்கு, விளைநிலங்களை இந்த அரசு எடுக்கவேயில்லை. 10 வருட காலமாக எந்த நிலமும் கையகப்படுத்தப்படவேயில்லை. ஆனால் இந்த அரசு, கலைஞர் அவர்களுடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்--கடந்த 10 ஆண்டு காலமாக, 2000 ஆம் ஆண்டிலிருந்தே, நம்முடைய வீட்டு வசதித் துறையினால், எந்த வீடும் கட்டப்படவில்லை. கடந்த ஆட்சிக் காலத்திலேகூட, அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேகூட, கொள்கை அடிப்படையிலே தெரிவித்திருக்கிறார்கள். வீடு கட்டுவதில்லை என்று மிகத் தெளிவாக அறிவித்திருக்கிறார்கள். ஒரு வீடுகூடக் கட்டப்படவில்லை--ஆனால், கலைஞர் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால்தான், கடந்த ஒன்றரை ஆண்டுக்காலமாக எடுத்த நடவடிக்கையின் காரணமாக, இந்த ஆண்டு மட்டும் 22 ஆயிரம் வீடுகளைக் கட்டுவதற்கு அரசு தயாராக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) எந்த விவசாய நிலமும் எடுக்கப்படவில்லை. கோவையிலேகூட, மருத்துவர் அய்யா அவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திலே, விவசாயிகள் தங்களுடைய நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வேளாண் பெருமக்கள் கூட்டம் போட்டதாக நான் பத்திரிகையிலேகூடப்



படித்தேன். அறிக்கைகூடக் கொடுத்திருந்தார்கள். ஆனால் உண்மையான விஷயம் என்னவென்றால், அங்கேயிருக்கக்கூடிய ரியல் எஸ்டேட் ஓனர்ஸ், நில அபகரிப்பாளர்கள், நிலம் வாங்கி விற்பவர்கள், இவர்களெல்லாம் விவசாயிகள் என்ற போர்வையிலே, அவர்கள் நிலத்தைத் திரும்பப் பெறுவதற்கு முயல்கிறார்கள். ஏனென்றால், அரசாங்கம், வீட்டு வசதி வாரியம் எடுத்த நிலங்களை வீடு கட்டுவதற்காகப் பயன்படுத்தவில்லையென்றால், திரும்பக் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. அது உண்மைதான். ஆனால், அந்த நிலங்களை, அவர்கள் அரசுக்குக் கொடுத்து 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள் நிவாரணமெல்லாம் பெற்று, அரசாங்கம் கொடுத்த உதவித் தொகைகளைப் பெற்று 20 ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்பொழுது என்ன செய்கிறார்கள் என்றால், ஏற்கெனவே விற்றவர்களிடம்போய், இப்பொழுது இருக்கக்கூடிய ரியல் எஸ்டேட் வியாபாரம் செய்யக்கூடியவர்கள், அவர்களிடத்திலே சென்று ஓர் ஒப்பந்தம் செய்து கொள்கிறார்கள். ஒப்பந்தம் செய்து அந்த நிலத்தை எங்களுக்குத் திரும்பக் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். எந்த விவசாயியும் அரசுக்கு, வீட்டு வசதி வாரியத்திற்குக் கொடுத்த நிலத்தை அவர்கள் நேரடியாகக் கேட்கவில்லை. இவ்வாறு பூராவும் இடைத்தரகர்கள், நிலம் வாங்கி விற்கின்றவர்கள்தான் கேட்கின்றார்களே தவிர வேறு விவசாயிகள் யாரும் கேட்கவில்லை. ஆகவே, தரவேண்டிய அவசியம் நிச்சயம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கடந்த கால அம்மா அவர்களுடைய ஆட்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டமுடியாது என்று உத்தரவு போட்டதாகச் சொன்னார்கள். அந்த நிலை ஏன் ஏற்பட்டது என்றால், 1996-லிருந்து 2001 வரை தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கட்டப்பட்ட ஆயிரக்கணக்கான வீடுகளில் யாரும் குடியிருக்க முன்வரவில்லை. அந்த வீடுகள் எல்லாம் தரம் குறைந்த அளவில் இருந்ததனால், அந்த வீடுகளில் யாரும் குடியிருக்க முன்வராத காரணத்தினால், பல்லாயிரக்கணக்கான வீடுகள் குடியிருக்க இலாயக்கற்ற வீடுகளாக

இருந்து யாரும் குடியிருக்க முன்வராத காரணத்தினால் தற்பொழுது வீடு கட்ட வேண்டாம் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவு போட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே ஐந்து ஆண்டு காலம் அடுக்குமாடி வீடுகள், வீட்டுமனைகள், உயர்ந்த வருவாய்ப் பிரிவினருக்கான வீடுகள் இவற்றை விற்கின்ற பணிகளைத்தான் செய்தது. அதைத்தான் நீங்கள் சொன்னீர்கள். அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். ஆனால், இந்த வீடுகளையெல்லாம் விற்பனைக்குத் தகுதியில்லாத இடத்திலே வீடு கட்டிய அரசு 1991-லிருந்து 1996 வரைக்கும் எந்த ஆட்சி நடந்தது என்று உங்களுக்குத் தெரியும். அதுதான் அ.இ.அ.தி.மு.க. ஆட்சி. உலக வங்கியினுடைய உதவியோடு கட்டப்பட்ட வீடுகள் குறிப்பிட்ட இடத்திலே கட்டவில்லை. எங்கேயோ குளம், குட்டையிலே போய் ரொம்ப தூரத்திலே போய்க் கட்டிவிட்டார்கள். நீங்கள் கட்டிய வீட்டை நாங்கள்தான் விற்பதற்கு நடவடிக்கை எடுத்து இப்பொழுது விற்றிருக்கிறோம். கலைஞர் அரசுதான் இப்போது விற்றிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நீங்கள் நன்றாகப் பாருங்கள். நீங்கள் 1991-லிருந்து 1996 வரைக்கும் உலக வங்கியில் ஆயிரம் கோடி ரூபாய் கிடைக்கப்பெற்றதை வைத்துக் கட்டக்கூடிய இடத்திலே கட்டவே இல்லை நீங்கள். வீடுகளைப் பூராவும் எங்கெங்கேயோ ஒரு 5 கிலோ மீட்டர், 6 கிலோ மீட்டர் தூரத்தில் எங்கெங்கே இடம் கிடைத்ததோ அங்கெல்லாம் வீடுகள் கட்டி விற்க முடியாத இடத்திலே வீடுகள் கட்டியது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியினால்தான்; அந்த வீடுகள் விற்கப்படாமல் இருந்தனவே தவிர திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே தரமற்ற வீடுகள் கட்டப்படவில்லை. தரமுள்ள வீடுகளைத்தான் தி.மு.க. ஆட்சி கட்டியது. இன்றைக்கு, விற்கின்ற பணியையும் திராவிட முன்னேற்றக் கழக அரசு, கலைஞர் அரசு நிறைவேற்றியிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) திரு. மணி, ஆரம்பத்திலேயே சொன்னேன் உங்களுக்கு. (குறுக்கீடு) எவ்வளவு time எடுத்துக்கொண்டீர்கள் நீங்கள்?



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் எந்த ஆட்சியில், எவ்வளவு வீடுகள், எவ்வளவு தூரத்தில் கட்டப்பட்டு, விற்காமல் இருக்கின்றன என்ற பட்டியலை இந்தச் சட்டமன்றத்திற்கு அளிக்க வேண்டுமென்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11 ஆம் தேதி வீட்டு வசதித் துறையினுடைய மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அப்பொழுது 1991-லிருந்து 1996 வரை அ.இ.அ.தி.மு.க. ஆட்சியில் எங்கெங்கு நீங்கள் வீடுகள் கட்டினீர்கள் என்ற பட்டியலை நான் நிச்சயம் தெளிவாக இதே அவையில் சமர்ப்பிக்கத் தயாராக இருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சிக் காலத்திலே எங்கெங்கே வீடுகள் கட்டினீர்கள், விற்கப்படாத இடத்திலே கட்டப்பட்டன என்பதையும் நான் தருவதற்குத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) திரு. மணி, உங்களுக்கு நான் நிறைய time கொடுத்தாகிவிட்டது. நீங்கள் அதற்குப் பிறகும் உரையை முடிக்கவில்லை. (குறுக்கீடு) உட்காருங்கள், உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ், பேசுங்கள் (குறுக்கீடு) என்ன திரு. செங்கோட்டையன்? One minute, one minute உட்காருங்கள். திரு. செங்கோட்டையன், என்ன?

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது விவசாயிகள் விளைநிலங்களை அரசுக்கு, வீட்டு வசதி வாரியத்திற்குக் கொடுத்ததற்குப் பிறகு, விவசாயிகள் அதைப் பெறுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளவில்லை, அங்கே இருக்கின்ற புரோக்கர் மூலமாகத்தான் அதைச் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். வெள்ளாங்குறிச்சிப் பகுதியில் மாபெரும் உண்ணாவிரதமே நடந்து, போராட்டம் நடந்து, இதுவரையிலும் அவர்கள் விவசாயிகளுக்குத் திருப்பித் தரவேண்டுமென்று வாதாடி, போராடி மாவட்ட ஆட்சித் தலைவர், மேலும் இருக்கின்ற அமைச்சரையும் சந்தித்து மனு கொடுத்திருக்கிறார்கள். அது அமைச்சருடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா? ஒரு தவறான தகவலை ஏன் அமைச்சர் இங்கே தருகிறார் என்பதைத்தான் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை தமிழகத்தில் இருக்கின்ற ஒரு விவசாயிகூட என்னுடைய நிலத்தை நீங்கள் திரும்பத் தரவேண்டுமென்று என்னிடத்திலே மனு கொடுக்கவே இல்லை. நான் கோயம்புத்தூரில் கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தயாராக இருக்கின்றேன். நீங்கள் வாருங்கள். விவசாயிகள் எல்லாம் யார், என்னவென்று அடையாளம் காண்பிக்கிறேன். நிச்சயமாகச் சொல்கிறேன். இந்த அரசு, கலைஞர் அரசு இதிலே உறுதியாக இருக்கும். ஏனென்றால், இதிலே நில அபகரிப்பாளர்கள் (land grabbers) main ஆக வருகிறார்கள். காரணம் என்னவென்றால், நிலங்களை விவசாயிகள் ஏற்கெனவே விற்றுவிட்டு எங்கேயோ சென்றுவிட்டனர். ஆளே இல்லை. அவர்களது வாரிசுகளைத் தேடிப் பிடித்து ஒப்பந்தம் போட்டு அந்த நிலத்தை வாங்க வேண்டுமென்று வருகிறார்கள். என்ன காரணம் என்றால், சென்னையைச் சுற்றி புதிய நகரம் அமைப்பதிலே சில நிலங்களை அரசு ஆர்ஜிதம் செய்து, நிலங்களைத் திருப்பித் தர வேண்டும் என்ற கோரிக்கை வைத்தவுடனே மாண்புமிகு முதல்வர் அவர்கள் விவசாய நிலங்களே எடுக்கப்படமாட்டாது என்கிற வாக்குறுதி ஒன்றைக் கொடுத்தார்கள். இதை வைத்துக்கொண்டு தமிழ்நாட்டிலே இருக்கின்ற அரசுக்குக் கொடுத்த நிலங்களையெல்லாம் திரும்பப் பெறுவதற்கு சிலர் குறுக்கு வழியிலே முயற்சி செய்கிறார்கள். அது நடக்காது.

*முற்பகல் 10-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ். *(குறுக்கீடு)* No. No, *(குறுக்கீடு)* திரு. ஜி.கே. மணி, you have taken much time, No. No. *(குறுக்கீடு)* திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள்—யாரோ இடைத்தரகர்கள், வணிகர்கள், Real Estate-காரர்கள் என்றெல்லாம் சொன்னார்கள். அது முழுக்க, முழுக்க தவறான செய்தி. உழவர் பெருமக்களே முன்வந்திருக்கிறார்கள். நாங்கள் பார்த்தோம். ஏனென்றால் உண்மையை, கண்டறிந்த செய்தியைச் சொல்கிறேன். நானும்



சென்றவன்; பார்த்தவன். ஆகவே, உழவர் பெருமக்கள் அல்ல என்று சொல்வதை ஏற்றுக்கொள்ளமுடியாது. நீங்களேகூட அந்த உழவர்களை அழைத்துப் பேசுங்கள். நாங்கள் வேண்டாம் என்று சொல்லவில்லை. *(குறுக்கீடு)* நான் உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** ஒரேயொரு விளக்கம். ஒரு சின்ன விளக்கத்தை நான் சொல்லிவிடுகிறேன். நீங்கள் சொன்னதற்கு நான் ஒரு சின்ன விளக்கம் சொல்ல விரும்புகிறேன். *(குறுக்கீடு)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. மணி அவர்கள் சொன்னதைப்போல, உண்மையிலேயே ஓர் உழவரின் நிலத்தை அரசு கையகப்படுத்தி, அவருக்குத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், 48-B-இலே கொடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. நாங்கள் உண்மையிலேயே உழவருக்குக் கொடுப்பதை மறுக்கவில்லை. ஆனால் அரசு இதுவரைக்கும் எந்த நிலமும் கொடுக்கவில்லை. ஆனால் குறிப்பாகச் சொல்லப்போனால், உழவர்கள் யாரும் இதுவரை வந்து தன் நிலத்தைத் திரும்பக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு வீட்டு வசதி வாரியத்தில் மனு கொடுக்கவில்லை. ஒருசில மனுக்கள் வரப்பெற்றிருக்கின்றன. அதற்காகவே மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு கமிட்டி அமைத்திருக்கிறார்கள். நீங்கள் சொன்னீர்கள், 3 நீதிபதிகள் கொண்ட குழுவை விசாரிப்பதற்கு அமைக்க வேண்டுமென்று. ஏற்கெனவே முதலமைச்சர் மாண்புமிகு கலைஞர் அவர்கள் ஓர் உயர் நீதிமன்ற நீதிபதியை வைத்து, நீதிபதி பாஸ்கரன் அவர்கள் தலைமையிலே, அப்படிப்பட்ட விவசாயிகளுக்கு உண்மையிலேயே அவர்களுக்கு நிலத்தைத் திருப்பிக் கொடுக்க வேண்டுமென்றால், வழிவகையான சட்டத்தின்படி, திரும்பக் கொடுப்பதற்கு ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். அந்தக் குழு முடிவு செய்தால் கொடுக்கலாம். அதில் ஒன்றும் ஆட்சேபனை இல்லை.

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே, உரையை முடித்துவிடுகிறேன். பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்போல கடந்த ஆண்டு ஆளுநர் உரையிலே 27-1-2007-ல். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மணி, உரையை முடியுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** உரையை முடித்துவிடுகிறேன். வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர், நாமக்கல் ஆகிய மாவட்டங்களிலிருந்து வெளியேறக்கூடிய சாயப் பட்டறைக் கழிவு, தோல் கழிவு மற்றும் தொழிற்சாலைக் கழிவுகளை எல்லாம் வெளியேற்றுவதற்காக மிகப் பெரிய ஒருங்கிணைந்த சுத்திகரிப்பு நிலையம் ஒன்று உருவாக்கி, அதை வெளியேற்றுவதாக அறிவிக்கப்பட்டது. அது இன்னும் நிறைவேற்றப்படாமல் இருக்கிறது. இந்த ஆண்டு அந்த அறிவிப்பே வரவில்லை. அதை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, வீடு கட்ட பெற்ற கடனுக்கு சில சலுகைகளையெல்லாம் அறிவித்திருக்கிறீர்கள். ரூபாய் 25,000 வரைக்கும் தள்ளுபடி கொடுக்கப்பட்டுள்ளது. வரவேற்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)*

**திரு. ஜி.கே. மணி:** உரையை முடித்துவிட்டேன், முடித்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உரையை முடிக்க மாட்டீர்கள். *(குறுக்கீடு)* திரு. ஜி.கே. மணி, நீங்கள் ஒரு கட்சியினுடைய தலைவராக இருந்துகொண்டு, சொன்னபடி நடந்துகொள்ளுங்கள். *(குறுக்கீடு)* No. No. உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** உரையை முடித்துவிடுகிறேன். உரையை முடிக்கப் போகிறேன். அதைப்போல நெசவாளர்களிலே விசைத்தறி, கைத்தறி நெசவாளர்கள் பெற்ற கடன், இவற்றையெல்லாம் தள்ளுபடி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒட்டுமொத்தமாக, இந்த நிதிநிலை அறிக்கைபற்றிக் குறிப்பிடுகிற நேரத்தில் நான் பத்திரிகையாளர்களிடத்திலே சொன்னது, "மக்கள் நலனுக்கான, நல்ல அறிவிப்புகளையெல்லாம் தாங்கி வந்திருக்கிற, இந்த நிதிநிலை அறிக்கையை வரவேற்கிறோம்; அதே நேரத்தில் மக்கள் எதிர்பார்த்த சிலவற்றை, இங்கே அறிவிக்காமல் இருப்பது ஏமாற்றம் அளிக்கிறது" என்று நான் சொல்லியிருந்தேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட இந்த நிதிநிலை அறிக்கை பற்றி மணி "விருப்பு, வெறுப்பு" என்று சொல்லியிருக்கிறார் என்று சொன்னதாகச் சொன்னார்கள். நான் அப்படிச் சொல்லவேயில்லை. விருப்பும் இல்லை, வெறுப்பும் இல்லை. அப்படிச் சொல்லவில்லை. தவறான செய்தியை முதலமைச்சர் அவர்களுக்குக் கொடுத்திருக்கலாம். ஆக, அப்படிச் சொல்லவில்லை. *(மணியடிக்கப்பெற்றது)* பத்திரிகைகளில்கூட அப்படி வரவில்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. ஜி.கே. மணி:** உரையை முடித்துவிடுகிறேன், தலைவர் அவர்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மணி அவர்கள் பேசும்போது ஒரு தவறான தகவலை வைத்துக்கொண்டு, ஒன்றைச் சொன்னார். அந்தக் கருத்தை அவர் மாற்றிக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இஸ்லாமியர்களுக்கும், கிறிஸ்துவர்களுக்கும் உள் இட ஒதுக்கீடு என்பது இப்போது நீதிமன்றத்திலே இருப்பதாகச் சொன்னார். அந்தப் பிரச்சினை நீதிமன்றத்திலே இல்லை. அது அளிக்கப்பட்டு, அதைத் தாராளமாக இஸ்லாமியர்களும், கிறிஸ்துவர்களும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அதைத் திருத்திக்கொள்கிறேன். மிக்க நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வரவேற்கிறீர்கள். உட்காருங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** இந்த நிதிநிலை அறிக்கை வரவேற்கக்கூடிய நிதிநிலை அறிக்கை. எதிர்பார்த்தது இல்லாதது ஏமாற்றம் அளிப்பதாகவும் இருக்கிறது என்பதைச் சொல்லி நிறைவு செய்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தின் இறுதிச் சுற்றில் கலந்துகொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக எங்கள் கருத்துகளைப் பதிவு செய்ய

எனக்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைச் சொல்லி இந்த விவாதத்திலே நான் பங்கேற்க விழைகிறேன்.

*முற்பகல் 10-15*

நாம் வாழ்கின்ற காலத்தைப் பற்றி பதிவு செய்த ஒரு ஆங்கில கவிஞன், நாம் வாழுகின்ற காலத்தின் உட்கூறுகளை மிக அருமையாகப் பதிவு செய்தான்:

"This is the best of times, this is the worst of times, this is the happiest time, this is the saddest time, this is the time for opportunities, this is the time for disappointments, this is the time for fulfillment and this is the time for discontent." "இதுதான் அற்புதமான காலம். ஆனால், அதேநேரத்திலே இதுதான் மிக மோசமான காலம். இவைதான் சந்தோஷமான நாட்கள். ஆனால், இவைதான் மிக சோகமான நாட்கள். வாய்ப்புகள் வாயில்வரை வந்து கதவைத் தட்டுகிற நாட்கள் இவை. அதேநேரத்தில் ஏமாற்றங்களும், விரக்திகளும் சூழ்ந்து இருக்கும் காலமும் இந்தக் காலம்தான். மனித வாழ்க்கை தன் பூரணத்துவத்தைப் பெற்ற நாட்கள் இவை. மனித வாழ்க்கை தனது மாண்புகளை இழந்துபோன நாட்கள் இவை" என்று சொல்லி நாம் வாழ்கின்ற காலத்திலேயிருக்கின்ற முரண்பாடுகளை, நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்ற சமூகத்திலே இருக்கின்ற மோதல்களை, நமது சமூகம் எப்படி மாறுபட்ட திசைகளில் பயணித்துக் கொண்டிருக்கிறது என்பதைப் பதிவு செய்தார். வரலாற்று ஆசிரியர்கள், மனிதவியல் ஆய்வாளர்கள், சமூகவியல் பார்வையாளர்கள் இந்தக் காலத்தைச் சொல்கின்றபோது, "A season for confrontation, competition, confusion and also for conspiracies" என்று சொன்னார்கள். இதைப் போன்ற ஒரு முரண்பாடான சமூகம் இன்று உள்ளது.

இன்று உலகத்தினுடைய கோடீஸ்வரர்களின் பட்டியலைப் பார்க்கின்றபோது இந்தியாவிலேயிருந்துதான் முதல் நான்கு கோடீஸ்வரர்கள் வருகிறார்கள். ஆனால், அதே நேரத்திலே உலகத்திலே வறுமைக் கோட்டின் எல்லைக்குக்கீழே வாழ்கின்றவர்கள் எந்த நாட்டிலே வாழ்கிறார்கள் என்று சொன்னால், அவர்களும் இந்தியாவில்தான் வாழ்கிறார்கள். அமெரிக்க நாட்டின் Silicon Valley-யிலே கணினிப் பொறியாளர்கள் அதிகமான எண்ணிக்கையிலே எங்கேயிருந்து வருகிறார்கள் என்று சொன்னால் இந்திய



நாட்டிலேயிருந்துதான் வருகிறார்கள். ஆனால், கையெழுத்துப் போடக்கூடத் தெரியாத தற்குறி மக்கள் எங்கே வாழ்கிறார்கள் என்று சொன்னால், அவர்களும் இந்தியாவிலேதான் வாழ்கிறார்கள். உலகத்திலே எய்ட்ஸ் நோய்க்கு மிகக் குறைந்த விலையிலே மருந்துகளைக் கண்டுபிடித்த நாடு எது என்று சொன்னால், அதுவும் இந்தியாதான். ஆனால், எய்ட்ஸ் நோய்க்கு மருந்துகளே வாங்க முடியாமல் மரித்துப் போகின்றவர்கள் அதிகம் என்று சொன்னால், அதுவும் இந்தியாதான். இப்படி முரண்பட்டுப் போயிருக்கின்ற ஒரு நாட்டினுடைய நிதிநிலை அறிக்கையில், மக்கள் நலம் நாடுகின்ற ஒரு அரசு should be able to balance these contradictions. இந்த முரண்பாடுகளைச் சமன் செய்கின்ற நிதிநிலை அறிக்கையாக அது இருக்கவேண்டும்.

வேகமாக ஓடுகின்ற மான்தான் சிங்கத்திடமிருந்து தப்பிக்கமுடியும். வேகமாக ஓடுகின்ற சிங்கம்தான் அந்த மானைப் பிடிக்கமுடியும். ஆகவே, இரண்டு பேரும் வேகமாக ஓடுகின்றபோது, ஒரே காட்டில் வாழுகின்ற நிர்ப்பந்தம் இருக்கின்றபோது மானைப் பாதுகாக்க வேண்டியவர்களும், சிங்கத்தை பசியாறாமல் பார்க்கின்றவர்களும் ஒரே ஆளாக இருக்கிறார்கள் என்பதற்காகத்தான், அந்த முரண்பாடுகளைச் சமன் செய்வதற்கான அடிப்படைத் தேவைகள் எவ்வளவு வருகின்றன என்று சொன்னால், அவர்களுக்கு அதிக கற்பனை வேண்டும். அதிக நேர்முகமான சிந்தனை வேண்டும். அந்த ஏழை படுகின்ற வலியை உணர்ந்துகொள்ளக்கூடிய மனப்பாங்கு வேண்டும். அந்த வலியை உணரவேண்டும். அந்த வலியைத் துடைக்கவேண்டும் என்கிற ஆர்வம் வேண்டும். அவன் படுகின்ற துன்பத்திலே, அவன் படுகின்ற கஷ்டத்திலே நானும் பங்கேற்பேன் என்ற அந்த உண்மையான உணர்வும், கற்பனையும், நேர்முகமான சிந்தனையும் யாருக்கு இருக்கிறதோ, அவர்கள்தான் சரியான நிதிநிலை அறிக்கையைத் தரமுடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோணத்திலே பார்க்கின்றபோது இந்த நிதிநிலை அறிக்கை, இந்த முரண்பாடுகளைச் சமன்செய்கின்ற நிதிநிலை அறிக்கையாக ஏழைகளையும், பணக்காரர்களையும், முதலீடுகளையும், முதலீடு வருகின்ற இடங்களையும் பராமரிக்கின்ற அறிக்கையாக எனக்கு அது தோன்றுகிறது. நான் மட்டும் சொல்லவில்லை. நான் சொன்னால்கூட அதைப் புகழுரை என்று சொல்வார்கள். இந்த நாட்டினுடைய நிதியமைச்சர், உலகம் முழுவதும் அங்கீகரித்துக்கொண்ட, ஒப்பற்ற

பொருளாதார மேதை என்று கணித்துக் கூறப்பட்ட, திரு. ப. சிதம்பரம் அவர்கள்கூடக் கூறுகின்றபோது, நம்முடைய நிதியமைச்சர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் அருமையான பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார். அந்த பாராட்டுகளை இந்த அவையிலே பதிவு செய்வது அவசியம் என்று நான் எண்ணுகிறேன். Appreciating the several aspects of the Budget presented by the State Finance Minister, K. Anbazhagan, the Finance Minister said, "It was a pioneering venture for other States to emulate. As the Finance Minister of the Union Government I am duly bound to praise the State Finance Minister for presenting a surplus Budget"—அதோடு நிறுத்திவிடவில்லை—"and I appeal to all other States, all other State Governments to prepare budgets without revenue deficit like Tamil Nadu." அந்த வார்த்தைகளை இந்த அவையில் பதிவு செய்ய வேண்டுமென்று நான் எண்ணுகிறேன். ஆகவே, கற்பனை வளம், நேர்முக சிந்தனை, ஏழையெளிய மக்களின்பால் கரிசனம், உலகப் பொருளாதாரம் எப்படிப் போகிறது என்பதைத் துல்லியமாக உணர்ந்துகொள்ளக்கூடிய தொலைநோக்குப் பார்வை, நாட்டில் என்ன நடக்கிறது என்பதை அறிந்துகொள்ளக்கூடிய அற்புதமான ஞாபக சக்தி, இவை எல்லாம் இருந்தால்தான் இதைப் போன்ற ஒரு balanced budget, ஒரு சமநிலை பட்ஜெட்டைத் தாக்கல் செய்யமுடியும்.

அந்தவகையிலே விவாதத்திற்குள்ளே போவதற்கு முன்பு நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமும், நம்முடைய நிதி அமைச்சர் அவர்களிடமும் ஒரு கேள்வி. கடந்த சில நாட்களாக என்னுடைய மூளையைக் கசக்கிக் கொண்டிருக்கிற ஒரு கேள்வியை உங்கள் மூலமாக நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமும், நம்முடைய பேராசிரியப் பெருந்தகை அவர்களிடமும் வைக்கவேண்டுமென்று நான் எண்ணுகிறேன்.

*முற்பகல் 10-20*

அதாவது, மனித வாழ்க்கையில் வயதாகின்றபோது கற்பனைகள் வறண்டு போகும் என்று சொல்வார்கள்; சிந்தனை ஓட்டம் குறைந்து போகும் என்று சொல்வார்கள்; எண்ணங்கள் வார்த்தைகளாக வடிவம் பெறுகின்றபோது வார்த்தைகள் வடிவம்கொள்ளத் தயங்கும் என்பார்கள்; நகைச்சுவை உணர்வு குறையும் என்பார்கள். ஆனால், நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கு வயதாக, வயதாக, கற்பனை அதிகரிப்பதும் (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நகைச்சுவை உணர்வு நாளுக்கு நாள் மெருகேறுவதும், எண்ணங்களும், புதிய சிந்தனைகளும்,



புதிய பார்வைகளும் ஒரு நாளைக்கு ஒரு நாள் போட்டி போட்டிக்கொண்டு முகிழ்த்துக்கொண்டு வருவதையும் எங்களால் பார்க்கமுடிகிறது. ஒரு மணி நேரம் அல்ல, 5 நிமிடம் நின்றாலே, எங்களைப் போன்றவர்களுக்கே, கால்கள் தடுமாறுகின்றன; வாய் குழறுகிறது. ஆனால், பேராசிரியப் பெருந்தகை அவர்கள் 3 மணி நேரம் நின்று ஒரு அட்சரம்கூடப் பிறழாமல் (மேசையைத் தட்டும் ஒலி) அற்புதமான அந்த உரையை ஆற்றி முடித்தார்கள். எனவே, நீங்கள் இரண்டுபேரும் அந்த இரகசிய சூத்திரத்தை எங்களுக்கு சொல்லித்தர வேண்டும். (சிரிப்பு) எப்படி இயற்கைக்கு எதிராக, வயதாகாமல், உணர்வுகளை மழுங்க வைத்துக்கொள்ளாமல், உணர்ச்சிகளை மழுங்க வைத்துக்கொள்ளாமல், சிந்தனைத் திறனைக் குறைத்துக்கொள்ளாமல், கற்பனைகளை வறண்டுவிடாமல் பார்த்துக்கொள்கின்ற அந்த இரகசிய சூத்திரத்தை நீங்கள் இரண்டு பேரும், நீங்கள் மட்டுமே வைத்துக்கொள்ளாமல் அதை எங்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கின்ற அந்தப் பணியை நீங்கள் செய்யவேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையிலே பாராட்டவேண்டிய அம்சங்கள் நிறைய இருக்கின்றன. அதிலே தொடர்ந்து பல்வேறு செய்திகளை, புதிய செய்திகளை, புதிய கருத்துகளைச் சொல்லியுள்ளீர்கள். நாம் ஏறக்குறைய 4, 5 நாட்கள் நம்முடைய விவாதங்களில் பார்த்துவிட்டோம். இந்த நாட்டில் இருக்கிற பிரபல பத்திரிகைகள் எல்லாம் தலையங்கங்கள் எழுதி விட்டன, தொலைக்காட்சிகள் விவாத மேடைகளை நடத்தி முடித்துவிட்டன. ஆனால், சட்டமன்றத்திற்குள் இருக்கிற நமக்கு இதை விவாதிக்கவேண்டிய ஜனநாயகக் கடமை இருக்கிற காரணத்தால் இன்று இந்த அவையிலே அமர்ந்திருக்கிறோம். பாராட்டவேண்டிய அவசியம் என்று சொல்கிறபோது நம்முடைய அருமைக்குரிய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் அண்ணன் மணி அவர்களும், முன் வரிசைத் தலைவர்களும், பல உறுப்பினர்களும் இங்கே பாராட்டிப் பேசுகின்றபோது பல்வேறு கருத்துகளைச் சொன்னார்கள். அவற்றை நானும் மீண்டும் சொல்லவேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஆனால், காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சொல்கிறபோது, விவசாயிகளுக்கும், கல்விக்கும் வழங்கப்பட்ட ஏராளமான சலுகைகள், 16 ஆயிரம் கோடி ரூபாய்க்கு திட்டப்பட்டிருக்கின்ற திட்டப் பணிகள், காவிரி, வைகை, தாமிரபரணி, நம்பியாறு போன்ற நதிகள் இணைப்பு; ரூ.482 கோடியில் 3,500 புதிய பேருந்துகள்; வீட்டு வசதிக் கடன்

தள்ளுபடி; சென்னையில் அதிவேக சாலை; ரூ.1,500 கோடியில் புதிய பயிர்க் கடன்; காவல் துறைக்கான நிதி ஒதுக்கீட்டில் 40 விழுக்காடு அதிகரிப்பு; 48,500 தடுப்பணைகள் கட்ட 550 கோடி ரூபாய்; 5 புதிய பொறியியல் கல்லூரிகள்; இரண்டு புதிய மருத்துவக் கல்லூரிகள்; இயற்கைச் சீற்றங்கள், பெரும் விபத்துகள்மூலம் ஏற்படும் பெரும் பாதிப்புக்காக ஒரு சிறப்பு மையம்; எய்ட்ஸ் நோயினால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கான அரசு சார்ந்த சிறப்பு அறக்கட்டளை; தாட்கோவிடமிருந்து ஆதி திராவிட விவசாயிகள் பெற்ற கடன் தள்ளுபடி; நெசவாளர்களுக்கான இலவச காப்பீட்டுத் திட்டம்; அரவாணிகளுக்கான சுய உதவிக் குழு, நரிக்குறவர்கள் நலம் பேணத் தனி நல வாரியம்; மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தில் வழங்கப்படும் நிதியை 15 ஆயிரம் ரூபாயிலிருந்து 20 ஆயிரம் ரூபாயாக உயர்த்தியது என்று நிதிநிலை அறிக்கையின் சிறப்புக் கூறுகளை நான் பட்டியலிட்டுக் கொண்டே போகலாம்.

அதைப்போல, கடந்த ஓர் ஆண்டிலே நிர்வாகரீதியாக இந்த அரசு பல முக்கிய முடிவுகளை எடுத்திருக்கிறது. பல முக்கிய முடிவுகளைச் செயல்படுத்தி இருக்கிறது. அந்தச் செயல்பெற்ற முடிவுகளிலே சில முடிவுகள், நல்ல பல மாற்றங்களை சமூகத்தின் அடித்தட்டில் விளைவித்து இருக்கின்ற காரணத்தால், சமூகத்தின் அடித்தட்டைப் பார்க்கின்ற வாய்ப்பு எங்களைப் போன்றவர்களுக்கு இருக்கின்ற காரணத்தால் அந்த நல்ல முயற்சிகளைப் பாராட்டுகிறோம். அந்த நல்ல முயற்சிகளைக் கோடிட்டுக் காண்பிப்பது கடமை என்று எண்ணுகிறோம். அந்த முயற்சியை எப்படி மேலும் வளப்படுத்த வேண்டும் என்பதையும் ஆலோசனைகளாகச் சொல்லக் காத்திருக்கிறோம்.

உதாரணமாக, நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுடைய தலைமையிலே இயங்குகிற வருவாய்த் துறை, வீடுகளிலே குடியிருக்கிற ஏழைகளுக்கு பட்டாக்களை வழங்குகிற பெரிய முயற்சியை உள்ளபடியே பாராட்டவேண்டும். 3 இலட்சம் ஏழைக் குடும்பங்கள், பல ஆண்டுகளாக தாங்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்கும், உடைமைக்கும் சம்பந்தம் இல்லாமல் எப்போது இந்த வீடு தங்களது நிலையான சொத்தாக மாறும் என்ற ஏக்கத்திலே இருந்தவர்களுக்கு, அந்த ஏக்கத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, அரசாங்கம் அவர்களுக்கு அந்த வீட்டை பட்டா போட்டுக் கொடுத்திருக்கிறது. 3 இலட்சம் பேருக்குக் கொடுத்திருக்கிறது. 10



ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருந்த அத்தனை பேருக்கும், அரசு நிலங்களில் குடியிருந்த அத்தனைபேருக்கும் வீட்டு உரிமை என்பது ஒரு சாதாரண முயற்சி அல்ல. அது பெரிய முயற்சி, அந்த முயற்சியை நாங்கள் பாராட்டுகிறோம்.

முற்பகல் 10-25

பல புதிய வழித் தடங்களிலே புதிய பேருந்துகளை விட்டிருக்கிறது போக்குவரத்துத் துறை. கடந்த ஆட்சிக் காலத்திலே—நான் யாரையும் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை—பல்வேறு வழித்தடங்கள் நிறுத்தப்பட்டதை யாரும் மறுத்துவிட முடியாது. நம்முடைய சட்டமன்றத் தொகுதிக்குள்ளே சுற்றுப்பயணம் போகின்றபோது அங்கே வருகின்ற பொதுமக்கள் இங்கே ஓடிக்கொண்டிருந்த பஸ் இரண்டு வருடங்களாக நின்றுவிட்டது என்று சொல்வார்கள், மூன்று வருடங்களாக நின்றுவிட்டது என்று சொல்வார்கள். அப்படி நிறுத்தப்பட்ட வழித் தடங்களில் உள்ள பேருந்துகளை எல்லாம் சீர் செய்து, ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு 5 புதிய பேருந்துத் தடங்கள் என்ற அறிவிப்பினைச் செய்து, நல்ல பேருந்துகளை ஓட்டியிருக்கிறோம். இப்போது 2 ஆயிரம், 3 ஆயிரம் புதிய பேருந்துகளை நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள். அதற்கும் நாங்கள் பாராட்டுகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் ரேஷன் கார்டுகளை மாவட்டத் தலைநகரங்களில் அச்சிட்டு வெளியிடுவது என்று புதிய கொள்கை முடிவெடுத்தார்கள். அந்த முடிவுக்கு எவ்வளவு பெரிய எதிர்ப்பு இருந்திருக்கும் என்பதை என்னால் கற்பனை செய்துபார்க்க முடிகிறது. ஏனென்றால், நம்முடைய அதிகார வர்க்கம் அதை அவ்வளவு சுலபமாக அனுமதித்துவிடாது. ரேஷன் அட்டைகளை அச்சிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம்மூலம் வழங்கலாம் என்கிற அந்த உத்தரவைப் பெறுவதற்கு அவர் நிச்சயமாகப் போராடியிருப்பார். அந்தக் கொள்கை முடிவை எடுத்த காரணத்தால், இப்போது வேகமாக ரேஷன் அட்டைகள் கிராமப்புறங்களிலே வழங்கப்படுகின்றன என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) யாரும் மறுத்துவிட முடியாது. அந்த முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரவாணிகளுக்கு ரேஷன் அட்டைகள் வழங்கப்பட்டதை ஏதோ ஒரு சிறிய முயற்சி என்று பார்த்துவிடக்கூடாது. நம்முடைய Times of India பத்திரிகையிலே அரவாணிகளுக்கு ரேஷன் அட்டை

வழங்கப்பட்ட செய்தியை மிகப் பெரிய செய்தியாக டெல்லி பிரசுரத்திலே போட்டிருந்தார்கள். நான் அப்போது டெல்லியில் இருந்தேன். அதிலே என்ன எழுதுகிறார்கள் என்றால் "The third sex gets official status in Tamil Nadu. So far, Pooja, a 25 year old transsexual from Salem in Tamil Nadu, had nothing to prove her existence in Government records because she had refused to be identified as either a male or a female, the only two options available in the gender column of the application forms. Finally, the State has recognised her as an individual and given her a ration card, where the sex column is marked "T" instead of "M" or "F". This step of Tamil Nadu Civil Supplies Corporation marks the first time that authorities anywhere in India have recognised the group in Tamil Nadu alone." (மேசையைத் தட்டும் ஒலி) அதாவது, மண்ணில் மனிதனாகப் பிறந்த பிறகும்கூட, மனிதனாகத் தன்னை அங்கீகரிக்க மறுக்கிற சமூகத்திடம், அந்த மனிதனாகப் பிறந்த ஓர் உயிர் எவ்வளவு நாட்கள் போராடி, தானும் ஒரு மனிதன், தனக்கும் மனிதன் என்கிற இனத்திலே இடமிருக்கிறது என்கிற அங்கீகாரத்தை ஒரு அரசாங்கம் ஒத்துக்கொண்டு, அதற்கு ஒரு முத்திரை கொடுக்கிறது என்று சொன்னால், அதைவிடப் பெரிய பரிசு அந்த அரவாணிக்கு என்ன இருக்க முடியும்? ஆகவே, நான் அதை ஒரு தொலைநோக்குப் பார்வையோடு பார்க்கிறேன். இது இந்தியா முழுவதற்கும் வழிகாட்டுகின்ற ஓர் அற்புதமான நிகழ்வாக இருக்கிறது. இதிலே இன்னொரு தகவல் என்னவென்று சொன்னால், இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் அரவாணிகள் அதிகம் என்கிற புள்ளிவிவரமும் வந்திருக்கிறது. இந்தியாவிலேயே அரவாணிகள் அதிகமாக எந்த மாநிலத்தில் வாழ்கிறார்கள் என்று சொன்னால், தமிழ்நாட்டில்தான் அதிகமாக வாழ்கிறார்கள். Tamil Nadu has the biggest eunuchs population. They are in lakhs. ஆகவே, இது ஒரு பெரிய சமூக நீதிக்கான முயற்சி. அந்த முயற்சியை நாங்கள் பாராட்டுகிறோம்.

பருவம் தப்பிய மழையின் காரணமாகப் பெரும் வெள்ளம் தென் மாவட்டங்களில் வந்தபோது, தாங்கள் சட்டமன்றத்தையே இரண்டு நாட்கள் ஒத்திவைத்து, அமைச்சர் பெருமக்களை எல்லாம் மாவட்டங்களுடைய பல்வேறு பகுதிகளுக்கு அனுப்பி, அதிலும் குறிப்பாக, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தென் மாவட்டங்களிலே 3, 4 நாட்கள் இடைவிடாமல் இரவும், பகலும் சுற்றுப்பயணம் செய்து வெள்ளம் சூழ்ந்த பகுதிகள், வீடு இடிந்த பகுதிகளை எல்லாம் பார்வையிட்டார்கள். ஓர் ஆச்சரியமான செய்தி என்னவென்று சொன்னால், என்னுடைய சட்டமன்றத்



தொகுதியிலே ஞாயிற்றுக்கிழமை காலையிலே ஒரு வீடு இடிந்து விழுந்தது. இடிந்து விழுந்த அந்த வீட்டிற்காக திங்கட்கிழமை காலையிலே பணம் பட்டுவாடா செய்யப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) வழக்கமாக வெள்ளம் வடிந்து முடிந்த பிறகுதான், அல்லது வெள்ளத்தினுடைய சுவடுகளே அழிந்த பிறகுதான் அமைச்சர்களும், அதிகாரிகளும் வந்து பார்த்த காலம்போய், வெள்ள நீர் வடிவதற்கு முன்னாலேயே அந்த இடங்களைப் பார்வையிட்டு அதற்கு உதவி வழங்கிய அந்த முயற்சியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, கடந்த இரண்டு நாட்களாக இந்த அவையிலே மிக முக்கியமாகச் சொல்லப்பட்ட தகவல்கள் இரண்டே இரண்டு தகவல்கள்தான். அரசு நிருவாகத்தைப் பொறுத்தவரை, அகில இந்தியக் கட்சிகளாக இருந்தாலும் சரி, மாநிலக் கட்சிகளாக இருந்தாலும் சரி, இந்த நாட்டின் அரசியலில் சொல்வது இரண்டு. கோவையிலே நடந்த நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டிலே போடப்பட்ட தீர்மானங்களைக்கூடப் படிக்கின்றபோது, இரண்டு பிரச்சினைகளில்தான் இந்த அரசுகள் கவனம் செலுத்தவேண்டும் என்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதேனும் சொல்லப்போகிறீர்களா? சரி, பி. தங்கமணி.

***திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் முதல் நாள் இரவு இடிந்த வீட்டுக்கு மறுநாள் காலையிலே நிதி கொடுத்ததாகச் சொன்னார்கள். எங்கள் தொகுதியிலே 900 வீடுகள் பாதிக்கப்பட்டு ஒன்றரை வருடமாக ஒரு நிவாரணமும் வழங்கப்படவில்லை என்று நான் சொன்னேன், அப்போது இச்சட்டமன்ற உறுப்பினர் அவையில் இல்லாததால் அந்தக் கருத்து அவருக்குத் தெரிவதற்கு வாய்ப்பில்லை என்று நினைக்கின்றேன். இப்போதாவது அவர்கள் தெரிந்துகொள்ளட்டும். 1-½ வருடம் ஆகிவிட்டது, இதுவரையில் நிவாரணம் ஒரு பைசாகூட வழங்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது, 900 வீடுகள் இடிந்ததாகவும், நிவாரணம் வழங்கவில்லையென்றும் சொல்கின்றார். (குறுக்கீடு) இருங்கள். எங்கே இடிந்து விழுந்தது என்று சொல்லுங்கள். 900 வீடுகள் என்று பொத்தாம் பொதுவாகச் சொல்லக்கூடாது. (குறுக்கீடு) இல்லை, 900 வீடுகளுக்கு நிவாரணம் வழங்கவில்லையென்று சொல்கின்றீர்கள்; எங்கே இடிந்து விழுந்தது என்பதற்குப் பட்டியலைக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிப்பாளையம் பகுதியில் ஆற்றங்கரையை ஒட்டி இருக்கின்ற, மேலே இருக்கின்ற அந்தப் பகுதிகளில் வாழ்கின்றவர்களின் 900 வீடுகள் சேதமடைந்து, உண்ணாவிரதம் இருந்து, போராடி, மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்திற்கும் சென்று, இதுவரையிலே அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. தண்ணீர் புகுந்து ஏறத்தாழ ஒரு வார காலம் அவர்கள் எந்தப் பகுதியில் வாழ்வது என்று தத்தளித்துக் கொண்டிருக்கின்ற நிலை இந்த அரசின் கவனத்திற்கு வந்திருக்கும். அமைச்சரவர்கள் ஏன் தவறான தகவலைத் தருகின்றீர்கள்? கேட்டு, அதைத் தெரிந்து, அதற்குப் பிறகு என்ன நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமோ அந்த நடவடிக்கையை மேற்கொண்டால் நலமாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் தவறான தகவலைச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல. எங்கேயாவது வீடு சேதமடைந்திருந்தால் சொல்லுங்கள். கடந்த முறை அக்டோபர், நவம்பர் பெய்த மழை வெள்ளத்தில் — நீங்கள் பேசுகின்றபோதெல்லாம் சொல்கின்றீர்கள், 56 கோடி ரூபாய்தான் கொடுத்திருக்கிறீர்கள் என்று சொல்கிறீர்கள். கலைஞர் அரசைப் பொறுத்தளவில், தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் இடிந்த வீடுகளுக்கு, அவை பகுதியாக இடிந்த வீடுகளாக இருந்தாலும், முழுவதும் பாதிக்கப்பட்டிருந்தாலும், அத்தனை வீடுகளுக்கும் (குறுக்கீடு) இல்லை, கால்நடையாக இருந்தாலும், வீடுகளாக இருந்தாலும் பாதிக்கப்பட்டவற்றுக்கு உடனே நிவாரணம் வழங்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் எங்கே பாதிக்கப்பட்டிருக்கின்றது என்று எழுதிக் கொடுங்கள். நீங்கள்



பொத்தாம் பொதுவாக 900 வீடுகள் என்று சொல்லக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, ஆற்றங்கரை ஓரத்தில் 900 வீடுகள் அடித்துப் போய்விட்டன என்றால் அந்தக் கதை வேண்டாம், எங்கே இடிந்தது, எங்கே கொடுக்கவில்லை என்று கரெக்டாகச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். (குறுக்கீடு.)

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திருச்செங்கோடு சட்டப் பேரவை உறுப்பினர், 900 வீடுகள் இடிந்து விழுந்ததாகச் சொல்லியிருக்கின்றார். (குறுக்கீடு) சரி, சேதமடைந்திருக்கின்றன. ஒவ்வொரு முறையும் கன மழை வருகின்றபோது அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுகின்றபோது, ஆற்றங்கரை ஓரத்தில் வீடு கட்டியிருப்பவர்களுக்கு, அவர்கள் வீடு கட்டியிருக்கின்ற இடத்திற்கு தண்ணீர் வரும். அது பெரும் அளவிலே சேதமில்லை. பிறகு தண்ணீர் வடிந்துவிட்டால், அவர்கள் அங்கேயேதான் குடியிருக்கின்றார்கள். அது ஒன்றும் பெரிய சேதமில்லை. ஆக, சேதம் இல்லாததையெல்லாம் கணக்கு எடுத்து நீங்கள் கொடுக்கச் சொல்கின்றீர்கள். 2005 ஆம் ஆண்டு மழை வெள்ளத்தால் பாதிக்கப்படாத வீடுகளுக்கெல்லாம், தேர்தலையொட்டி 2 ஆயிரம், 2 ஆயிரம் ரூபாய் நீங்கள் கொடுத்ததைப்போல, நாங்கள் கொடுக்கத் தயாராக இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் (குறுக்கீடு) No, no. திரு. வேல்முருகன், உட்காருங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் தொடர்ந்து பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரங்களையெல்லாம் என் கணக்கில் வைத்துக்கொள்ளவேண்டாம். நான் கண்ட காட்சியை நான் சொல்கின்றேன். நீங்கள் கண்ட காட்சியை நீங்கள் சொல்லுங்கள். ஆனால் ஒன்று. உங்கள் mobile phone எடுக்கவில்லையென்றால், நீங்கள் signal-க்குள்ளே இல்லையென்று அர்த்தம். அந்த reach-க்குள்ளே

இருந்தால் நீங்கள் mobile phone-ஐ எடுக்கவேண்டும். உதாரணத்திற்கு நான் சொல்கின்றேன். நீங்கள் நேற்றையதினம் முழுவதும் தொலைக்காட்சி விநியோகத்தைப் பற்றி பேசிக்கொண்டிருந்தீர்கள். நான் இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு முதல் நாள், நானும் என்னுடைய மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகப் பொறுப்பாளராக இருக்கின்ற நம்முடைய தென்காசி சட்டமன்ற உறுப்பினர் திரு. கருப்பசாமி பாண்டியன் அவர்களும் சொக்கம்பட்டி என்ற ஊரிலே தொலைக்காட்சிப் பெட்டி வழங்குகின்றபோது, அங்கே என் தொகுதியிலே என்ன நடந்தது என்பதைத்தான் நான் சொல்ல முடியும். அங்கே முதல் டி.வி. யாருக்கு வழங்கப்பட்டது என்று சொன்னால், கடந்த 16 ஆண்டுகளாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கிளைச் செயலாளராக இருக்கின்ற திரு. பெரியசாமித் தேவர் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பவருக்கு முதல் டி.வி. வழங்க, அவரை மேடைக்கு அழைத்து மட்டுமல்ல, திராவிட முன்னேற்றக் கழகச் செயலாளரை வைத்து, அவருக்கு சால்வை போடச் சொல்லி, டி.வி. கொடுத்து, நானும் அவரும் படம் எடுத்து வந்திருக்கிறோம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைதியாக இருங்கள். *(குறுக்கீடு)* திரு. செங்கோட்டையன், டி.வி. கொடுத்ததைப் பற்றிச் சொல்கின்றார், இதில் என்ன கிளாரிபிகேஷன் கேட்கப் போகின்றீர்கள்? இதில் என்ன Point of Order இருக்கிறது? உட்காருங்கள், No Point of Order. திரு. பீட்டர் அல்போன்ஸ் நீங்கள் பேசுங்கள். உங்கள் கட்சிக்காரருக்கு டி.வி. கொடுத்ததாகச் சொல்கின்றார். இதில் என்ன Point of Order இருக்கிறது? உட்காருங்கள். *(குறுக்கீடு)* சரி, திரு. செங்கோட்டையன், சொல்லுங்கள்.

*முற்பகல் 10-35*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதியில் அண்ணா தி.மு.க. செயலாளருக்கு டி.வி. கொடுத்து, தி.மு.க. செயலாளரையே விட்டு சால்வை போட்டு படம் எடுத்து வைத்திருக்கிறார்கள் என்று சொன்னால் எவ்வளவு கேவலமான வேலையை இவர்கள் செய்திருக்கிறார்கள் என்பதை நாடு அறிந்துகொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. செங்கோட்டையன் அவர்களுக்குக் கேவலமாகத் தெரிகின்ற அந்தக் காரியம்தான் கிராமங்களில் பெருமையாகக் கருதப்படுகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 4, 5 நாட்களாக இந்த அவையிலே நடந்த விவாதத்திலே நம்முடைய பிரதான எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள், பல்வேறு விஷயங்களைப் பேசுகின்றபோது ஒரு குற்றச்சாட்டை மீண்டும் மீண்டும் வைத்தார்கள். மத்திய அரசு என்ன செய்தது, மத்திய அரசிடம் ஏன் நீங்கள் கேட்கவில்லை, இதைப் பார்த்துக்கொண்டு மத்திய அரசு ஏன் சும்மா இருந்தது என்று மத்திய அரசின்மீது தொடர்ந்து குற்றச்சாட்டை வைத்தார்கள். ஆனால், 6, 7 நாட்களுக்கு முன்னால் டெல்லிக்குச் சென்றிருந்தபோது, நானும் நம்முடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் அண்ணன் சுதர்சனம் அவர்களும் நம்முடைய பாராளுமன்றத்தினுடைய மைய மண்டபத்திலே உட்கார்ந்து, தமிழக காங்கிரசினுடைய அரசியல் விவகாரங்களைக் கவனித்துக்கொண்டிருக்கக்கூடிய தமிழக காங்கிரசினுடைய பொறுப்பாளர், அகில இந்திய காங்கிரஸ் கட்சியினுடைய செயற்குழு உறுப்பினராக இருக்கின்ற திரு. அருண் குமார் அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தபோது அவர் ஒரு இடத்திற்குப் போய் வந்துவிடுகிறேன், பிரதமரைப் பார்க்கப் போகிறேன், ஒரு சிறிய கோரிக்கை வைக்கப் போகிறேன் என்று சொன்னார். நாங்கள் சொன்னோம், "ஏன் சார் நீங்கள் கோரிக்கை வைக்கவேண்டுமா? உங்களுக்கு செய்யமாட்டார்களா" என்று சொன்னபோது, அவர் சொன்னார், "உங்களுக்கு என்ன? You belong to the Bhima State." அதாவது மத்திய அரசு நிதி ஒதுக்கீடு எங்கெல்லாம் வருகிறதோ அதிலெல்லாம் 50 விழுக்காட்டை எடுத்துச் செல்கின்ற the Bhima State என்று சொல்லி இன்று இந்தியாவிலே இருக்கின்ற, பாராளுமன்றத்தின் மைய மண்டபத்திலே இருக்கின்ற அந்த அரசியல் அறிஞர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றார்கள். நான்கு, ஐந்து நாட்களுக்கு முன்புகூட நம்முடைய மத்திய அரசினுடைய மனித வள மேம்பாட்டுத் துறை மூலம் புதிய பல்கலைக்கழகங்களை, புதிய

I.I.T., I.I.M.s தொடங்குவதற்கான அறிவிப்புகள் வந்திருக்கின்றன. அந்த அறிவிப்பிலே மூன்று I.I.M. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? என்ன கேட்கப்போகிறீர்கள்? *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இதிலே என்ன point of order? அதாவது I have not said anything unparliamentary. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன point of order? மத்திய அரசிடமிருந்து நிறைய நிதியை வாங்கிக்கொண்டு வருகிறீர்கள் என்று சொல்கிறார். இதில் என்ன இருக்கிறது? *(குறுக்கீடுகள்)* சரி, சொல்லுங்கள். சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் ஏதோ மத்திய அரசிலிருந்து ஒதுக்கப்படுகின்ற நிதியில் 50 சதவிகிதம் தமிழகத்திலே வந்து குவிந்துகொண்டு இருக்கிற மாயத் தோற்றத்தில் பேசிக்கொண்டிருக்கிறார். கடந்த வட கிழக்குப் பருவ மழையில், வெள்ளத்தால் நாம் பாதிக்கப்பட்டபோது, தமிழக அரசு 1510, கோடி ரூபாய்க்கு முன்மொழிவுகள் மத்திய அரசுக்கு அனுப்பியது. அதில் எவ்வளவு நிதியை மத்திய அரசு இங்கு அனுப்பியது என்பதை திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ் சொல்லுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளிலே மத்திய அரசினுடைய நிதி ஒதுக்கீட்டினுடைய பட்டியலை மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் மத்திய அரசு இந்த மாநிலத்திற்கு என்ன செய்து இருக்கிறது என்று 3 நிதிநிலை அறிக்கைகளில் *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யாரும் பேசாதீர்கள். *(கூச்சல்-குழப்பம்)* மற்ற உறுப்பினர்கள் அமைதியாக இருங்கள். *(குறுக்கீடுகள்)* எதிர்க்கட்சித் துணைத் தலைவர், கொறடா உங்கள் உறுப்பினர்களிடம் சொல்லுங்கள். அமைதியாக இருக்கச் சொல்லுங்கள். நீங்கள் இரண்டு பேரும் பேசினீர்கள் அல்லவா? *(குறுக்கீடுகள்)*



**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** நான் கேள்விக்குத்தான் பதில் சொல்கின்றேன். நான் பட்டியல் போட்டு காட்டத் தயார். அதற்காகத்தான் கடைசிப் பட்டியலாகச் சொன்னேன். நான்கு நாட்களுக்கு முன்னால் மத்திய அரசு அறிவித்த மத்திய பல்கலைக்கழகம், I.I.T., I.I.M.s இல் மூன்றினை, அதாவது ஒரு I.I.M., ஒரு I.I.T., ஒரு மத்திய பல்கலைக்கழகத்தை தமிழ்நாட்டிற்கு ஒதுக்கி நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவிலேயே ஒரு தனி மாநிலத்தினுடைய குடிநீர் திட்டத்திற்காக ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி பட்ஜெட்டில் அறிவித்தது முதல் அறிவிப்பு. இன்றைக்கு இரயில்வே துறையை எடுத்துக்கொண்டீர்கள் என்று சொன்னால் *(குறுக்கீடுகள்)* இப்போது இந்தியாவிலேயே அதிகமான மேம்பாலங்கள், இரயில்வே மேம்பாலங்கள், அதிகமான இரயில் வழித் தடங்கள் *(குறுக்கீடுகள்)* ஒரு metre guage line-கூட இல்லாமல் அத்தனையையும் broad guage ஆக மாற்றுகின்ற பணி *(மேசையைத் தட்டும் ஒலி)* எப்படி நடக்கிறது? இதையெல்லாம் எதற்காக இந்த அவையிலே உங்களுக்கு நான் சொல்கிறேன் என்று சொன்னால் இந்த அவையின்மூலமாக நாட்டு மக்கள் இதையெல்லாம் தெரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காகத்தான். இந்தப் பணம் கடந்த ஆட்சியிடம் இல்லையா? இப்போது 60 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடனை தள்ளுபடி செய்திருக்கிறது மத்திய அரசு. *(குறுக்கீடுகள்)* இப்போது தமிழ்நாடு முழுவதும் எங்கே பார்த்தாலும் 4 வழிப் பாதைகள், சாலைகள். *(குறுக்கீடுகள்)*

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)* திரு. சுதர்சனம், என்ன? சொல்லுங்கள்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் பேசிக் கொண்டிருக்கிறார். அதிலே மாறுபட்ட கருத்திருந்தால் பின்னாலே பேச இருக்கின்ற முன்னாள் முதலமைச்சர் அவர்கள் தெளிவாக பதில் சொல்லட்டும். அதை விட்டுவிட்டு பின்னாலிருந்து கூச்சல் போடுவார்கள் என்றால் அவர்கள் பேசுகிறபோது நாங்களும் அதுமாதிரி கூச்சல் போடுவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேசுங்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள். (குறுக்கீடு) உங்கள் உறுப்பினர் அடுத்தது பேசப் போகிறார். அப்போது அவர் இந்தக் கருத்துகளை எல்லாம் சொல்வார். அமைதியாக இருங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருத்துகளைச் சொல்ல முடிந்தால், புள்ளிவிவரங்களைச் சொல்ல முடிந்தால் சொல்லலாம். புள்ளிவிவரங்களும், கருத்துகளும் இல்லாதவர்கள்தான் கூச்சல் போடுவார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,..(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன், நீங்கள் கொறடா கட்டுப்பாட்டில் இருக்கிறீர்களா இல்லையா? (குறுக்கீடுகள்) யாருமே கொறடா சொல்வதைக் கேட்கிறமாதிரித் தெரியவில்லையே? (குறுக்கீடுகள்) பேசுங்கள் நீங்கள். திரு. பீட்டர் அல்போன்ஸ் பேசுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழ்நாட்டில் மட்டுமல்ல, அகில இந்திய அளவில் மட்டுமல்ல, அரசியல் தளங்களிலே பணியாற்றுகிற அரசியல் கட்சிகளாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலை நோக்கி நாடு நகர்ந்து கொண்டிருக்கிற வேளையிலே, ஏழையெளிய மக்களைப் பாதிக்கின்ற இரண்டு முக்கியமான பிரச்சினைகளை நாடு முழுவதுமுள்ள சட்டமன்றங்கள், நாட்டிலே இருக்கின்ற நாடாளுமன்றத்தின் அவைகள், அரசியல் கட்சிகள் தங்கள் பொதுக் குழு, செயற்குழு, மாநாடுகளிலே விவாதிக்கின்ற பொருள் The Agrarian Crisis—விவசாயிகளுடைய பிரச்சினை. நாளுக்கு நாள் விளைநிலங்கள் குறைந்துபோவதும், விவசாயிகள் தற்கொலை செய்துகொள்வதும், விவசாயிகள் நகர்ப்புறங்களை நோக்கி நகர்வதும், விவசாயம் என்கிற, வேளாண்மை என்கிற அந்த பெருந்தொழில் இந்த நாட்டில் மறைந்துவிடுமோ என்கிற ஒரு மிகப் பெரிய கேள்விக் குறி எழுந்து இருப்பதையும் எந்த அரசியல் கட்சியும் மறுக்கவில்லை. எந்த அரசும் மறந்துவிட முடியாது.

விவசாயிகளுக்குத் தேவையான விளைபொருட்களுக்குத் தேவையான உரம், பூச்சி மருந்து ஆகியவற்றைச் சரியான நேரத்திலே கிடைக்கச் செய்வதற்கான பெரு முயற்சிகளை அரசு எடுக்கிற வேளையிலே, விவசாயத்தை இலாபகரமான தொழிலாக ஆக்க முடியவில்லை என்கிற தோல்வியை காங்கிரஸ் ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கிறது. அதிலே உங்களைப்போல தப்பித்துக்கொள்ள



நாங்கள் தயாராக இல்லை. அந்தப் பிரச்சினையை புரிந்துகொள்கிறோம். அந்தப் பிரச்சினையைப் புரிந்து கொண்டிருக்கிற காரணத்தினால்தான், நான் சொன்னேனே ஏழையின் வலி எப்படித் தெரியும் என்று, அப்படி இந்த முதலமைச்சர்தான் ரூபாய் 7 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கருத்துப் பொறி இங்கே இருந்துதான் புறப்பட்டது. அந்தக் கருத்துப் பொறி இங்கே இருந்து புறப்பட்ட உடனே அந்தப் பொறியின்பால் ஆசை உள்ளவர்கள், ஆர்வம் உள்ளவர்கள் அந்தப் பொறியினுடைய ஆழத்தையும், அர்த்தத்தையும் புரிந்து கொண்டவர்கள் பதிலுக்கு மத்திய அரசிலிருந்து ரூபாய் 60 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்கிறோம் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

நான் கேட்கிறேன், இதுவரை சுதந்திரம் அடைந்து 60 ஆண்டுகளிலே விவசாயிகளுக்கு பிரச்சினைகளே வந்ததில்லையா? விவசாயிகளுக்குக் கடனே இருந்ததில்லையா? ஆண்ட அரசுகளிடம் நிதி இருந்ததில்லையா? அப்போதும் மத்திய அரசு இருந்தது, மாநில அரசு இருந்தது. ஆனால் இருந்தவர்களுக்கு செய்வதற்கு மனம் இல்லை. ஆனால் இந்த அரசிலே இப்போது ரூபாய் 60 ஆயிரம் கோடியைத் தள்ளுபடி செய்திருக்கிறோம். 60 ஆயிரம் கோடி ரூபாய் விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வது உலகச் சரித்திரத்தில், எந்த நாட்டை எடுத்துக்கொண்டாலும், இதுவரை இல்லாத ஒன்று.

நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய தலைவர் மருத்துவர் அய்யா அவர்கள் சொன்னார்கள் மயங்கியவருக்குத் தண்ணீர் தெளிப்பதைப்போன்று என்றுகூடச் சொன்னார்கள். நான்கூட ஏற்றுக்கொள்கிறேன். மயங்கிக் கிடக்கின்ற விவசாயிகளுக்கு முகத்தில் அடித்த தண்ணீர் என்றுதான் அவர்கள் சொல்லியிருப்பார்கள் என்று நான் எண்ணுகிறேன். ஆனால் இது முடிவு அல்ல. விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வது மட்டுமே விவசாயிகளுடைய பிரச்சினைக்கு முடிவு என்று நாங்கள் சொல்லவில்லை. இது ஒரு தற்காலிகமான ஏற்பாடு. ஒரு நல்ல திட்டத்தைச் செய்கின்றபோது அதற்கு எதிர்மறையான ஒரு திட்டம் வருகிறது. இப்போது கிராமங்களிலே கேள்வி எழுகிறது. கடன்களைத் தள்ளுபடி செய்து விட்டார்களே, அந்தக் கடன்களை நியாயமாகக் கட்டிய எங்களுக்கு அரசு என்ன செய்யப் போகிறது என்கின்ற கேள்வி வருகிறது. அந்தக் கேள்விக்கு பதில் சொல்லவேண்டிய கடமை இரண்டு அரசுகளுக்கும் உண்டு. மாநில அரசுக்கும் உண்டு, மத்திய அரசுக்கும் உண்டு.

நாம் சொல்லியிருக்கிறோம். கடன் என்பது சுழற்சி; அதைக் கட்டாமல் விடுவது வீழ்ச்சி என்று சொல்லியிருக்கிறோம். எனவே இன்று எல்லாத் தரப்பிலிருந்தும் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்கிற கோரிக்கைகள் வெள்ளம்போல் வந்து கொண்டிருக்கின்றன. பண்ணைசாராக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும், நெசவாளர்கள் கடனைத் தள்ளுபடி செய்யவேண்டும், வீட்டு வசதிக் கடன்களைத் தள்ளுபடி செய்யவேண்டும், கிராமத்திலே இருக்கிற கொல்லர், தச்சர், கருமார், செருப்பு தைக்கின்ற தொழிலாளி போன்ற சாதாரணத் தொழிலாளிகள் வாங்கிய கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்யவேண்டும் என்கிற கோரிக்கைகள் இன்று வந்தவண்ணம் இருக்கின்றன. அவற்றில் நியாயம் இல்லை என்று நாம் சொல்லிவிட முடியாது. ஆனால் கடன் என்கிற ஒன்றைத் தள்ளுபடி செய்துவிட்டு—நம்முடைய மத்திய அரசு அறிவித்த இந்த அறிவிப்பைக்கூட பிரபலமான பத்திரிகையாளர்கள் எழுதுகிறபோது சொன்னார்கள்—The ugly part of the Budget, இந்த பட்ஜெட்டினுடைய அசிங்கமான பாகம் என்று சொன்னார்கள்—ஆனால் அவர்கள் அதனுடைய ஆழத்தைப் புரிந்துகொள்ளவில்லை.

*முற்பகல் 10-45*

இந்த தேசத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு இந்தக் கடன் நிவாரணத்தை இப்போது தரவில்லை என்று சொன்னால் அவர்களை மரணத்திலிருந்து மீட்கமுடியாது என்பதை உணர்ந்து கொண்ட பிறகுதான் மத்திய அரசும், மாநில அரசும் அதைத் தள்ளுபடி செய்திருக்கின்றன. ஆனால், அதேநேரத்தில் கடனை நியாயமாகக் கட்டியவர்களுக்கு அதற்கான ஒரு ஏற்பாட்டினை நாம் செய்ய வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அதற்கான ஒரு ஆலோசனையைக்கூட நான் சொல்லத் தயாராக இருக்கிறேன். ஏன் என்றால் நீங்கள் எங்கேயும் எதிர்பார்க்காமல், யாரிடமும் கேட்காமல், உங்கள் மனதில் உதித்த கருணையின் காரணமாக, இந்தியாவில் முதன் முறையாகக் கடனைத் தள்ளுபடி செய்தீர்கள். இன்று மத்திய அரசு அதைப் பின்பற்றியிருக்கிறது. நீங்கள் தள்ளுபடி செய்த கடனை மத்திய அரசு வழங்கவேண்டும் என்கிற உங்கள் நியாயமான கோரிக்கையை தமிழக சட்டமன்ற காங்கிரஸ் கட்சி ஆதரிக்கிறது. நாங்களும் அதற்காகப் பேசுவோம்.



அந்தப் பணத்தை நீங்கள் வாங்கி, நேர்மையாகக் கடனைக் கட்டியவர்களுக்கு ஒரு ஊக்கத் தொகையாவது தந்து அந்தக் கடனை நியாயமாகக் கட்டியவர்களுக்கு ஓர் அங்கீகாரம் தரவேண்டும். வீட்டில் மனைவிகூட மதிப்பதில்லை. ஒரு வீட்டிலே சண்டை என்னுடைய தொகுதியிலே. என்ன சண்டை என்று கேட்டால், மனைவி கணவனைப் பார்த்துச் சொல்கிறாள். “வாங்கிய கடனைக் கட்டாதே என்றேன், என் பேச்சைக் கேட்காமல் கட்டிவிட்டார். இவருடன் எப்படிக் குடும்பம் நடத்துவது” என்று சொல்லக்கூடிய அளவிற்கு, கடன் கட்டியவர்கள் உள்ளார்கள். நம் ஊரில் “நிர்வாண தேசத்திலே கோவணம் கட்டியவன் பைத்தியக்காரன்” என்று சொல்வார்கள். அதைப்போல கடன் கட்டியவர்கள், நியாயமாக தவணை தவறாமல் கட்டியவர்கள் எல்லாம் இன்றைக்கு அவமானத்திலே குன்றிப் போகக்கூடிய அளவிற்கு கிராமங்களிலே ஒரு சூழ்நிலை இருக்கிறது. கூட்டுறவுச் சங்கங்களிலே போய் 10 இலட்சம் ரூபாய் கடன் தள்ளுபடி என்று ஒருவர் சான்றிதழ் வாங்கி வருகின்றபோது, தவணை தவறாமல் கட்டியவர் அப்படியே வருத்தப்பட்டு, சோர்ந்துபோய் உட்கார்ந்துவிடுகிறார். அப்படிப்பட்ட உணர்வுகள் நம்முடைய கிராமப் பொருளாதாரத்திற்கு நல்லதல்ல. எனவே, நியாயமாகக் கடன் கட்டியவர்களை ஊக்குவிக்கின்ற வகையிலே (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய ஆந்திர அரசு ஒரு கொள்கை முடிவு எடுத்து இருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அந்தத் தகவலை நான் கொடுக்கிறேன். அவர்கள் ஆந்திர அரசுடன் தொடர்பு கொள்ளவேண்டும்.

“Seeking to stave off the criticism that the Centre’s loan waiver scheme will mainly benefit defaulting farmers, the Congress Government in Andhra Pradesh has decided in principle to extend it to those who have promptly repaid debts.”

ஆந்திர அரசு அப்படி ஒரு முடிவு எடுத்து இருக்கிறது. அந்த முடிவிற்குப் பின்னாலே இருக்கின்ற—அவர்கள் இன்னும் அதை செயல்படுத்தியதாக நான் சொல்லவில்லை—அப்படி ஒரு முடிவு எடுத்து ஆந்திர அரசு செயல்படுத்தும் என்று சொன்னால், அந்த முடிவிலே இருக்கின்ற நல்ல பொருளை, நல்ல பகுதிகளை நம்முடைய அரசும் செயல்படுத்தலாம். அதுபோலவே, விவசாயம் சார்ந்திருக்கின்ற தொழிலாளர்களுடைய கடனை ஆந்திர அரசு ஏறக்குறைய ரூபாய் 1,690 கோடியைத் தள்ளுபடி செய்திருக்கிறது.

"Taking a cue from the UPA Government at the Centre, the Congress Government in Andhra Pradesh on Monday proposed to write off outstanding loans amounting to 1,690 crores taken by nearly 43.85 lakh people belonging to weaker sections including SCs, STs, BCs, Minorities, Women and physically challenged."

இது ஒரு நல்ல முயற்சியாகத் தெரிகிறது. ஆகவே, இந்த முயற்சியையும் நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கும் சமர்ப்பிக்கின்றேன். இதைப்போன்ற சமூகத்தில் இருக்கின்ற அடித்தட்டு மக்கள், வாழ வழியற்றவர்கள், இந்தக் கடன்களைத் திருப்பிச் செலுத்தமுடியாமல் மிகச் சாதாரண தொகைகளை பெற்றுக் கொண்டவர்களுக்கும், அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கு, தான் ஏற்கெனவே தள்ளுபடி செய்த தொகைக்கு பணம் திரும்பக் கிடைத்தால், அரசு அவர்களுக்கு அதைப் பயன்படுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விலைவாசி உயர்வைப் பற்றி இங்கே பல பேர் பேசினார்கள். நம்முடைய அருமை நண்பரும், முன்னாள் அமைச்சரும் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய சட்டமன்றக் கொறடாவுமாக இருக்கின்ற மாண்புமிகு செங்கோட்டையன் அவர்கள் ஒரு பட்டியலையே இங்கே வாசித்தார்கள். விலைவாசி உயர்வு இல்லை என்பது எங்களுடைய வாதம் அல்ல. விலைவாசி உயர்வில் இருந்து மத்திய அரசும், மாநில அரசும் தப்பிக்க நினைக்கிறது என்பதும் எங்களுடைய நிலை அல்ல. விலைவாசி உயர்வை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். இந்த விலைவாசி உயர்வுக்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து போராடுவதிலே மத்திய, மாநில அரசுகள் கரம் கோர்த்து இருக்கின்றன. இந்த விலைவாசி உயர்வினுடைய மிக தீர்க்கமான பார்வையை உணர்ந்துகொண்ட நம்முடைய மத்திய அரசு, நேற்று முன்தினம் நம்முடைய மாண்புமிகு பிரதமர் அவர்கள் உடனடியாக Cabinet Committee on Prices—மத்திய அமைச்சரவையினுடைய கேபினெட் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி இந்த விலைவாசியைக் குறைப்பதற்காக என்னென்ன முயற்சிகள் எடுக்க முடியுமோ அவற்றை எடுத்திருக்கிறார். அதனுடைய விளைவு இன்று காலையிலே தினமலர் பத்திரிகையிலே வந்த செய்தியை நான் பார்த்தேன்.

மீண்டும் குறைக்கப்பட்டுள்ள சுங்க வரியால் எண்ணெய் நிறுவனத் தயாரிப்புகளின் விலைகள் கணிசமாகக் குறைந்துள்ளன. விலை



போட்டிருக்கிறது. பழைய விலை ஆயில் பெட்டி 10 லிட்டர் 865 ரூபாய். இன்றைய விலை ரூ.760. 10 லிட்டர் Gold Choice/Sree Gold Soya பெட்டி நேற்றைய விலை ரூ.760—இன்றைய விலை ரூ.620. இதை ஏன் சொல்கிறேன் என்று சொன்னால் இன்று மத்திய அரசு எடுத்து இருக்கின்ற அந்தத் தடுப்பு முயற்சிகளின் காரணமாக பயங்கரமான விலைக் குறைப்பை நோக்கி இந்தப் பொருள்கள் நகர்கின்றன. ஆனால், அதேநேரத்திலே ஓர் உண்மையை இந்த அவைக்கும், நாட்டுக்கும் நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். விலைதான் உயர்ந்து இருக்கிறதேயொழிய எங்கேயும் பற்றாக்குறை இல்லை. 300 ரூபாய் கொடுத்தால் இன்று எத்தனை மூட்டை சிமெண்ட் வேண்டுமானாலும் வாங்கலாம். விலை கொடுத்தால் பொருள் வாங்க முடிகிறது. ஆனால், விலை மாத்திரம் கூடுகிறது என்று சொன்னால் இதில் எங்கேயோ ஒரு தவறு இருக்கிறது. சிமெண்ட் இல்லை. சிமெண்டே சந்தையிலே இல்லை என்பதல்ல. இரண்டாவது உலக மகா யுத்தத்தின்போதும் சில நாட்களிலே சுதந்தரம் அடைந்த சில காலங்களுக்கு முன்பும் சந்தையிலே அரிசியே இல்லை.

*முற்பகல் 10-50*

சிமென்டே இல்லை, துணியே இல்லை என்று ரேஷன் கடைகளிலே வாங்கிய காலம் உண்டு என்று சொன்னால், அன்று பற்றாக்குறை இருந்தது. ஆனால், இன்று பற்றாக்குறை இல்லை. தங்கம் வேண்டுமா? எவ்வளவு தங்கம் வேண்டுமானாலும் வாங்கலாம். என்ன பொருள், எந்தப் பொருளை பெயர் வைத்தாலும். மளிகைச் சாமான்கள்—இன்று பருப்பு வகைகளை மட்டும் எடுத்துக் கொண்டீர்கள் என்று சொன்னால் பளபளப்பாக அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிற அந்த சூப்பர் மார்க்கெட்டுகளிலே எத்தனை வகையான பருப்புகள்? ஆனால் அந்தப் பொருட்கள் ஏழை வாங்குகிற விலைக்குள்ளே இல்லையென்பதுதான் நாம் எடுக்கின்ற கவனம், நாம் படுகின்ற கவலை. அதற்கு மிகப்பெரிய காரணம் பதுக்கல் பேர்வழிகள்; மிகப்பெரிய காரணம் கடத்தல் பேர்வழிகள். இன்று நம்முடைய மத்திய அரசு மிக பகிரங்கமாக அறிக்கை கொடுத்திருக்கிறது. கடத்தல்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் மிக கவனத்தோடு கண்காணித்து பதுக்கலையும், கடத்தலையும் முறியடித்து உடைக்கவில்லையென்று சொன்னால் இந்த விலைவாசியைக் குறைக்க முடியாது. இது மத்திய அரசினுடைய பிரச்சினை என்றோ மாநில அரசினுடைய பிரச்சினை என்றோ, சொல்லி இந்த நாட்டிலே எந்த அரசியல் கட்சியும் தப்பித்துக்கொள்ள முடியாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் விலைவாசி குறித்து ஒரு விளக்கத்தை அளித்துக் கொண்டிருக்கிறார்கள். நேற்றைய முன்தினம் மத்திய அரசின் அமைச்சரவை கூடி விலை உயர்வுக்குக் காரணம் பதுக்கல்தான் என்று ஒரு காரணத்தைச் சொல்லி மாநில அரசுகள் அதைத் தடுக்கவேண்டுமென்ற நிலையில் மட்டுமே ஒரு கருத்தைச் சொல்லியிருக்கிறது. இப்போதும் அதையே வலியுறுத்தி அவரும் பேசிக்கொண்டிருக்கிறார். பதுக்கல் மட்டுமே விலை உயர்வுக்குக் காரணம் என்று மத்திய அரசு கூறுவது எந்தவகையிலும் பொறுத்தமானது அல்ல. இதற்கு மாநில அரசைப் பொறுப்பாக்க வேண்டுமென்று தட்டிக் கழிப்பதும் பொறுத்தமானது அல்ல. குறிப்பாக இந்த online வார்த்தகத்தைப் பற்றி இங்கே பேசப்பட்டிருக்கிறது. இன்னொறு வகையிலே நம்முடைய மத்திய நிதி அமைச்சர் அவர்கள் சொல்லுகிற ஒரே காரணம் பங்குச் சந்தையினுடைய விலை ஏற்றம், வீழ்ச்சி இதையே காரணமாக்கி இந்தச் சூதாட்டத்தின் மூலமாகவே விலை உயர்கிறது, பணவீக்கம் உயர்ந்து கொண்டிருக்கிறது என்பது. அதன் காரணத்தினாலே விலை உயர்கிறது என்ற காரணத்தைச் சொல்கிறார்களே தவிர, இவர் சொல்கிறபோது 'எல்லாப் பொருட்களும் கிடைக்கிறது; ஆனால் விலை உயர்த்தி விற்போம்' என்று சொன்னால் மக்கள் வாங்குகிற, எட்டுகிற தூரத்தில் இருக்கிறதா? அது எட்டாக் கனியாக இருக்கிறது. அதைத்தான் சொல்கிறோம். அதைக் குறைப்பதற்கு மத்திய அரசினுடைய திட்டம் என்பது, கொள்கை என்பது சரியாக இல்லை என்பது என்னுடைய கருத்து.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் சிவபுண்ணியம் சொல்வதைத்தான் நான் சொல்கிறேன். நான் சொல்வதைத்தான் அவரும் சொல்கிறார். அதாவது அவர் ஒரு policy வைத்திருக்கிறார். மத்திய அரசிலே எது நல்லது நடந்தாலும் அவர்கள் காரணம். எது தவறு நடந்தாலும் காங்கிரஸ் காரணம் (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற ஒரு அற்புதமான formula வைத்திருக்கிற காரணத்தினால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்வதை நான் நூற்றுக்கு நூறு அப்படியே ஆமோதிக்கிறேன். நல்லது நடக்கிறபோதுதான் ஆதரிப்போம். தீயவை மக்களுக்கு எதிராக நடக்கிறபோது நாங்கள் கண்டிப்பாக எதிர்ப்போம்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதை எதற்காகச் சொல்ல வருகிறேன் என்று சொன்னால் இந்த அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் குறைப்பது என்பது—இன்று காலையிலே 'இந்து' பத்திரிகையிலே ஒரு பெரிய செய்தி. அந்தச் செய்தியினுடைய முழு விவரத்தை நான் இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். "Asia warned on food prices. Higher commodity prices are not about to ease up." இது நம்முடைய நாட்டிலே கொடுக்கப்பட்ட எச்சரிக்கை அல்ல. இன்று உலக நாடுகளுடைய சந்தை சிங்கப்பூரிலே கூடி, சிங்கப்பூரில் கூடிய உலக நாடுகள் இந்த ஆசியாவிலே இருக்கின்ற அத்தனை நாடுகளுக்கும் கொடுத்திருக்கிற எச்சரிக்கை என்னவென்று சொன்னால், "Asia warned on food prices". உணவுப் பொருட்கள் விலை கூடுவது என்பது இன்று ஆசியா முழுவதும் இருக்கிறது. இதற்குக் காரணம் நண்பர் சிவபுண்ணியம் அவர்கள் சொன்னதுபோல, online trading ஆக இருக்கலாம் அல்லது Speculative trading ஆக இருக்கலாம். நான் அதை இல்லையென்று சொல்லவில்லை. அப்படி இருக்கிற நேரத்திலே அதனுடைய மூலத்தை, சூட்சுமத்தை அறிந்து அதை அழிக்கவேண்டிய பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. மாநில அரசுக்கு உண்டு. இந்த இரண்டு அரசுகளும் அதை நன்றாக உணர்ந்து இருக்கின்றன என்பதுதான் அந்தத் தகவல். இல்லையென்று சொன்னால் ரேஷன் கடைகளிலே கொண்டு போய் அந்தப் பொருட்களை நம்முடைய மாநில அரசு விற்கவேண்டிய அவசியம் என்ன? அந்த விலைவாசியினுடைய அழுத்தத்தை உணர்ந்து இருக்கிறோம். அமைச்சரவையைக் கூட்டவேண்டிய அவசியம் என்ன? அதை நாங்கள் உணர்ந்திருக்கிறோம். எனவேதான் இந்த விலைவாசி உயர்வு என்பதை கடந்த காலத்திலே ஒரு மிகப் பெரிய பிரச்சினையாகப் பார்க்கின்ற நேரத்தில் (குறுக்கீடு) என்ன சார் குறுக்கீடு?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நன்மாறன்.

*திரு. என். நன்மாறன்: விலைவாசியைக் குறைப்பதற்காக அமைச்சரவையைக் கூட்டியிருப்பது என்பது காலங்கடந்த ஞானோதயமாக நாங்கள் கருதுகிறோம். (குறுக்கீடுகள்)

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான்கூடச் சொல்லலாம், நந்திகிராமத்திலே இவ்வளவு பேர் சுடப்பட்ட பிறகுதான், நீங்கள் அதை நிறுத்த வேண்டுமா? அது காலங்கடந்த செயல் என்று நான்கூடச் சொல்லலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

*திரு. சி. கோவிந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நந்திகிராம பிரச்சினையையொட்டி ஒரு தவறான செய்தியைச் சொல்கிறார். அங்கே எந்த நிலமும் கையகப்படுத்தப்படாமலேயே, வேண்டுமென்றே அரசியல் நோக்கத்தோடு கிளப்பிவிடப்பட்ட ஒரு பொய்ப் பிரச்சாரம்.

முற்பகல் 10-55

அந்த மாநில முதலமைச்சர் அந்தக் கிராமத்திற்கு அருகிலே சென்று, ஒரு பிடி மண்கூட உங்களுடைய விருப்பம் இல்லாமல் இந்த அரசு எடுக்காது என்று உறுதியளித்த பிறகும், வேண்டுமென்றே திட்டமிட்டு ஒரு அவப் பெயரை உருவாக்குவதற்காக நடத்தப்பட்ட ஒரு போராட்டத்தை முன்னுதாரணமாக அவர் சுட்டிக்காட்டுவது சரியல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சில ஆலோசனைகளை மட்டும் நான் வழங்கலாம் என்று எண்ணுகிறேன். இன்று மத்திய அரசு, நாடு முழுவதும் இந்த தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறது. 16,000 கோடி ரூபாயை இதற்காக முதலீடு செய்கிறது. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலேகூட இந்தத் தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்திற்காக வரக்கூடிய ஆண்டிலே 2,000 கோடி ரூபாய் செலவிடப்படும் என்று நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இந்தத் தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டம் என்பது, சுதந்திர இந்தியாவிலே முதல்முறையாக மட்டுமல்ல, உலகத்திலேயே வேலைவாய்ப்பினை உறுதிசெய்து கொடுப்பதற்கும், அப்படி வேலைவாய்ப்பை உறுதிசெய்ய



அரசால் முடியவில்லை என்று சொன்னால், ஒவ்வொரு நாளுக்கும் அரசே ஊதியம் கொடுக்கும் என்கிற அந்த மிகப் பெரிய அறிவிப்பு, எங்கள் அன்னை சோனியா காந்தியினுடைய கனவிலும், எண்ணத்திலும், உதிரத்திலும் உதித்தது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்காக அவர்கள் தனிப்பட்ட முயற்சி எடுத்துக்கொண்டு, மத்திய அரசினுடைய நிதித் துறையினுடைய ஒவ்வொரு நரம்பையும் நெரிவி, அவர்கள் அந்தத் திட்டத்தை நிறைவேற்றிக் கொடுத்தார்கள்.

சமூகத்தினுடைய அடித்தளத்திலே மிகப் பெரிய புரட்சி ஏற்படுத்தக்கூடிய அந்த வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் செயல்படுகின்ற காட்சியை நான் நேரிலேயே பார்த்தேன். அதிலேயும் நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நெஞ்சம் நிறைந்த பாராட்டும், வணக்கமும் உரித்தாகும். ஏனென்று சொன்னால், அந்தத் திட்டத்தினுடைய செயல்பாட்டைக் கண்காணித்து ஆராய்வதற்காக a Social Audit Committee—ஒரு சமூக ஆய்வுக் குழுவை நியமனம் செய்து, மத்திய அரசு அந்த 3 பேர் குழுவை அனுப்பி, அவர்கள் இங்கே வந்து பார்வையிட்டு கொடுத்த அறிக்கை, இந்தியாவிலேயே தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டம் மிகச் சிறப்பாகச் செயல்படுகின்ற மாநிலங்களிலே தமிழகம் முதன்மை (மேசையைத் தட்டும் ஒலி) வகிக்கிறது என்கிற அந்த எண்ணத்தைக் கொடுத்தது. அந்தத் திட்டம் இன்று ரூபாய் 2,000 கோடியைக் கொண்டு வந்ததோடு மட்டுமல்லாமல், கிராமப்புறங்களிலே இருக்கின்ற சாதாரண ஏழை மக்களுக்கு, அதிலும் குறிப்பாக பிற்படுத்தப்பட்ட மக்கள், தலித் மக்கள், சமூகத்திலே இருக்கின்ற பெண்கள் இவர்களை 50 விழுக்காடு, 60 விழுக்காடு அளவுக்கு ஈடுபடுத்தியுள்ளது. அதிலே சில நடைமுறைச் சிக்கல்கள் இருக்கின்றன. அந்த நடைமுறைச் சிக்கல்களை நாங்கள் அதற்காகக் கூட்டப்பட்ட கூட்டத்திலேகூட நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறோம்.

கிராமங்களிலே சில நேரங்களிலே, அறுவடைக் காலங்களிலும், நடவுக் காலங்களிலும் இந்தத் திட்டம் நிறுத்தப்படவேண்டும். அந்த இரண்டு காலங்களிலும் கிராமத்திலே வேலைக்கு ஆள் கிடைப்பதே கஷ்டமாக இருக்கிறது. அந்த நேரத்திலே இந்த ஊரக வேலைவாய்ப்புத் திட்டமும் செயல்பட்டால், கிராமத்திலே விவசாயப் பணிகளுக்கு ஆளே கிடைக்காது என்கிற சூழ்நிலை நிலவி வருகின்ற காரணத்தினால், அந்த இரண்டு

பருவங்களிலே அந்த வேலைவாய்ப்பு உறுதியளிப்புத் திட்டப் பணிகளைச் செயல்படுத்துவதைச் சற்று நிறுத்திவைக்கவேண்டும்.

அதற்கடுத்து, சாலைகள் போடுகின்ற பணியில், மண் அள்ளிப் போட்டு சாலைகளைப் போட்டு விடுகிறார்கள். ஆனால், இப்போது மழை பெய்த உடனே அள்ளிப் போட்ட மணல் எல்லாம் சகதி ஆகிவிட்டது. ஆகவே, நெடுஞ்சாலைத் துறையும், ஊரக வளர்ச்சித் துறையும் ஒன்று சேர்ந்து எங்கெல்லாம் இந்தச் சாலைகள் விரிக்கப்படுகின்றனவோ அங்கெல்லாம் அதை ஒன்றிணைக்கின்ற பணியைச் செய்யவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தயவுசெய்து மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை மீண்டும் கூட்ட வேண்டும். ஏற்கெனவே கடந்த ஆளுநர் உரையிலே நாம் விவாதிக்கின்றபோது ஒரு ஊராட்சி மன்றத்திற்கு ஒரு கோடி ரூபாய்க்கு பணிகள் வந்துள்ளன என்று நான் சொன்னேன். ஒரு சட்டமன்றத் தொகுதிக்கு ஏறக்குறைய 100 கோடி ரூபாய்க்குப் பணிகள் வந்திருக்கின்றன. இரண்டு ஆண்டுகளிலே. ஆனால், இந்தப் பணிகளினுடைய மேலாண்மைப் பணிகளைப் பார்க்கின்ற, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அதிகாரிகளோடு தொடர்புகொண்டு அந்தச் செயலாக்கத்தைப் பார்ப்பதற்கான வாய்ப்பு இல்லை.

நான் கடந்த காலங்களிலே சட்டமன்ற உறுப்பினராக இருக்கின்றபோது நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டம் என்ற ஒன்றை வைத்திருந்தார்கள். அதிலே மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலே அந்த மாவட்டத்திலே இருக்கின்ற அத்துணை அதிகாரிகளும் ஒன்று சேர்ந்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அங்கே நடக்கின்ற அந்தத் திட்டப் பணிகளினுடைய செயலாக்கத்தைப் பற்றிக் கணக்குக் கொடுக்கக் கடமைப்பட்டிருந்தார்கள். ஆனால், இப்போது அந்தக் கூட்டம் நடப்பதில்லை. ஆனால், மாவட்ட வளர்ச்சி முகமை என்ற பெயரிலே நடக்கின்ற கூட்டத்திற்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சம்பந்தம் இல்லை என்கிற காரணத்தினால் மீண்டும் இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தை, சட்டமன்ற உறுப்பினர்களை வைத்து, நாடாளுமன்ற உறுப்பினர்களோடு சேர்த்து (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கூட்டத்தைக் கூட்டவேண்டும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூட்டவேண்டும். மாவட்டத் தலைமை அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் தொகுதிகளில் நடக்கின்ற நலப் பணிகளைப் பற்றியும், அந்தப் பணிகளைக் குறித்து பொறுப்பும், கணக்கும் கொடுக்கவேண்டுமென்கிற சூழ்நிலையை அரசு உருவாக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)



அதைப்போலவே, சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் 32-க்கு அரசு அனுமதி அளித்துள்ளது. 21 மண்டலங்களுக்கு மத்திய அரசு கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டு அறிவித்துள்ளது என்று சொல்லியிருக்கின்றீர்கள். சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களைச் சுற்றியுள்ள பகுதிகளிலே எத்தனை Special Economic Zones வரப்போகின்றன? ஏனென்று சொன்னால், நம்முடைய முதலமைச்சர் அவர்களே அதைப்பற்றிக் குறைபட்டுக் கொண்டார்கள். எந்தத் தொழில் வந்தாலும் இந்த 3 மாவட்டங்களில்தான் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது மோட்டார் வாகனத் தொழிற்சாலையாக இருந்தாலும் சரி, computer software தொழிற்சாலையாக இருந்தாலும் சரி—அதை மாற்றுவதற்காக இப்போது அரசு முயற்சி எடுக்கிறது.

கங்கைகொண்டானிலே நாங்குனேரியிலே, இன்று ஈரோட்டிலே என்று பல இடங்களிலே தொழிற்பேட்டைகள் தொழில் பொருளாதார வளர்ச்சி மண்டலங்களை உருவாக்க அரசு நடவடிக்கை எடுக்கிறது. ஆனாலும்கூட, நாளுக்கு நாள் சென்னையும் அதன் சுற்றுப்புறங்களும் மனித வாழ்க்கைக்கே தகுதியில்லாத நரகமாகிக்கொண்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-00*

நம்முடைய அருமைக்குரிய எங்களுடைய சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் கூட இனிமேல் ஸ்ரீபெரும்புதூரில் தொழிற்சாலைகள் வேண்டாம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு, என்னுடைய சகோதரி, அருமைக்குரிய காங்கிரஸ் சட்டமன்றக் கட்சி துணைத் தலைவர் திருமதி யசோதா அம்மையார் அவர்கள் சொல்வதைப்போல, மக்கள் வாழ்க்கைக்கு, விளை நிலங்களுக்கு, விவசாய நிலங்களுக்கு, குடிநீருக்கு, போக்குவரத்திற்கு, மாசு இல்லாத காற்றுக்கு சென்னை தலைநகரத்திலே எந்த வாய்ப்புமே இல்லாமல் ஒரு இடத்திலிருந்து ஒரு இடம் போவதற்கு கால விரயம் ஆகிறது. உதாரணமாக, கதீட்ரல் ரோட்டிலிருந்து லஸ்ஸுக்கு போவதற்குக்கூட அரை மணி நேரம் தேவைப்படுகிறது. நுங்கம்பாக்கம் சாலையிலே ஒரு நிமிடத்திற்கு ஒரு அடிகூட நகர முடியவில்லை. அதைப்போன்ற ஒரு நெருக்கடியை சென்னை இனிமேல் தாங்கமுடியாது. ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தயவுசெய்து பரிசீலித்து இந்த மூன்று மாவட்டங்களில் இனிமேல் ஆள் நெருக்கடிகளை

உண்டாக்குகிற எந்த இயக்கத்தையும், அது பொருளாதார நடவடிக்கைகளாக இருந்தாலும் சரி, அரசு நடவடிக்கைகளாக இருந்தாலும் சரி, தொழில் நடவடிக்கைகளாக இருந்தாலும் சரி, அவை இனிமேல் இந்தப் பகுதியிலே வேண்டாம். அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே தொழிலை ஊக்குவிப்பதற்காக 350 கோடி, 250 கோடி என்று இரண்டு வகையாகப் பிரித்திருக்கிறீர்கள். இனிமேல், சென்னையைச் சுற்றி துவங்கப்படுகிற எந்தத் தொழிலுக்கும் அரசின் சலுகைகள் எதுவுமே கிடையாது என்று சொன்னாலொழிய, மற்ற மாவட்டங்களுக்கு அந்தத் தொழில் முனைவோர்கள் வருவதற்கான வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்) நீங்கள்தான் வேண்டாம் என்கிறீர்கள். ஒரு இடமும் கொடுக்க மாட்டேன் என்கிறீர்களே? நாங்கள் இடம் கொடுக்கத் தயாராய் இருக்கிறோம்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்களைப் பற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய பேராசிரியர் அவர்களுக்கும் தெரியாதது அல்ல; இந்த நாட்டினுடைய ஏழையெளிய மக்கள், சமூக நீதியிலே புறக்கணிக்கப்பட்ட மக்கள் ஆகியோருடைய பாதுகாவலராக ஒழுக்கமான அரசியல், நேர்மையான நிர்வாகம் இவற்றிற்கு எடுத்துக்காட்டாக, தான் வாழ்கின்றபோதே வரலாறாக வாழ்ந்த அந்த மாபெரும் தலைவருடைய திரைப்படம் வந்திருக்கிறது. தந்தை பெரியார் அவர்களுடைய திரைப்படத்திற்கு தாங்கள் வரிச் சலுகை அளித்துள்ளீர்கள். அதைப்போல பெருந்தலைவர் காமராஜர் பற்றிய திரைப்படத்திற்கும் தாங்கள் வரிச் சலுகை வழங்கவேண்டும் என்று நான் உங்களை மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஊனமுற்றோருடைய நல்வாழ்வுக்காக பல்வேறு திட்டங்களை வகுத்துள்ளீர்கள். ஒரு கூட்டத்திலே சொன்னீர்கள்; நெஞ்சம் நெகிழ்ந்து சொன்னீர்கள். நானும் அங்கே இருந்தேன். "I am also Physically Handicapped" என்று சொன்னீர்கள். அதைப்போன்ற உணர்வு எங்கேயும் காணாமல், மனிதநேயத்தைத் தேடுகின்றபோது அந்த ஈரத்தை பார்த்துதான் நாங்கள் நெகிழ்ந்து போகிறோம். இன்று அந்த ஊனமுற்றோருக்கான அந்த Percentage of Physical Handicap என்பதை 80 விழுக்காடு என்று வைத்து இருக்கிறோம். ஆனால் பக்கத்தில் இருக்கின்ற ஆந்திர அரசு 40 விழுக்காடு—40 Percentage of Physical Handicap இருந்தாலே அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்யமுடியும் என்கிற அரசாணை பிறப்பித்திருக்கிறது. அந்த அரசாணையை நான் வைத்திருக்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்கு அந்த ஆணையை நான் சமர்ப்பிக்கிறேன். அந்த ஆணையைப் பார்த்து தமிழகத்தில் இருக்கின்ற உடல் ஊனமுற்றவர்களுக்கும் 40 விழுக்காடு உடல் ஊனம் இருந்தாலே அவர்களுக்கு இந்தச் சலுகையை வழங்கமுடியும் என்ற அறிவிப்பையும் தாங்கள் செய்யவேண்டும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு நலத் திட்டப் பணிகள், பல்வேறு வேலைவாய்ப்புகள்பற்றிக் கூறியுள்ளீர்கள். நான் கடந்த முறை பேசுகிறபோது சொன்னேன். பல்வேறு சிறிய அமைப்புகளை நாம் துவங்குகிறோம். ஆனால், பாதியிலேயே அந்த அமைப்புகளை விட்டுவிடுகிறோம். உழவர் சந்தையை நீங்கள் தொடங்கினீர்கள்; சமத்துவபுரத்தை நீங்கள் தொடங்கினீர்கள். நீங்கள் முதலமைச்சராக இருக்கின்றபோது, உங்கள் கற்பனையிலே, எண்ண ஓட்டத்திலே பல்வேறு நிறுவனங்களை நீங்கள் தொடங்கினீர்கள். அதுபோல விவசாயப் பொறியியல் கூட்டுறவுச் சங்கங்களும் உங்களால் உருவாக்கப்பட்டன. ஆனால், விவசாயப் பொறியியல் கூட்டுறவுச் சங்கங்களுடைய upper body கலைக்கப்பட்டுவிட்டது. அதனால், அந்தப் பொறியியல் கூட்டுறவு நிறுவனங்களிலே வேலை பார்த்தவர்கள் இன்று சம்பளம் இல்லாமல் பல ஆண்டுகாலமாக 45 வயது, 47 வயதைக் கடந்தவர்கள் இருக்கிறார்கள். நான்கூட நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரிடம் பேசினேன். அவர்களுக்கு வேலை கொடுக்கமுடியாது என்று சொன்னார். வேலைகூட நான் கேட்கவில்லை. அவர்களுக்குள்ள சம்பள பாக்கியையும் அவர்கள் கட்டிய P.F.-ஐயும் எங்கே போய் வாங்குவார்கள்? Provident Fund பணத்தைக் கட்டியிருக்கிறார்கள்; சம்பளப் பாக்கியிருக்கிறது. இது கொடுக்கப்பட்டால் அவர்கள் எங்கேயாவதுபோய் பிழைத்துக்கொள்வார்கள். அதற்கான ஒரு சூழ்நிலையை நீங்கள் உருவாக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளிலே மிகப் பெரிய நில மோசடி எதை வைத்து நடக்கிறது என்று சொன்னால், Power of Attorney என்கிற ஒரு டாக்குமென்டை வைத்துதான் நடக்கிறது. இந்த Power of Attorney என்கிற ஒரு டாக்குமென்டை வைத்துக்கொண்டு அமெரிக்காவிலே குடியிருக்கிற ஒருவருக்கு மோசடியாக இந்தப் பவர் பத்திரத்தைக் கொடுத்து இன்று நிலங்களின் விலைவாசி தாறுமாறாக

உயர்த்திருக்கின்ற காரணத்தினால் கோடிக்கணக்கான ரூபாய் பெருமானம் உள்ள நிலத்தை மாற்றிவிடுகிறார்கள். எனவே, அதைத் தடுக்க ஒரு நேர்மையான வழி இருக்கிறது. என்ன என்று சொன்னால் இந்த Power of Attorney என்கிற ஒரு பத்திரம், அவர்கள் போடுகிற Encumbrance Certificate—வில்லங்கச் சான்றிதழிலே அந்த Power of Attorney-யும் இடம்பெற்றால் அநேக நில உரிமையாளர்களுக்கு தங்கள் நிலத்தைப் பாதுகாப்பதற்கான வழி இருக்கும். ஆகவே, அரசு தன்னுடைய பத்திரப் பதிவுச் சட்டத்திலே அந்த மாற்றத்தைச் செய்து, Power of Attorney also should be reflected in the Encumbrance Certificate —அதாவது, அதிகாரப் பத்திரமும் வில்லங்கச் சான்றிதழிலே இடம் பெறவேண்டும் என்கிற அரசாணையையும் உடனடியாக பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-05*

இப்போது விவசாய நிலங்களின் மதிப்பு என்பது தாறுமாறாகக் கூடியிருக்கிறது. அதிலே பத்திரப் பதிவு என்கிறபொழுது பலர் நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, விவசாய நிலங்களை வீட்டு மனைகளாகப் பட்டா போட்டு விற்றுவிடுகிற காரணத்தினால் விவசாய நிலங்களை விற்கப் போகின்றவர்களும், வாங்கப் போகின்றவர்களும் பெரும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள். ஏனென்று சொன்னால், அந்த வீட்டு மனை போட்டு விற்ற அதே விலையை விவசாய விளை நிலங்களுக்கும் கேட்கிறார்கள். ஒரே ஊரிலே ஒரு புஞ்சை நிலம் வீட்டு மனையாக விற்கப்பட்டது என்று சொன்னால், அதே கிராமத்தில் இன்னொரு கோடியிலே இருக்கின்ற புஞ்சை நிலமும் அந்த வீட்டு மனைகளுடைய விலைக்கே மதிப்பீடு போடப்பட்டு வருகிறது. இதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே கமிட்டி ஒன்று இருப்பதாக நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள்; அந்தக் கமிட்டியும் இருக்கிறது. ஆனால், அந்தக் கமிட்டியினுடைய செயல்பாட்டால் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பீட்டர் அல்போன்ஸ், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** இதோ முடித்துவிடுகிறேன், தலைவரே. குறுக்கீடு எல்லாம் என் கணக்கிலே வைத்துவிட்டீர்கள். எனவே, தமிழக அரசு அறிவித்துள்ள பல்வேறு நலத் திட்டங்களை நாங்கள் வரவேற்கிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையினுடைய இறுதியிலே சொல்லியிருக்கின்ற அந்த வார்த்தைகளைப் பார்த்து நானே முதலிலே நெஞ்சம் கலங்கிப் போனேன். அவர்கள் தன்னுடைய முயற்சியை, தான் எடுத்துக் கொண்டிருக்கின்ற பணியினுடைய ஆழத்தை, அது தனக்கு அளிக்கிற அந்தச் சிரமத்தை சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொல்கிறார்கள், "உரிமையுள்ள குடிதண்ணீரைக்கூட கொடுக்க முடியாதெனக் குறுக்கே நிற்கும் கொடுமை! ஒரே இந்தியா—ஒரே நாடு—ஒரே தேசம்—இமயம் முதல் குமரி வரை இந்நாட்டு மக்கள்—இந்திய மக்கள் என்பதெல்லாம் ஏட்டில் எழுத்தாக மட்டுமே ஒளிவிடுகின்றனவே அல்லாமல்; ஒற்றுமை—ஒருமைப்பாடு—இறையாண்மை இவையனைத்தும் கேள்விக்குறிகளாகி நமது தமிழகத்தின் தேவைகளும் கோரிக்கைகளும் கேலிப் பொருள்களாகிவிடுகின்றன. இந்த நிலையில், முக்கி முனகி, மூச்சிறைக்க—முட்டுக்கட்டைகளைக் கடந்து, திட்டங்களைத் தீட்டி மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக நிலையாக முன்னேறுவதற்குத் துணை நிற்க முன்வராமல்; மத்திய அரசும் பாராமுகமாக இல்லாமல் நமது உரிமைக்குப் பாதுகாப்பாக இருந்திடவேண்டும்" என்கிற கோரிக்கையினை வைத்திருக்கிறார்கள். அதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. நாங்கள் கலைஞரிடம், இந்த தேசத்தினுடைய மிகப் பழுத்த தேசியவாதியைத்தான் நாங்கள் பார்க்கிறோம். இந்திய இறையாண்மையை, இந்திய ஒற்றுமையைக் காப்பாற்றுவதற்கும், நாடு முழுவதும் பெருகி வருகின்ற அந்தப் பிரிவினை சக்திகளினுடைய கொட்டத்தை அடக்கி, இன்று இந்தியாவினுடைய ஆட்சிக் கயிற்றைக் கையிலே வைத்திருக்கக்கூடிய நம்முடைய ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசினுடைய பிதாமகராக, மனசாட்சியாக, அன்னை சோனியா காந்தி அவர்களுடைய உற்ற தோழனாக அவர்கள் இருந்து வழிகாட்டுகிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி வழிகாட்டுகின்றபோது அவர்களுக்கு இருக்கின்ற வேதனைதான் அது. ஆனால், நமக்கு இருக்கின்ற சோகம் எல்லாம், நம்முடைய எதிரிகள் நேர்மையானவர்களாக இல்லை என்பதுதான். நாம் இங்கே சந்தித்துக் கொண்டிருப்பது முரண்பாடுகளை அல்ல; நாம் இங்கே சந்தித்துக் கொண்டிருப்பது சதிகளை. முரண்பாடுகளை சந்திக்கும் சமூகம் அந்த முரண்பாடுகள் களையப்படும்போது நிச்சயமாக வளரும். ஆனால், சதிகளில் சிக்கும் சமூகம், பிரச்சினைகளில் சிக்கி உழலும். நிச்சயமாக இந்தச் சதிகளை நீங்கள் முறியடிப்பீர்கள். சிலந்தி என்பது சிங்கத்தின் மீசையில் கூடு கட்டாது. ஆகவே, எதிர்காலம் என்பது மத்திய அரசும், மாநில அரசும் சேர்ந்து பணியாற்றுகின்றபோது,

ஏழையின் கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்கிற எண்ணம் நெஞ்சம் நிறைய இருக்கின்றபோது, உண்மைக்கு விசுவாசமாக அடித்தட்டு மக்களுக்கும், சமூக நீதிக்கும் பாடுபட வேண்டும் என்கிற எண்ண ஓட்டம்தான் நம்மை இயக்குகின்ற இதயமாக இருக்கிறபோது, நமக்கு நிச்சயம் தோல்வி வராது. ஒரு அற்புதமான கவிஞன் ஆங்கிலத்திலே நான்கே வரிகளைச் சொன்னான். அந்த வரிகளைச் சொல்லி இந்த உரையை நிறைவு செய்ய நான் எண்ணுகிறேன்.

"If I can stop one heart from breaking
I shall not live in vain;
If I can ease one life, the aching or cool one pain
Or help one fainting Robin into its nest again
I shall not live in vain."

"ஒரு மனித இதயம் உடைந்து போவதை என்னால் ஒரு முறை தடுக்க முடிந்தால், வலிக்கும் ஒரு இதயத்தினை என்னால் ஒரு முறை தடவிக் கொடுக்க முடிந்தால், விழிகள் நிரம்பி வழியும் கண்ணீரை என்னால் ஒரு முறை துடைக்க முடிந்தால், கூண்டிலிருந்து தவறி விழுந்த ஒரு குருவிக் குஞ்சை மீண்டும் ஒரு முறை அதன் கூட்டில் எடுத்து என்னால் விட முடிந்தால் என் வாழ்க்கை வீணான வாழ்க்கை அல்ல" என்றான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறைவன் செய்த தவறினால் தங்கள் மனித முகவரிகளை இழந்துபோன அரவாணிகள்; இந்த நாட்டின் பறவைகளுக்குக்கூட கூடுகள் உண்டு. விலங்குகளுக்குக்கூட குகைகள் உண்டு. ஆனால், மரித்துப் போனால் தலை சாய்க்க இடம் இல்லாத நரிக் குறவர்கள்; தசைப் பிடிப்பு நோயினால் கை, கால்கள் முடங்கி தன் வாழ்க்கை முழுமையும் இழந்து போனவர்கள்; மனித மலத்தைத் தலையில் அள்ளியும், மலக் குழிக்குள் தங்களைப் புதைத்துக் கொண்டும் மனிதனாகப் பிறந்த பின்பும்கூட, மாண்புடன் வாழ முடியாத துப்புரவுத் தொழிலாளர்கள்; உள்வினை, ஊழ்வினையின் காரணமாக எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டு தங்கள் பெற்றோர்களை இழந்த ஏழைக் குழந்தைகள்; இவர்களின் இதயங்களின் உடைப்பை நிறுத்தியிருக்கின்றீர்கள். அவர்கள் கண்களில் வழியும் நீரைத் துடைத்திருக்கிறீர்கள். தரையில் விழுந்துவிட்ட அவர்களை தளத்தில் நிறுத்தியிருக்கிறீர்கள். எனவே உங்கள் ஆட்சி வீண் அல்ல. வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

முற்பகல் 11-10

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திடமான மதிநுட்பத்தால் திட்டங்களை உருவாக்கி, சீரிய சிந்தனைகளால் நிருவாகத்தைச் சீரமைத்து, அயராத உழைப்பால், அறிவாற்றலால் தமிழகத்தை வளமாக்கிய தாய், தமிழகம் கொண்டாடும் தங்கத் தாரகை, இந்தியாவே வியந்து பார்க்கும் இரும்பு மங்கை, இலக்கியம் மட்டுமல்ல, ஏழைகளின் இதயங்களையும் படித்த இதயக்கனி, (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாரிசு, எங்கள் இதயதெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். ஆளுநர் உரைமீது (குறுக்கீடு) Sorry, நிதிநிலை அறிக்கை மீது பேச வாய்ப்பு தந்திட்ட மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்த நாட்டின் வருங்காலத் தூண்கள், மாணவர்கள், மாணவிகள். அவர்களின் மனம் குளிர வைத்த ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 11 இலட்சத்து 27 ஆயிரத்து 359 மாணவ, மாணவியருக்கு 194 கோடியே 49 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில் இலவச சைக்கிள் தந்த ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 4 கோடியே 7 ஆயிரத்து 25 மாணவ, மாணவியருக்கு 185 கோடியே 40 இலட்சத்து 10 ஆயிரம் ரூபாய் செலவில் பாடப் புத்தகங்கள் இலவசமாக வழங்கிய ஆட்சி மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 24 இலட்சத்து 60 ஆயிரம் மாணவ, மாணவியருக்கு 245 கோடி ரூபாய் செலவில் இலவச பஸ் பாஸ் வழங்கிய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேர்வைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், அவர்களுடைய கட்சித் தலைவருடைய ஆட்சிக் காலத்தில் எவையெவை வழங்கப்பட்டன என்று சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

அந்த உரிமை அவருக்கு உண்டு. ஆனால், அவர் சொல்கிற எதுவும் இப்பொழுது நிறுத்தப்படவில்லை என்பதை, அவர் ஒருவேளை கவலைப்படப்போகிறார் என்பதற்காக, முன்கூட்டியே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைகள் கேட்டு, சலுகைகள் கேட்டு இன்றைய ஆட்சியில் ஆதி திராவிட மாணவர்கள் நடத்திய சாலை மறியலால் 3 மணி நேரம் அண்ணா சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாக செய்திகள் கூறுகின்றன. ஆனால் 185 கோடி ரூபாய் செலவில் ஆதி திராவிட மாணவ, மாணவியருக்காக 493 விடுதிகள் கட்டிய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

ரூபாய் 235 கோடி செலவில் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவ, மாணவியருக்காக 261 புதிய விடுதிகள் கட்டப்பட்ட ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மாணவ, மாணவியருக்காக 108 புதிய விடுதிகளும் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காக 108 புதிய விடுதிகளும் திறக்க அனுமதியளித்தது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

ஏழைக் குழந்தைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு 827 கோடி ரூபாய் செலவில் புரட்சித் தலைவரின் சத்துணவுத் திட்டத்தைச் செயல்படுத்தியது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 3 இலட்சத்து 15 ஆயிரத்து 724 மகளிர் சுய உதவிக் குழுக்கள்; அவற்றிலிருந்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 50 இலட்சத்து 37 ஆயிரத்து 832; இவர்களின் மொத்த சேமிப்பு 1,037 கோடியே 69 இலட்சத்து 41 ஆயிரம்; இவர்கள் பெற்றுள்ள கடன் வசதி 1,763 கோடியே 64 இலட்சத்து 41 ஆயிரம். "தன் கையே தனக்குதவி" என்ற பழமொழியை மெய்யாக்கி தாய்க் குலத்தை தலைநிமிர வைத்தவர் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)

1,160 கோடியே 24 இலட்சம் ரூபாய் அளவுக்கு விவசாயிகளுக்கான வட்டியையும், அபராத வட்டியையும் தள்ளுபடி செய்ததோடு ஆண்டு ஒன்றுக்கு 196 கோடி ரூபாய் மானியத்தில் இலவச மின்சாரமும் தந்து விவசாயிகளின் வீடுகளில் விளக்கேற்றி வைத்தது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 10 இலட்சம்



குடிசைகளுக்கு ஒளி கொடுத்தவர் மாண்புமிகு அம்மா அவர்கள். விரிவாக்கப்பட்ட குடிசைகளுக்கான இலவச மின்சாரத் திட்டத்தின்கீழ் 3 இலட்சம் குடும்பங்களுக்கு சலுகைகள் வழங்கிய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) விசைத்தறி நெசவாளர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைத்து அவர்களின் நெஞ்சங்களில் நிறைந்த ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி.

கரும்பு டன் ஒன்றுக்கு குறைந்தபட்ச விலை 1,014 ரூபாய் என்று நிர்ணயித்து கரும்பு விவசாயிகளுக்கு கருணை காட்டியது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆண் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 6 மணி நேரத்திற்கு 54 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும் பெண் தொழிலாளர்களுக்கு நாளொன்றுக்கு 5 மணி நேரத்திற்கு 45 ரூபாயிலிருந்து 70 ரூபாயாகவும் ஊதியத்தை உயர்த்தி உத்தரவு போட்டது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-15

தொழிலாளர்களுக்குத் தொல்லை கொடுக்காமல், தொழில் அமைதி ஏற்படுத்திய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. மீனவர்களுக்கு வழங்கப்படும் டீசலுக்கான விற்பனை வரியை நீக்கி, ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் மானியம் வழங்கிய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு 28 கோடி ரூபாய் மானியம் வழங்கி, அவர்களின் மனங்களில் மணம் கமழ்ந்த ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

38 இலட்சம் புதிய குடும்ப அட்டைகள் வழங்கி, ஏழை, எளிய, நடுத்தர மக்களைக் குதூகலப்படுத்திய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) தினந்தோறும் ரேஷன் அரிசி திருடப்படுவதும், கடத்தப்படுவதும் இல்லாத ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்து ஊராட்சிகளுக்கும் கணினி வசதி செய்து கொடுத்த ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) 9 ரூபாய் 50 பைசாவாக இருந்த பசும்பால் கொள்முதல் விலையை 10 ரூபாய் 50 பைசாவாகவும், 11 ரூபாய் 44 பைசாவாக இருந்த எருமைப் பால் கொள்முதல் விலையை 12 ரூபாய் 50

பைசாவாகவும் உயர்த்தி, பால் உற்பத்தியாளரின் வயிற்றில் பால் வார்த்த ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

360 திருக்கோயில்களிலும், பல தர்காக்களிலும், தேவாலயங்களிலும் அன்னதானத் திட்டத்தைச் செயல்படுத்திய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

1996-2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில்..... (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சிறப்பாக அவர்களுடைய ஆட்சியின் சாதனைகளை அடுக்கிக்கொண்டே இருக்கிறார். அதைப்போலவே ஒரே உத்தரவின்மூலமாக ஒன்றரை இலட்சம் அரசு ஊழியர்களை வீட்டுக்கு அனுப்பியதும் அவர்களுடைய ஆட்சிதான். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 1996-2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் மொத்த வணிக வரி வசூல் 34,448 கோடியே 88 இலட்சம் ரூபாய். மாண்புமிகு அம்மாவினுடைய பொற்கால ஆட்சியில் மொத்த வணிக வரி வசூல் 61,384 கோடியே 16 இலட்சம் ரூபாய். அரசுக்குச் சேர வேண்டிய நிதியை அக்கறையுடன் வசூலித்து அரசுக்கே சேர்த்த பெருமைக்குரிய ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

1996-2001 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மதுபான விற்பனையின்மூலம் அரசு வருவாய் 10,518 கோடியே 85 இலட்சம் ரூபாய். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் போலி மதுபானங்களை ஒழித்து மது விற்பனை 20,316 கோடியே, 72 இலட்சம் மதிப்பிற்கு உயர்ந்தது. சிலர் திட்டம் போட்டு, எங்கோ சென்றுகொண்டிருந்த பணத்தை அரசாங்கத் திட்டங்களுக்காகக் கொண்டுவந்த ஆட்சி மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) மதுபான விற்பனையை டாஸ்மாக்மூலம் அரசே ஏற்று நடத்தியதால் வேலைவாய்ப்பைப் பெற்றோர் 30,306 பேர். இதில் தாழ்த்தப்பட்டோருக்கு 35 சதவிகிதம், மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 26 சதவிகிதம், இதர வகுப்பினருக்கு 8 சதவிகிதம் பங்குண்டு. அரசுக்கு வருவாயும், வேலையற்றோருக்கு வேலையும் தேடித்தந்த அரசு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு (மேசையைத் தட்டும் ஒலி)



வெள்ள நிவாரணத்திற்காக மைய அரசு வழங்கிய தொகை 808 கோடி ரூபாய்; மாநில அரசு அனுமதித்த தொகை 1,515 கோடி ரூபாய். வெள்ள நிவாரணமாக பயிர்ச் சேதங்களுக்கு மைய அரசு அனுமதித்த தொகையைவிட மூன்று மடங்காக உயர்த்தி வழங்கியது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. 2004 டிசம்பரில் தமிழகத்தை சுனாமி தாக்கியபோது மக்கள் மனம் நொறுங்கிப்போனார்கள்; இயல்பு வாழ்க்கை சிதறிப் போனது. அதைச் சீர்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களின் முகத்தில் சிரிப்பையும், அவர்களின் வாழ்க்கைக்குச் சிறப்பையும் தந்தது மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) சுனாமி நிவாரண நிதியாக மைய அரசு வழங்கியது 820 கோடியே 31 இலட்சம் ரூபாய், மாநில அரசு வழங்கிய தொகை 1,136 கோடி ரூபாய் என்று சொல்வதற்கு நான் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2007 ஏப்ரல் திங்கள் முதல் 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலம் தொடங்கப்பட்டுள்ளது என்றும், 10-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.40 ஆயிரம் கோடியிலிருந்து, 11 ஆம் ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீடு ரூ.85,344 கோடி அளவில் திட்டப் பணிகள் மேற்கொள்ள ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற ஆளுநர் உரையில் நடப்பு 11-வது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மாநிலப் பொருளாதாரத்தை சராசரியாக ஆண்டொன்றுக்கு 9 சதவிகிதம் அளவிற்கு வளர்ச்சியடையச் செய்வதே அரசின் குறிக்கோள் என்றும் சொல்லியிருக்கின்றீர்கள். கடந்த ஓராண்டில் மாநிலப் பொருளாதாரம் 9 சதவிகித அளவில் வளர்ச்சி பெற்றதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையிலே சொன்னால் போதும். இந்தத் திட்டக் காலத்தில், வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டது என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆக, செயலற்றத் தன்மைக்கு வேளாண்மைத் துறை சென்றுவிட்டதை நீங்களே ஒப்புக் கொண்டிருக்கிறீர்கள். வேளாண்மைத் துறையைச்

செயல்திறன் மிக்கத் துறையாக உயர்த்துகின்ற பொறுப்பு, ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்ற மாநில அரசுக்குத்தான் உள்ளது.

முற்பகல் 11-20

2007-2012 ஆம் ஆண்டுக் காலத்திலான 11-வது ஐந்தாண்டுத் திட்டம், 9 சதவிகித சராசரி ஆண்டுப் பொருளாதார வளர்ச்சியை இலக்காகக் கொண்டுள்ளது என்றும், இந்தத் திட்டக் காலத்தின்போது, வேளாண்மைத் துறை 4 சதவிகித அளவில் வளரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கின்றீர்கள். ஆக, இடுப்பு ஒடிய உழைத்து, விவசாய வளர்ச்சியை 4 சதவிகிதத்திற்குக் கொண்டு செல்வதோடு நில்லாமல், நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் அரசு நிர்ணயிக்கின்ற 9 சதவிகித சராசரி வளர்ச்சிக்கும் பெரும் பங்காற்றுகின்ற விவசாயிகளின் பொருளாதார வளர்ச்சியைப்பற்றி இந்த அரசு சிந்தித்தது உண்டா என்றால், இல்லை. கடன் வாங்கி, நகை நட்டுகளை அடகு வைத்து அல்லது விற்று, விவசாயத்திற்குச் செலவு செய்து உற்பத்தியை விவசாயி பெருக்கவேண்டும். நாட்டில் ஒட்டுமொத்த உற்பத்தியில் நாம் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்று அரசு தம்பட்டம் அடிப்பதற்குக் காரணமாய் இருக்கின்ற விவசாயிகளின் நிலை அந்தோ பரிதாபம்!

நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கு ஊன்றுகோலாக இருந்து, அதன்மூலம் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கு உணவளிக்கின்ற தாயாக விளங்குகின்ற விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயருகிறதா, விவசாயிகளின் தனிநபர் வருமானம் உயருகின்றதா என்றால், இல்லை. இந்த நிலை தொடருகின்ற காரணத்தினால், விவசாயிகளின், விவசாயத் தொழிலாளர்களின் கவனம் வேறு திசையை நோக்கிச் செல்லக்கூடிய ஒரு அபாயகரமான சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. 70 சதவிகித மக்கள், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களின் கவனம் வேறு திசையில், வேறு கோணத்தில் செல்லத் தொடங்கிவிட்டால், அதனுடைய முடிவு இந்த நாட்டிற்கே பெரும் கேடாக எதிர்காலத்தில் வந்துசேரும். அதற்குள் மத்திய, மாநில அரசுகள் விழிப்புடன் செயல்பட்டு, விவசாயிகளையும், விவசாயத் தொழிலாளர்களையும் பெரும் அழிவிலிருந்து காப்பாற்றிட வேண்டுமென்று இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன். நாட்டிலே இருக்கின்ற 70 சதவிகித மக்கள் வேளாண் தொழிலையும், அதனைச் சார்ந்திருக்கின்ற பணிகளையும் நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால், அப்படியொரு துறை, மக்களுக்குச் சேவை ஆற்றுவதற்குண்டான வேளாண்மைத் துறை இருக்கின்றதா என்று தேடிக் கண்டுபிடிக்கின்ற அளவிற்கு அந்தத் துறையினுடைய செயல்பாடு இருக்கின்றது.



வேளாண்மைத் துறையில் பணியாற்றுகின்ற களப்பணியாளர்கள் இப்போது யாரும் நிலங்களுக்கு வந்து பார்ப்பதில்லை. முன்பு களப் பணியாளர்கள் விளை நிலத்திற்கு வந்து மண் பரிசோதனை மேற்கொள்வதிலிருந்து, பயிர் நடவு செய்வது, அடி உரம் இடுவது, மேல் உரம் இடுவது, மருந்து தெளிப்பது போன்ற ஆலோசனைகளை நேரடியாகத் தந்து விவசாயிகளுக்கு உறுதுணையாக இருப்பார்கள். ஆனால், இப்போது நிலைமை மாறியிருக்கின்றது. நாட்டில் இருக்கின்ற மக்களில் பெரும்பான்மையோர் வேளாண்மைத் தொழிலில் ஈடுபடுபவர்கள்தான். ஆனால், அந்த மக்களுக்கு வேளாண்மைத் துறையின்மூலமாக எந்த நன்மையும் போய்ச் சேருவதில்லை. இந்த நிலை காரணமாக, கிராமப் பொருளாதாரம் அபாய கட்டத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. ஆகவே, இந்த 11-வது ஐந்தாண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் பெரும் பகுதியை வேளாண்மைத் தொழிலுக்கும், வேளாண்மையைச் சார்ந்த தொழிலுக்கும் முன்னுரிமை கொடுத்து, நாட்டில் இருக்கின்ற பெரும்பான்மையான மக்களை அபாயக் கட்டத்திலிருந்து காப்பாற்றவேண்டுமென்று கோருகிறேன்.

விவசாயிகள் உற்பத்திச் செய்யும் பொருட்களுக்கு உற்பத்திச் செலவு அதிகமாகின்றது. ஆனால், விளைபொருட்களுக்குரிய விலை கிடைக்காத சூழ்நிலை ஏற்பட்டு, விவசாயிகள் தொடர்ந்து மிகப் பெரிய கடன் சுமைகளைச் சந்திக்க நேரிடுகிறது. எப்படித் தொழில் வளர்ச்சி அடைவதற்கு சிறு தொழில் முதலீட்டாளர்களிலிருந்து, பெரும் தொழில் தொடங்க முன்வருகின்றவர்கள்வரை, அவர்களுக்குத் தொழில் கொள்கைமூலமாக அவர்கள் தொழில் தொடங்க ஊக்கப்படுத்துவதற்குச் சலுகைகளும், மானியங்களும் வழங்குகின்றோமோ, அதைப்போல, வேளாண் பெருமக்களுக்கும் புதிய வேளாண்மைக் கொள்கைமூலமாகப் பயிர் செய்வதிலிருந்து, வளர்ப்பது, உற்பத்தியாகின்ற பொருட்களை விற்பதுவரை, வழிகாட்டுதல் மூலமாகவோ அல்லது உதவிகள் செய்வதன் மூலமாகவோ, வேளாண் மக்களுடைய கண்ணீரைத் துடைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆளுநர் உரையில், வேளாண்மைத் துறையில் 4 சதவிகித வளர்ச்சி இலக்காகக் கொள்ளப்படும் என்று வாசிக்கப்பட்டிருக்கின்றது. அந்த இலக்கை இந்த அரசு எட்டியுள்ளதா என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-25*

தொடக்க வேளாண்மை வங்கிகளில் விவசாயிகள் வாங்கிய கடனைத் தள்ளுபடி செய்த அரசு, மீண்டும் விவசாயிகளுக்குக் கடன் வழங்குமா, திருப்பித் தருகின்ற வைப்பு நிதிக்கு இந்த அரசு நிதியுதவி செய்யுமா என எதிர்க்கட்சிகள் குரல் கொடுத்தபோது, போதிய நிதி தரப்படும் என்று அரசின் சார்பாகச் சொல்லப்பட்டது. ஆனால், கடந்த 22 மாதங்களாகப் போதிய நிதியினை அரசு, தொடக்க வேளாண்மை வங்கிகளுக்குத் தரவில்லை. அதனால், அனைத்து விவசாயிகளும் கடன் பெறமுடியவில்லை. அங்கு பணிபுரியும் அலுவலர்களுக்கு கடந்த 6 மாத காலமாக சம்பளமும் கொடுக்க முடியவில்லை. திருப்பிக் கொடுக்கவேண்டிய வைப்பு நிதியைக் கொடுக்க முடியாமல் தொடக்க வேளாண்மை வங்கிகள் சரிவை நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. உடனடியாக அரசு இதில் கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இவை எல்லாவற்றையும் மீறி இப்போது கிராமங்களிலே இருக்கின்ற வங்கிகள் எல்லாம் மூடப்படுகின்ற ஒரு சூழ்நிலை நாட்டிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்குக் காரணம் வங்கிகளிலிருந்து சொல்லப்படுவது என்னவென்றால், கிராமங்களில் இருக்கின்ற வங்கிகளையெல்லாம் நகரங்களில் merge செய்வதே காரணம் என்று சொல்லப்படுகின்றது. ஏற்கெனவே கிராமப்புறங்களில் என்ன பணியை அந்த வங்கி செய்ததோ அந்தப் பணியை நகரப்புறங்களில் இருக்கின்ற வங்கிகளும் ஆற்றும் என்று சொல்லப்படுகின்றது. ஆனால், அவ்வாறு அந்த வங்கிகள் கிராமப்புறத்திலே இருக்கின்ற விவசாயிகளினுடைய நலனில் அக்கறை காட்டுவதில்லை. உதாரணத்திற்கு, அந்த merge செய்யப்பட்ட நகர வங்கிகள் 100 சதவிகித வங்கிக் கடன் அளிக்குமேயானால் அதில் 82 சதவிகிதக் கடன் நகர்ப்புறங்களில் இருக்கின்ற மக்களுக்குத்தான் அந்த வங்கிகள் இன்றைக்கும் அளித்துக் கொண்டிருக்கின்றன. 18 சதவிகிதக் கடன்கள் கிராமப்புற மக்களுக்கு அளிக்கப்படுகின்றன. அந்த 18 சதவிகிதக் கடன்களிலும் விவசாயம் சார்ந்த தொழிலுக்கு கடன்கள் வழங்காமல் வர்த்தகம் சார்ந்த



தொழிலுக்குத்தான் அந்த வங்கிகள் இப்போது கடன் வழங்குகின்றன என்பதனை நான் தெளிவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கிராமங்கள் வளர்ச்சியடையவும், கிராமப் பொருளாதாரமும் வளர்ச்சியடையவும், கிராமப்புறங்களில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளும், தனியார் வங்கிகளும் தொடங்கப்பட்டன. ஆனால், இன்றைக்கு அந்த நிலை மாறி அனைத்து வங்கிகளும் மூடப்படுகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது என்பதனை நான் இங்கு கவலையோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, நதி நீர்ப் பிரச்சினை. நதி நீர்ப் பிரச்சினையில் மெத்தனப் போக்கை இந்த அரசு கடைப்பிடிக்கின்றது என்று நான் குற்றஞ்சாட்டுகின்றேன். நதி நீர்ப் பிரச்சினை பற்றி ஆளுநர் உரையில் சொல்லுகின்றபொழுது 'அதிகாரம் பெற்ற அமைப்புகளின் முடிவுகளை மதித்து அவற்றின்படி அனைத்து மாநிலங்களும் நடக்க வேண்டுமென்று இந்த அரசு கேட்டுக்கொள்வதாக' சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், நதி நீர்ப் பிரச்சினையில் இந்த அரசு, அரசியல் காரணங்களுக்காக மெத்தனப் போக்கைக் கொண்டுள்ளது. இதன் காரணமாக. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் வேளாண்மையைப் பற்றி இங்கு பேசுகிறபோது நான் குறுக்கிடக்கூடாது, முழுமையாக அவருடைய பேச்சை நானும் கேட்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தேன். அவர் இங்கு சொன்னதெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியிலே நடைபெற்றது. அதைத்தான் அவர் இங்கு பேசினார். இந்த ஆட்சி, 2006-லே பொறுப்பேற்ற பிறகு இந்தத் துறையை மறுசீரமைப்பு செய்தபோது 2,800 பேர்களுக்கு பதவி உயர்வு விதிவிலக்கு அளித்துக் கொடுக்கவேண்டிய நிலை இந்த அரசுக்கு ஏற்பட்டது; கொடுத்திருக்கின்றோம். அதைப்போல வேளாண்மைக்குத் தேவையான களப் பணியாளர்கள் நியமிக்கப்படாமல் இருந்தது. 540 A.O.-க்கள் வேளாண்மை அலுவலர்கள் நியமிக்க வேண்டுமென்று Tamil Nadu Public Service Commission-க்கு எழுதியிருக்கின்றோம். 44 தோட்டக்கலை அலுவலர்கள் நியமிக்கவேண்டும். அதையும் Public Service

Commission-க்கு எழுதியிருக்கிறோம். இது இல்லாமல், A.A.O.-க்கள் என்று சொல்லப்படுகிற உதவி வேளாண்மை அலுவலர்கள் 1,707 பேரை நியமிக்க வேண்டியிருக்கிறது. இதுவெல்லாம் கடந்த ஆட்சிக் காலத்திலே இல்லாமல் வேளாண்மைத் துறையே மறைந்துவிட்டது உங்கள் ஆட்சிக் காலத்தில். ஆகவே, எங்கள் ஆட்சிக் காலத்திலே புத்துயிர் பெற்றிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்தார்கள். பதவி நியமனம் நீங்கள் செய்திருக்கலாம். ஆனால், அந்தப் பதவியில் உட்கார்ந்துகொண்டிருப்பவர்கள் யாரும் விவசாயத் தளத்திற்குச் செல்வதில்லை. அலுவலகத்திலே உட்கார்ந்துகொண்டு table work, அலுவலகப் பணியை மட்டும் செய்துகொண்டிருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-30

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் ஒரு விவசாயி என்பதும் எனக்குத் தெரியும். கடந்த முறை, மூன்று அடுக்கு முறை இருந்தது. மாவட்டம், வட்டம், ஒன்றிய அளவில் என்று மூன்றடுக்கு முறை இருந்தது. இந்த மூன்றடுக்கு முறையில் மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும் இருந்த வேளாண்மை அலுவலர்கள், வேளாண் மக்களோடுத் தொடர்பு கொள்ள முடியாத ஒரு சூழ்நிலை இருந்ததை இந்த அரசு உணர்ந்து, முதலமைச்சருடைய வழிகாட்டுதலின்பேரில் எல்லாத் துறைகளிலும், வேளாண்மைத் துறை, தோட்டக் கலைத் துறை, விதைச் சான்றளிப்புத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை இவை அனைத்தும் ஒன்றிய அளவிலேயே அவர்கள் அலுவலகத்திலே, அங்கே டெப்போவிலே உட்கார்ந்து விவசாயிகள் வந்து கேட்டால் எல்லா தொழில்நுட்பங்களையும் அறிந்துகொள்ளவும், வட்டாரத்தில் இருக்கக்கூடிய அந்த அலுவலர்கள் அந்த வட்டாரத்திலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு புதிய தொழில்நுட்ப ஆலோசனைகள் எல்லாம் வழங்குவதற்கும் சிறந்த ஏற்பாட்டை கழக அரசு இப்போது செய்திருக்கிறது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) இல்லை. இல்லை. ஒரே ஒரு கருத்து. (குறுக்கீடு) இல்லை, ஒன்றும் இல்லை. நீங்கள் சொன்ன கருத்துதான். (குறுக்கீடு) வைப்புத் தொகையைப் பற்றிச் சொன்னீர்களே, அது குறித்த ஒரேயொரு சிறிய விளக்கம். நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள், வங்கிகள் கிராமங்களிலே மூடப்படுகின்றன, வைப்புத் தொகைகள் எல்லாம் கொடுக்கப்படவில்லை என்ற ஒரு கருத்தை இங்கே சொல்லியிருக்கிறார்கள். இரண்டு ஆண்டு காலத்திலே வைப்புத் தொகைகள் போடப்பட்டு, திருப்பிக்கொடுக்கப்படாத நிலை அல்ல. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், இதே மன்றத்திலே. ஏற்கெனவே ஐந்தாண்டு காலம் ஆட்சியிலே இருக்கிறபொழுது நீங்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு கிட்டத்தட்ட 2,000 கோடி ரூபாயைத் தருவதாகச் சொல்லி, சலுகைகள் எல்லாம் அறிவிக்கப்பட்டன. ஆனால் 2,000 கோடி ரூபாயை அரசாங்கத்தின்மூலமாக எந்த மைய வங்கிகளுக்கும், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் கொடுக்கவில்லை. சுமார் 500 கோடி ரூபாய்தான் பணம் கொடுத்தீர்கள். 1,500 கோடி ரூபாய் நின்றுவிட்டது. அதன்மூலமாக, வைப்புத் தொகை போடப்பட்டது, உங்கள் ஆட்சிக் காலத்திலிருந்தது யாருக்கும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. அதுதான் அடிப்படையான உண்மை. அதுதான் இன்னும் தொடர்கிறது, அது ஒன்று.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பொறுத்தளவிற்கு 7,000 கோடி ரூபாய் தள்ளுபடி செய்தோம். அனைத்து விவசாயிகளுக்கும் இனி கடனைக் கட்ட வேண்டாம் என்று சான்றிதழ் வழங்கப்பட்டுவிட்டது. ஆனால், ஐந்து ஷெடியூலாகப் போட்டு மூன்றாண்டு காலம் பணம் கொடுக்கப்பட்டது, நிதி ஒதுக்கப்பட்டது, பணம் எல்லாம் போய் சேர்ந்துவிட்டது. எந்த ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களும் மூடக்கூடாது என்பதற்காகத்தான் இப்போது பணம் கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கிகள் மூடப்பட்டன என்று நான் சொன்னது, தேசிய மயமாக்கப்பட்ட வங்கியினுடைய கிளைகள், கிராமப்புறங்களில் தொடங்கப்பட்ட தனியார் வங்கிகளுடைய கிளைகளைப் பற்றிச் சொன்னேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தவறாகப் புரிந்துகொண்டிருக்கின்றார். இருந்தாலும். . .

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களில் வைப்புத் தொகை இன்னும் திருப்பிக் கொடுக்கப்படவில்லை என்பதைச் சொல்கிறீர்கள். 2,000 கோடி ரூபாய் என்பது அப்போது இருந்த வைப்புத் தொகை, அப்போது விவசாயிகள் போட்டது, உங்கள் ஆட்சியின்போது. நீங்கள் 2,000 கோடி ரூபாய் திருப்பிக் கொடுப்பது பற்றி announce செய்தீர்கள். பணம் ஒழுங்காகப் போய் இருந்தால், எல்லா வைப்புத் தொகையும் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கும். இப்போது நாங்கள் கொடுக்கிற பணத்திலேதான் வைப்புத் தொகை ஒவ்வொரு விவசாயிக்கும் போய்க்கொண்டிருக்கிறது. அதுதான் உண்மை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள். (குறுக்கீடு) திரு. பொள்ளாச்சி ஜெயராமன், தேவையில்லாமல் எழுந்திருக்கக்கூடாது. உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவு வங்கிகளைப்பற்றி, கூட்டுறவு நிறுவனங்களைப் பற்றிப் பேச வேண்டுமானால் அதற்குத் தனியாக ஒரு நாள் தேவைப்படும். ஏனென்று சொன்னால் கடந்த 20, 22 வருட காலமாக அந்தக் கூட்டுறவுத் துறையினுடைய, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிர்வாகத்தில் பங்கு வகித்தது இல்லை. 1989-க்குப் பின்னாலே இதுவரை திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள், இரண்டு முறை சார்ந்தவர்கள்தான் கூட்டுறவு நிறுவனங்களில் அந்தக் கட்சியைச் பொறுப்பாளர்களாக இருந்திருக்கின்றார்கள். அங்கே நிருவாகிகளாக, 22 வருட காலமாக நீங்கள் கூட்டுறவு நிர்வாகத்தினுடைய அமைப்பை எடுத்துப் பார்த்தால் அண்ணா தி.மு.க.வினுடைய நிர்வாக அமைப்பு இதுவரைக்கும் அந்தக் கூட்டுறவு நிறுவனங்களில் இருந்ததில்லை.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆண்டுகள், ஐந்து ஆண்டுகள் என் இரண்டு முறை நீங்கள் பத்து ஆண்டுக் காலம் ஆட்சியில் இருந்தீர்கள்.



நீங்கள் தேர்தல் நடத்தி கூட்டுறவு நிர்வாகிகளை உருவாக்குவதை யார் வேண்டாம் என்று சொல்கிறார்கள். கலைஞர் அரசில் எப்பொழுதும் விவசாயிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்பதால் கூட்டுறவுத் தேர்தலை அப்போதைக்கு அப்போது நடத்துகிறோம். நீங்கள் தேர்தலை நடத்தி வருவதை யார் வேண்டாம் என்றார்கள்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கூட்டுறவு நிறுவனங்களில் உறுப்பினராக தி.மு.க. கட்சியினர் மட்டும்தான் இருந்தார்கள். உண்மையான கூட்டுறவாளர்களைத் தேர்வு செய்து சேர்த்து தேர்தல் நடத்த வேண்டுமென்றுதான் அம்மா அவர்கள் அரசாணை வெளியிட்டிருந்தார்கள். ஆனால், உயர் நீதிமன்றத்திற்குச் சென்று கோர்ட்டில் தடையாணை வாங்கியிருந்தீர்கள். இதுதான் உண்மை. நான். . .

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** கூட்டுறவுத் தேர்தலிலே உறுப்பினராவதற்கு தி.மு.க., காங்கிரஸ், அ.தி.மு.க., என்றெல்லாம் கிடையாது. கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினராவதற்கு சில தகுதிகள் இருக்கின்றன. Bye law இருக்கிறது. நிலம் இருக்கவேண்டும், சொத்து இருக்கவேண்டும், விவசாயியாக இருக்கவேண்டும் என்று இருக்கிறது, அதுதான் தகுதியேயொழிய, அரசியல் கட்சி உறுப்பினர் என்பது தகுதியல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் பேசுங்கள்.

*முற்பகல் 11-35*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு அம்மா அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) அம்மா, அம்மா என்று சொல்லியே பழகிவிட்டது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) உள்ளத்திலே இருப்பதுதான் உதட்டிலே வருகிறது, அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பேசியதைவிட்டுவிட்டு, வேறு திசையில் நம்முடைய உணவுத் துறை அமைச்சர் அவர்கள் சென்றுகொண்டிருக்கிறார்கள். ஆகையினால், நான் இத்தோடு இதற்கு முற்றுப்புள்ளி வைத்து, நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிறேன்.

சென்ற நிதிநிலை அறிக்கையில், காவிரி நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பிற்குப் பின்னால், அனைத்துக் கட்சிகளின் கூட்டம் கூட்டப்பட்டது. "நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினால் ஏற்படக்கூடிய சாதக பாதகங்களை ஆய்ந்து, அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், நடுவர் மன்றத்தின் சட்டப்படி, உரிய காலத்தில் விளக்கம் கோரும் மனுவைத் தாக்கல் செய்ய இந்த அரசு முடிவு செய்திருக்கிறது" என்று சென்ற நிதிநிலை அறிக்கையிலே நீங்கள் சொல்லியிருந்தீர்கள். அப்படி முடிவு செய்து, 365 நாட்கள் கழித்து, இந்த நிதிநிலை அறிக்கையை சபையில் தாக்கல் செய்வதற்கு முன்புதான் உச்ச நீதிமன்றத்தில் நீங்கள் தாக்கல் செய்திருக்கின்றீர்கள் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, நீங்கள் சொல்லிய அந்த உரிய காலம் என்பது, உங்கள் அகராதியில் 365 நாட்கள்போலும் என்று நினைக்கத் தோன்றுகிறது.

முல்லைப் பெரியாறு பிரச்சினை பல்வேறு கட்டங்களைக் கடந்து. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பு வந்தது. அதில், நமக்கு ஏதாவது மாறுபட்ட கருத்து இருக்குமானால், Inter-State River Water Disputes Act Section 5(3)-ன்படி நம்முடைய கருத்தை tribunal-க்குத் தெரிவிக்க வேண்டும். Tribunal அதன்மீது முடிவு செய்து, Central Government-க்கு அனுப்பும். Central Government Gazette-ல் போடும். இதுதான்; இது அனைவருக்கும் தெரியும். ஆனால் நீங்கள் அன்றைக்கு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கூட்டிய கூட்டத்திற்கு வந்தபோது, tribunal-க்கு நம்முடைய மாறுபட்ட, நமக்கு ஒவ்வாத கருத்துக்களைச் சொல்வதோடு, உச்ச நீதிமன்றத்திலும் வழக்குத் தொடுக்கலாம் என்று சொன்னார்கள். நான்கூட அப்பொழுது வேண்டாமென்று சொன்னேன். ஆனால், மாண்புமிகு முதல்வர் அவர்கள், நடுவர் மன்றத்திற்குப் போவது—தீர்மானத்திலே இருக்கிறது—தேவைப்பட்டால், உச்ச நீதிமன்றத்திற்குப் போவது என்றுதான் அன்றைக்கு அந்த agenda-விலே குறிப்பிடப்பட்டது. அப்படி நடுவர் மன்றத்திற்கும் போயிருக்கிறோம்; உச்ச நீதிமன்றத்திற்கும் போயிருக்கிறோம். அதேபோல அவர்களும்



போயிருக்கிறார்கள். ஆனால், இப்பொழுது நடுவர் மன்றம் என்ன கூறிவிட்டது என்றால், உச்ச நீதிமன்றத்திற்கு மூன்று மாநிலங்களும் போயிருக்கிறீர்கள், கர்நாடகம், தமிழ்நாடு உட்பட அந்த வழக்கை முதலிலே தீர்த்துக்கொண்டு எங்களிடத்திலே வாருங்கள் என்று இப்போது சொல்லியிருக்கிறார்கள். அடுத்த மாத இறுதியில் இந்த வழக்கு வருகிறது. நாங்கள் தொடர்ந்து வாதாடுகிறோம். இதிலே என்ன தவறு?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்மீது உச்ச நீதிமன்றத்திற்குச் செல்வதில் ஏற்பட்ட காலதாமதத்தைப் பற்றித்தான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அம்மா அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பின்படி, நீங்கள் மத்திய அரசில் அங்கம் வகிக்கின்ற காரணத்தினால், கிடைத்த தண்ணீரின் அளவினை உறுதிப்படுத்துவதற்கு முதலில் மத்திய அரசிதழிலே வெளியிடச் செய்யுங்கள். அதற்குப் பின்னால், இந்த நீர் எங்களுக்குப் பற்றாக்குறையாக இருக்கிறது என்று காரணத்தைக்காட்டி, உச்ச நீதிமன்றத்திற்குச் செல்லுங்கள் என்று சொன்னார்கள். அதையும் நாங்கள் அந்தக் கூட்டத்திலே எடுத்துச் சொல்லியிருக்கிறோம் என்பதையும் நான் இங்கே, சட்டமன்றத்தில் கூறிக்கொள்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** நீங்கள் பேசும்போது நான் குறுகிடக்கூடாது என்று நினைக்கிறேன். மத்திய சர்க்காரிடம் எங்களுக்கு influence இருக்கிறது, ஆகையால் Gazette-ல் போடச் சொல்லுங்கள் என்றால், முடியாது. அது உங்களுக்கும் தெரியும். நாம் என்ன கருத்தைச் சொல்கிறோம் என்பதை tribunal-லிலே கொடுக்க வேண்டும். Tribunal அதனைப் பரிசீலனை செய்வதற்கு ஒரு வருட காலங்கூட எடுத்துக்கொள்வார்கள். தேவைப்பட்டால், எங்களுக்கு மேலும் கால அவகாசம் வேண்டுமென்று கேட்டால், அப்படி எடுத்துக்கொள்வதற்கும் tribunal-க்கு அதிகாரம் உண்டு. அதற்குமேல் அது ஒரு இறுதித் தீர்ப்பை மத்திய அரசுக்கு அனுப்பும். மத்திய அரசு அதற்குப் பிறகு அதை ஒத்துக்கொண்டு Gazette-ல் வெளியிடும். ஆகையினால், எவ்வளவுதான் நமக்கு மத்திய அரசாங்கத்திடத்திலே செல்வாக்கு இருந்தாலுங்கூட, tribunal-ல் இருந்து இறுதி அறிக்கை வராதவரையில், நடக்காது. உங்கள் அம்மா சொல்கிறார்கள் என்றால் நடக்காது. ஏனென்றால், சட்டம் அப்படி.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது இரண்டும்கெட்ட நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம். இடைக்காலத் தீர்ப்பை அமல்படுத்தப்போகின்றீர்களா அல்லது நடுவர் மன்றத்தின் இறுதித் தீர்ப்பினை நீங்கள் நிறைவேற்றப்போகின்றீர்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. இந்த இரண்டு தீர்ப்புகளில் எந்தத் தீர்ப்பினை, மத்திய, மாநில அரசுகள் நடைமுறைப்படுத்த, கடைப்பிடிக்கப்போகிறீர்கள் என்பதை அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 11-40*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இறுதித் தீர்ப்பில் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். "இந்த இறுதித் தீர்ப்பு மத்திய அரசின் Gazette-ல் வருகிறவரையில், இடைக்காலத் தீர்ப்பு அமலில் இருக்கும்" என்று Tribunal தெளிவாகச் சொல்லியிருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சரி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கம் இதோடு இருக்கட்டும். அவர் நடைமுறைப்படுத்துகிறாரா இல்லையா என்பதை நாம் பின்னாலே பார்த்துக்கொள்ளலாம்.

முல்லைப் பெரியாறு பிரச்சினை பல்வேறு கட்டங்களைக் கடந்து, மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் சென்றார்கள். அதாவது, கேரளா எழுப்பிய ஐயப்பாடுகளையெல்லாம் தீர்த்து அவர்களும், மத்திய நீர்வளக் குழுமமும், மத்திய அரசும் அணை பலமுடன் இருக்கின்றதென்று எழுத்துமூலமாகச் சொல்லியபின் உச்ச நீதிமன்றமும் அணையினுடைய நீர் மட்டத்தை 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்தி நீரைத் தேக்கிக் கொள்ளலாம் என்றும், பேபி அணை மற்றும் சிற்றணையைப் பலப்படுத்தியதற்குப்பின் மத்திய தொழில்நுட்பக் குழு பார்வையிட்டு ஒப்புதல் தந்தவுடன் 142 அடியாக நீரைத் தேக்கிக்கொள்ளலாம் என்று ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பினை மாண்புமிகு அம்மா அவர்கள் பெற்றுத் தந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பேற்று இரண்டு வருடங்கள் ஆகியும்—— மத்தியிலே அமைச்சரவையில் நீங்கள் பங்குபெறும் கூட்டணி ஆட்சிதான் நடந்துகொண்டிருக்கிறது. நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே சொல்லியிருக்கின்றேன்; ஒரு மாநிலத்தினுடைய வழக்கு உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றால், உச்ச நீதிமன்றத்தினுடைய அந்தத் தீர்ப்பினை அமல்படுத்துகின்ற பொறுப்பு அந்த மாநில அரசுக்கு உண்டு. ஆனால், ஒரு வழக்கு இரு மாநிலங்கள் சம்பந்தப்பட்டதாக இருந்து அது உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றால் அங்கு வழங்கப்படுகின்ற உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை அமல்படுத்துகின்ற பொறுப்பு மத்திய அரசுக்கு உண்டு. ஆனால், இப்போது ஆளுகின்ற மத்திய அரசில், நீங்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற காரணத்தினால், ஏன் இதுவரை இரண்டு வருடங்கள் ஆகியும் முல்லைப் பெரியாறு பிரச்சினையில் உச்ச நீதிமன்றம் அளித்தத் தீர்ப்பினை அமல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க முடியவில்லை உங்களால் என்றுதான் இன்றைக்கு நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன்.



**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை வேறு மாண்புமிகு உறுப்பினர் பேசியிருந்தால், நான் அவர்களிடத்திலே விளக்கம் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு இந்த விஷயம் தெளிவாகத் தெரியும். முல்லைப் பெரியாறு அணை விவகாரத்தில் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது 142 அடி தண்ணீர் நிறுத்த வேண்டுமென்று. கேரள அரசு அதன்மீது Review Petition போட்டது. ஒரு முறைக்கு இரு முறை போட்டது. இரண்டு முறையும் தான் கூறிய தீர்ப்பு சரியானது என்று உச்ச நீதிமன்றம் சொன்னது. ஆனால், இடையில் ஒரு சின்ன சிக்கல் என்ன ஏற்பட்டது என்றால், Kerala Assembly-யில் Kerala Irrigation and Water Resources Act-க்கு ஒரு amendment 2006-ல் கொண்டுவந்து முல்லைப் பெரியாறு அணை அவர்களுக்குப் பாத்தியப்பட்டதாகவும், அந்த அணையிலே எவ்வளவு தண்ணீர் நிறுத்துவது என்பது குறித்து அவர்களது Dam Safety Authority முடிவின்படி நிறுத்தலாம் என்று ஒரு amendment கொண்டுவந்து விட்டார்கள். எனவே, அது இப்பொழுது அவர்களுடைய அணை என்று சொல்கிறார்கள். அதைப்பொறுத்துதான் நாம் இப்பொழுது வழக்குப் போட்டிருக்கிறோம். அது நிலுவையில் இருக்கிறது. அதுவும் இப்பொழுது உச்ச நீதிமன்றத்திலே வந்து கொண்டிருக்கிறது. அந்த முடிச்சை அவிழ்த்தால்தான் அடுத்த கட்டத்திற்குப் போகமுடியும். இது உங்களுக்குத் தெரியும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு 27-2-2006 அன்று வந்தது. ஆனால் கேரள மாநில பாசனம் மற்றும் நீர் பாதுகாப்புச் சட்டம், 2003-க்கு ஒரு amendment கொண்டு வந்தார்கள். உச்ச

நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வந்தது 27-2-2006. ஆனால், கேரள அரசு amendment கொண்டு வந்தது 15-3-2006. ஆகவே, உச்ச நீதிமன்றத் தீர்ப்பை challenge செய்கின்ற, எந்த மாநில அரசும் கொண்டு வருகின்ற amendment—சட்டத் திருத்தம்—செல்லுபடியாகுமா என்பதை நான் இங்கு நம்முடைய அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அதைத்தான் நாங்கள் இப்பொழுது சொல்கிறோம். கேரள அரசு கொண்டு வந்திருக்கின்ற அந்த amendment மீது ஒரு stay கொடுக்கவேண்டும். (குறுக்கீடு) ஆகவே, அவர்கள் சட்டம் செல்லுபடியாகாது என்பதுதான் நம்முடைய வாதம். உச்ச நீதிமன்றத்திலே வாதாடிக்கொண்டிருக்கிறோம். ஆகவே, நாங்கள் நடவடிக்கை எடுக்கவில்லையென்று சொல்லமுடியாது. திருப்பி, நான் ஒன்றைக் கேட்கிறேன். அந்தத் தீர்ப்பு வந்த பிறகு நீங்கள்தானே கொஞ்ச நாட்கள் ஆட்சியில் இருந்தீர்கள். அப்பொழுது என்ன செய்துகொண்டு இருந்தீர்கள்? (குறுக்கீடுகள்) அப்பொழுது நடவடிக்கை எடுப்பதற்கு என்ன செய்தீர்கள்? ஆகையால் நீங்கள் உடனடியாக தீர்ப்பை அமல்படுத்தியிருந்தால் பிரச்சினையே இல்லை. அதற்குள்ளே amendment கொண்டுவந்து விட்டார்கள். அதனுடைய பிரச்சினைதான் இப்பொழுது போய்க்கொண்டிருக்கிறது.

முற்பகல் *11-45*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 27-2-2006-லே தீர்ப்பு வந்தது. அந்தத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டுமென்று நாங்கள்—அந்த நேரத்தில் மழை இல்லாத சூழ்நிலை இருந்தது—15-3-2006-ல் கேரளாவில் ஒரு amendment கொண்டுவந்தார்கள் மார்ச்சிலே. உடனே, மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதினார்கள்—ஏனென்றால் உங்களுக்குத் தெரியும். வழக்கிற்காக நாம் உச்ச நீதிமன்றம் செல்கின்றபோது, முதலில் மத்திய அரசுக்கு தெரியப்படுத்த வேண்டும். மத்திய அரசிடமிருந்து, எந்த மாதிரி பதில் வருகின்றதோ அதை நாம் அடிப்படையாக வைத்துதான், உச்ச நீதிமன்றம் செல்ல முடியும். மத்திய அரசிடமிருந்து பதில் வரவில்லை. அதற்குப்பின்னாலே, மாண்புமிகு அம்மா அவர்கள், உச்ச நீதிமன்றத்திற்கு சென்று உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையும் அமல்படுத்த வேண்டும், இந்த amendment, கேரள அரசு கொண்டுவந்த amendment-ஐயும் இரத்து



செய்ய வேண்டுமென்று, உச்ச நீதிமன்றத்திற்கு சென்றார்கள் என்பதும் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்; தெரிந்திருந்தும் நீங்கள் சென்றீர்களா என்று கேட்பது நன்றாக இல்லை என்பதை இங்கே நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

ஆக, நான் கேட்பது, உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியும்—நீங்களே சொல்கின்றீர்கள். கேரளா கொண்டு வந்த amendment செல்லாது என்று—செல்லாது என்று நீங்களும் தெரிந்திருக்கின்றீர்கள்; மத்திய அரசுக்கும் தெரிந்திருக்கின்றது—பின்பு ஏன் உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பினை அமல்படுத்தவில்லையென்றுதான் இன்றைக்கு உங்களை நான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** கேரளா கொண்டு வந்த amendment செல்லாது என்று நாங்களும் சொல்கின்றோம். நீங்களும் சொல்கின்றீர்கள். மத்திய அரசும் சொல்கிறது. உச்ச நீதிமன்றம் சொல்ல வேண்டும். அங்கேதான் வழக்கு இருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் மத்திய அரசு சொல்ல வேண்டுமென்று சொன்னார்கள். இப்போது உச்ச நீதிமன்றம் என்று சொல்கிறார்கள். எவ்வளவு காலம் ஆகும் என்று தெரியவில்லை. ஆனால், அந்த இடைப்பட்ட காலத்தில் மத்திய அரசில் நீங்கள் அங்கம் வகிக்கின்றீர்கள். அந்த மத்திய அரசு உரிய நடவடிக்கை எடுக்காத காரணத்தினால், இன்றைக்கு கேரள மாநிலத்தில் தனியாக ஒரு அணை கட்டப்படுகின்ற ஒரு சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கின்றது. அந்தச் சூழ்நிலையில், 6 மாவட்ட மக்களுடைய விவசாயம் எந்த அளவிற்குப் பாழாகும் என்ற மனக் கவலையுடன்தான் நான் இன்றைக்கு சட்டமன்றத்திலே, உங்களிடம் கேள்விக் கேட்டுக்கொண்டிருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் *1995* ஆம் ஆண்டில் பாசன வசதிகளை உருவாக்கவும், ஏரி-குளங்கள், அணைக்கட்டுகள் போன்ற நீர்நிலைகளை மேம்படுத்தவும், நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் என்ற உலக வங்கி நிதியினைப் பெற்று, 840 கோடி ரூபாய் செலவில், அந்தத் திட்டத்தை நிறைவேற்றினார்கள். மீண்டும் 2005-ல் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்திலேதான், ஒருங்கிணைந்த நீர் வள

ஆதாரத் தொகுப்புத் திட்டம் 2-க்கு ரூ.3,900 கோடி ரூபாய்க்கு உலக வங்கி ஒப்புதல் தந்தது. அதற்குப் பின்னாலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, 2006-ல் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன், நிதிநிலை அறிக்கையில் இந்தத் திட்டம் முதல் ஆண்டில் 16 துணை வடிநிலப் பகுதிப் பணிகள் தொடங்கப்படும் என்று நீங்கள் சொல்லியிருக்கின்றீர்கள். மீண்டும் 2007 நிதிநிலை அறிக்கையில், 63 துணை வடிநிலங்கள் மொத்தமாக எடுத்துக்கொள்ளப்படும், 2,547 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும் என்று சொல்லி, 2007-2008-ல் 12 துணை வடிநிலங்கள் பணிக்காக 260 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் சொல்லியிருக்கின்றீர்கள். அதாவது, கடந்த நிதிநிலை அறிக்கையிலே 12 என்று சொல்லிவிட்டு நடப்பு நிதிநிலை அறிக்கையில், என்ன சொல்கின்றீர்கள் என்றால், 2007-2008 ஆம் ஆண்டில், இத்திட்டப் பணிகள், 9 துணை வடிநிலப் பகுதிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கின்றீர்கள்.

2006-ல் நீங்கள் சொல்கின்றபோது, 16 துணை வடிநிலப் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். 2007-ல் சொல்கின்றபோது 12 துணை வடிநிலப் பகுதிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லியிருக்கின்றீர்கள். அதற்குரிய நிதியையும் ஒதுக்கியிருக்கிறீர்கள். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 9 துணை வடிநிலப் பகுதிகள்தான் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஏன் இந்த முரண்பாடு? முன்னால் அறிவித்தது 16 துணை வடிநிலப் பகுதிகள். இரண்டாவது நீங்கள் அறிவித்தது 12 துணை வடிநில பகுதிகளுக்கு 260 கோடி ரூபாய். ஆனால், இந்த ஆண்டு, சென்ற ஆண்டு நடைபெற்ற பணியைக் குறிப்பிடுகின்றபோது 6 துணை வடிநிலங்கள்தான் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன என்று நீங்கள் அறிவித்திருக்கின்றீர்கள். இந்த முரண்பாடு எதனால் வந்தது என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பின்னால்கூட விளக்கிக் கூறலாம். அதற்கு ஒன்றும் அவசரம் இல்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

சென்ற நிதிநிலை அறிக்கையில், விவசாயிகள் நீர்ப்பாசன வசதிகளை அமைப்பதற்காக வரும் நிதியாண்டில், தொடக்க வேளாண்மை வங்கி மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்மூலமாக



ரூபாய் 100 கோடி கடன் உதவி வழங்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். அந்தக் கடன் உதவி வழங்கப்பட்டதா என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொன்னால் போதுமானது.

விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்று சொல்லப்பட்டது. அதாவது 22 இலட்சத்து 31 ஆயிரத்து 487 பேருக்கு கடன் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு வரை எவ்வளவு பேருக்கு கடன் சான்றிதழ் வழங்கப்பட்டது? கடன் சான்றிதழ் வழங்கப்பட்ட விவசாயிகளில் பயிர்க் கடன் எத்தனை பேருக்கு வழங்கப்பட்டது?

அதாவது, 22 இலட்சத்து 39 ஆயிரத்து 487 பேருக்கு வழங்கப்பட்ட கடன் சான்றிதழ்களில் எவ்வளவு பேருக்கு நீங்கள் திரும்பவும் மறு கடன்கள் வழங்கியிருக்கிறீர்கள் என்பதைத் தெரியப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இவர்கள் எல்லாம் தவணை தவறியவர்கள் என்று முத்திரை குத்தப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு அவர்களுக்கு மறு கடன் வழங்காத ஒரு சூழ்நிலைதான் இப்போது தமிழகத்திலே இருக்கின்ற கூட்டுறவு வங்கிகளிலே எல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்தப் பிரச்சினையை சற்று நேரம் முன்னாலும் எழுப்பினார்கள். கிராமத்திலே உள்ள விவசாயிகளுடைய வாழ்க்கையில் இந்தக் கூட்டுறவு வங்கிகளிலிருந்து அவர்களுக்குக் கிடைக்கிற கடன், முறையாக அவர்களுடைய வேண்டுகோள் அடிப்படையில், எல்லோருக்கும் கிடைக்கவில்லை என்ற கருத்தை திரும்பத்திரும்ப எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இப்போதும் அது குறித்துத்தான் பேசிக்கொண்டிருக்கிறார். நான் அவருக்குத் தெரிவிக்க விரும்புகிறேன், கடந்த 8 ஆண்டு காலத்தில் 2001-வது ஆண்டிலேயிருந்து இந்தக் கூட்டுறவு வங்கிகள் மூலமாக மொத்தம் வழங்கப்படுகிற கடன் தொகை எவ்வளவு என்பதை நான் சொன்னால், இப்போது வழங்கப்படுவது குறைவு அல்ல என்பதை அவர் தெரிந்துகொள்வார்.

1999-2000-ல் 879 கோடி ரூபாய்; 2000-2001-ல் 1,049 கோடி ரூபாய்; 2001-2002-ல் 1,103 கோடி ரூபாய்; 2002-2003-ல் 963 கோடி ரூபாய்; 2003-2004-ல் 616 கோடி ரூபாய், வெறும் 616 கோடி ரூபாய்; 2004-2005-ல் 1,080 கோடி ரூபாய்; 2005-2006-ல் 1,132 கோடி ரூபாய்; 2006-2007-ல், கடந்த ஆண்டு 1,250 கோடி ரூபாய்; இப்போது 2007-2008-ல், 26-3-2008 வரையில் 1,323 கோடி ரூபாய் விவசாயிகளுக்குப் பயிர்க் கடனாக, அவர்களுடைய வேண்டுகோள் அடிப்படையில் வழங்கப்பட்டிருக்கிறது. இத்தனை ஆண்டுகளிலே அதிகம் வழங்கிய இந்த ஆண்டிலேதான் விவசாயிகளுக்குக் கடன் கிடைக்கவில்லை என்று ஒரு பெரிய விவசாயியாக இருக்கிற நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் இங்கே பேசுகிறார்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் சின்ன விவசாயிதான், பெரிய விவசாயி அல்ல. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டது, கடன் சான்று வழங்கியிருக்கிறீர்களே, தவணை தவறி கடன் தள்ளுபடி செய்யப்பட்ட விவசாயிகள், அந்த விவசாயிகளுக்கு மறு கடன் வழங்கியிருக்கிறார்களா? அவர்களுக்கு வழங்கவில்லை என்ற குறைபாடுதான் தமிழகத்தில் நிலவிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யார் யாருக்குக் கடன் கிடைக்கவில்லை என்ற பட்டியலை அவர்கள் விண்ணப்பித்த தேதி, கிடைக்கவில்லை என்ற அந்த நிலை ஆகியவற்றை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் எனக்கு அனுப்புவார்களேயானால், இப்போதுகூட, அந்தக் கடனை வழங்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தள்ளுபடி செய்யப்பட்டது 7 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்களே, அந்த 7 ஆயிரம் கோடி ரூபாய் கடன் தொகை, 5 தவணைகளில் 8 சதவிகித வட்டியுடன் தரப்படும் என்று 2007-2008 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ரூ.3,304 கோடி ரூபாயும் இதுவரை வழங்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. இதில் அசல் எவ்வளவு, வட்டி எவ்வளவு என்பதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொன்னால் போதும்.



**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பதிலே தேவை இல்லை. கடனுக்கு எவ்வளவு வட்டி என்பதை அந்தத் தொகைக்கு 8 சதவிகிதம் வட்டி என்றால், என்றைக்குக் கடன் தள்ளப்பட்டதோ அன்றிலிருந்து அந்த வட்டி, அந்தப் பணம் கூட்டுறவு வங்கிக்குக் கிடைக்கிற காலம் வரையில் அந்த வட்டியும் சேர்த்து வழங்கப்படும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ.3,304 கோடி ரூபாயை நீங்கள் வழங்கியிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். இதில் அசல் எவ்வளவு, வட்டி எவ்வளவு என்று கேட்கிறேன். 8 சதவிகித வட்டி எவ்வளவு என்றுதான் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்ட தொகை சொல்லப்பட்டிருக்கிறது. இந்தத் தொகையை வைத்துக்கொண்டு அவர்கள் இப்போது கேட்கிற விவசாயிகளுக்கான கடனை வழங்குவார்கள். வட்டி மொத்தம் எவ்வளவு இருந்தாலும், அந்த வட்டி உரிய காலத்தில் தரப்படும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் 1.15 கோடி பயனாளிகளின் குடும்பங்கள் கண்டறியப்பட்டு, 57.30 இலட்சம் குடும்பங்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டதாகவும், 152 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டிருந்தது. ஆனால், நடப்பு நிதியாண்டில், நம்முடைய நிதிநிலை அறிக்கையில், 1.66 கோடி உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. 1.15 கோடி உறுப்பினர்கள் இருந்தபோதும் 152 கோடி ரூபாய்; 1.66 கோடி உறுப்பினர்களாக உயர்ந்தபோதும், அதே 152 கோடி ரூபாய்தானா என்பதனை நான் இங்கே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-55

சென்ற ஆண்டு எவ்வளவு பயனாளிகளுக்கு நீங்கள் கொடுத்தீர்கள், எத்தனை கோடி ரூபாய் செலவானது என்ற கணக்கு விவரத்தையும் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரையில் சொன்னால் போதுமானது.

மாண்புமிகு அம்மா அவர்களால் கொண்டுவரப்பட்ட உன்னத, உயர்ந்த திட்டம், உழவர் பாதுகாப்புத் திட்டம். அந்தத் திட்டத்தின்மூலமாக கருவிலிருந்து ஒரு மனிதனுடைய வாழ்நாள் இறுதி வரை, உழவர்கள் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் அவர்கள் பயன்பெறுமாறு அந்தத் திட்டம் சிறப்பான திட்டமாக இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அமைச்சராகவும் இருந்தவர்கள், ஒரு காலத்தில் முதலமைச்சராகவும் இந்தச் சட்டமன்றத்தில் இருந்தவர்கள். ஆகவே, அவர்கள் எந்த ஆண்டு உழவர் பாதுகாப்புத் திட்டத்தை அவர்களுடைய தலைவி அல்லது முதலமைச்சர் அறிவித்தார் என்று தயவுசெய்து எண்ணிப்பாருங்கள். உங்கள் ஆட்சி கலைவதற்கு முதல் ஆண்டு, ஆட்சி மாறுவதற்கு முதல் ஆண்டு அறிவித்தார்கள். அதிலே செலவிடப்பட்ட பணம் மிகக் குறைவான தொகை. அப்போது வந்த உழவர் பாதுகாப்புத் திட்டம், அடுத்த ஆண்டு வருகின்றபோது, இடைக்கால பட்ஜெட்டைத்தான் நீங்கள் அறிவித்தீர்கள். மறுபடியும் நாங்கள் அந்த ஆண்டுக்கான பட்ஜெட்டை அறிவிக்கின்றபோது அந்த விவசாயிகளுடைய பாதுகாப்புக்கு அந்தத் தொகை ஒதுக்கப்பட்டது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டு, மூன்று மாத காலத்திற்குள்ளாகவே 201.56 கோடி ரூபாய்க்கான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்டது. இதுதான் விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டம். இவர்கள் நான்கரை ஆண்டு விவசாயத் தொழிலாளர்களுக்கெல்லாம் எந்த உதவியும் செய்யாமல், கலைஞர் அவர்கள் கொண்டு வந்த இந்தத் திட்டத்தை கலைத்த பெருமைதான் உங்கள் ஆட்சியைச் சேரும்.



(குறுக்கீடு) நான் சொல்கிறேன். உங்களுடைய ஆட்சிக் காலத்தில் 2005 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திலிருந்து 2006 மார்ச் வரைக்கும் நீங்கள் கொடுத்த தொகை வெறும் 87 கோடி ரூபாய்தான். ஆனால், நீங்கள் 200 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள். கொடுத்தது 87 கோடி ரூபாய்தான். (குறுக்கீடு) இல்லை, அதுதான் நான் சொல்கிறேன், கடைசியில் நீங்கள் அறிவித்ததில் கொடுத்த தொகை வெறும் 87 கோடி ரூபாய்தான். ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் கடந்த ஆண்டிலே மட்டும் 2 இலட்சத்து 45 ஆயிரம் பேருக்கு 130 கோடி ரூபாய் இதுவரை வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுவரை 130 கோடி ரூபாய் வழங்கியதாக இப்போது பதில் சொல்கின்றீர்கள். ஆனால், உங்களுடைய அறிக்கையில் 21 மாதங்களில் 56 கோடி ரூபாய் என்றுதான் இருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு விளக்கம். மீண்டும் 2006-லே கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடனே இந்த விவசாயத் தொழிலாளர் சமூகப் பாதுகாப்புத் திட்டத்தை சட்ட வடிவமாக்கி, அதற்குரிய அட்டை வழங்கினார். இதற்கு முன்னாலே நீங்கள் என்ன செய்தீர்கள் என்றால், ஆங்காங்கே இருக்கின்ற கிராம நிருவாக அலுவலர் யார் யாருக்கு அவர் எழுதிக் கொடுக்கின்றாரோ அவருக்கு உதவி வழங்கினீர்கள். தேர்தலுக்காக ஆகஸ்டிலே தொடங்கி, 8 மாதங்கள், தேர்தலை மனதிலே வைத்து நீங்கள் உதவி வழங்கினீர்கள். அதற்கு முறையான வடிவம் இல்லை. ஆனால், மீண்டும் தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன் இந்தத் திட்டம் எதிர்காலத்திலே, அ.தி.மு.க. ஆட்சியிலே கலைக்கப்பட்டதைப்போல, கலைக்கப்பட்டுவிடக்கூடாது என்று உறுதியை ஏற்படுத்துவதற்காக நாங்கள் சட்ட வடிவம் கொடுத்தோம். சட்ட வடிவம் கொடுத்து, அதற்கு அட்டை தனியாக அச்சடிக்கப்பட்டு நிதி வழங்கப்படுகின்றது. அதுதான் உண்மை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டப் பாதுகாப்பும், நிதிப் பாதுகாப்பும் கொடுத்தது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில்தான் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (குறுக்கீடு) நான் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

நீங்கள் விவசாயத் தொழிலாளர் நல வாரியம் என்று ஆரம்பித்தீர்கள். அந்த விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திற்கு என்று பட்ஜெட்டில் எந்த நிதியும் ஒதுக்கவில்லை. அதற்குரிய நிதியாதாரம், விவசாயிகள் கரும்பு வெட்டுகின்றார்களே, அந்தக் கரும்பை வெட்டுவதற்கு டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்றும், ஆலையிலிருந்து வெளியே கொண்டு போகும் சர்க்கரைக்கு டன் ஒன்றுக்கு ஒரு ரூபாய் என்றும் நீங்கள் அதற்கு செஸ் விதித்தீர்கள். அத்துடன் marketing society-யில் வெளியே கொண்டு வரப்படும் பொருட்களுக்கும் cess வசூலித்துதான் நீங்கள் நிதியாதாரத்தைக் கொண்டு வந்து, அந்த நிதியைக் கொண்டுதான் விவசாயத் தொழிலாளர் நல வாரியத்திற்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்படும் என்ற அரசாணை உங்கள் ஆட்சியில். . .

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நான் சொல்லிக்கொள்வது, மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்கள் 2000 ஆம் ஆண்டு இறுதியில்தான் கொண்டு வந்தார்கள். எப்படி அதற்கு நிதி ஒதுக்க முடியும்? (குறுக்கீடு) இருங்கள், கேளுங்கள். 2000 ஆம் ஆண்டு இறுதியில்தான் கொண்டு வரப்பட்டது. (குறுக்கீடு) இல்லை, அதற்காக விவசாயத் தொழிலாளர்களுக்கு எவ்வளவு தேவைப்படுகின்றதோ அவ்வளவு நிதியையும் ஒதுக்க முடியும் என்று தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்தார்கள். எவ்வளவு வேண்டுமானாலும் கொடுக்கலாம் என்று அறிவித்திருக்கிறார்கள்.

*நண்பகல் 12-00*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதற்குரிய நிதியை நீங்கள் அரசு பட்ஜெட்டிலே ஒதுக்கவில்லை. கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைத்த கதையாகத்தான் நீங்கள் நிதியை ஒதுக்கினீர்களேயொழிய, (குறுக்கீடுகள்) முழுவதையும் முடிக்க விடமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பொறுப்புள்ள எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசுகின்றபோது உண்மைக்கு மாறான ஒரு தகவலை இங்கே தருகின்றபோது நாங்கள் விளக்கம் தர கடமைப்பட்டிருக்கிறோம்.



முதலில், திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு இருந்தபோது, தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர், விவசாயிகள் சமூக நலப் பாதுகாப்பு திட்டம் என்று நாங்கள் தொடங்கினோம். அதே பெயரிலேயே நீங்கள் தொடர்ந்து இருக்கலாம். உங்களுடைய பெருந்தன்மை, 15-8-2005-ல் தமிழக முதலமைச்சர் உழவர் பாதுகாப்புத் திட்டம் என்று நீங்கள் பெயர் மாற்றினீர்கள். நீங்கள் பெயர் மாற்றி எவ்வளவு பேர் உறுப்பினர்கள் ஆனார்கள் என்ற கணக்கு இருக்கிறது. அந்த detail-க்குள் நான் போகவில்லை. இங்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 31-3-2006 வரை இத்திட்டத்தால் பயனடைந்தோர் 3,25,756. வழங்கப்பட்ட தொகை ரூபாய் 87.39 கோடிதான். ஆனால், இப்போது 2006-ல் மீண்டும் அதை விவசாயத் தொழிலாளர், விவசாயிகள் சமூக நலத் திட்டம் என்று முன்பிருந்த பெயரையே வைத்து இந்த ஓராண்டில் வழங்கப்பட்டிருக்கின்ற தொகை, 2006-ல் துவக்கப்பட்டு, இதுவரை 1,66,44,495 உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, இதிலே ரூபாய் 124,14,00,000 வழங்கப்பட்டிருக்கிறது. நிதியொதுக்கவில்லை என்று சொல்கின்றீர்கள். 2008-2009 ஆம் ஆண்டில் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் படித்தால் தெரியும். இதிலே 152 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் அதைத்தான் சொன்னேன். 1.15 கோடி பயனாளிகள் உறுப்பினர்களாக இருந்த காலத்திலும் 152 கோடி ரூபாய். 1.66 கோடி உறுப்பினர்கள் இருந்த காலத்திலும் 152 கோடி ரூபாய் என்று சொல்கிறீர்கள். இந்த விஜய் காம்ப்ளக்ஸ்-ல் 17:17:17 என்று சொல்கிற மாதிரி வருடம் முழுவதும் 152 கோடி; குறைந்ததாக இருந்தாலும் 152 கோடி, கூடுதலாக இருந்தாலும் 152 கோடி என்று இருக்கின்றதைச் சொல்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் மாசுபடாதவண்ணம் தடுக்க கழிவு நீரை முழுவதும் மாசற்றதாகச் சுத்திகரிக்கும் பொது சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க மத்திய அரசுமூலம் நிதியுதவி பெறப்படும் என்று நீங்கள் ஆளுநர் உரையில் சொல்லியிருந்தீர்கள். திருப்பூரில் 720 கோடி ரூபாய் செலவில் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்படும் என்று சொல்லியிருந்தீர்கள். ஆனால், இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் மாசுபடாதவண்ணம் தடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எதுவும் இல்லாதது பெரும் ஏமாற்றத்தை அளிக்கிறது.

ஏனென்று சொன்னால், இரசாயன தொழிற்சாலைக் கழிவுகள், தோல் தொழிற்சாலைக் கழிவுகள், சாயப்பட்டறைக் கழிவுநீர் மற்றும் கழிவுகளால் ஆறுகள் மற்றும் நீர் நிலைகள் மாசுபடுவதனால் பல நோய்கள் உருவாகி மனித இனம் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. மனித குலத்திற்கு பெரும் கேடு விளைவிக்கும் இந்த இரசாயனக் கழிவுகள்மூலம் பல்வேறு வகையான தோல் வியாதிகள், கண் பார்வைக் குறைவு போன்ற நோய்களும், எதிர்காலத்தில் பிறக்கும் குழந்தைகள் ஊனமுற்ற குழந்தைகளாகப் பிறக்கக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவும் ஆய்வுகள் கூறுகின்றன. ஆகவே, நிரந்தரத் தீர்வு காணவேண்டியது அரசின் கடமை என சுட்டிக்காட்ட கடமைப்பட்டுள்ளேன். அனைத்துக் கழிவுகளையும் குழாய்கள் மூலமாக கடலில் கொண்டுவந்து விடுவதுதான் இதற்கு நிரந்தரத் தீர்வாக இருக்கமுடியும் என்பதை நான் இந்த அரசினுடைய கவனத்திற்கு எடுத்துச்சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்தாண்டுகால நல்லாட்சியில் மின்சாரத் தட்டுப்பாடு இல்லாத மாநிலமாக ஒரு சரித்திர சாதனையை மாண்புமிகு அம்மா அவர்கள் படைத்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு மின்சாரத் தட்டுப்பாடு தமிழ்நாட்டை உலுக்கிக்கொண்டிருக்கின்றது. மத்திய தொகுப்பிலிருந்து மின்சாரம் குறைக்கப்பட்டிருக்கிறது என்று காரணம் சொல்லி பழியை மத்திய அரசின்மீது போட்டுத் தப்பித்துக்கொள்ளலாம் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். மத்தியத் தொகுப்பிலிருந்து குறைந்தால் வேறு வழிவகை காணப்பட்டிருக்கவேண்டும். அதுவும் செய்யாமல் இமாலயத் தவறாக அறிவிக்கப்படாத மின் வெட்டு இங்கே நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. (குறுக்கீடுகள்)

*பிற்பகல் 12-05*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர். மத்திய அரசாங்கத்தின்மேலே பழி போடவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் எப்போதும் மத்திய அரசாங்கத்தின்மீது பழியைப் போடவில்லை. ஆனால் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே தயவுசெய்து மின்சாரத் தட்டுப்பாடு எங்கே இருக்கிறது? (குறுக்கீடு) சிரிப்பது ஒரு பதில் ஆகிவிட முடியாது. நான் தைரியமாகக் கேட்கிறேன்.



புள்ளிவிவரங்கள் இருக்கின்றன. முன்னாள் மின்சாரத் துறை அமைச்சர் இருக்கிறார். அவர் நேராக Load Despatching Centre-ல் போய்ப் பார்க்கட்டும். மார்ச் மாதம் 3 ஆம் தேதியிலிருந்து இன்றுவரையிலே கூடுதலாக நம்மிடத்திலே 400 மெகா வாட்டிலிருந்து 1,100 மெகா வாட் வரை மிச்சமாகி இருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இந்த மாதம் மழை பெய்த காரணத்தால் விவசாயிகள் பம்புசெட்டுகளை அதிகமாகப் பயன்படுத்தவில்லை. ஆகவே, 1,500 மெகா வாட் மின்சாரம் பயன்படுத்தமுடியாமல் 3 நாளைக்கு முன்னாலேகூட இரவு நேரங்களிலே வெளி மாநிலங்களுக்கு நாம் விற்பனை செய்திருக்கிறோம். இன்றையதினம் கையிருப்பு 424 மெகா வாட். ஆகவே, தமிழ்நாட்டிலே ஏதோ மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது என்று அ.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் தொடர்ந்து பேசுவதை ஒரு தொழிலாக வைத்திருக்கிறீர்களே தவிர (குறுக்கீடுகள்) நான் உறுதியாகச் சொல்கிறேன். தமிழ்நாட்டிலே கடந்த ஒரு மாத காலமாக எங்கேயாவது ஒரு இடத்தில் Load shedding இருந்தது என்று ஆதாரத்தோடு சொல்லுங்கள்; நீங்கள் எதைச் சொன்னாலும் நான் பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த சில தினங்களுக்கு முன்பாக மின்சாரத் தட்டுப்பாடு குறித்து நாம் இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தைவிட தேவை அதிகமாக இருக்கிறது. அதிகமாக இப்போது மின்சாரம் தேவைப்படுகிறது. அதனால் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னார். இப்போது உபரி மின்சாரம் கையிருப்பில் இருப்பதாகக் கூறுகிறார். ஒரே வாரத்திற்குள் அளவுக்கு அதிகமான மின் உற்பத்தியை எந்த வகைகளிலிருந்து அவர்கள் கொண்டு வந்து சேர்த்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Power Trading Corporation-லிருந்து மின்சாரத்தை வாங்கியிருக்கிறோம். கேரளாவிலேயிருந்து வாங்கியிருக்கிறோம். பஞ்சாபிலேயிருந்து வாங்கியிருக்கிறோம். இப்படி வட மாநிலங்களிலே நீர் மின்சாரத்தின் மூலமாக எங்கெங்கே உற்பத்தி செய்கிறார்களோ அவர்களிடத்திலேயிருந்தெல்லாம் வாங்கியிருக்கிறோம். இப்போது நமக்குத் தேவை இல்லை. இருந்தாலும் திடீரென்று இந்த மழை

நின்றுவிட்டு கோடைக் காலத்திலே நமக்கு மின்சாரத் தேவை அதிகமானால் என்ன செய்வது என்று சொல்லி, முன்கூட்டியே 9,100 மெகா வாட் வரையிலே நாம் மின்சாரத்தை தமிழகத்திற்குப் பெற்றுக் கொண்டிருக்கிறோம் என்பதை நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிறபோது மின் வெட்டே தமிழ்நாட்டில் இந்த ஒரு மாத காலமாக இல்லையென்று சொன்னார்கள். அனைத்துத் தொழிற்சாலைகளும் வாரத்திற்கு ஒரு நாள் நீங்கள் விடுமுறை விடவேண்டும்; இல்லையென்றால், மின்சாரத்தை ஓட்டினால் fuse உடனடியாகப் பிடுங்கப்படும் என்று சொல்கிறார்களே, அது எங்கே! நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழ்நாட்டிலா அல்லது கேரளாவிலா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொறுப்புள்ள எதிர்க்கட்சியினுடைய கொறடா அவர்கள் இப்படித் தவறான தகவலைத் தரக் கூடாது. எந்தத் தொழிற்சாலைகளிடமும் fuse பிடுங்கிவிடுவோம் என்று சொல்லவில்லை. (குறுக்கீடு). தயவுசெய்து சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். அனைத்துத் தொழில் அதிபர்களையும் நாமக்கல்லார் மாளிகையிலே கூப்பிட்டு எல்லோரும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறை விடுகிறீர்கள். அதனாலே ஞாயிற்றுக்கிழமையில் மின்சாரம் அதிகமாக இலாகாவிலே இருக்கிறது. Staggering holidays என்று சொல்வதைப்போல 6 மண்டலங்களாக தமிழகத்தைப் பிரித்து ஒவ்வொரு வாரத்திற்கு ஒரு நாள் விடுமுறை விடுங்கள் என்று கேட்டோம். அவர்கள் மகிழ்ச்சியாக ஏற்றுக் கொண்டார்கள். தொழில் அதிபர் ஒருவர்கூட அந்த இடத்தில் "இல்லை; எங்களுக்கு staggering holidays" வேண்டாம் என்று சொல்லவில்லை. வேண்டுமானால் எந்தத் தொழில் அதிபரிடத்தில் வேண்டுமானாலும் கேட்டுக்கொள்ளுங்கள். பிறகு கோயம்புத்தூரிலிருந்து மட்டும் சிறு தொழிற்சாலைகள் சார்பாக அவர்கள் ஒரு விண்ணப்பம் வைத்தார்கள். எங்களுக்கு விதி விலக்கு தாருங்கள் என்று கேட்டார்கள். அந்த விதி விலக்கும் நாங்கள் தந்திருக்கிறோம். தொழிற்சாலைகளுக்கு எப்படியும் வாரத்திலே ஒரு நாள் விடுமுறை



விட்டுத்தான் ஆக வேண்டும். அதை ஞாயிற்றுக்கிழமைக்குப் பதிலாக திங்கட்கிழமை விடுங்கள். இன்னொரு மண்டலத்திலே செவ்வாய்க்கிழமை விடுங்கள் என்று கேட்டுக்கொண்டோமே தவிர, வேறல்ல. அப்படி அவர்களுக்கு கொடுத்த காரணத்தால் அவர்களுக்குத் தேவையான மின்சாரம் எந்தத் தடையுமின்றி அனைவருக்கும் கிடைக்கிறது. அதுதான் உண்மை.

பிற்பகல் 12-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், ஒரு மணி நேரம் ஆகிவிட்டது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பாதி நேரம்கூட, 25 நிமிடங்கள்கூட நான் பேசவில்லை. 25 நிமிடங்கள்கூட நான் பேசவில்லை. எல்லாம் குறுக்கீடுகளில்தான் போய்க்கொண்டு இருக்கிறது. டைம் முழுவதும் குறுக்கீட்டில்தான் போய்க்கொண்டிருக்கிறது. நேரம் வேண்டுமானால் 1 மணி இருக்கலாமேயொழிய 25 நிமிடங்கள்தான் நான் பேசியிருக்கிறேன். டைம் எல்லாம் குறுக்கீடுகளில்தான் போய்க்கொண்டு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 11-09-க்குப் பேச ஆரம்பித்தீர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாரம் ஒரு முறை விடுமுறை. அந்த நாட்களில் மின் சப்ளை நிறுத்தப்படும் என்று இங்கே சொல்லி இருக்கின்றீர்கள். ஆனால், தினந்தோறும் மாலை 6 மணி நேரம் தமிழகத்திலே இருக்கிற அனைத்துத் தொழிற்சாலைகளிலும் உற்பத்தியை நிறுத்த வேண்டும் என்று நீங்கள் வாய்மொழி மூலமாக உத்தரவு பிறப்பித்திருக்கிறீர்கள் என்று நான் இங்கே சுட்டிக்காட்ட கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் வாய்மொழிமூலமாக எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை. தேர்வு எழுதக்கூடிய இந்தக் காலகட்டத்தில் ஒரு மாதம், எஸ்.எஸ்.எல்.சி., +2 போன்ற தேர்வுகள் நடக்கின்ற காரணத்தால் அந்த மாணவர்களுக்கு தமிழகம் எங்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று எண்ணிய காரணத்தால் 6 மணியில் இருந்து 10 மணி வரையில் தொழிற்சாலைகளிலே furnace oil பயன்படுத்துகின்றவர்களுக்கு அந்த வரியைக் குறைக்கின்றோம் என்று

சொல்லியும், 10 பைசா மின்சாரச் சலுகை கொடுக்கிறோம் என்று சொல்லியும், அந்த 4 மணி நேரம் கேட்டோம். தொழிலதிபர்கள் அதில் ஒத்துழைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதனால்தான் மாணவர்கள் எந்தவிதமான பிரச்சினையும் இல்லாமல் தேர்வுகளை எழுதிக் கொண்டிருக்கிறார்கள். தேர்வுகள் ஏப்ரல் மாதத்தில் இன்னும் ஒரு வாரத்தில் முடிந்துவிடும். அதற்குப் பிறகு அதைக்கூட இந்த அரசு நீக்கிவிட இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடுமலைப்பேட்டை, தாராபுரம் போன்ற பகுதிகளிலே, காற்றாலைமூலம் பெருமளவிற்கு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது. காற்று அதிகமாக வீசும் மாதங்களான ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் அங்கே இருக்கின்ற காற்றாலை உற்பத்தியாளர்களிடம் 60 சதவிகித மின்சாரம் நீங்கள் உற்பத்தி செய்தால்போதும் என்ற தகவலும் மின்சாரத் துறையிலே இருந்து சென்று கொண்டிருக்கிறது. அதற்கு அவர்கள் சொல்லுகின்ற காரணம் உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தை grid-க்குக் கொண்டு செல்வதற்குத் தேவையான தொழில்நுட்ப ஏற்பாடுகள், அதாவது transformer-களை அந்தப் பகுதியில் நிறுவாத காரணத்தினால்தான் அந்தப் பகுதியில் காற்றாலைமூலம் கிடைக்கவேண்டிய மின்சார இழப்பு ஏற்பட்டதுடன், அங்கே இருக்கின்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்வது உண்மை. அது இந்த ஆட்சியில் அல்ல. அதற்கு முன்பு அப்படிப்பட்ட ஒரு நிலைமை இருந்தது. நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டவுடனே காற்றாலைமூலம் மின்சாரம் உற்பத்தி செய்கின்றவர்கள் யாராக இருந்தாலும், அவர்களுக்கு grid-லே connection கொடுக்க முடியவில்லை என்று சொன்னால் உடனடியாக சப்-ஸ்டேஷனை அங்கே நிறுவி காற்றாலைகள்மூலம் உற்பத்தி செய்கின்ற அனைத்து மின்சாரத்தையும் கிரிட்டுக்குக் கொண்டு வந்து நாம் விற்பனை செய்துகொண்டிருக்கிறோம். அதுதான் உண்மை. அதனாலே எவ்வளவு பணம் வந்தது என்பதெல்லாம் நாளைக்குப் பதில் சொல்கிறேன்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது 2007 ஏப்ரல், மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில்தான் அந்தத் தகவல்கள் அங்கே சென்று கொண்டிருந்தன என்று சொல்கிறேன். இருப்பினும் பரவாயில்லை. ஏற்கெனவே நான் சொன்னேன். நம்முடைய மின் துறை அமைச்சர், சட்டமன்றத்தில் சொல்லும்போது அண்ணா தி.மு.க. ஆட்சியிலே இருந்ததைவிட இப்போது அதிகமான அளவு தேவை கூடியிருக்கிறது. மின்சாரத் தேவை கூடியிருக்கின்றது; அதனால்தான் இப்போது மின்சாரத் தட்டுப்பாடு என்று நீங்கள் சொன்னீர்கள். குறைந்த அளவு மின்சார நிறுவுதிறனை வைத்துக்கொண்டு அதிக அளவு நீங்கள் எப்படி மற்ற, மற்ற நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்தீர்கள் என்பதை நான் இன்றைக்கு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன். ஏற்கெனவே மின்சாரம் பெற்று ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்களை முதலீடு செய்த அந்தத் தொழிற்சாலைகள் இப்போது பாதிப்படைந்திருக்கின்றன. புதியதாக நிறுவிய தொழிற்சாலைகளும் இப்போது பாதிப்படைந்திருக்கின்ற ஒரு சூழ்நிலை, நம்முடைய மின்சாரத் துறையிலே திட்டமிடாத காரணத்தினால் அவர்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை இழப்பாக சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த தொழிலதிபர் அல்லது தொழிற்சாலை, அப்படி ஒரு இழப்பீடுக்கு ஆளாகியிருக்கின்றார்கள் என்ற விவரம் தந்தால் நாளைக்கு பதில் சொல்ல ஏதுவாக இருக்கும். கழக ஆட்சியில் 13 MoU-க்கள் போடப்பட்டு 10 புதிய தொழிற்சாலைகள் இயங்கிக்கொண்டு இருக்கின்றன. அந்த 10 புதிய தொழிற்சாலைகளுக்குத் தேவையான மின்சாரம் முழுவதுமாக நாங்கள் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1 கிலோ அரிசி, 2 ரூபாய் என்று சொல்லி அந்த அரிசியை முறையாக ரேஷன் கடைகளில் விநியோகம் செய்யாமல்

பெரும் பகுதி அரிசியை அண்டை மாநிலத்திற்கு கடத்துகின்ற நிகழ்வு தினந்தோறும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. பொதுமக்களின் வசதிக்காக திருவிழா மற்றும் விடுமுறைக் காலங்களில் சிறப்பு இரயில் விடும் நிலைமையெல்லாம் மாறி இன்றைக்கு அரிசியை, இரயிலில் கடத்துகின்ற, சிறப்பு இரயில் விடப்படுகின்ற நிலை ஏற்பட்டிருக்கின்றது. அரிசியின் அளவு மூட்டைகளில் சரியாக வருவதில்லை. ஏனென்று கேட்டால், அங்கே இருக்கின்ற கடை ஊழியர்கள் பெருச்சாளி சாப்பிட்டு விடுகிறது என்று சொல்கிறார்கள். அது என்ன பெருச்சாளி என்று கேட்டால் பழம்பெருச்சாளி என்று அவர்களிடமிருந்து பதில் வருகிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் வழங்கப்பட்ட புதிய 38 இலட்சம் குடும்பக் கார்டுகளுக்கு இதுவரை மண்ணெண்ணெய் வழங்கவில்லை. மத்தியிலும் நீங்கள் மாநிலத்திலும் நீங்கள். ஏன் இந்த அவல நிலை?

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயிலிலே கடத்துவதாக நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். அது பாண்டிச்சேரியிலே நடந்த சம்பவம் என்கின்ற காரணத்தினால் C.B.I. enquiry-க்கே விட வேண்டுமென்று தமிழக முதலமைச்சர் பரிந்துரை செய்து இப்போது அது C.B.I. enquiry-ல் இருக்கிறது. எங்களிடத்திலே மடியிலே கனம் இல்லை. அதனால் எங்களுக்கு ஒன்றும் வழியிலே பயம் இருக்கவேண்டிய அவசியம் இல்லை; ஒன்று. அடுத்து (குறுக்கீடு) பேசுகிறேன் கேட்டுக்கொள்ளுங்கள். பதில் சொல்கிறேன் கேட்டுக்கொள்ளுங்கள், அல்லது திரும்ப பதில் சொல்லுங்கள். அதற்காக சத்தம் போட்டால் எப்படி? இருக்கிற உண்மையைச் சொல்கிறோம். மண்ணெண்ணெய் வழங்கப்படவில்லையென்று சொன்னீர்கள். 39 இலட்சம் கார்டுகளை நீங்கள் கொடுத்துவிட்டுப் போய்விட்டீர்கள். ஆனால், இப்பொழுது பொங்கலிலிருந்து 39 இலட்சம் கார்டுகளுக்கும் 1 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்க வேண்டுமென்று சொல்லி ஆணை பிறப்பித்துவிட்டோம். இந்த மார்ச் மாதம் 2-வது லிட்டர் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுவிட்டது. அதனால், மண்ணெண்ணெய் கொடுக்க ஆரம்பித்துவிட்டோம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை உயராமல் தடுப்பதற்காக சமையல் எண்ணெய், பருப்பு போன்ற பொருட்கள் நியாயவிலைக் கடைகளில் வழங்கப்படும் என்று சொல்லப்பட்டது.



ஆனால் எங்கும் முறையாக முழுமையாக வழங்கப்படவில்லை. ஆளுநர் உரையில், விலைவாசி உயர்வு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை விண்ணை முட்டிக்கொண்டு, கண்டம் விட்டு கண்டம் பாய்ந்துகொண்டு, உயர்ந்துகொண்டே போய்க்கொண்டிருக்கிறது. மக்களின் தினசரி செலவு, மாதாந்திர செலவுகள் வருமானத்தைக் காட்டிலும் கூடுதலாகி, நிம்மதியற்ற தன்மை அனைத்துத் தரப்பு மக்களின் மத்தியிலும் நிலவுகின்றது. உற்பத்தி செய்யப்படுகின்ற விவசாயிக்கு விலை இல்லை. ஆனால், அந்தப் பொருள் வெளிச் சந்தையில் அளவுக்கு அதிகமான விலையில் விற்கப்படுகிறது. மக்களுடைய இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிப்பு அடைகின்ற ஒரு அபாயகரமான சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. உடனே ஆளுகின்ற இந்த அரசு அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல கட்டுமானப் பொருட்களின் விலையோ எட்டிப் பிடிக்கமுடியாத அளவுக்குப் போய்க்கொண்டேயிருக்கிறது. எங்கு போய் நிற்குமென்றே தெரியவில்லை. கம்பியின் விலை மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் டன் ரூ. 21,000 ஆக இருந்தது. இன்றைக்கு 54,000 ரூபாயாக அது உயர்ந்துள்ளது. ஜல்லி விலையும் தாவித் தாவிக் குதித்து உயர்ந்துகொண்டே இருக்கிறது. சிமெண்ட் விலை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மூட்டை 160 ரூபாயிலிருந்து இன்றைக்கு 260 ரூபாயாக உயர்ந்துள்ளது. இவையெல்லாம் தனியார் ஆலையிலிருந்து வருகின்ற பொருட்கள். இந்த மணலுக்கு என்னவாயிற்று? எந்த நாட்டிலிருந்து, எந்தக் கப்பலிலிருந்து மணல் இறக்குமதி செய்யப்படுகிறது? இந்த கனிமப் பொருளான மணல் நம் தமிழ்நாட்டுப் பகுதியிலே படிந்திருக்கின்ற நதிகளிலிருந்து கிடைக்கின்றது. அளவுக்கு அதிகமாக நம்மிடம் இருந்தும், அரசுக் கட்டுப்பாட்டில் அந்தத் துறை இருந்தும், மணல் மட்டும் எங்கோ போய்க்கொண்டிருக்கிறது. அடுத்த மாநிலங்களுக்கு கடத்தப்படுவதால் விலை ஏற்றம் ஏற்படுகின்றது. நீர் வளமும் குறையக்கூடிய வாய்ப்பு உருவாகியிருக்கிறது. குடிநீர் மற்றும் விவசாயக் கிணறுகளில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்டு வருங்காலங்களில் நாட்டைப் பெறும் பாதிப்புக்குள்ளாகும் இந்தச் செயலை அரசு ஏன் தடுத்து நிறுத்த முன்வரவில்லை என்பது புதிராகத்தான் உள்ளது என்பதை நான் இங்கே கூறுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, 'அண்ணன் கட்டிய வழி அம்மா' என்று சொல்வார்கள். இந்த மணலில் நீங்கள் காட்டிய வழிதான்; அதிலிருந்து போட்ட சட்டத்திலிருந்து, திட்டத்திலிருந்து, அந்த நடைமுறையிலிருந்து நாங்கள் எதுவும் மாறவில்லை. உங்கள் ஆட்சியில் அரசுக்கு வருமானத்தைக் கூட்டியதுபோல், நாங்களும் கூட்டியிருக்கிறோம்; அதிகமாகக் கூட்டியிருக்கிறோம். மேலும் ஒரு விளக்கம். குற்றமாக இல்லாமல் நீங்கள் ஒரு விளக்கமாகக் கேட்டால் ஒன்றைச் சொல்கிறேன். உலக வங்கித் திட்டத்தின்கீழ் 2007-2008-ல் 12 sub-basin எடுக்கிறோம் என்று சொன்னீர்கள். அதில் இந்த வருடம் 9 தான் எடுத்தீர்கள். அது என்ன ஆயிற்று என்று கேட்டீர்கள்? அதைத்தான் இந்த வருடம் 2008-2009 பட்ஜெட்டிலே ரொம்ப clear ஆகச் சொல்லியிருக்கிறோம். 2007-2008-ல் 12-ல் 9 எடுத்துவிட்டோம்; அதிலே மீதம் 3 இருக்கிறது. இந்த வருடம் எடுக்க வேண்டியது 13. அதையும் சேர்த்து 16 என்று clear ஆகச் சொல்லியிருக்கிறோம். அது என்னுடைய துறை கொள்கை விளக்கக் குறிப்பில் வரும். பட்ஜெட்டிலே அவ்வளவுதான் போடுவார்கள். நீங்கள் policy note-ல் பார்க்கலாம்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** சிமென்ட் விலையைப்பற்றி நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்னார். சிமென்ட் விலை அதிகமாக ஏறிவிட்டது என்கின்ற காரணத்தினால் தனியார் முதலாளிகளையெல்லாம் நேரடியாக அழைத்து பொதுமக்களுக்கு சிமென்ட் விலையைக் குறைக்க வேண்டுமென்ற திட்டத்தின், முயற்சியின் காரணத்தினால் 1,000 Sq.ft. நீங்கள் பில்டிங் கட்டினீர்கள் என்று சொன்னால் 400 மூட்டை நீங்கள் ரூ.200-விலையில் வாங்க முடியும் என்ற அடிப்படையிலே ஏற்பாடு செய்து, இன்றுவரை கிட்டத்தட்ட 44 ஆயிரத்து 626 மெட்ரிக் டன் சிமென்ட் ரூ.200-க்கு இன்றைக்கு நேரடியாக ஏழையெளிய மக்கள் பயன்படுகின்ற அளவுக்கு 1,000 Sq.ft.-க்கு கொடுத்திருக்கிறோம்.

பிற்பகல் 12-20

பெரிய முதலாளிகள், Promoters எல்லாம் கட்டுவதற்கு, வெளிநாட்டிலேயிருந்து 220 ரூபாய் என்கிற விலைக்கு இறக்குமதி ஆகி கிட்டத்தட்ட 3,127 மெட்ரிக் டன் சிமென்ட் இப்போது விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது. ஆக, சிமென்ட் விலையைக் கட்டுப்படுத்தி ஏழைகளுக்குக் கொடுக்க வேண்டும், நடுத்தர மக்களுக்குக் கொடுக்க வேண்டும், Promoters-ஆக இருப்பவர்களுக்கும் கொடுக்க



வேண்டுமென்ற அந்த நல்ல நோக்கத்திலேதான் இன்றைக்கு சிமென்ட் விலையைக் கட்டுப்பாட்டிலே இந்த அரசு வைத்திருக்கிறது.

பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவுக்கு (குறுக்கீடு) ஒரு நிமிஷம் கேட்டுக்கொள்ளுங்கள். பொது விநியோகத் திட்டத்தைப் பொறுத்த அளவிற்கு, விலையைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட விலையிலே கொடுத்திருக்கிறோம். அதிலே பார்த்தால், கிட்டத்தட்ட 18,501 மெட்ரிக் டன் துவரம் பருப்பு குறைந்த விலையில் கொடுத்திருக்கிறோம். உளுத்தம் பருப்பைப் பொறுத்த அளவுக்கு 10,683 மெட்ரிக் டன் குறைந்த விலையிலே இன்றைக்கு பொது விநியோகக் கடையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. பாமாயிலைப் பொறுத்த அளவிற்கு 21,234 கிலோ லிட்டர் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவெல்லாம் விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அரசாங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி என்பதை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர், 71 நிமிடங்கள் ஆகியிருக்கின்றன.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்னும் 10 நிமிடங்களிலே உரையை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் பதிலுரை இருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்னும் ஒரு 10 நிமிடங்களில் உரையை முடித்துவிடுகிறேன். 12-30 மணிக்குள்ளே முடித்துவிடுகிறேன். அரை மணி நேரம் குறுக்கீடு, பாருங்கள். நான் பேசுவது ஒரு வார்த்தை. அவர்கள் பேசுவது 100 வார்த்தைகள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்பதற்குப் பதில் சொல்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் கேள்வி கேட்கிறீர்கள். அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து பஸ் கட்டணம் உயர்த்தவில்லை என்று சொல்லி முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைக்கத் தீவிரமாக முயற்சி செய்துகொண்டிருக்கின்றார்கள். நேற்றுகூட மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்

பதில் சொல்கின்றபோது நாலில் ஒரு பங்கு பஸ்கள்தான் சிறப்புப் பஸ்கள், அதில் பஸ் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சென்னை மாநகரத்தில் ஓடிக்கொண்டிருக்கின்ற பஸ்களினுடைய நிலையைப் பற்றி அவர்கள் சொன்னார்கள். ஆனால், மாநிலத்திலே இருக்கின்ற பிற பகுதிகளில் நகரப் பேருந்துகள் தவிர, மற்ற பேருந்துகளில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 5 சதவிகிதப் பேருந்துகள் மட்டுமே சிறப்புப் பேருந்துகளாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், தற்போது 75 சதவிகிதப் பேருந்துகள் சிறப்புப் பேருந்துகள் என்ற பெயரில். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே கருத்தைச் மீண்டும் மீண்டும் சொன்னால், அது உண்மையாகிவிடாது. நாங்கள் உங்களிடம் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். ஏற்கெனவே, உங்களுடைய காலத்தில் ஓடிக்கொண்டிருந்த மொத்தப் பேருந்துகளுடைய எண்ணிக்கை 16,500. இப்போது ஓடிக்கொண்டிருக்கின்ற பேருந்துகளுடைய எண்ணிக்கை 19,500. திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு எந்த இடத்திலேயும் ஒரு பைசாகூட கட்டணம் ஏற்றப்படவில்லை. அனைத்து வகையான அரசாணைகளையும் வெளியிட்டது நீங்கள். நீங்கள் அரசாணையை வெளியிட்டுவிட்டு அதற்குப் பேருந்துகள் விடவில்லை. நாங்கள் அதற்குப் பேருந்துகள் விட்டிருக்கிறோம். அவ்வளவுதான். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கின்றேன். அரசாணையை வெளியிட்டு சிறப்புப் பேருந்துகள் என்று 5 சதவிகிதம்தான் புறநகர்ப் பேருந்து. . . (குறுக்கீடு)

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன, திரு. விஜயகாந்த்?

***திரு. விஜயகாந்த்:** மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும் மீண்டும் நானும் அதே பிரச்சினையைத்தான் எழுப்ப வேண்டியதிருக்கிறது. தயவு செய்து அமைச்சர் அவர்கள் தவறாக



எடுத்துக்கொள்ள வேண்டாம். எந்த அரசாணையும் வரவில்லை என்கிறார்கள். அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 23 ஸ்டேஜ் வரைக்கும் ஒரு ரேட் போட்டிருந்தார்கள். அதற்குப் பிறகு உள் துறை, அரசாணை எண் 707 என்பதிலே 24, 25, 26, 27, 28 வரைக்கும் 5 ஸ்டேஜுக்கும் ஒவ்வொரு ரூபாய் கூட்டியிருக்கிறார்கள். அது 707 என்கிற அரசாணை எண்ணிலே இருந்ததுதான். அதுபோல். . .

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நகரப் பேருந்துகளெல்லாம் மாநகரத்திலே ஓடுகின்றபோது. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. விஜயகாந்த்.

**திரு. விஜயகாந்த்:** தலைவர் அவர்களே, அந்த அரசாணை இருக்கிறதனாலேதான் நான் கேட்கிறேன். அதிலே ஒவ்வொரு ஸ்டேஜுக்கும் எப்படி ஒவ்வொரு ரூபாய் கூட்டப்பட்டது? 50 காசுதான் முதலில் கூட்டியிருக்கிறார்கள். கடந்த அண்ணா தி.மு.க. ஆட்சியிலே இருப்பதைத்தான் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லிவிட்டு ஸ்டேஜ் வகைகள் ஏறியிருக்கின்றன. அதே மாதிரி நேற்று சொன்ன கணக்கையும் இன்றைக்குக் காலையிலே சொன்ன அந்தக் கணக்குகளையும் பார்க்கும்போது பார்த்தால், நேற்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், சாதாரண பஸ் 856, ஆனால் M-service 506, SSS 735, Express 243, Deluxe 309, Volvo 10. நியாயமாகப் பார்த்தால், பொதுமக்கள் சாதாரண பஸ்ஸைத்தான் அதிகமாக எதிர்பார்க்கிறார்கள், ரேட் கம்மியாக இருக்கிறது என்று. ஆனால், அதிகமாக இந்த M-services, SSS services என்பது கிட்டத்தட்ட 1,803 பஸ்கள் அதிகமாக ஓடுவதனால்தான் ஆட்சியாளர்களுக்கு, அதாவது தமிழக அரசுக்கு 20 கோடி ரூபாய் அதிக இலாபம் வந்திருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல வருகிறேன். ஆக, மறைமுகமாக டிக்கெட் விலை ஏற்றப்பட்டிருக்கிறது என்றுதான் நான் சொல்கிறேனே தவிர, வேறு எந்தக் காரணமும் இல்லை. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். முதலமைச்சர் அவர்கள் கருணையோடு நிச்சயமாக இதைப் பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கிறார், 23, 24, 25 ஸ்டேஜுகளில் ஒவ்வொரு ரூபாய் கூட்டப்பட்டிருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அதுகூட 40 கிலோ மீட்டர் வரை ஏற்கெனவே

நகரப் பேருந்துகள் நகரத்தில் இயக்கப்படலாம் என்றிருந்த சட்டத்தை, புறநகர்ப் பகுதிகள் விரிவாக்கப்பட்டுவிட்ட காரணத்தால் அவர்களுக்கு நன்மை ஏற்படவேண்டுமென்ற நோக்கத்தோடு 50 கிலோ மீட்டர் தூரத்திற்கு இன்னும் நீட்டியிருக்கிறோம்.

*பிற்பகல் 12-25*

அதனால்தான் ஒவ்வொரு ஸ்டேஜ் கூட வருகிறது. அந்த ஸ்டேஜ்கூட ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட அதே தொகைக்கு தான் கொடுத்திருக்கிறோமே தவிர வேறு எந்தத் தொகையும் நிர்ணயிக்கப்படவில்லை. அது ஒன்று. இப்போது சொல்கிறார்கள் 20 கோடி இலாபம் வந்திருக்கிறது என்று. 20 கோடி இலாபம் அல்ல. 20 கோடி கூடுதலாக வசூலாகியிருப்பதற்குக் காரணம் டிக்கெட் ஏற்றப்பட்டது அல்ல. பேருந்துகளைக் கூட்டியிருக்கிறோம். அதிக இடங்களுக்கு பேருந்துகளை விட்டுக்கொண்டிருக்கிறோம். நாள் ஒன்றுக்கு சராசரியாக 40 இலட்சம் பேர் சென்னையிலே பயணித்தார்கள் என்று சொன்னால், இப்போது 45 இலட்சம் பயணிகள் சென்னையிலே பயணிக்கிறார்கள். அதிலே வந்த கூடுதல் வருவாயே தவிர கட்டண ஏற்றத்தால் வந்த வருவாய் அல்ல அது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி. நீங்கள் பேசுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) நீங்கள் கேட்டீர்கள். பதில் சொல்லிவிட்டார். திரு. விஜயகாந்த், பதில் சொல்லிவிட்டார்கள். உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இன்றைக்கு மறைமுகமான முறையில் சிறப்புப் பேருந்து என்ற பெயரில் 75 சதவிகிதப் பேருந்துகளுக்கு நீங்கள் கட்டணத்தை மிகவும் உயர்த்திக் கொடுத்திருக்கிறீர்கள். அதோடுமட்டுமல்லாமல் புதிய வழித்தடங்களிலும் பலப் பல வண்ணங்களிலே விடப்பட்டிருக்கின்ற புதிய பஸ்களிலும் இந்தக் கட்டண உயர்வு நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்று நான் இங்கே குற்றம்சாட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். சிறப்புப் பேருந்துகள் என்ற பெயரில் நீங்கள் உயர்த்தியிருக்கின்ற பஸ் கட்டணத்தை அறிவித்தால் நாட்டு மக்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும் என்று பயந்து, நடுங்கி....

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் அறிவிப்பது ஒன்றும் இல்லை. ஏற்கெனவே நீங்கள் அறிவித்த அந்தக் கட்டணத்தைத்தான் ஓட்டிக்கொண்டிருக்கிறோம். அதிலே எந்த மாற்றமும் இல்லை. (குறுக்கீடுகள்) ஏற்கெனவே என்ன உங்கள் ஆட்சியிலே கட்டணம் நிர்ணயிக்கப்பட்டதோ அதே கட்டணத்தைக் கொண்டுதான் அந்தப் பேருந்து ஓடுகிறது. நீங்கள் சொல்வதுபோல சிறப்புப் பேருந்துகள் என்று கலர் கலராக விடுவதற்குக் காரணம் முதலமைச்சர் அரசாங்கப் பணத்தைத் தருகிறார். நல்ல பேருந்தாக வாங்கி ஓட்டுகிறோம். நீங்கள் ஓட்டவில்லை என்றால் அதற்கு நாங்கள் என்ன பண்ணமுடியும்? (மணியடிக்கப்பெற்றது)



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உயர்த்தியதாகச் சொன்னார். உண்மைதான். 5 சதவிகித பஸ்கள்தான் புறநகர்ப் பகுதியிலே நாங்கள் ஓட்டி, உயர்த்திக் கொடுத்தோம். ஆனால் இப்போது 75 சதவிகித பஸ்கள் உயர்ந்த கட்டணத்தில் சிறப்புப் பேருந்து என்ற பெயரில் ஓடிக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவிப்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 75 சதவிகிதம், 75 சதவிகிதம் என்று சொல்வது தவறு. மொத்தப் பேருந்துகளினுடைய எண்ணிக்கை (குறுக்கீடு) மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் விசுவநாதன் ஏதாவது சொல்லவேண்டும் என்று சொன்னால் நான் பேசியபிறகு எழுந்து நீங்கள் மைக்கில் பேசுங்கள். உட்கார்ந்துகொண்டே சத்தம் போட்டீர்கள் என்று சொன்னால் சரியாக இருக்காது அது. நான் இப்போது சொல்கிறேன். நீங்கள் ஏற்கெனவே 17,500 பேருந்துகள்... (குறுக்கீடுகள்) 17,500 பேருந்துகள் ஏற்கெனவே இருந்தன என்று கணக்கு. ஆனால், உள்ளபடியே ஓடிய பேருந்துகளுடைய எண்ணிக்கை மிக மிகக் குறைவு. உங்கள் ஆட்சிக் காலத்திலேதான் இதே சென்னை மாநகரத்திலே 2,000 பேருந்துகள் ஓடுகின்றன என்று சொல்லிவிட்டு 1000 பேருந்துகள் ஷெட்டில் இருந்தன (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது முதலமைச்சர் ஆணையின் பேரில் இந்த மக்களுக்கு மிகவும் குறைவாக, இந்தியாவிலேயே மிக மிகக் குறைவான கட்டணம் தமிழ்நாட்டில்தான் வசூலிக்கப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலேயே மிக மிக அதிகமான பேருந்துகளை இயக்குவதும் தமிழ்நாட்டில்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், இந்தியாவிலே டிரைவர், கண்டெக்டர்களுக்கு அதிகமான சம்பளம் கொடுப்பதும் இங்குதான். (மேசையைத் தட்டும்

ஒலி) தொழிலாளிகளுக்குச் சம்பளமும் கூடுதலாகத் தரவேண்டும், (குறுக்கீடுகள்) 18 முறை டீசல் விலை ஏற்றப்பட்டபோதும், இங்கு இன்னும் டிக்கட் விலை ஏற்றாமல் ஓட்டுவது நம்முடைய முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலேதான். (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுடைய ஆட்சியில் நீங்கள் விலை ஏற்றவில்லை என்று சொல்கிறீர்கள். போனஸ் 8.33 சதவிகிதம் என்று சொல்லி அவர்களிடத்தில் கையெழுத்தே வாங்காமல் போனஸ் அறிவித்தது நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே நாளிலே, தீபாவளி நேரத்திலே, போக்குவரத்துத் தொழிலாளர்களைச் சிறையில் அடைத்ததும் நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தலைவர் அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு 20 சதவிகித போனஸ்; மூன்று ஆண்டு காலத்திலே ஊதிய ஒப்பந்தம்; (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பேருந்துகள்; புதிய வழித்தடங்கள். உங்கள் காலத்தில் தனியார்கள் 900 பேருந்துகளை, கிராமத்தில் ஓடிக்கொண்டிருந்த பேருந்துகளை நகரத்திற்கு மாற்றினார்கள். அந்த இடத்திற்கு பூராவும் நாங்கள்தான் பேருந்துகள் விட்டிருக்கிறோம். இதுதான் நடைமுறை. நீங்கள் மீண்டும் மீண்டும், 75 சதவிகிதம், 75 சதவிகிதம் என்றால் என்னிடத்தில் கணக்கு இருக்கிறது. நேரடியாக வாருங்கள். கூடுதல் கட்டணத்திலே எத்தனை பேருந்துகள் ஓடுகின்றன என்பதை என்னுடைய துறை மானியக் கோரிக்கை விவாதத்திலே உங்களிடம் தெளிவாகக் காட்டுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறையைச் சொல்லும்போது அவர் நிறையைச் சொல்லித்தானே ஆகவேண்டும். பேசுங்கள். உரையை முடியுங்கள் சீக்கிரம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து பதிலுரை இருக்கிறது.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்த ஆட்சியில் என்ன நடந்துகொண்டிருக்கின்றது என்பதை நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) 5 சதவிகித பஸ்கள்தான் சிறப்புப் பேருந்துகளாக புறநகர்ப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் ஓட்டப்பட்டன. தற்போது 75 சதவிகித பஸ்கள் சிறப்புப் பேருந்துகளாக கட்டணம் உயர்த்தப்பட்டு——நாடு முழுவதும் ஓடிக்கொண்டிருந்த பஸ் கட்டணத்தை உயர்த்தி இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை சுட்டிக்காட்ட நான் இங்கே கடமைப்பட்டிருக்கின்றேன்.



பிற்பகல் 12-30

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு அவர் பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். (கூச்சல்-குழப்பம்) 75 சதவிகிதம் என்று அவர் சொல்லியிருப்பது உண்மையானால் அவர் சொல்வதை நான் கேட்கிறேன். இல்லை என்றால் நான் சொல்வதை அவர் கேட்கவேண்டும். (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பேசுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 நிமிடத்தில் நான் முடித்துவிடுகிறேன். 13-35-க்கு நான் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தயவு செய்து எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கோபித்துக்கொள்ளக்கூடாது. நீங்கள் நேற்றே சொன்னீர்கள் ஒரு மணி நேரம் நான் பேசுகிறேன் என்று சொன்னீர்கள். ஒன்றரை மணி நேரம் ஆகிவிட்டது. (குறுக்கீடு) கேளுங்கள். நிதி அமைச்சர் பதில் சொல்லவேண்டும். இவ்வளவு பேரும் பேசிவிட்டு, நாங்கள் நிதி அமைச்சருக்கு இரண்டு மணி நேரம் கொடுக்கிறோம் என்று சொல்லியிருந்தோம். இப்போது பார்த்தால், ஒரு மணி நேரம்கூடக் கிடைக்காது போலிருக்கிறது. எனவே, அவருடைய நிலையையும் எண்ணிப்பார்த்து ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேற்று நீங்கள் 60 நிமிடங்கள்தான் கேட்டீர்கள். (குறுக்கீடுகள்) இப்போது 81 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள் நீங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** நான் கேட்டது 60 நிமிடம்தான். ஆனால், குறுக்கீடு இல்லாமல் இருந்தால் 40 நிமிடங்களில் முடித்திருப்பேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் குறை சொல்லும்போது அவர்கள் நிறையைச் சொல்லித்தானே ஆக வேண்டும்?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** திரும்பத் திரும்ப பேசியதையே பேசினால் எப்படி?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொ[illegible] முடியுங்கள். அடுத்து மாண்புமிகு [illegible] அவர்கள் [illegible] சொல்ல வேண்டும்.

228402
600 009
D
V211,31'P08
44.2

போட்டார்களா? வழக்கிற்கு சம்பந்தப்பட்டவர்கள்மீது வழக்கு போட்டார்கள். அது தவறு என்றால் உங்களுடைய தலைவர்களோ, உங்களைச் சேர்ந்த எம்.எல்.ஏ.-க்களோ இப்படித் தவறு என்று சொன்னால் கலைஞர் அவர்கள் நிச்சயமாக குறைபாடு ஏற்பட்டிருந்தால் குறைபாட்டைப் போக்குவார்.

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உரையை முடியுங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, விஷயம் என்னவென்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராமன் தலைமையில் ஒரு பெரிய கும்பல் போய், (குறுக்கீடு) P.A.P.-க்குச் சொந்தமான....... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அவரோடு ஆட்கள் போய், P.A.P.-யினுடைய Guest House-க்குப் போய், அங்கேயிருக்கிற Watchman. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, தேவையில்லாமல் நீங்கள் எழுந்து நின்று பேசுகிறீர்கள். (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமி, தேவையில்லாமல் நீங்கள் எழுந்து நின்றுகொண்டு பேசிக்கொண்டிருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஓர் ஆதி திராவிடர், அவரை சாதியைச் சொல்லித் திட்டி, அங்கேயிருக்கிற நாற்காலிகளை உடைத்து, அசோக வனத்திலே அனுமார் செய்ததைப்போலச் செய்தார்கள். அப்படியிருக்கும்போது வழக்கை எத்தனை பேர் இருந்தார்களோ அவர்கள்மீது போடுவார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ.ம. வேலுசாமி, உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அந்த Watchman ஓர் ஆதி திராவிடர். அவரைச் சாதியைச் சொல்லித் திட்டினார்கள். அதற்குத்தான், வழக்கு தொடுத்திருக்கிறது போலீஸ்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுங்கள். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், உரையை சீக்கிரம் முடியுங்கள். (குறுக்கீடுகள்) திரு. செங்கோட்டையன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், முதலில் உங்கள் பேச்சை நிறைவு செய்யுங்கள். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடு) எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உரையை முடிக்கிறீர்களா, இல்லையா?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சர் பதில் சொல்ல வேண்டும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர், நீங்கள் உரையை முடியுங்கள். Time இல்லை, நீங்கள் உரையை முடியுங்கள். (குறுக்கீடு) நீங்கள் நிறைய எழுதி வைத்துக்கொண்டு வந்து, முழுவதையும் படிக்க வேண்டுமென்றால் எப்படி?

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** பிறகு எதற்கு இங்கே வருகிறோம், உட்கார்ந்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உரையை முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாற்றாக நான் ஏதாவது பேசியிருக்கிறேனா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவையினுடைய நடைமுறையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட நேரம்தான் அவர்களுக்கும் ஒதுக்கப்பட்டு, அந்த நேர அளவிலே பேசி முடித்தால்தான் சட்டமன்றத்திலே சொல்லவேண்டிய பதில்களை ஆளுங்கட்சி சார்பாகச் சொல்லமுடியும். ஆகவே, அந்த நேரத்தைக் கடந்து பேசுவது எப்படி? கடந்த கால ஆட்சியிலே அப்படி நேரத்தைக் கடக்க எதிர்க்கட்சிகளுக்கு என்றைக்காவது அனுமதித்தது உண்டா? (குறுக்கீடு) அப்படி அனுமதித்தது கிடையாது. இன்னும் சொல்லப்போனால், பேசுகிற உறுப்பினர்கள்கூட, இந்த முறை எவ்வளவு தாராளமாகப் பேச அனுமதிக்கப்பட்டார்களோ அப்படி அனுமதிக்கப்பட்டதே கிடையாது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களும், இந்த விவாதத்தில் நான் பதில்

சொல்வது ஒரு முறை என்ற காரணத்தால் பதில் சொல்வதற்கு இடம் தந்து, தன்னுடைய பேச்சை விரைந்து முடிக்கவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 60 நிமிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது உங்களுக்கு, நீங்கள் கேட்டபடிதான் கொடுக்கப்பட்டது. ஆனால், இதுவரையில் நீங்கள் ஒரு மணி 24 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாக் கணக்கையும் என் கணக்கிலேயே சேர்த்திருப்பீர்கள் போலிருக்கிறதே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேறு என்ன செய்வது? (குறுக்கீடு) அது உங்கள் கணக்கில்தான் வரும்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மாண்புமிகு நிதியமைச்சர் இந்த அவைக்கு அளித்திருக்கின்ற நிதிநிலை அறிக்கை எந்த விதத்திலும் ஏழையெளிய மக்களைக் காப்பாற்றப்போகின்ற நிதிநிலை அறிக்கையாக இல்லை என்று சொல்லி, இவ்வளவு தூரம் நீங்கள் எனக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்ததற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008-2009 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை இந்த அவைக்கு நான் வழங்கியதற்குப் பின்னர், அந்த அறிக்கையின்மீது கடந்த 5 நாட்களாக விவாதம் நடைபெற்று அனைத்துக் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களும் இந்த விவாதத்திலே கலந்துகொண்டு, 52 பேர் பங்கேற்று ஏறத்தாழ 16 மணி நேரம் விவாதம் நடத்தி, இப்போது விடையளிக்கிற அந்த வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன். 52 பேர் பேசிய அந்த உரைகளில் அவர்களால் எடுத்துச்சொல்லப்பட்டிருக்கக்கூடிய ஏராளமான கருத்துகள், உடன்பாடான கருத்துகளோ, மாறுபாடான கருத்துகளோ, எப்படிப்பட்ட கருத்துகளாக இருந்தாலும் அவற்றைப்பற்றி முழு அளவில் நான் விடையளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கமுடியாது என்பதை இந்த அவை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். உண்மையாகவே, இந்த நிதிநிலை அறிக்கைமீது பல நண்பர்கள்



உரையாற்றினாலும், அவை குறித்த பல்வேறு கருத்துகளை நான் விடையாகத்தர எனக்கு ஒரு கடமை இருந்தாலும் இயலாத நிலை. இந்த அவையில் பேசிய பலருடைய கருத்துகள் நிதிநிலை அறிக்கையைப் பாராட்டி, வரவேற்றுப் பேசிய பெரும்பாலான குறிப்புகள் "நாங்கள் ஏற்றுக்கொள்வது, இன்னும் சொல்லப் போனால், இந்த நிதிநிலை அறிக்கை தமிழ்நாட்டு மக்களுக்கு வாழ்வு அளிப்பது" என்றெல்லாம் பல உறுப்பினர்கள், பல கட்சித் தலைவர்கள் இங்கே பேசியிருந்தாலும்கூட, குறிப்பாக என்னுடைய உரையினுடைய முன்னுரைபோல, என்னுடைய கருத்துகளுக்கு ஆதாரமான ஒரு அடிப்படைபோல, பல சிறந்த கருத்துகளை எடுத்துப் பேசிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்—காங்கிரஸ் கட்சியினுடைய கொறடா திரு. பீட்டர் அல்போன்ஸ்--பேசிய அந்தக் கருத்துகளை நான் பாராட்டிக் குறிப்பிட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-40

ஒரு பொதுவான சூழ்நிலையை, நாடு முழுவதும் இருக்கிற சூழ்நிலையைப் படம் பிடித்துக் காட்டி, அந்தச் சூழ்நிலையில் தமிழ்நாடு எந்த அளவு மாண்புமிகு கலைஞர் அவர்களுடைய தலைமையில், அவர்களுடைய வழிகாட்டுதலில் சிறப்பாக நடைபோடுகிறது என்பதை திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய பேச்சு இங்கே விளக்கமாக நமக்கெல்லாம் உணர்த்தியிருக்கிறது.

அவர்கள்கூடக் குறிப்பிட்டார்கள். உலகத்திலே இன்றைக்கு மிகப் பெரிய முரண்பாடுகளுக்கு இடையிலே இந்தியா உள்ளது. இந்தப் பெரிய நாடு, பல முரண்பாடுகளைச் சந்தித்துக்கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னார்கள். நான் குறிப்பிட விரும்புகிறேன், இந்தியா போன்ற ஒரு மிகப் பெரிய துணைக் கண்டம், உலகத்திலே மக்கள்தொகையிலே இரண்டாவது மிகப் பெரிய நாடு, பல்வேறு விதமான கலாச்சாரப் பண்பாடுகளுக்கு உறைவிடமான ஒரு தேசம் என்று சொல்லக்கூடிய அளவிற்கு இருக்கிற இந்த நாட்டில், பழைமைக்கும் புதுமைக்கும் இடையிலேயே மிகப் பெரிய மோதல்கள் இருக்கக்கூடிய இந்த நாட்டில், முரண்பாடுகள் என்பது அதனோடு பிறந்தது. இந்தியக் கலாச்சாரமே முரண்பாட்டிலே பிறந்த ஒரு கலாச்சாரம். அடிப்படை முரண்பாடுகளில், நியாயமான சில முரண்பாடுகள் மறக்கப்பட்டன, ஒழிக்கப்பட்டன. இன்னும் சொல்லப்போனால், புராண இதிகாசக் கதைகள் மூலமாக

மக்களுடைய மனதிலேயிருந்து அகற்றப்பட்டன. ஆனாலும்கூட ஒரு அடிப்படை, இந்த முரண்பாடுகள் இயற்கை. அந்த முரண்பாடேகூட, ஒரு வேளை இந்தியாவிலே வாழ்கிற மக்களுக்கு உலகிலே வாழ்கிற மற்ற மக்களைவிட மிகப் பெரிய அளவிற்கு ஒரு பரந்த நோக்கத்தைத் தருவதற்கும் காரணமாக இருக்கலாம்.

தமிழகத்திலே இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே வாழ்ந்த புலவர்களிலே கணியன் பூங்குன்றனார் என்ற அந்தப் புலவர் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மிக உயர்ந்த ஒரு தத்துவக் கருத்தை எடுத்துச்சொன்ன அந்த உண்மையை நாம் இன்றைக்கு எண்ணிப் பார்த்தால், முரண்பாடுகளைச் சந்தித்தவர்கள் மிக உயர்ந்த கருத்துகளை உலகத்திற்கு வழங்கக்கூடிய அந்த வாய்ப்பையும் பெற்றிருக்கிறார்கள். அந்த முறையில் இந்தியா பல வகைகளிலே மற்றவர்களுக்கெல்லாம் வழிகாட்டுகிற அந்த வாய்ப்பைப் பெறும். அவ்வாறு தமிழ்நாடு இந்தியாவிற்கு வழிகாட்டுகிற அந்த தகுதியைப் பெற்றிருக்கிறது, பெறும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையைக் குறித்து, இது ஒரு உபரி பட்ஜெட்டாக வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இங்கே பல நண்பர்கள் எடுத்துக்காட்டினார்கள். குறிப்பாக, இந்த பட்ஜெட்டில் நாம் இன்றையதினம் 84 கோடி ரூபாய் வருவாய் உபரியாகக் காட்டியிருக்கிற இந்த பட்ஜெட் மத்திய நிதியமைச்சர் திரு. சிதம்பரம் அவர்களாலே வரவேற்கப்பட்டிருப்பதை நம்முடைய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள், திரு. சிதம்பரம் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தை அப்படியே எடுத்துச் சொல்லி, இங்கே பாராட்டினார்கள், வரவேற்றார்கள்.

அதே வகையாக இன்னொரு பொருளாதார நிபுணர்—கடந்த காலத்திலே தமிழகத்திலேயும் நிதித் துறைச் செயலாளராக இருந்து, மத்திய அரசிலேயும் நிதித் துறைச் செயலாளராகப் பணியாற்றியவர், திரு. வெங்கடரமணன்—அவர்கள் தெரிவித்த கருத்தை நான் இந்த அவைக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

"In spite of a number of imaginative initiatives to address the grievances of the rural and urban poor, the balances in the Tamil Nadu Budget for 2008-09 remain in healthy position, thanks to the prudent management of finances by the Government." (Thumping of desks) "While maintaining its record of new and imaginative popular initiatives, the Budget is fiscally



responsible and responsive to the challenging needs of an economy such as Tamil Nadu that faces stresses as a result of globalisation and other developments."

திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்களே, பல முரண்பாடுகளைச் சந்திக்கிறோம் என்று, அப்படிச் சந்திப்பதற்குக் காரணமாக இருக்கிற ஒன்று globalisation. அதனுடைய விளைவாகவும் நாம் பல்வேறு வகையில் பல மாறுபாடுகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

*பிற்பகல் 12-45*

தமிழ்நாட்டு மக்களுடைய மனப்பான்மையைப் பிரதிபலிக்கக்கூடிய முறையில், 'தினமணி' பத்திரிகையினுடைய தலையங்கத்திலே ஒரு கருத்து அழகாக எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. "சலுகைகள் வாரி வழங்கப்பட்டிருக்கின்றன; எதிர்பார்ப்புகளைவிட நல்ல பல திட்டங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சமுதாயத்தின் அத்தனைப் பிரிவினருக்கும் ஏதாவது ஒரு வகையில் அரசின் உதவிக் கரம் நீட்டப்பட்டிருக்கிறது. இத்தனைக்கும் பிறகு, ஒரு உபரி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால், நிதியமைச்சரையும், நிதித் துறைச் செயலாளரையும், அவர்களே ஒத்துக்கொண்டிருப்பதுபோல், அவர்களுக்கு வழிகாட்டிய முதலமைச்சரையும் பாராட்டியே தீரவேண்டும்." (மேசையைத் தட்டும் ஒலி)

22 ஆண்டுகளுக்குப் பிறகு—கடந்த 21 ஆண்டுகள் தமிழ்நாட்டில் எந்தவொரு நிதிநிலை அறிக்கையும் உபரியாக இருந்ததில்லை. எல்லாம், 100 கோடி, 200 கோடி, 500 கோடி, 700 கோடி ரூபாய் என்று வரவைவிடச் செலவு அதிகமாக இருந்த அந்த பட்ஜெட்தான் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த 22 ஆண்டுகளுக்குப் பிறகு—ரூ.84 கோடி உபரி பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. ஐந்தாவது ஆண்டாக—consecutively for the 5th year—வரிகள் இல்லாத பட்ஜெட் இந்த ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. வரிகள் இல்லாத பட்ஜெட் என்றால், நிச்சயமாக ஓரளவிற்கு விலைவாசியைக் கட்டுக்குள் வைக்க உதவும் என்பது பொருளாதார நிபுணர்களின் கணிப்பு. வருமானத்திற்கும் செலவிற்கும் இடையே போராடும் பொதுமக்களுக்கு வரி இல்லை என்பது நிச்சயமாக ஆறுதல் தரும் விஷயம். விலைவாசி ஏற்றத்தாலே பாதிக்கப்பட்ட மக்கள், தங்களுடைய வருமானம் பற்றாமையினாலே பாதிக்கப்பட்ட மக்கள், அவர்களுடைய மனதிற்கெல்லாம்கூட, அவர்களுக்கு எவ்வளவு

பாதிப்பு இருந்தாலும்கூட, அதேநேரத்தில் புதிய வரி இல்லை என்பது, அவர்களுக்குக்கூட ஒருவிதமான ஆறுதல் தரக்கூடியதாகும்.

ஆட்சியாளர்கள் விவசாயத்திற்கு முன்னுரிமை தர வரிந்துகட்டிக் கொண்டு கிளம்பியிருப்பது நல்லதொரு மாற்றம். விவசாயப் பயிர்க் கடன் வட்டி 4 சதவிகிதமாகக் குறைத்திருப்பது; தாட்கோ விவசாயக் கடன் ரூ.5 கோடி தள்ளுபடி செய்திருப்பது, விவசாயிகளுக்கு சுய உதவிக் குழு; 22 உழவர் சந்தைகளில் குளிர்பதன வசதிகள்; விவசாயிகள் பயிருக்குக் காப்பீட்டுக்கு ரூ.40 கோடி என்று ஏர் பிடிப்பவர்கள் வயிற்றில் பால் வார்த்திருக்கிறார் முதலமைச்சர் அல்லது நிதியமைச்சர்." (மேசையைத் தட்டும் ஒலி)

அந்தப் பத்திரிகைத் தலையங்கத்தில், "இதற்காக அவருக்கு ஒரு பாராட்டு விழாவே எடுத்தால் தகும்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆக, பாராட்டு விழா எடுக்காவிட்டாலும், ஏழைகளை, உழைப்பாளிகளை, வருமானம் குறைந்தவர்களை, கிராமத்தில் வாடுகிறவர்களை, நாள் முழுவதும் பாடுபடுபவர்களைப் பட்டினியாகப் போட்டுவிடக்கூடாது; பட்டினி கிடக்க அனுமதித்து விடக்கூடாது; இன்னும் குறிப்பாகச் சொன்னால், எலிக்கறி சாப்பிடவேண்டிய நிலைமைக்கு யாரும் தள்ளப்படக்கூடாது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்காகத்தான் இந்த அரசு பொறுப்பேற்கிறபோதே, அரிசி விலையைக் குறைத்து நியாயவிலைக் கடைகளில் வழங்குவோம் என்று அறிவித்து, 3½ ரூபாய் விலையிலே வழங்கியபோதேகூட, ஏறத்தாழ 700 கோடி ரூபாய் அரசாங்கம் அதற்காக மானியம் தரவேண்டிய நிலைமையிருந்தாலும்கூட, மேலும் அதிக மானியம் ஒதுக்கவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிற சூழ்நிலையில், ஒரு கிலோ அரிசி 2 ரூபாய் என்று அறிவித்த அந்தக் கையெழுத்துதான் முதல்வரின் முதல் கையெழுத்தாகப் போடப்பட்டு, (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) அந்த ஆண்டு ஜூன் 3 ஆம் தேதியிலிருந்து இதுவரையில் தொடர்ந்து அந்த 2 ரூபாய்க்கே அரிசி வழங்கப்படுகிறது. இன்றைக்குக்கூட ஒரு வகையிலே பார்த்தால், அந்த அரிசியை வெளியிலே, அதே வகையான அரிசியை வாங்கவேண்டுமானால், 14 ரூபாய், 15 ரூபாய் என்கிறார்கள். குறைந்தது 12 ரூபாயாவது கொடுத்தால்தான் அந்த வகை அரிசியை வெளியில் வாங்கமுடியும்.

இங்கே எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்கள் குறிப்பிட்டதுபோல, அரிசிக் கடத்தல் நடக்கிறது என்றால், ஒருவேளை இப்படிக் குறைந்த விலையிலே தருகிற காரணத்தால், அதற்குச் சில வாய்ப்புகள்



அமைந்துவிடுகின்றன. அதைத் தடுப்பதற்கு இந்த அரசு என்னென்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை உணவு பகிர்ந்தளிக்கிற அந்தத் துறை அமைச்சர் இங்கே விளக்கியிருக்கிறார். அதை நான் மேலும் விளக்க விரும்பவில்லை. ஆனால், 2 ரூபாய் விலைக்கு வழங்குவது என்பது ஏழைகளை மனதிலே வைத்துத்தான். பணக்காரர்கள் 10 ரூபாயிலேயும் வாங்கிக்கொள்ளலாம்; 30 ரூபாயிலேயும் வாங்கிக்கொள்ளலாம்; அவர்களுடைய பிரச்சினைக்காக அல்ல. அப்படி வழங்கப்படுவதாலே, இன்றைக்கு ஆண்டுக்கு ஏறத்தாழ 1,900 கோடி ரூபாய் உணவுக்காகவே மானியம் தரப்படுகிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12-50

இந்த நிதிநிலை அறிக்கை குறித்து நம்முடைய பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் திரு. ராமதாஸ் அவர்கள் விவசாயிகளுக்கென்று, வேளாண்மைக்கென்று தனியாக ஒரு பட்ஜெட் வகுக்கப்பட வேண்டுமென்று அடிக்கடிச் சொல்கிறார்கள்.

இன்னும் பொருளாதார முறையிலே அவையெல்லாம் கண்டுபிடிக்கப்படவில்லை. ஏனென்றால், அப்படி ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பட்ஜெட் போட ஆரம்பித்தால் ஒரு பட்ஜெட்டும் இருக்காது; ஒரு அரசாங்கமும் நடத்த முடியாது. ஆனால், அதற்கு முக்கியத்துவம் தரவேண்டும் என்பதிலே எனக்கு எந்த மாறுபாடும் கிடையாது — அந்தவகையிலே இந்த ஆண்டு ரூ.4,000 கோடிக்குமேல் வேளாண்மைக்காக ஒதுக்கப்பட்டு பல்வேறு துறைகளிலே அந்தப் பணிகள் நடைபெறுவதற்கு வழி செய்யப்பட்டிருப்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. கட்சித் தலைவர்களெல்லாம் தங்களுடைய கருத்தைச் சொல்கிறபோது பல கட்சித் தலைவர்கள் பாராட்டினார்கள், காங்கிரஸ் தலைவர் சொல்கிறபோது 'தேனில் ஊறிய பலாச்சுளை' என்று. அவருக்கு அதிலே அவ்வளவு திருப்தி, மகிழ்ச்சி. அதை அவர்கள் குறிப்பிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், எதிர்க்கட்சித் தலைவர், அந்த அம்மையார் இன்றைக்கு வராவிட்டாலுங்கூட அவர்கள் என்ன வெளியிலே சொன்னாரென்றால் 'தி.மு.க. அரசின் நிதிநிலை அறிக்கை அர்த்தமற்ற வார்த்தைகளின் அணிவகுப்பு'. இது வெளிநடப்பு மாதிரி. 'அர்த்தமற்ற வார்த்தைகளின் அணிவகுப்பு, விளம்பரத் தோரணம். தமிழக மக்கள் ஏமாறப் பிறந்தவர்கள் என்ற எண்ணத்தில் உருவாக்கப்பட்ட காகிதத்

திட்டங்களின் கவர்ச்சி அறிக்கை'. இதிலேயும் ஒரு கவர்ச்சி அந்த அம்மாவிற்கு இருக்கிறது. இந்த அறிக்கை, கவர்ச்சி அறிக்கை என்கிறார். இந்த அறிக்கை கவர்ச்சி அறிக்கையாக இருந்தால் இதற்கு முன்னால் அவர்கள் ஆட்சியில் கொடுத்த அறிக்கையெல்லாம் என்னவாக இருக்குமென்றால் கவர்ச்சியில்லாத அறிக்கை. ஆக, அதனுடைய விளைவு இதைக் கவர்ச்சி அறிக்கை என்று இதைக் கேவலப்படுத்துவதாக எண்ணிக்கொண்டு அவர்கள் பேசுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய கருத்தில், அப்படி ஒரு கண்டனம் வந்தாலுங்கூட, இந்த அரசு அவற்றையெல்லாம்பற்றி அதிகம் கவலைப்படுவதற்கு அவசியம் இல்லை. தமிழ்நாட்டு மக்களைப் பார்த்து அவர்களை, ஏமாறப் பிறந்தவர்கள் என்று எண்ணவேண்டிய நிலையில் நானோ அல்லது முதலமைச்சரோ, இந்த அமைச்சரவையில் உள்ளவர்களோ நாங்கள் யாரும் இல்லை. நாங்களேதான் தமிழ்நாட்டு மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாங்கள் ஒருவேளை ஏமாறப் பிறந்தவர்களோ என்று எவராவது கேட்டால், இந்த நாட்டிலே இடைக்காலத்திலே நடைபெற்ற ஆட்சியைப் பற்றி எண்ணிப்பார்த்தால் ஒரு வேளை நாங்களும் ஏமாறப் பிறந்தவர்கள்தானோ என்ற எண்ணம் வருகிறது. ஆனால், தமிழ்நாட்டு மக்கள் இனி எதிர்காலத்திலே ஏமாறமாட்டார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற அந்தக் கருத்தை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இந்த நிதி நிலை அறிக்கையை பல்வேறு வகையாகப் பலரும் வரவேற்று தெரிவித்திருக்கிற அந்தக் கருத்துகள் ஒரு பக்கம் இருந்தாலும், விலைவாசி ஏற்றம் ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. சொல்லப்போனால் மத்திய அரசிலே உள்ளவர்கள்கூட இந்த விலைவாசி தானாகவே கட்டுப்பட்டுவிடும்; ஏறுகிற விலைவாசி தானாக இறங்குவது உண்டு. இறங்குவதற்கு வாய்ப்பு உண்டு. விளைச்சல் அதிகமானால் விலை சற்றுக் குறையும். ஆனால், எதிர்பாராதவிதமாக அவர்கள் எதிர்பார்த்த அடிப்படையிலே இயற்கை நிகழ்ச்சிகள் ஒத்துழைக்காத காரணத்தால், இயற்கை ஒத்துழைக்காத காரணத்தால், விலைவாசி ஏற்றம் உலகம் முழுவதும்கூட ஏற்பட்டுள்ளது. அந்த விலையேற்றம் இங்கேயும் ஏற்படுகிறது. தமிழ்நாட்டிலே மட்டுமல்ல, இந்தியாவிலே மட்டுமல்ல, ஆசிய நாடுகளெல்லாம்கூட இந்த விலை ஏற்றத்தாலே ஒரு பாதிப்புக்கு ஆளாகக்கூடிய அளவுக்கு நிலை இருக்கிறது. ஆசிய நாடுகளிலே இருப்பது நமக்கு உடனே தெரிகிறது. என்ன காரணம் என்றால் கொஞ்சம் வறுமைசார்ந்த நாடுகள் ஆசியாவைச் சார்ந்த



நாடுகள். வளமான அமெரிக்காவிலேகூட இதனால் பாதிப்புகள் ஏற்படக்கூடிய அளவுக்கு சில நிலைமைகள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலே இந்த விலைவாசியேற்றம், எண்ணெய் போன்ற பொருட்களிலே அதிகமாகி, சாதாரண மக்களைப் பாதிக்கிறது என்று கருதப்பட்ட காரணத்தால், நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பி, அப்படி அனுப்பப்பட்ட அந்தக் கடித அடிப்படையில் மத்திய அரசு எடுத்த ஒரு நடவடிக்கை காரணமாக—11-3-2008 அன்று முதலமைச்சர் அனுப்பிய அந்தக் கடிதத்தின் அடிப்படையில் சுத்திகரிக்கப்பட்ட எண்ணெய்கள், உணவுக்குப் பயன்படுகிற எண்ணெய்கள் இறக்குமதிக்கு சுங்க வரியை—ஏற்கெனவே அது 27.5 விழுக்காடாக இருந்ததாக என்னுடைய நினைவு. அதற்கு முன்னாலே 50, 55 விழுக்காடாக இருந்தது—இப்போது அது 7.5 விழுக்காடாகக் குறைக்கப் பட்டுள்ளது. அதன் காரணமாகத்தான் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் எடுத்துக்காட்டியதைப்போல சில எண்ணெய்கள் இப்பொழுது ஒரு கிலோவுக்கு 6 ரூபாய், 8 ரூபாய் அளவுக்கு விலை குறைந்திருக்கிறது என்னும் செய்திகளை நாம் கேள்விப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தவகையிலே நம் தமிழக அரசு எடுத்த முயற்சி என்ற முறையிலே, விலைக் குறைப்புக்காக எடுத்த முயற்சிகளிலே ஒன்று இன்றியமையாத தேவையாக இருக்கிற பல்வேறு அத்தியாவசிய உணவுப் பண்டங்களின் விலையைக் குறைப்பதற்கு வழி செய்தது. அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் கவலையளிப்பதாக இருந்த நிலையில், உற்பத்திகளின் பெருக்கத்தால் பொருளாதாரம் விரைவாக வளர்ந்துவரும் நிலையிலும் பண வீக்கத்தின் பாதிப்பாலும், அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.

பிற்பகல் 12-55

ஒரு பக்கம் விவசாயிகள் தம் விளைபொருட்களுக்கு நியாயமான விலை கிடைக்க கோரிக்கை வைத்து வரும் நிலையில், மறுபக்கம் நுகர்வோர் நலன் கருதி அத்தியாவசியப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்தி, இரு சாராரின் நலனையும் பாதுகாக்க வேண்டியுள்ளது. சர்வதேச மற்றும் தேசிய சந்தைகளில் பொருட்களின் தேவை மற்றும் கிடைக்கும் அளவு ஆகியவை அடிப்படையில், விலை ஏற்ற இறக்கத்திற்கு உட்படுவதால் விலைவாசியைக் கட்டுப்படுத்திட விவசாயப் பொருட்களின் விலையை அதிகக் காலங்களுக்கு செயற்கையாக அரசு தலையிட்டு குறைந்த அளவில் வைத்திருக்க

இயலாது, Administrative control முறையில் அப்படி வைக்க முடியாது. எனினும், இந்த அரசு விலை மாற்றங்களைக் கூர்ந்து கவனித்து ஏழையெளிய மக்கள் மற்றும் நடுத்தர வர்க்கத்தினரை விலை உயர்விலிருந்து பாதுகாத்திட தேவையான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது. பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், போன்ற அத்தியாவசியப் பொருட்களின் விலைகளைக் கட்டுப்படுத்திட கடந்த 14-4-2007 முதல் ஒரு சிறப்புப் பொது விநியோகத் திட்டம், சென்னை நகரில் தற்காலிகமாகத் தொடங்கப்பட்டு, மாநிலம் முழுவதும் நடைமுறைப்படுத்தப்பட்டது. உளுத்தம் பருப்பு, துவரம் பருப்பு போன்ற பருப்பு வகைகள், குடும்ப அட்டை ஒன்றிற்கு ஒரு கிலோ வீதமும், பாமாயில் ஒரு லிட்டர் வீதமும் ஒவ்வொரு அட்டைக்கும் ஒரு கிலோதான், ஒரு லிட்டர்தான் என்ற விதத்தில் அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் குறைந்த விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

மேலும், மத்திய அரசிடம் சிறப்பு ஒதுக்கீடாக 15,000 மெட்ரிக் டன் கோதுமை வெளிச் சந்தை விலையில் பெறப்பட்டு ரவை மற்றும் மைதாவாக மாற்றப்பட்டு நியாயவிலைக் கடைகளில் ஒரு கிலோ மைதா ரூபாய் 16-க்கும் ஒரு கிலோ ரவை ரூபாய் 17-க்கும் விற்பனை செய்யப்பட்டது. இதில் ரவைக்கு ஒரு கிலோவிற்கு ரூபாய் ஒன்று வீதம் மானியமாக தமிழக அரசு வழங்கியது. மத்திய அரசிடம் கோதுமை இருப்பு இல்லாத காரணத்தினால், வெளிச் சந்தை விலையில் மேலும் கோதுமை ஒதுக்கீடு பெற இயலவில்லை. எனினும், மத்திய அரசிடம் சிறப்பு ஆணை பெற்று பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கோதுமையின் ஒரு பகுதியினை இரும்புச் சத்து, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் 'ஏ' சேர்த்து செறிவூட்டப்பட்ட கோதுமை மாவாக மாற்றி, அடக்க விலைக்கே வழங்கப்பட்டு வருகிறது. 29-2-2008 அன்றைய நிலவரப்படி 18,502 மெட்ரிக் டன் உளுத்தம் பருப்பும், 10,683 மெட்ரிக் டன் துவரம் பருப்பும் 2.12 கோடி லிட்டர் பாமாயிலும், 1,889 மெட்ரிக் டன் ரவை மற்றும் 5,864 மெட்ரிக் டன் மைதாவும் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளது. இது நியாயவிலைக் கடைகள் மூலமாக வழங்கப்பட்டது. வேறுமாதிரியாக வழங்குவதற்கு வாய்ப்பு இல்லை. அந்த நியாயவிலைக் கடைகளிலே மக்கள் இவ்வளவு பெற்றிருக்கிறார்கள். ஆகவே, இப்போது நியாயவிலைக் கடைகளிலே வழங்கப்படவில்லை, கிடைக்கவில்லை என்று பேசுவது சரியல்ல, உண்மையாக வழங்கப்பட்டதை யாரும் மறைக்க முடியாது, மறுக்கவும் முடியாது.



வெளிச் சந்தையில் தொடர்ந்து விலை உயர்வு உள்ள காரணத்தினால் இச்சிறப்புத் திட்டத்தை 31-7-2008 வரை நீட்டிக்க இவ்வரசு உத்தரவிட்டுள்ளது. வெளிச் சந்தையில் ஏறி வரும் விலை உயர்விலே இருந்து ஏழையெளிய மக்களைப் பாதுகாத்திடவும், அவர்களுக்கு ஊட்டச் சத்துள்ள பாதுகாப்பினை வழங்கிடவும் இத்திட்டம் பேருதவியாக உள்ளது. இத்திட்டத்தின்கீழ் பின்வரும் விலையில் பொருட்கள் வழங்கப்படுகின்றன. இந்த விலைவாசி ஏற்றத்தை சுடுமையாக விமர்சித்த பலரும் சொன்ன காரணத்தால் இந்த அரசு பொறுப்பாக கடமையாற்றுகிறது என்பதை எடுத்துக்காட்ட இந்த விலை விவரத்தைத் தெரிவிக்கிறேன். துவரம் பருப்பு ரூபாய் 32, வெளியிலே விலை 42 ரூபாய்; உளுத்தம் பருப்பு 36 ரூபாய் கிலோ, வெளியிலே 42 ரூபாய்; பாமாயில் இங்கே நம்முடைய அரசு வழங்குவது 40 ரூபாய் கிலோ, வெளியிலே 60 ரூபாய்; 55 ரூபாய் என்று விலை வித்தியாசம் உள்ளது. செறிவூட்டப்பட்ட கோதுமை மாவு நாம் 11 ரூபாய்க்கு நியாயவிலைக் கடைகளிலே தருகிறோம், வெளியிலே 19 ரூபாய். சாதாரண ஏழை மக்களை விலையேற்றத்திலிருந்து பாதுகாத்திட மத்திய அரசும், மாநில அரசும் பல்வேறு நடவடிக்கைகளை அவ்வப்போது எடுத்து வந்துள்ளன. ஏனென்றால், மைய அரசும் சில கடமைகளைச் செய்தால்தான், மாநில அரசு பொதுமக்களுடைய குறையை ஓரளவேனும் போக்கமுடியும்.

பிற்பகல் 1-00

நமது மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகள்; 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் கோதுமை ஏற்றுமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி வரியின்றி, கோதுமை இறக்குமதி செய்திட மத்திய அரசு நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது. இறக்குமதி, வரியில்லாமல் அனுமதிக்கப்பட்டது. வெளிநாடுகளிலிருந்து கோதுமையை இறக்குமதி செய்துகொள்ள தனியாருக்கு—private parties—அனுமதி வழங்கப்பட்டது.

பருப்பு வகைகள்; 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் பருப்பு வகைகளை ஏற்றுமதி செய்திட தடை விதிக்கப்பட்டது. 2006 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் இறக்குமதி வரியின்றி பருப்பு வகைகளை இறக்குமதி செய்திட மத்திய அரசு நிறுவனங்களுக்கு அரசு அனுமதி வழங்கியது. அதுபோல் தனியாரும் இறக்குமதி வரியின்றி பருப்பு வகைகளை இறக்குமதி செய்துகொள்ள அனுமதிக்கப்பட்டது.

சமையல் எண்ணெய்; 25-7-2007 முதல் சமையல் எண்ணெய் வகைகளுக்குப் பின்வருமாறு இறக்குமதி வரி விகிதமும் குறைக்கப்பட்டுள்ளது. அப்படி மத்திய அரசு, இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்களுக்கு 50 விழுக்காடாக இருந்த வரியை 45 விழுக்காடாக, 45 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாக, இப்படி ஒவ்வொரு பொருளுக்கும் இந்த வரி குறைக்கப்பட்டு, விலை ஏறுவது ஓரளவிற்குக் குறைக்கப்பட்டது. சூரியகாந்தி எண்ணெய், கச்சா எண்ணெய், 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக வரி குறைப்பு. பாமாயில், 45 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாக வரி குறைக்கப்பட்டது. 2009 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 வரை, இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கு, இறக்குமதி வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. Import செய்ய வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்கு அரிசிக்கு வரியில்லை. பாசுமதி அல்லாத அரிசியினை ஏற்றுமதி செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. சாதாரண அரிசியை, மக்களுக்குப் பயன்படுகிற அரிசியை, ஏற்றுமதி செய்வதை மத்திய அரசு மொத்தமாகத் தடுத்திருக்கிறது.

இதற்குமேல், முன்பேர வர்த்தகத்திலிருந்து—online trade—அத்தியாவசியப் பொருட்களை, உளுத்தம் பருப்பு மற்றும் துவரம் பருப்பு வகைகள், 2007 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் முதல் தடை செய்யப்பட்டது. Online trade-ஐ தடை செய்யப்படவேண்டுமென்று எதிர்க்கட்சி வரிசையிலே உள்ள பொதுவுடைமை இயக்கத் தலைவர்களெல்லாம் குறிப்பிட்டார்கள். இந்த online trade-ல் இன்றியமையாத பொருட்கள், அப்படிப்பட்ட பருப்பு வகைகள் இடம்பெறாமல் தடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல, அரிசி, கோதுமை, மைதா மற்றும் ரவை ஆகிய பொருட்களுக்கு 1-3-2007 முதல் இந்த online trade தடை செய்யப்பட்டுள்ளது. ஆகவே, அத்தியாவசியமான பொருட்களிலே, online trade அதனுடைய gambling, அதனுடைய சூதாட்டம், பாதிப்பை ஏற்படுத்தாமல் தடை செய்ய மத்திய அரசும் ஆவன செய்திருக்கிறது. மத்திய அரசின் தேசிய உணவுப் பாதுகாப்பு அமைப்பின் வாயிலாக, தேர்வு செய்யப்பட்ட 16 மாநிலங்களில் தமிழகமும் ஒன்றாகும். தேசிய உணவுப் பாதுகாப்பு அமைப்பின் வாயிலாகத் தேர்வு செய்யப்பட்ட மாநிலம் தமிழகம். இந்த அமைப்பின் முக்கிய நோக்கம், அடுத்து வரும் நான்கு ஆண்டுகளில் அரிசி உற்பத்தி பத்து மில்லியன் டன் அதிகரித்திடவும், அதுபோல் கோதுமை எட்டு மில்லியன் டன்னும், பருப்பு வகைகள் இரண்டு மில்லியன் டன்னும் உற்பத்தியினை உயர்த்துவதாகும். ஆக, ஒரு



பக்கம் விலை உயர்வைத் தடுக்க சில முயற்சிகள்; அதேபோல, உற்பத்தியைப் பெருக்குவதற்கும் வேறு சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

தமிழக அரசு எடுத்துள்ள நடவடிக்கையின்படி, பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அனைத்துக் குடும்ப அட்டைகளுக்கும் 3-6-2006 முதல் இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்குகிறோம். பின்வரும் அத்தியாவசியப் பொருட்கள் மானிய விலையில் பொதுமக்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்றன: துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, மைதா, ரவை மற்றும் பாமாயில். இந்தச் சிறப்புத் திட்டத்தினை, 31-12-2007 உடன் முடிவடைந்துள்ள நிலையில் மேலும் நீட்டித்து, இப்பொழுது வரும் 1-7-2008 வரை இந்த சிறப்புத் திட்டம் நீடிக்கிறது. ஒருவேளை விலைவாசி கட்டுப்பாட்டிற்குள் வராத நிலைமை இருக்குமானால், மேலும் நீட்டிப்பதைப் பற்றி அமைச்சரவை கூடி முடிவெடுத்து அறிவிக்கும்.

கடந்த 2007-2008 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட அறிக்கையின்படி, கோதுமைக்கான விற்பனை வரி 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டது. துவரம் பருப்பு, கடலைப் பருப்பு, உளுத்தம் பருப்பு மற்றும் பாசிப் பருப்பு முதலானவற்றிற்கு இருந்த 4 சதவிகித விற்பனை வரி மற்றும் கூடுதல் விற்பனை வரி கடந்த 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை வரவு-செலவுத் திட்டத்தின்படி இரத்து செய்யப்பட்டது. எனவே இந்த அரசு, தமிழக அரசு, விலைவாசி ஏற்றத்தைப் பற்றி மிகுந்த கவனத்தோடு, எந்த வகையில் அடித்தட்டு மக்களின் ஏழை மக்களின் பாதிப்பைக் குறைக்க முடியுமோ, அந்த வகையிலே செயலாற்றுகிறது என்பதை, நான் மேலும் அறிக்கையை விரிவாகப் படிப்பதைவிட, அதை நீங்கள் உணர்வீர்கள் என்று நம்பி, நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

அதேபோல, இங்கே உழவர் பாதுகாப்புத் திட்டம் பற்றிப் பேசப்பட்டது. இந்த நாட்டினுடைய முதுகெலும்பாக இருப்பவர்கள் விவசாயிகள் என்று அத்தனைபேரும் இங்கே சொன்னார்கள். அப்படிச் சொன்னபோது முதுகெலும்பாக இருக்கின்ற அந்த விவசாயிகளுடைய வளர்ச்சி 4 சதவிகிதமாக இருப்பதை மேலும் அதிகப்படுத்த வேண்டுமென்பது பொதுவான நோக்கம். ஏதோ 4 விழுக்காடாக இருப்பதை மேலும் அதிகப்படுத்த முயற்சி

எடுக்காததைப்போல எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் சொன்னார்கள். முயற்சி எடுக்கப்படுகிறது. எடுக்கப்பட்டது மட்டுமல்ல, அந்த 4 விழுக்காடு வளர்ச்சியை எட்ட 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் அதாவது 11-வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலாவது ஆண்டில் 6.51 விழுக்காடு வளர்ச்சி வேளாண்மைத் துறையில் ஏற்பட்டுள்ளது. இலக்கு 4 விழுக்காடு; ஏற்பட்டது 6.5 விழுக்காடு.

அதேபோல, மேலும் ஒட்டுமொத்த வளர்ச்சி விகிதம் 9 விழுக்காடாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் இந்த 9 விழுக்காடு எட்டவேண்டிய வளர்ச்சி 8.29 ஒட்டுமொத்த வளர்ச்சி எட்டப்பட்டுள்ளதாக மதிப்பீடு கணிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நெருங்கிக் கொண்டிருக்கிறோம். நம்முடைய முயற்சி என்பது உரிய முறையிலே நடைபெறுகிறது என்பதற்காக அதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, உழவர் பாதுகாப்புத் திட்டம். அ.தி.மு.க. ஆட்சியிலே அந்த உழவர் பாதுகாப்புத் திட்டம் மிகச் செம்மையாக நடைபெற்றதுபோலவும், இப்பொழுது இந்த ஆட்சியிலே அப்படி நடைபெறவில்லை என்பதைப்போலவும் சில புள்ளிவிவரங்களைச் சொல்லி, திரு. அரி போன்ற உறுப்பினர்கள் சிலர் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன், அந்த ஆட்சியிலே கடைசி ஆண்டு இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டது. முதல் 4 ஆண்டு உழவரும் இல்லை, பாதுகாப்பும் இல்லை. கடைசி ஆண்டு அறிவித்த அந்தத் திட்டம், அவர்கள் அதற்காக ஒதுக்கிய தொகை 100, 130 கோடி ரூபாய்; விவரம் இங்கே இருக்கிறது. அந்த விளக்கங்களுக்குள்ளே நான் செல்லவில்லை. அந்தத் தொகையிலே, ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 103 கோடி. அதிலே செலவழிக்கப்பட்ட தொகை ரூ 94 கோடி மட்டும்தான். அந்த ரூ. 94 கோடியும் எப்படியென்று கேட்டால், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித் திட்டத்திற்காகவும், அதேபோல வேறு சில மகளிருக்கு உதவி செய்கிற அந்தத் திட்டத்திற்காகவும் உரியவர்களுக்குத் தரப்படவேண்டிய நிதியை அரசாங்கம் நிறுத்திவிட்டது. ஆனால், விவசாயக் குடும்பத்திலே உள்ளவர்களுக்கு, விவசாயிகளுடைய குடும்பத்திலே உள்ள மகளிருக்கு, இந்த மகப்பேறு உதவியைப் பெறுவதற்கு இந்த உழவர் திட்ட நிதியைப் பயன்படுத்தி அதற்குரிய நிதி வழங்கினார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக்



கழக ஆட்சியிலே, கலைஞருடைய தலைமையிலே, அந்த நிதி தனித்தனியாக ஒதுக்கி வழங்கப்பட்டுள்ளது. எந்த அளவு வழங்கப்பட்டிருக்கிறதென்றால், 2006-2007 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் செலவிடப்பட்ட ரூ.103 கோடியில், இவ்வாறு சுமார் 50 விழுக்காடு, 57 கோடி ரூபாய் நிதியுதவி விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களே பெற்றார்கள். அது தவிர, அந்த மகப்பேறு உதவித் திட்ட நிதியும் விவசாயிகள் பெற்றார்கள். 2006-2007 ஆம் ஆண்டு இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 201.5 கோடி ரூபாயைவிட அதிகமாகவே, ரூ.209 கோடி இந்த அரசால் அந்த ஆண்டு ஒதுக்கப்பட்டது தெளிவாகிறது. நாம் உழவர் திட்டத்திற்கு ஒதுக்கியது மட்டுமல்ல, உழவர் சமுதாயத்து மகளிருக்காகத் தரப்படுகிற அந்த உதவியைப் பெறுகிற முறைப்படி அந்தத் தொகையையும் பெற்றார்கள். டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்திற்கு ரூ.209 கோடி நிதி ஒதுக்கீடு இந்த ஆண்டு செய்யப்பட்டுள்ளது. எனவே, வரும் நிதியாண்டில் சுமார் ரூ.125 கோடி ரூபாய் இவர்களுக்கு மகப்பேறு உதவியாக வழங்கப்படவுள்ளது. அந்த 125 கோடி ரூபாய் என்பது விவசாயக் குடும்பப் பெண்களுக்கு. ஆகவே, வரும் ஆண்டிலும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டத்தின்கீழ் அளிக்கப்பட்டுள்ள ரூ.152 கோடி மற்றும் மேற்கூறிய ரூ.125 கோடி ஆகியவற்றைச் சேர்க்கும்போது விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் நலனுக்கு ரூ. 277 கோடியை இந்த அரசு ஒதுக்கீடு செய்திருப்பது அவையினருக்குத் தெளிவாக விளங்கும்.

அதேபோல, இங்கே நம்முடைய பா.ம.க. தலைவர் திரு. மணி அவர்கள் பேசுகிறபோது மிகக் குறிப்பாக நிதிநிலை அறிக்கைக்கு முன்னதாக Economic Survey தேவை என்ற ஒரு கருத்தையும், Action Taken Report-செயல் அறிக்கை தேவை என்றும், Outcome Budget- விளைவுத் தாக்க அறிக்கை தேவை என்றும் குறிப்பிட்டார்கள். இவையெல்லாம் ஆசைப்படுவதற்கு நன்றாகத்தான் இருக்கும் ஏனென்றால், கேட்கிற அளவில். ஆகவே அதனுடைய பலன் என்ன என்று பார்த்தால் நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன், அப்படிக் குறிப்பிட்டுக் கூறக்கூடியதாக இல்லை. மத்திய அரசு இந்த Economic Survey Report அளிக்கிறதென்று சொன்னால், அதற்கு வேறு காரணம். அகில இந்திய அளவிலே சில புள்ளிவிவரங்களையெல்லாம் சேர்த்துத் தொகுத்துதான் அவர்கள் மத்திய அரசை நடத்த முடியும்.

அப்படித் தொகுப்பதற்காக, அவர்களுக்கு Economic Survey தேவைப்படுகிற அளவிற்கு நமக்கு இல்லை. அவர்கள் செய்த Economic Survey-யிலே தமிழ்நாடு எந்த இடம் பெறுகிறது என்பதைத்தான் நாம் பார்க்க முடியும்.

பிற்பகல் *1-10*

நாமும் அதேபோல ஒரு விரிவான Economic Survey செய்ய முடியுமா என்றால், அதைவிட சமூகத்தை மக்கள்தொகை அடிப்படையில் பிரித்து, அவரவர்களுக்கு அரிசி, பருப்பு என்று தனித்தனியாக கொடுத்துவிடலாம். அவரவர்கள் சாப்பிடுவதற்கு எவ்வளவு அரிசி, பருப்பு வேண்டுமோ, அதை வாங்கி அளிக்கும் அளவு முயற்சி என்று சொல்லலாம். ஆகவே, அந்த Economic Survey-யின் பயன்பாடு குறைவு. அதற்கு எடுத்துக்கொள்ளக்கூடிய முயற்சி மிக அதிகம். இருந்தாலும்கூட Economic Survey புறக்கணிக்கப் படவில்லை. Economic Survey background-ல்தான் நிதி நிலை அறிக்கை தயாராகிறது. ஆனால், Economic Survey மட்டுமே அதனுடைய அடிப்படை அல்ல.

அதேபோல, ஒவ்வோர் ஆண்டும் மத்திய வரவு-செலவுத் திட்ட அறிக்கைக்கு முன்பாக, பாராளுமன்றத்தில் நாட்டுப் பொருளாதாரத்தின் மதிப்பாய்வு அறிக்கை தாக்கல் செய்யப்படுகிறது. இதுபோல நமது மாநிலப் பொருளாதாரம் குறித்த தனி அறிக்கையை சட்டமன்றத்தில் தாக்கல் செய்வது குறித்து, பின்வருவனவற்றை கருத்தில் கொள்ளவேண்டும்;

நமது நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத்தை வழிநடத்திச் செல்லக்கூடிய வரி (Taxation) மற்றும் பொருளாதார கொள்கைகள், மத்திய அரசாலேயே வகுக்கப்படுகின்றன—All India. அது மட்டுமின்றி, நமது நாட்டில் விலைவாசி உயர்வு, வங்கிகளின் செயல்பாடுகள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரம் கொண்ட ரிசர்வ் வங்கியும் மத்திய அரசின்கீழ் உள்ளது. எனவே, இம்முக்கிய இனங்கள் குறித்த அதிகாரம் கொண்ட மத்திய அரசு ஒரு மதிப்பாய்வு அறிக்கையை அவசியம் வெளியிட வேண்டியுள்ளது. இத்தகைய ஓர் அறிக்கையே பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படுகிறது. மாநில அரசைப் பொறுத்தவரையில் ஒட்டுமொத்த பொருளாதாரத்தைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லாத நிலையில் மாநிலப் பொருளாதாரம் குறித்த மதிப்பாய்விற்கான அவசியம் ஏற்படவில்லை.



இன்னும் சொல்லப்போனால், மத்திய அரசு மேற்கொள்கிற கொள்கை முடிவுகள், அதுவும் பொருளாதார அடிப்படையிலே அவர்களாலே வகுக்கப்படுகிற திட்டங்கள், அதனுடைய வீச்சுக்குள்ளேதான் எந்த மாநில அரசும் செயல்பட முடியும். என்னதான் தனிப்பட்ட அனுபவமோ, முதிர்ச்சியோ அல்லது பொதுமக்களிடத்திலே மிகுந்த ஈடுபாடோ இருக்கக்கூடிய முதல்வரைப் பெற்ற ஓர் அரசாக இருந்தாலும்கூட, அகில இந்திய அளவில் எடுக்கப்படுகிற பொருளாதாரக் கொள்கைகளுக்கு உட்பட்டதாகத்தான் தமிழ்நாடோ, ஆந்திரமோ, கர்நாடகமோ எந்த மாநிலமாக இருந்தாலும் மாநிலத்தின் நிதிநிலை அறிக்கைகளை அவர்களால் கொண்டு வரமுடியும். எனவே, அப்படிப்பட்ட நிலையில் நமக்குக் கட்டாயமான ஒரு தேவையாக அது அமையவில்லை.

பொருளாதாரத்தின் பல்வேறு அளவுகோல்களை ஆண்டு முழுவதும் கணக்கிட்டால் மட்டுமே பொருளாதாரம் குறித்த மதிப்பீடுகள் சரியானவையாக இருக்கும். இது மிகக் கடினம் என்பதால், நிதிநிலை அறிக்கைபோல அன்றி, பொருளாதார மதிப்பாய்வில் குறிப்பிடப்படும் மதிப்பீடுகள் அனைத்தும், மிகத் தோராயமானவையேயன்றி, துல்லியமானவை அல்ல. அகில இந்திய அளவிலேகூட அவர்கள் குறிப்பிடும், *5.53* என்று சொன்னார்கள் என்றால் அது, *5.51* -ஆகவும் இருக்கலாம். *5.5* ஆகவும் இருக்கலாம். என்னதான் அவர்கள் கணக்கு எடுத்தாலும்கூட மக்கள்தொகைக் கணக்கெடுப்பிலேயே, சில கோடி குறைந்து போகிறது அல்லது கூடிப்போய்விடுகிறது. ஆகவே, இந்தப் புள்ளிவிவரங்கள் ஓரளவுக்கு குத்துமதிப்பாக ஒரு நிலையைக் காண்பதற்காகத்தான் பயன்படும். நமது மாநில பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் நிலை மற்றும் செயல்பாடுகள் பற்றிய அறிக்கையை Sector பற்றி ஆண்டுதோறும் மாநில பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை வெளியிடுகிறது. எனவே, நிதிநிலை அறிக்கைக்கு முன்பாக மற்றொரு பொருளாதார மதிப்பாய்வு செய்யும் அப்படியொரு அறிக்கை வைப்பது என்பது அவ்வளவு அவசியமாகவும், பயனுள்ளதாகவும் கருத முடியவில்லை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல விளைவு அறிக்கையும் தேவையில்லை. நிதிநிலை அறிக்கையில் மேற்கொள்ளப்படும் பல்வேறு ஒதுக்கீடுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் செலவினங்களை மட்டும் விளக்காமல், இந்தச் செலவினங்களால் பொதுமக்களுக்குக் கிடைத்த பலன்களையும், செயல்படுத்தப்பட்ட திட்டங்களின் தாக்கங்களையும்,

பல்வேறு குறியீடுகளில் Indicators ஏற்படும் முன்னேற்றத்தையும், விளக்குவதே விளைவு அறிக்கையாகும். நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு துறையும் தனது மானியக் கோரிக்கையின்போது தனித்தனியான கொள்கை விளக்கக் குறிப்புகள் என்னும் Policy Notes மூலம்—நாளை முதல் இந்த அவையிலே நடைபெற இருப்பது—ஒவ்வொரு துறையிலேயும் என்ன செயல்படுத்தப்பட்டது, பொதுமக்களுக்கு என்ன விதமான பலன்கள் கிடைத்தன என்பதையும், விளக்க இருக்கிறது. எனவே, அந்த Policy Notes மற்றும் சாதனை அறிக்கைகள் Performance Budgets சட்டமன்றப் பேரவைக்கு அளிக்கப்படுகின்றன. இவற்றிலேயே ஒவ்வொரு துறைக்கும் அளிக்கப்பட்ட, அளிக்கப்படவுள்ள நிதி ஒதுக்கீடுகள் மற்றும் அடையப்பட்டுள்ள, அடைந்துள்ள இலக்குகள் குறித்த விவரங்கள் அனைத்தும் தரப்படுகின்றன. இவற்றை அந்தந்தத் துறைக்கான விரிவான விளைவு அறிக்கை என்று, Result-oriented ஆக இருக்கக்கூடிய Outcome Budget இவை என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-15*

அதேபோல, Action Taken Report என்பதைக் குறித்து, இந்த அரசு பதவி ஏற்றது முதல் மூன்று ஆளுநர் உரைகள் மற்றும் கடந்த இரு நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றில் அளிக்கப்பட்ட பல்வேறு வாக்குறுதிகள் மற்றும் அறிவிக்கப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. அதாவது, Review by the Cabinet, Review by the Chief Minister, Review by the concerned Minister என்ற முறையில் இவையெல்லாம் அவ்வப்போது கண்காணிக்கப்பட்டு வருகின்றன. சுனாமி பாதிப்புக்கு ஆளான மக்களுக்கு வழங்கப்படுகிற உதவித் திட்டங்கள் குறித்து, மொத்த நிதியைப் பகிர்ந்து வழங்குவதற்கு ஒரு பெரிய குழு; மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தலைமையிலே அந்தந்த மாவட்டங்களிலே என்ன நடைபெற்றது என்பதை ஆய்வு செய்வதற்கு தலைமைச் செயலாளர் தலைமையிலே ஒரு குழு, மேலும் உள்ளாட்சித் துறை அமைச்சர் தலைமையிலே ஒரு குழு. இப்படிப் பல குழுக்கள் மூலமாக எல்லாப் பணிகளும், நடைபெறுகிற பணிகள், குறித்த காலத்தில் நடைபெற்றனவா என்பதும், நடைபெறவேண்டிய பணிகளிலே எவ்வளவு தாமதம் இருக்கிறது என்பதும், சுணக்கம் இருக்கிறது என்பதும் ஆகிய இவற்றையெல்லாம் ஆராயக்கூடிய வாய்ப்பு அரசாங்கத்திலே நடைமுறையில் இருக்கிறது. இந்த



விவரங்களை உள்ளடக்கிய செயல் அறிக்கையை வரும் வரவு-செலவுத் திட்டக் கூட்டத் தொடரின்போது சட்டமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஒப்புதலைக் கேட்டு, அப்படி வாய்ப்பு இருக்குமானால் தாக்கல் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையைப் பற்றிக்கூட இந்த அவையிலே விவாதிக்கப்பட்டது. தேர்தல் அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட அத்தனையும், ‘சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்’. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் ஒருபடி மேலே போனால், செய்யவேண்டியதையும் செய்வோம்; சொல்லாததையும் செய்வோம் என்ற ஒரு கருத்தைச் சொல்கிற பழக்கம் உண்டு. அது அவ்வளவு சரியாக எனக்குப் படவில்லை; செய்ய வேண்டியதையும் செய்வோம் என்பது பொருந்தும். இன்னும் எதிர்க்கட்சியினர் சொல்கிற நல்ல கடமைகளையும் இந்த அரசு செய்யும். அந்த முறையிலேதான் திரு. மணி அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டார்கள்; நாங்கள், கடந்த 5, 6 ஆண்டுக்காலமாக இந்த நிதிநிலை அறிக்கை வருவதற்கு முன்னாலே ஒரு நிழல் அறிக்கை தயாரித்திருக்கிறோம், அதையும் அனுப்பியிருக்கிறோம், அதிலே சில கருத்துகளையெல்லாம்கூட இந்த நிதிநிலை அறிக்கையிலே இடம்பெறச் செய்திருக்கிறீர்கள்; அதற்காக நன்றி, பாராட்டு என்று சொன்னார்கள். பின்பு பாராட்டாமல் என்ன செய்வார்கள், அது இடம் பெற்றுள்ளதே; எனில், இந்த அரசு பாட்டாளி மக்கள் கட்சி சொன்னதால் மட்டுல்ல, யார் சொன்னதாக இருந்தாலும், எப்போது சொன்னதாக இருந்தாலும், எந்த இடத்திலே சொன்னதாக இருந்தாலும், (மேசையைத் தட்டும் ஒலி)

‘எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.’

என்ற அடிப்படையில், பல ஆண்டுக்காலமாக நிதிநிலை அறிக்கை தயாரிப்பில் ஈடுபடுபவர் முதல்வர். நிதிநிலை அறிக்கை தயாரிப்பதற்கு முன்னதாக கலைஞர் அவர்கள் ஏறத்தாழ ஒரு மாத காலம்—அதிலேயும் அவருக்கு ஏறத்தாழ இது 13-வது ஆண்டு நிதிநிலை அறிக்கை. ஆகவே, 13-வது நிதிநிலை அறிக்கை தயாரிக்கிறவர், 6-வது நிதிநிலை அறிக்கை தயாரிப்பவருடைய ஆலோசனையையும் அவர் பெற்றிருக்கக்கூடும். ஆனால், 6-வது நிதிநிலை அறிக்கை நிழல்

அறிக்கைதான். இது உண்மையான அறிக்கை, அதிலும் 13 அறிக்கைகளைத் தயாரித்தவர் நம்முடைய முதலமைச்சர். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், திரு. மணி அவர்கள் அந்த நிழல் அறிக்கையிலே மிகுந்த மகிழ்ச்சி அடைவதைப் பார்க்கிறபோது அதிலேயே நிறைவான மகிழ்ச்சி அடைந்தாலும் சரிதான். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு) ஆனாலும், அதைச் சொல்கிறபோது, அரசியலிலே மூத்த தலைவர் என்று, அவர்களே கலைஞரைப் பாராட்டுகிறார்கள். என்னைவிட அவர் ஒன்றும் மூத்தவர் இல்லை. ஆனால், அவர்களைப் பாராட்ட வேண்டிய அவசியமும், நியாயமும், அதற்கான காரணங்களும் அமைகிறபோது, அவர்களை மிகுந்த ஆர்வத்தோடும், உற்சாகத்தோடும் பாராட்டுகிறார்கள். அப்புறம், நாங்கள் கொடுத்த அறிக்கைதான் அதிலே வந்திருக்கிறது என்று சொல்கிறபோது, அவர்களைவிட மூத்த அரசியல்வாதி, மூத்த நிர்வாகி, செயல்பாட்டிலே சிறந்தவர், தாழ்த்தப்பட்ட சமூகத்தினுடைய பிரதிநிதியாக இருக்கக்கூடியவர்——செல்வப்பெருந்தகை பேசுகிறபோது சொன்னதைப்போல——அவர்கள் எல்லாம் பிறப்பதற்கு முன்னாலே ஆதி திராவிடர் சமூகத்தை முன்னேற்றுவதற்கான (மேசையைத் தட்டும் ஒலி) வழி வகையில் பாடுபட்ட ஒருவர் கலைஞர்; இருந்தாலும், அரசியலிலே பயிற்சி தேவை என்பதற்காக, ஈடுபாடு தேவை என்பதற்காக பல உண்மைகளை விளங்கிக்கொள்ள வேண்டும் என்பதற்காக, நம்முடைய திரு. மணி அவர்கள் சொன்னதுபோல அவர் தயாரித்த நிழல் அறிக்கையை நாங்கள் மதித்துதான், கருதுகிறோம் என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-20*

அதேபோல, இந்தத் தேர்தல் அறிக்கையிலே நாங்கள் தெரிவித்த அந்தக் கருத்துகளையெல்லாம் நிறைவேற்றியிருக்கிறோம். எல்லா நலத்திட்ட உதவிகளும் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அப்படிச் சொல்கிறபோதுதான், நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொன்ன அந்த அடிப்படைக் கருத்து, என்னென்ன செய்தோம், என்னென்ன செய்தோம் என்றீர்கள். ஆனால், என்னென்ன நிறுத்தினீர்கள் என்று நீங்கள் சொன்னீர்களா? (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு முன்னாலே நடைபெற்றதிலே பல நலத் திட்டப் பணிகளும் நிறுத்தப்பட்டன. முந்தைய அரசால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பல நலத் திட்ட உதவிகளையும் இந்த அரசு மீண்டும் வழங்கி வருவதோடு—இப்போது நாம் வழங்குகின்ற பல திட்டங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. போனஸ்கூட அந்த ஆட்சியிலே



நிறுத்தப்பட்டது; அரசில் யாரையும் வேலைக்கு எடுக்கக்கூடாது என்று தடை உத்தரவே பிறப்பிக்கப்பட்டது. இன்னும் சொல்லப்போனால், அந்த அரசாங்கத்தில் ஒவ்வோர் ஆண்டும் அவர்கள் மொத்த வரவு-செலவுத் திட்டத்திலே, மத்திய அரசு அறிவித்த, விலைவாசி ஏற்றத்திற்காக ஈடுசெய்து தரப்படுகின்ற அகவிலைப் படியை, அதே காலத்திலிருந்து கொடுக்காமல், ஏறத்தாழ 4 மாதங்கள், 6 மாதங்கள் என்று இடையிலே காலம் விட்டு அதற்குப் பின்னர்தான் கொடுத்தார்கள். கலைஞர் ஆட்சியில் என்றைக்கு மைய அரசு சார்பில் அறிவிக்கின்றார்களோ, அந்தத் தேதியிலேயிருந்து இதுவரை கொடுத்து வருகின்றோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படி 4 மாதங்கள், 5 மாதங்கள், 6 மாதங்கள் என்று இடைவெளி விட்டு உயர்த்தப்பட்ட அகவிலைப் படி தந்த காரணத்தினாலே கடந்த ஐந்தாண்டுக் காலங்களில், நம்முடைய திரு. பன்னீர்செல்வம் அமைச்சராக இருந்த அந்த அரசுக்கு மீதம் ஏற்பட்டது, 1,400 கோடி ரூபாய். கொடுக்காமல் நிறுத்தியதால் மீதப்படுத்தப்பட்ட பணம், அதில் கொஞ்சம் வித்தியாசம் இருக்கலாம். புள்ளிவிவரங்களில் கொஞ்சம் தவறு இருக்குமானால் நான் திருத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அந்த விவரமெல்லாம்கூட இங்கே இருக்கிறது. ஆக, வருவாயில் அப்படியெல்லாம் மீதப்படுத்தினார்கள்.

அவற்றுக்குப் பதிலாக, இப்போது இந்த வரவு-செலவுத் திட்டத்தில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ் ரூபாய் 130 கோடி. இந்த திருமண உதவித் திட்டம் ரூபாய் 5 ஆயிரத்தில் இருந்து, 10 ஆயிரம் ஆகி, 15 ஆயிரம் ஆகி, 20 ஆயிரம் ஆகியிருக்கிறது. அதைத் தொடர்ந்து கலைஞர்தான் செய்யவேண்டுமென்பதற்காக இடையிலே அவர்கள் கை வைப்பதேயில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதைக் கூட்டுவதும் இல்லை, குறைப்பதும் இல்லை, வேண்டுமென்றால் நிறுத்துவார்கள். ஆக, அப்படி அந்தத் தொகை 130 கோடி ரூபாயும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டத்தின்கீழ் ரூ. 250 கோடி. ஒரு பத்திரிகையில் எழுதியிருக்கிறார்கள், 'This budget is more friendly towards the farmers and women's section' என்று எழுதியிருக்கின்றார்கள். மகளிருக்கு இந்த ஆட்சியில் எப்படிப்பட்ட நன்மை கிடைக்கிறது என்றால், 250 கோடி ரூபாய், எவ்வளவு மகளிரைச் சென்றடையும்! ஒவ்வொரு தாய்மாருக்கும் 6 ஆயிரம் ரூபாய். யாரோ ஒருவர் சொல்லியிருந்தார். நான் பத்திரிகையிலே பார்த்தேனா, இங்கே சொல்லியிருந்தாரா என்று தெரியவில்லை. இந்த உதவி கிடைக்கவில்லை, குழந்தை பிறந்து மூன்று மாதங்கள்

ஆகிவிட்டது என்று சொன்னார். விண்ணப்பம் போட்டதே குழந்தை பிறந்து இரண்டு மாதங்கள் கழித்துதான் போட்டிருப்பார்கள். ஆகவே, அது விண்ணப்பம் போட்டதில் ஏற்பட்ட குறையா இருக்குமே தவிர, இந்த அரசு அதற்கெல்லாம் சேர்த்தே நிதி ஒதுக்கி வழங்குகிறது. ஊனமுற்றோர் மற்றும் விதவைகளுக்கான உயர்த்தப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்காக ரூ.830 கோடியும், வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கான மாதாந்திர உதவித் தொகை திட்டத்திற்காக ரூ. 95 கோடியும் இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்த அரசு மக்களுக்குப் பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கிவரும் அதேநேரத்தில், மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும்—infrastructure—ஒரு சமுதாயத்தில் தொழில் வளரவேண்டும், பொருளாதார வளர்ச்சி ஏற்படவேண்டும் என்று கருதுகின்றபோது, இந்த அடிப்படை வளர்ச்சி இருந்தால்தான் அவற்றைச் செய்யமுடியும் என்பதால் இதுவரை முன் எப்போதும் வழங்கப்படாத உயர் அளவிற்கு நிதியை ஒதுக்கியிருக்கிறோம்.

இந்த வகையில் சாலைகள் மற்றும் பாலங்கள் குறித்த மூலதனப் பணிக்கு ரூ. 2,816 கோடி நிதி. இதற்கு முன்னாலேயெல்லாம் 500, 1,000 கோடி ரூபாய் என்று அந்த அளவில்தான் இருந்தது. இதற்கு 2,816 கோடி நிதியும், பாசன கட்டமைப்புகளை மேம்படுத்தவும், வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கு ரூ. 971 கோடியும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அனைத்துத் தரப்பு மக்களின் நன்மைக்காக செய்யப்பட்டவை இந்தக் காரியங்கள். அத்துடன், இந்தக் காரியங்களோடு, அகவிலைப்படி தவணைகளை காலம் தாழ்த்தி வழங்கியது கடந்த கால அரசு. அது 1,400 கோடி என்று சொன்னேன். அவர்கள் அதில் மீதப்படுத்தியது 1,453 கோடி ரூபாய். அதேபோல அரசில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்படாமலேயே இருந்தன. இவற்றிற்கெல்லாம் இப்போது ஈடு கொடுத்து நாம் நிறைவேற்றி வருகின்றோம்.

கடந்த காலத்திலே சாலைகள் குண்டும் குழியுமாகிப் பள்ளமாகிவிட்டால், அந்தப் பள்ளம் எவ்வளவு பெரியதாக இருந்தாலும் அதை நிரப்புகின்ற கடமை மறுபடியும் சாலையைப் போடுகின்றவர்களுக்கு ஏற்படத்தான் செய்யும். நிரப்பமாட்டேன் என்று சொன்னால், சாலை போட்டதாக அர்த்தமில்லை. ஆகவே, இந்த அரசு அந்தக் கடமைகளையும் செய்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விளக்கங்களுக்குள் நான் மேலும் போகவில்லை.



பிற்பகல் 1-25

இங்கே திருப்பூர், வேலூர், காட்பாடி போன்ற பகுதிகளில் தோல் பதனிடும் தொழிற்சாலைகள், அதேபோல சாயப் பட்டறைகள் இவையெல்லாம் இருக்கின்ற இடங்களில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்க 120 கோடி ரூபாய் மதிப்பீட்டில் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டதைக் கூறி, அதைப்பற்றி இங்கே பிரச்சினை எழுப்பினார்கள். இந்த அரசு என்ன செய்தது? கடந்த ஆண்டு அறிவித்தீர்கள், இன்னும் செய்யவில்லை என்றனர். அதாவது சாயப் பட்டறைகளில் இருந்து வெளியிலே வருகின்ற கழிவு நீராலே ஏற்படுகின்ற கேடுபாடுகள், ஊரிலே உள்ள பயிர் விளைச்சல் நிலங்களையும் பாழ்படுத்தி, குடிநீரையும் பாழ்படுத்திவிடுகிறது என்ற அடிப்படையில் அந்த நீரை தூய்மைப்படுத்துவதற்கு அல்லது சுத்திகரிப்பதற்கு ஒரு பெரிய திட்டம் 120 கோடி ரூபாயில் செய்யப்படும் என்று சொன்னீர்கள், அது என்ன ஆயிற்று என்று கேட்டார்கள்.

மாநில அரசு இதற்கு 15 சதவிகிதம் மானியம் ஒதுக்கவேண்டுமென்பது முறை. அந்த 15 சதவிகித மானியம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலைகளிடமிருந்து கிடைக்க வேண்டிய பங்குத்தொகை 25 விழுக்காடு, அந்த 25 விழுக்காட்டையும் அவர்கள் தருவதற்கு ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதைப்போன்றே சாயத் தொழிற்சாலைகளின் கழிவு நீரில் உள்ள மாசினை முற்றிலும் அகற்றும் திட்டத்திற்கும், இங்கு நான் குறிப்பிட்ட அடிப்படையில் ஏறத்தாழ 11-3-2008 அன்று பாரதப் பிரதமருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடிதம் அனுப்பியுள்ளார்கள். இத்திட்டத்திற்கு, தமிழக அரசு 15 சதவிகிதம் மானியம் ஒதுக்குவதற்கும் ஒப்புக்கொண்டு எழுதியிருக்கிறது. மத்திய அரசு அதை அங்கீகரித்து அந்தத் திட்டம் ஒப்புக்கொள்ளப்பட்டவுடன் இங்கே அது நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சில்லறை வணிகத்திலே வெளிநாட்டு வணிக நிலையங்கள், மிகப் பெரிய நிறுவனங்கள், இன்னும் வேறு சில வெளிநாட்டுக் கம்பெனிகள், அவையெல்லாம் இந்தியாவிலே அவர்களுடைய தொழில் நிலையங்களை ஆரம்பித்து அந்த அடிப்படையிலே சில்லறை வணிகத்திலே ஈடுபடுகின்றபோது நாம் அதிகம் பாதிக்கப்படுவோம் என்று திரு. மணி அவர்கள் பேசினார்கள். பொதுவுடைமைக்

கட்சிகளைச் சார்ந்த அதனுடைய தலைவர்களும் பேசினார்கள். அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அதிகாரம் வெளிநாட்டு கம்பெனியை அனுமதிப்பதா, இல்லையா என்ற அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருக்கிறது. இரண்டாவது, வெளிநாட்டு முதலீடு குறித்து முடிவு செய்யும் அதிகாரம் மத்திய அரசுக்குத்தான் இருப்பதோடு, தற்போது வெளிநாட்டு நிறுவனங்களின் முதலீடு சில்லறை வணிகத்தில் இதுவரை அனுமதிக்கப்படவில்லை. இந்தத் தேதி வரைக்கும் அந்தச் சில்லறை வணிகத்திற்கு அவர்களுக்கெல்லாம் அனுமதி வழங்கப்படவில்லை. அவர்கள் ஏதாவது திட்டங்கள் போட்டிருக்கலாம். அது வெளிநாட்டு நிறுவனமாக இருக்காது. உள்நாட்டிலே இப்போது சில பெரிய நிறுவனங்கள் வர ஆரம்பித்துவிட்டன. அது உள் நாட்டு நிறுவனங்களாக இருக்கக்கூடும் என்று நான் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வெள்ளச் சேதம் மற்றும் வேறுபல இயற்கை இடர்களாலே பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதைப் பற்றி இரண்டு, மூன்று விதமான கருத்துகள் இங்கே பேசப்பட்டன. அதிலே ஒன்று வழங்கப்பட்ட நிதி முழுவதுமாக அந்த மாவட்டங்களுக்குப் போய்ச் சேர்ந்தனவா என்று கேட்டிருக்கிறார்கள். மாவட்ட கலெக்டர்களுக்கு மொத்தம் 100 கோடி ரூபாய் வழங்கப்பட்டுவிட்டது. அவர்கள் அதை, அங்கே வழங்குவதிலே சில சிக்கல்கள் இருக்கலாம் அல்லது காலதாமதம் ஆகலாம். அதை விரைவுபடுத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யும். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கும், விவசாயிகளுக்கும் நிவாரண உதவி அவர்கள் இப்போது வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். முழுவதுமாக வழங்கி அதற்குப் பிறகு அந்த ரிப்போர்ட் தலைமைக்கு வரும். அப்படி வருகின்றபோது தெரிவிக்கப்படும்.

அதேபோல, மத்திய அரசிடம் 1,500 கோடி ரூபாய் அளவிற்கு இப்போது கடந்த டிசம்பரில் ஏற்பட்ட வெள்ள பாதிப்பிற்கு நிதி கேட்டீர்களே, என்ன ஆயிற்று என்று கேட்டிருக்கிறார்கள். மத்திய அரசு அதைப் பரிசிலனை செய்துகொண்டிருப்பதாகத்தான் அறிகிறேன். ஆனால், பல பேர் என்ன எண்ணுகிறார்கள், 1,500 கோடி ரூபாய் கேட்டால் 1,000 கோடி ரூபாய் தருவார்கள், 1,200 கோடி ரூபாய் தருவார்கள் என்று ஒரு கணக்கு வைத்துக்கொண்டு அவ்வளவு பெரிய தொகை வரவில்லையே என்று குறைபடும் ஒரு தவறான கண்ணோட்டம் இருக்கிறது. அது எந்தக் கட்சி ஆட்சியாக இருந்தாலும் இந்த இடர் அல்லது விபத்து, சீரழிவு ஏற்படுகின்றபோது



அதற்கு வழங்குவதற்கென்றே ஒரு நிதி அந்தந்த மாநிலத்திற்கென்று ஆண்டொன்றுக்கு இவ்வளவு என்று முதலிலேயே ஒதுக்கப்பட்டு அது தீர்மானிக்கப்படுகிறது. அப்படி ஏறத்தாழ 250 கோடி ரூபாய் தமிழகத்திற்கு உரியதாக இருக்கிறது. அந்த 250 கோடியிலே 75 விழுக்காடு மத்திய அரசு தருகிறது. 25 விழுக்காடு மாநில அரசு பங்கு. அந்த நிதி அதற்கென்றே செலவிடப்படுகிறது.

ஆனால், மத்திய அரசிடம், இயற்கை இடர்பாடுகளைக் களைவதற்காக அவர்களிடம் கேட்கிற நிதியிலே உடனடியாகச் செய்யப்படவேண்டிய பணிகள் என்பதற்குத்தான் அவர்கள் நிதி தருவார்கள். நிரந்தரமாக செய்யப்படவேண்டிய பணிகளெல்லாம் மாநில அரசின் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படவேண்டும். மாநில அரசினுடைய திட்டத் தொகையிலே அவை சேர்க்கப்படவேண்டும். ரோடு போடவேண்டும், பாலம் கட்டவேண்டும், அணை கட்டவேண்டும் என்று இவையெல்லாம் ஒருவேளை அதிலே சேருவதாக இருந்தால் அவை நிரந்தரப் பணிகள். அந்த நிரந்தரப் பணிகளுக்குத் திட்டப் பணியிலேதான் சேர்த்து அந்தந்த மாநிலங்கள் செய்துகொள்ளவேண்டும். ஆகவே, இப்போது இந்த ரூபாய் 1,500 கோடியில் அவர்களுடைய பரிசிலனைக்கு உள்ளாக இருக்கக்கூடியது 500 கோடி ரூபாய் மட்டுமே. அது உடனடிப் பணிகளுக்காக. அந்த உடனடிப் பணிகளைத்தான் ஏற்கெனவே 200 கோடி ரூபாய் அளவிற்கு அனுமதித்து செலவு செய்திருக்கிறோம். அந்த உடனடியாகச் செய்யப்படுகின்ற அந்தக் காரியங்களுக்கு அவர்கள் எவ்வளவு நிதி தருவார்கள் என்பது தெரியாவிட்டாலும்கூட, எந்தக் கடமையும் நிறுத்தி வைக்கப்படவில்லை. செய்யப்படவேண்டிய காரியங்கள், மாநில அரசினுடைய பொறுப்பிலே செய்யப்பட்டிருக்கின்றன, தொடர்ந்து செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இங்கு எழுப்பப்பட்ட பல செய்திகளுக்கு ஒருவேளை நான் விடையளிக்க முடியாத அளவுக்கு காலம் கடந்துவிடுமானால், இந்த அவை மன்னித்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆனால், இங்கே எழுப்பப்பட்ட பெரும்பாலான பிரச்சினைகளுக்கு என்னிடத்திலே

விடை இருக்கிறது. உங்களுக்குப் பொறுமை இருக்கிறதா என்பதுதான் கேள்வியே தவிர, விடை இல்லை என்று யாரும் தயவுசெய்து கருத வேண்டாம்.

இங்கே நம்முடைய திரு. செங்கோட்டையன் அவர்கள் பேசுகின்றபோது விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை 3 ஆயிரம் ரூபாயை 4 ஆயிரம் ரூபாயாக உயர்த்தித் தருவதாக ஏற்கெனவே அறிவித்தீர்கள், இன்னும் வழங்கப்படவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்கள். அது வழங்கப்பட்டுவிட்டது. சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கான ஓய்வூதியத்தை ரூபாய் 3 ஆயிரத்திலிருந்து ரூபாய் 4 ஆயிரமாகவும், குடும்ப ஓய்வூதியம் ரூபாய் 1,500-லிருந்து ரூபாய் 2,000 ஆகவும் உயர்த்தப்படும் என்று 9-5-2007 அன்று நான் அறிவித்தேன். இதற்கான அரசாணை வெளியிடப்பட்டு, இந்தத் தொகை உடனடியாக வழங்கும் வகையில் மாநில அரசின் அவசர நிதியிலிருந்து Contingency Fund அத்தொகை விடுவிக்கப்பட்டு, இந்த உயர்த்தப்பட்ட ஓய்வூதியம் 1-5-2007 முதல்—இது 2008—1-5-2007 முதலே வழங்கப்பட்டு வருகிறது. எனவே, எந்த ஒரு மாவட்டத்தில், யாருக்கு இந்த ஓய்வூதியம் கிடைக்கப் பெறவில்லை என்ற விவரத்தை உறுப்பினர் அவர்கள் தெரிவித்தால் அவர்களுக்கும் வழங்கப்படும்.

அதேபோல, இங்கே திருமதி யசோதா அம்மையார் அவர்கள் பேசுகிறபோது, ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதிகளுக்குத் தருகிற நிதி குறைவாக இருக்கிறது, சமூக நலத் துறையிலே கட்டப்படுகிற கட்டடங்களுக்கு, அந்தப் பிள்ளைகளுக்கு நிதி அதிகம் செலவிடுகிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். அது உண்மை அல்ல. அது வேறு காரியத்திற்கு. இது வேறு காரியத்திற்கு. ஆதி திராவிட மாணவர்களுடைய விடுதிகள் கட்டுவதற்கு ஏறத்தாழ ரூபாய் 48 இலட்சம், 50 இலட்சம் தப்படுகிறது என்றால் அதே தொகை Backward Community-க்கும் தரப்படுகிறது. M.B.C.-க்கும் தரப்படுகிறது. அவர்களுடைய விடுதிகளுக்கு அதுதான் தொகை. தொகையிலே வித்தியாசம் இல்லை. கட்டட plan கூட ஏறத்தாழ ஒரே மாதிரியாகத்தான் அது அமையும்.

நான் கடந்த முறை அந்தத் துறையுடன் தொடர்பு எனக்கு இருந்தபோது அந்தக் கட்டடங்களைத் திறந்து வைக்கச் சென்றபோது பிற்படுத்தப்பட்ட மாணவர்களுடைய விடுதிக் கட்டடங்களையும், தாழ்த்தப்பட்ட மாணவர்களுடைய விடுதிக் கட்டடங்களையும் திறந்து வைக்கச் சென்றபோது கண்டேன். அவை எல்லாம் இப்போது, மிக



வசதியாக, கலைஞருடைய ஆட்சிக் காலத்திலேதான் புதியதாகத் திட்டமிடப்பட்டு கட்டப்படுகின்றன. எல்லாவற்றிற்கும் ரூபாய் 50 இலட்சம்தான் தரப்படுகிறது. ஆனால், அவர்கள் சொன்னார்கள் 100 பேருக்கு ரூபாய் 2.8 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று. அது இந்த வகையில் அல்ல, சமூக நலத் துறையிலும் அல்ல. அது மத்திய அரசாங்கத்திலும், மாநில அரசாங்கத்திலும் பணிபுரிகிற மகளிர் இருக்கிறார்களே அவர்களுக்கு அவர்கள் மாதம் இவ்வளவு தொகை செலுத்த வேண்டும் என்கிற அந்த அடிப்படையிலே அவர்கள் தங்கியிருந்து பணி செய்வதற்காக கட்டப்படுகிற கட்டடத்திற்கு அந்தத் தொகை. உறுப்பினர் அவர்கள் 2 கோடி ரூபாய்க்கு மேல் சமூக நலத் துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்டதாகக் குறிப்பிடுவது, சென்னையில் அமைக்கப்படவிருக்கும் பணிபுரியும் மகளிருக்கான விடுதியாகும். இதில் தங்குவோர் அனைவரும் விடுதிக் கட்டணம் மற்றும் உணவுக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்தியே தங்கவேண்டும் என்பதால், அதற்கேற்றவாறு வசதிகளை அளிப்பதற்காக சுமார் 100 பேர் தங்கும் விடுதிக்கு 2 கோடி ரூபாய் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. அது கோடம்பாக்கத்தில் இருக்கிற வடபழனி திருக்கோயிலினுடைய நிலமாக இருக்க வேண்டும் என்று கருதுகிறேன். அந்த நிலத்தைப் பெற்று அவர்களுக்காகக் கட்டப்படுகிறது. மற்றபடி ஆதி திராவிட மாணவர்களுக்குக் கூட்டப்படுகிற விடுதியில் அவர்களுக்கு வழங்கப்படுகிற உணவில், அவர்களுக்கு வழங்கப்படுகிற உடையில், அவர்களுக்கு வழங்கப்படுகிற எந்தச் சலுகையிலேயும் நம்முடைய திரு. மணி அவர்களுக்கும் திருமதி யசோதா அம்மையாருக்கும் இடையிலே நாங்கள் எந்தவித வேறுபாடும் வைக்கவில்லை என்று வெளிப்படையாக நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல நம்முடைய திரு. செல்வம் அவர்கள்—செல்வப் பெருந்தகை சொன்னார்; என்னைக்கூட பேராசிரியர் என்று சொல்லலாமா என்கிற அர்த்தத்தில் ஒருவர் இங்கே பேசினார்கள். நான்கூட சில நண்பர்களிடத்திலே சொன்னேன், இனிமேல் என்னைப் பேராசிரியர் என்று சொல்லாதீர்கள்; அன்பழகன் என்றே சொல்லுங்கள் என்றேன். அந்தப் பெயர் அழகாகவே இருக்கிறது, ஒரு பத்திரிகை தலையங்கத்தில்கூட அந்தப் பெயர் பாராட்டப்பட்டிருக்கிறது என்று சொன்னேன். அவர்கள் இப்போது என்னைப் பேராசிரியப் பெருந்தகை என்கிறார்கள். பெருமாள் என்று பெயர் வைத்திருப்பவரை மாற்றச் சொன்னபோது பெத்த பெருமாள் என்று பெயர் வைத்துக்கொள்கிற மாதிரி. (சிரிப்பு) ஆக,

செல்வப் பெருந்தகையை பார்க்கிறபோது எனக்கு மகிழ்ச்சி. அதுவும் ஒரு பெயராகவே ஆகிவிடக்கூடிய வாய்ப்பு அந்தப் பெருந்தகை என்ற சொல்லுக்குக் கிடைத்திருக்கிறது. அவர் பேசும்போது மத்திய அரசு வழங்குகிற ரூபாய் 16 ஆயிரம் கோடியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களுக்கு அவர்களுடைய மக்கள்தொகை அடிப்படையிலே பங்கு தரவில்லை என்று குறைபட்டுக் கொண்டார்.

*பிற்பகல் 1-35*

பங்கு கேட்பது என்றால் யாரிடம் வேண்டுமானாலும் கேட்கலாம். நமக்கு உரிமை இருக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் இந்த 16,000 கோடி ரூபாய் என்பது, மத்திய அரசு தருகிற தொகை அல்ல. 16,000 கோடி ரூபாய்க்கு பல திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நமக்கு அனுமதி, ஒத்திசைவு தருகிறார்கள், அங்கீகாரம் தருகிறார்கள். அந்த 16,000 கோடி ரூபாயில் நாம் போடுகின்ற பல திட்டங்களில் 70 விழுக்காடு, 75 விழுக்காடு, 80 விழுக்காடு மாநில அரசினுடைய நிதி. 20, 25, 30 விழுக்காடு, அந்தந்தத் திட்டத்திற்குத் தகுந்தாற்போல மத்திய அரசினுடைய உதவித் தொகை. ஆனால் maximum எதற்காகச் சொல்கிறார்கள் என்றால் மொத்தத் திட்டம் அகில இந்திய அளவிலே, எந்த அளவிலே நிறைவேறுகிறது என்பதும், நிறைவேற்றப்பட வேண்டும் என்பதும் அவர்களுடைய மொத்த திட்டத்தைக் கணக்கிட அந்த 16 ஆயிரம் கோடி ரூபாய் என்று சொல்லப்படுகிறதே தவிர அப்படி ஒரு நிதி நமக்குத் தரப்படவில்லை. ஆனால், திட்டத்திற்கான நிதியிலே ஏறத்தாழ 75 சதவிகிதம் மாநில அரசினுடைய பணம்.

மற்றும் ஒன்று, இப்படிப் போடப்படுகின்ற திட்டத்திலே, ஆதி திராவிட சமூகத்தினருக்காக என்று ஏதேனும் சில திட்டங்கள் போடப்படும். இந்தத் திட்டத்திலும் இருக்கலாம். ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டுவதற்காக, ஆதி திராவிடர்களுக்கு பள்ளிக்கூடம் கட்டுவதற்கு, என்று; ஏதேனும் ஒரு காலனியிலே சாலை போடுவதற்காக என்று ஏதேனும் திட்டத்தில் இடம் பெறலாம். ஆனால், திட்டத்தை அப்படிப் பங்கிட்டுப் பிரிக்கமுடியுமா என்றால், நெடுஞ்சாலை போடுகிறோம். நெடுஞ்சாலைக்கு 27 கோடி ரூபாய் என்று திட்டம் வருகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் சொல்வது எல்லாமே உவமைதான். புள்ளிவிவரத்தைச் சொன்னால் இன்னும் ஒரு மணி நேரம் அதிகம் ஆகும். ஆக, 27 கோடி ரூபாய் செலவாகிறது என்றால் அதிலே ஆதி திராவிடர்களுக்கு எவ்வளவு என்று எப்படிப் பிரிப்பது? பொதுவான பள்ளிக்கூடங்களில் ஆதி



திராவிட மாணவர்கள் படிக்கக்கூடாது என்று யாராவது சொல்ல முடியுமா? படிக்கவேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். ஆக, ஆதி திராவிட மாணவர்களில் பொதுவான பள்ளிக் கூடங்களிலே படிக்கிற பிள்ளைகளுக்காக செலவாவதை யார் பிரித்துக் கணக்கு பார்ப்பது? ஆகவே, ஆதி திராவிடர்களுக்குச் சிறப்புக் கூறு திட்டம் என்று சொல்வது அவர்களுக்கென்று போடுகின்ற திட்டங்களை சற்று பலமாக, வலிவாக அதிக அளவிற்குப் பயன் உள்ளதாக, ஆக்குவதாகத்தான் கருதப்படுகிறது. அந்த முறையிலே நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன், மேற்கூறிய திட்டச் செலவினங்களில் முதலில் கூறப்பட்ட பிரித்து அளிக்கத்தக்க—which can be identified—இது ஆதி திராவிடர்களுக்குத்தான் என்று தனியாகப் பிரித்து அளிக்கக்கூடிய இனங்களின்கீழ், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக, அவர்களுடைய நலத் திட்டங்களுக்கான மொத்த ஒதுக்கீடு, 2005-2006 ஆம் ஆண்டில் அது 567 கோடி ரூபாய். 2005-2006 ஆம் ஆண்டு என்பது நம்முடைய திரு. பன்னீர்செல்வம் அவர்கள், எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஆட்சி உரிமை கொண்டாடுகிற அந்தக் காலம். 2005-2006-ல் 567 கோடி ரூபாய். 2006-2007 ஆம் ஆண்டில், 1,085 கோடி ரூபாய். அரசில் நாம் அடி எடுத்து வைத்தவுடனே 2 மடங்கு. 2007-2008 ஆம் ஆண்டில் இந்த ஒதுக்கீடு 1,544 கோடி. மீண்டும் உயர்த்தப்பட்டதோடு, இந்த நிதிநிலை அறிக்கையில் வரும் நிதி ஆண்டில், இந்தத் தலைப்பில் ஒதுக்கீடு 2,312 கோடி ரூபாய். அரசுக்கு மனம் இருந்தால் என்னென்ன காரியங்கள் செய்யவேண்டி இருக்கிறதோ அந்தக் காரியங்களை ஆதி திராவிட மக்களுக்காக ஆர்வத்தோடு நிச்சயமாக நிறைவேற்றும். அந்த முறையிலே இந்த அரசு இந்த ஆண்டு ஒதுக்கியிருக்கிற தொகையைப் பார்த்தால், கடந்த 4 ஆண்டுகளில் 4 மடங்கு, ஆதி திராவிட மக்கள், பழங்குடி மக்கள் அப்படிப்பட்ட மக்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைப் பார்த்துவிட்டு யாரும் பின்தங்கிய மக்களோ Backward or Most Backward எங்களுக்கு எவ்வளவு என்று கேட்கக்கூடாது. அவர்களுக்கு அதுமாதிரி இல்லை. அவர்கள் ஜாதகம் தனியாக எழுதப்படவில்லை. தனியாக எழுதியிருக்கிற காரணத்தினாலே அவர்களுக்குச் சொல்லி இருக்கிறோமே தவிர, மற்றவர்களுக்கும் உரிய முறையில் இந்த அரசு எல்லா வகையிலேயும் அந்தந்த சமூகத்தினருடைய முன்னேற்றத்திற்காக ஆற்றவேண்டிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். நான் சொன்ன விளக்கம் போதும் என்று கருதுகிறேன்.

இங்கே திரு. குமரகுரு அவர்கள் பேசுகிறபோது, விழுப்புரம், மருத்துவக் கல்லூரி இன்னும் தொடங்கப்படவில்லை என்றார்கள். அதற்கு இடம் பெறப்பட்டிருக்கிறது. அதிலேகூட சில இடையூறுகள் இருந்தன. அவற்றையெல்லாம் கடந்து பெறப்பட்டிருக்கிறது. ஒரு மருத்துவக் கல்லூரி தொடங்குவதாக அறிவித்தால் நிலம் கிடைக்க, அந்த நிலத்திற்குக்கூட பாட்டாளி மக்கள் கட்சியினுடைய எதிர்ப்பெல்லாம் இருந்தது. அது ஒரு ஏரியாக இருக்கிறது. அந்த ஏரி நீர் எல்லாம் பாசனத்திற்குப் பயன்படும் என்று அவர்களே பேசினர். பிறகு அந்தக் கல்லூரியைக் கட்டவிட்டுப் பார்த்தார்கள் என்றால், அதைவிட இது நல்ல காரியமாக இருக்கிறது என்று சொன்னாலும் சொல்வார்கள். ஆனாலும், அந்த மருத்துவக் கல்லூரி வர கடந்த ஆட்சிக் காலத்திலே, தேனியிலே ஒரு மருத்துவக் கல்லூரி வருவதற்கு 4 ஆண்டுகள் ஆயிற்று. அவர் பெரியகுளத்திலே இருக்கிற காரணத்தினாலே எதிர்க்கட்சித் துணைத் தலைவருக்கு நன்றாகத் தெரியும். மருத்துவமனை வருவதற்கு 2 வருடங்கள் ஆகும், கட்டடம் வருவதற்கு 2, 3 வருடங்கள் ஆகும். மருத்துவமனை வருவதற்கு 4 வருடங்கள். அப்புறம் அதிலே கல்லூரி வருவதற்கு மேலும் 1 வருடம். ஆகவே, அந்த 5 ஆண்டுக் காலத்திலே விழுப்புரத்திலே மருத்துவக் கல்லூரி நல்ல முறையிலே வரும் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-40*

பெரம்பலூர் சிறப்புப் பொருளாதார மண்டலத்தின் தற்போதைய நிலை குறித்து, உறுப்பினர் திரு. ஜெயக்குமார் அவர்கள் அந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் என்ன ஆயிற்று என்று கேட்டார். இந்த மண்டலத்தை அமைப்பதற்காக சர்வதேச ஒப்பந்தப்புள்ளி மூலமாக GVK தொழில் நிறுவனம் தேர்வு செய்யப்பட்டு உள்ளது. இந்த சிறப்புப் பொருளாதார மண்டலத்தை அமைப்பதற்கான திட்ட மதிப்பீடு 1,000 கோடி ரூபாய் ஆகும். இந்த மண்டலத்தில் ரூபாய் 5,000 கோடி அளவிற்கு வரும் ஆண்டுகளில் முதலீடு செய்யப்பட்டு, புதிய தொழிற்சாலைகள் அமைக்கப்படும். இதனால், சுமார் 50,000 பேருக்கு வேலைவாய்ப்பு உருவாகும். பெரம்பலூர் மாவட்டத்தில் எறையூர், பேரையூர், திருமாந்துறை மற்றும் பென்னகோணம் ஆகிய கிராமங்களில் இந்தப் பொருளாதார மண்டலத்தை அமைப்பதற்காக 3,156 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, பேச்சுவார்த்தைகள் மூலமாக, இதுவரை தகுந்த விலை கொடுத்து 2,350 ஏக்கர் நிலம் வாங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள நிலங்களும் வரும் மே மாதத்திற்குள்



பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்குப் பின்னர் அந்த நிறுவனம் மூலமாக—ஏனென்றால் தனியார் மூலமாகத்தான் அந்த சிறப்புப் பொருளாதார மண்டலம் வருகிறது—அந்தத் தனியார் நிறுவனம் அந்தப் பொருளாதார மண்டலத்தை அமைக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல மெட்ரோ இரயில் திட்டம் குறித்து மெட்ரோ இரயில் என்று சொன்னீர்கள், காகிதத்தில்தான் இருக்கிறது, மெட்ரோவையும் காணோம், இரயிலையும் காணோம், அந்தத் திட்டம் எப்போது வரும் என்றனர். அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மெட்ரோ இரயில் திட்டத்திற்கு 2 ஆண்டுக் காலத்தில் ஆய்வே மேற்கொள்ளப்படவில்லையென்று திரு. வைத்திலிங்கம் அவர்கள் சொன்னார்கள். ரூ.50 கோடி கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்குப் பங்கு மூலதனமாக, பங்குத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு இடைக்காலத் திட்ட ஆலோசகராக டெல்லி மெட்ரோ இரயில் கழகம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டப் பணிகளுக்கென விரிவான தொழில்நுட்ப ஆலோசனை—Detailed Engineering தேர்வு செய்வதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூபாய் 300 கோடியும் பங்கு மூலதன உதவியாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்திற்கு வழங்கப்படும். மத்திய அரசு மற்றும் ஜப்பான் பன்னாட்டு கூட்டுறவு வங்கியின் ஒப்புதல் மற்றும் நிதியுதவி பெற்று இத்திட்டத்திற்கான பணிகள் விரைவில் தொடங்கப்படும்.

மற்றும் ஒரு பிரச்சினை அரக்கோணம், திருத்தணி நகராட்சி குடிநீர்த் திட்டங்கள் குறித்து அந்தத் தொகுதியைச் சேர்ந்த உறுப்பினர் பேசுகிறபோது இங்கே எப்போது நிறைவேறும் என்று கேட்டார்கள். அரக்கோணம் மற்றும் திருத்தணி நகராட்சிகளுக்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் முந்தைய அரசால் அறிவிக்கப்பட்டும் அதனைச் செயல்படுத்த நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இந்த அரசு பதவியேற்றபின் பாலாற்றிலிருந்து இந்த 2 நகராட்சிகளுக்கு குடிநீர் கொண்டு வருவதற்காக கூட்டுக் குடிநீர்த் திட்டம் இறுதி செய்யப்பட்டு 25-11-2006 அன்று நிருவாக ஒப்புதல் Administrative Sanction வழங்கப்பட்டுள்ளது. இதற்கான ஒப்பந்தப் புள்ளிகள்

முடிவு செய்யப்பட்டு கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. 2008 டிசம்பர் மாதத்தில் இப்பணிகள் நிறைவுறும்.

அரியலூர் நகராட்சிக்குத் தற்போது கொள்ளிடத்திலிருந்து நீரை எடுத்து வருவது பற்றி நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர், அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி எழுப்பினார்கள். அரியலூர் நகராட்சிக்குத் தற்போது கொள்ளிடத்திலிருந்து நீரை எடுத்து வந்து வழங்குவதற்கான கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் நீரேற்றுக் குழாய்களில் அடிக்கடி உடைப்புகள் ஏற்பட்டு குடிநீர் விநியோகம் தடைப்படுவதைத் தவிர்க்கும் வகையில் புதிய குழாய்களைப் பதிக்குமாறு நகராட்சி மன்றம், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தைக் கேட்டுக்கொண்டுள்ளது. இப்பணிக்கான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இத்திட்டம் இந்த நிதியாண்டிலேயே தொடங்கப்பட உள்ளது என்பதை திரு. அமரமூர்த்தி அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, பாதாள சாக்கடைத் திட்டங்களைப் பற்றியெல்லாம் கேட்டார்கள். அவையெல்லாம் இப்போது நடைமுறையிலே செயல்படுத்துவதற்கு தஞ்சாவூரில், வேலூரில் அங்கேயெல்லாம் அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. மேலும் தஞ்சாவூரில் 1,816 இணைப்புகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அதேபோல ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்ட நிலையில், வேலூரில் இருக்கிறது. ஒப்பந்தப் புள்ளி வந்தவுடன் அதற்கான வேலைகள் தொடங்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆட்சிக் காலத்தில் 8,833 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டதாகவும் இந்தத் திட்டத்தின் தற்போதைய நிலை குறித்து நிதிநிலை அறிக்கையில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்று அ.தி.மு.க. உறுப்பினர் திரு. அரி குறிப்பிட்டார். இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, முதல் 2 ஆண்டுக் காலத்திலேயே மாநிலம் எங்கும் 4,521 பண்ணைக் குட்டைகள் இதுவரை அமைக்கப்பட்டுள்ளன. இது மட்டுமன்றி, வரும் நிதியாண்டில் 3,898 பண்ணைக் குட்டைகள் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு, கடந்த ஆட்சியின்போது 5 ஆண்டுகளில் அமைக்கப்பட்ட பண்ணைக் குட்டைகளைவிட, இந்த அரசின் முதல் 3 ஆண்டுகளிலேயே அதிக எண்ணிக்கையில் பண்ணைக் குட்டைகள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



பிற்பகல் 1-45

அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருண்மொழிதேவன் அவர்கள் பேசும்போது, 11-வது வகுப்புப் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு இந்த அரசால் வழங்கப்படும் மிதி வண்டிகள், சைக்கிள் கடந்த ஆட்சிக் காலத்தின்போது வழங்கப்பட்ட மிதி வண்டிகளைவிட எடை குறைவாக உள்ளதாக இங்கே பேசினார். மிதி வண்டிகளை வாங்கும்போது, மிதி வண்டிகளின் பாகங்களைப் பற்றித்தான் ஒவ்வொன்றும் ISI specification number படி அவை இருக்கின்றனவா என்று அரசு இதற்காக நியமிக்கிற அந்தத் துறையைச் சார்ந்த நிபுணர்கள் இதை அந்த specifications படி, குறிப்பிட்ட தரம் உள்ளதாக அதனுடைய உதிரிப் பாகங்கள் இருக்கின்றனவா என்று பார்ப்பதுதான் வழக்கமே தவிர, அந்த மிதி வண்டி எவ்வளவு எடை இருக்கிறது என்று பார்ப்பது வழக்கம் இல்லை. அதில் இங்கே சொல்லப்பட்ட கருத்து, எடை குறைந்து போயிற்று என்றார். எடை பார்க்கிற பழக்கமே கிடையாது. ஆனால், தரம் குறைந்தால் அந்தத் தரம் குறைந்ததற்குக் காரணமாக ஏதேனும் குறைபாடு இருக்குமானால் அது ஆராயப்படும்.

திரு. ரவிக்குமார், எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகிறபோது, வீட்டுப் பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் உறுதி செய்யப்பட வேண்டுமென்று கூறினார்கள். நம்முடைய நாட்டிலேயே முதல்முறையாக இந்த அரசால்தான் வீட்டுப் பணியாளர் நல வாரியம் அமைக்கப்பட்டு, இதுவரை சுமார் 59,000 வீட்டுப் பணியாளர்கள் உறுப்பினர்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இவர்களில் 3,323 பேருக்கு நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறைந்தபட்ச ஊதியச் சட்ட அட்டவணையில், வீட்டு வேலைப் பணியைச் சேர்ப்பதற்கான முதல் நிலை அறிவிக்கை preliminary notification அரசால் வெளியிடப்பட்டுள்ளது. இதனை உறுதி செய்வதற்கான அறிவிக்கையும் இந்த அரசால் வெளியிடப்பட்ட பின்பு, வீட்டு வேலைப் பணியாளர்களுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை நிர்ணயிப்பதற்கு ஆலோசனைக் குழு ஒன்று அமைக்கப்படும். இக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வீட்டு வேலைப் பணியாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்கப்படும்.

வேறு பல உறுப்பினர்கள் எழுப்பிய அந்தப் பிரச்சினைகளைக் குறித்தும் அந்தந்தத் துறையைச் சேர்ந்த அலுவலர்கள், அந்தந்தத் துறை அமைச்சர்கள், அவற்றையெல்லாம் உரிய முறையிலே பரிசீலித்து, நிறைவேற்றப்படவேண்டிய பல வேண்டுகோள்கள் மாண்புமிகு உறுப்பினர்களாலே தெரிவிக்கப் பட்டிருக்குமானால், அவற்றையெல்லாம் ஆய்வு செய்து ஏற்புடையவற்றை நிறைவேற்றுவார்கள் என்று நான் அவர்களுக்கு உறுதி கூறிக்கொள்கிறேன்.

திருமதி யசோதா அவர்கள் இங்கே பேசுகிறபோது, காவல் துறைக்காக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த அந்தக் காவல் நிலையங்களே இன்னும் சரியாக வரவில்லை என்று குறிப்பிட்டார்கள். அது சரியான விவரம் அல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் தொகுதியிலுள்ள காவல் நிலையங்களுக்கான ஆணை 12-6-2007 அன்றே வெளியிடப்பட்டு அதன்படி திருப்பெரும்புதூர் காவல் நிலையம் வகை மூன்றிலிருந்து வகை இரண்டாக நிலை உயர்த்தப்பட்டு, கூடுதல் காவலர்களுடன் 23-7-2007 முதல் இயங்கி வருகிறது. சுங்குவார்சத்திரம் காவல் நிலையம் வகை ஐந்திலிருந்து வகை ஒன்றாக நிலை உயர்த்தப்பட்டு, கூடுதல் காவலர்களுடன் 12-7-2007 முதல் இயங்கி வருகிறது. ஒரகடம் காவல் நிலையம் வகை ஒன்று காவல் நிலையமாகப் புதிதாக அமைக்கப்பட்டு, 10-8-2007 முதல் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த நிதிநிலை அறிக்கை பற்றிய விவாதத்திலே கலந்துகொண்டு தங்களுடைய மேலான கருத்துகளை, தங்களுடைய விருப்பங்களை, தங்களுடைய குறைகளை, அவற்றையெல்லாம் எடுத்துச் சொன்னதற்காக, ஏறத்தாழ 53 பேர், நான்தான் 53-வது என்று கருதுகிறேன். 52 பேர் கலந்துகொண்டு உரையாற்றியதற்காக, அதுவும் வெளிநடப்புச் செய்தவர்களும் வந்து மனதாரக் கலந்துகொண்டு உரையாற்றியதற்காக, அனைவருக்கும் நன்றிகூறி, இந்த நிதிநிலை அறிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று உங்களையெல்லாம் பணிவோடு கேட்டுக்கொண்டு, என் உரையை நான் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

பிற்பகல் 1-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களின் பதிலுரையுடன் நிதிநிலை அறிக்கையின் மீதான பொது



விவாதம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்) முடித்தாகிவிட்டது. முடித்தாகிவிட்டது. மணி என்ன ஆகின்றது? 1-50 ஆகிறது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். பேரவையின் சார்பில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுக்கும் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (3-4-2008) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-50 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது

## 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

30. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கிராபைட் நிறுவனத்தின் பத்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

31. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

32. 2006-2007 ஆம் ஆண்டிற்கான பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்தின் முப்பத்து மூன்றாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

33. 2006-2007 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆண்டறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்கு அறிக்கையுடன் தணிக்கை அறிக்கை. [2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 104 (4) மற்றும் 105 ஆகிய பிரிவுகளின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்)

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

18. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் ... பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் ...

சென்னை-600 008
22 8 402